# வெண்ணிலவு நீ எனக்கு

PSA 2c

முழுநாவல்

★ EASWARI LENDING LIBRARY ★
Old Newspapers and
Books Are Purchased
93, LLOYDS ROAD, MADRAS-6.

பூவை. எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தி. நகர் ❖ சென்னை-17

முதற்பதிப்பு : பிப்ரவரி 1961

முழு உரிமையும் வானதி பதிப்பகத்திற்கு

விலை ரூ. 2.50.

ஜீவோதயம் பிரஸ்,
சென்னை, 5.

# வெண்ணிலவு நீ எனக்கு

EASWARI LENDING LIBRARY
Old Newspapers and Books Are Purchased
LLOYDS ROAD, MADRAS-6.

# 1

## 'எல்லையற்ற பேரழகே......!
## எங்கும் நிறை பொற்சுடரே!'

சிலம்புச் செல்வரின் அழகுத் தமிழ்ப் பேச்சு அணி வகுத்து, அணி சேர்த்து முழங்கியது. விண் அதிர, மண் அதிர ஒலி பரப்பிய சொற் பொழிவில் மக்கள் மயங்கினர்; மண் மனம் சொக்கியது; கத்தும் கடல் பணி மறந்தது.

சிலம்பு பண் சேர்த்தது; பொது மக்கள் சிந்தை சேர்த்தனர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வெற்றி முரசு இயம்பிய வீரத் தமிழனின் ஓவியம் விளக்கம் கண்டது; இருபதாம் நூற்றாண்டு உதட்டோரத்தில் விரல் இருத்தி மெய்ம் மறந்தது.

உச்சிக் கிழான் ஓய்வு கொள்ளத் துடித்தான்; மேற்குத் திசையை நோக்கினான். பொன் வண்ணத் துகள் கடற்கரைக் கிழிஞ்சல்களோடு கொஞ்சி விளையாடின. கிழிஞ்சல்களின் உடற்பரப்பில் கறுமை மெல்ல மெல்லப் படர ஆரம்பித்தது.

திருநாள் முடிந்த கோயில் போன்று காணப்பட்டது 'மெரினா' கடற்கரை.

மாமல்லன் கண்களை உயர்த்தினான்; பார்வையில் கூர்மை அமைந்தது. உறவாடி விளையாடிய அலைகடலின் மேற்பரப்பிலே, அவன் கருத்துக்கு இனித்த கல்யாணக் காட்சி யொன்றைக் கண்டான். 'வா, ஓடோடி வா!'

என்று இதழ் விலக்கி, கண் காட்டி, கை அசைத்த நிலவுக் குழந்தையின் விண்ணப்பத்துக்கு இணக்கம் சொன்ன முகிற் துண்டு 'வருகிறேன், இதோ வருகிறேன் !' என்று சொல்லியவாறு விரைந்து கொண்டிருந்தது. மங்கிய அந் நிலவொளியிலும் அற்புதம் இணைந்த வதுவைக் கோலத்தைப் பார்த்தான். பார்த்த விழிக்கடை முனையில் பனித்துளிகள் தொங்கின. எண்ணினான். சிந்தையைச் சிந்திக்க வைத்த அந்தப் பேச்சு அவனுடைய மனக் கண்ணில் எழுதி வைக்கப் பட்டிருந்தது; படித்தான்; கேட்டான். உள்ளம் நிறைந்த சிலம்பின் கதை, காதை காதையாக ஏடு மலர்ந்தது.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம்.

'நீல விதானத்து நித்திலப் பூப்பந்தரின்கீழ் வீற்றிருந்த கோவலனும் கண்ணகியும் மாமுது பார்ப் பான் மறைவழி காட்டிடத் தீ வலம் வந்து கணவன் மனைவியராக ஆயினராம்...!'

"ஆஹா !"

தன் நினைவுடன் நற்சாட்சி வழங்கினான் மாமல்லன். கை விரல்கள் சுருட்டைத் தலைமயிரைக் கோதிவிட்டன. வேர்வை புள்ளி அமைத்து கோலமிட எண்ணியது; அவன் அதைக் கலைத்தான். கன்னங்களில் படர்ந்த கைவிரல்கள் கண்களருகே சென்றதும், அப்படியே பின் தங்கி விட்டன. ஈரம் சொட்டியது. இதயத்தில் ஈரம் இருந்தால்தான் விழிகளிலே ஈரம் இருக்கும். பீலியி லிருந்து உதிரும் நீர்த் திவலைகளாயின, கண்ணீர் மணிகள்.

'ஆமாம்; 'முதலையுண்ட பாலனை அழைத்த இன்பத் தமிழை சொல்வார் சொல்லக் கேட்கையில் உண்மையாகவே கண்கள் ஆனந்தக் கண்ணீர் தான் வடிக்கின்றன !' என்று மாமல்லன் கருத்துணர்ந்தான்.

அவன் நடந்தான். பெரிய சாலை வந்தது. தொடர்ந் தான்; வீடு வந்தது.

மாமல்லன் வீட்டில் அடியெடுத்து வைத்தான். முகப்பு விளக்கு அழகாக ஒளி சிந்தியது.

"வா தம்பி" என்ருள் பெற்றவள், வாஞ்சை பொங்க.

"அம்மா, எனக்காகவா காத்துக்கிட்டு வாசலி லேயே நிற்கிறீங்க?" என்று கேட்டான் மகன்.

"ஆமா, ஆமா. இன்னும் கொஞ்ச நாளைக்குத் தானே எனக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கும்?... அப்புறந்தான் என் பாக்கியத்திலே பங்கு கொள்ள மேகலை வந்துவிடுவாளே!"

வெள்ளைப் புடவையைக் கொய்தெடுத்து உதடுகளை மறைத்தாள் கோசலை அம்மாள்.

"போங்க, அம்மா!"

"தம்பி, உன்கிட்டே நிரம்பப் பேசணும். முதலிலே கை கால் முகம் அலம்பிக்கிட்டு வா, சாப்பிடலாம். மணி ஒன்பதாகப் போகுது."

"ஊம்" கொட்டிக்கொண்டே பின் தொடர்ந்தான் அவன்.

அந்நாளில் அம்புலியின் எழில் காட்டி அன்னம் பிசைந்து ஊட்டிய அதே மாணிக்கக் கைதான் அன்றும் சோறு பரிமாறியது. பசி உணர்ந்து, ருசி அறிந்து, தெய்வ மணிக்கரத்தின் பொற்பை யூகித்து அவன் உணவு கொண்டான்.

"தம்பி!"

"என்னம்மா?"

விளித்த குரல் துண்டாக நின்றது. விடுக்கப்போகும் வினவுக்கு விடை என்ன சொல்வதென்று யோசிக்கு முன், அன்னையின் ஆதுரம் என்னவாயிருக்குமென்ற சிந்தனை அவனைத் தன்வயப்படுத்தியது. சூன்ய வெளியை மென்று விழுங்கி ஏப்பமிட்ட மௌனத்தைத் துண்டாட எண்ணி இதழ் விட்டு இதழ் பிரித்தான்

தனயன். மூப்பெய்திய அன்னையின் இதயம் விம்மலை எதிரொலித்துக் காட்டியது. அவன் துடித்தான்; துவண்டான்; திகைத்தான்; திக்குமுக்காடினான்.

"அம்மா."

"ஒண்ணுமில்லே, தம்பி... அமைதியாயிரு!...ம்... உன் அப்பா உன் கல்யாணத்தைக் காண முடியலையேன்னு நினைச்சேன்... என்னையே மறந்திட்டேன்; அவ்வளவுதான்!"

இளைஞன் தேம்பினான்; மூதாட்டி ஆறுதல் சொன்னாள்.

"மாமல்லா, என் தமையனார் அரியலூரிலேயிருந்து லெட்டர் போட்டிருக்காங்க. உன் ஜாதகத்தையும் உன் மாமன் மகள் மேகலை ஜாதகத்தையும் ஜோஸ்யர்கிட்டே கொடுத்திருக்காங்களாம். அநேகமா இன்னும் நாலு நாளிலே தகவல் எழுதுவாங்க" என்று விளக்கம் தந்தாள் கோசலை அம்மாள்.

கை நொடிப் பொழுது மாமல்லன் சிந்தனையின் பிடிக்குள் அகப்பட்டு விழித்தான்.

தனக்குத் திருமணம் என்று வீட்டில் செய்தி சொல்லக் கேட்டவுடன் தான், முதன் முதலில் பெண்ணுக்கு வெட்கம் புறப்படுமாம், அறிந்தவர்கள் சொல்லுவார்கள். அதே நிலை ஆணுக்கும் ஏன் பொருந்தாது?...இதோ, மாமல்லன் இருக்கிறானே!...ஏதோ ஒரு தமிழ்த் திரைப் படத்தில் கண்ட கதாநாயகியின் நிலை ஞாபகத்துக்கு வந்தது. வலது காற் பெருவிரல் தரையில் கோலம் போட படாதபாடு பட்டது. முகத்திரையில் வெட்கத்தின் கோடுகள் இருந்தன. ஆனால் தரையில் கோலத்தின் இழைகள் பின்னப்படவில்லை. காரணம், அது சிமெண்டுத்தரை.

கோசலை அம்மாள் மைந்தன்மீது ஏவிவிட்ட அன்பு நோக்கை விலக்கவில்லை; வெட்டவில்லை. அவள் தன்னுள் சிரித்துக் கொண்டாள். 'நல்ல மாமல்லன்!... நல்ல வெட்கம்!...எனக்கு ஒரு மகள் இருந்தால், தன்

கல்யாணச் சேதி கேட்டு இப்படித்தான் வெட்கப்பட்டிருப்பாள்...! ஈஸ்வரா !' என்று வேண்டாத நினைவுக்கு வெற்றிலைபாக்கு வைத்தாள் அவள். தன் மகனின் கல்யாணம் பற்றிய இன்பக் கனவில் திளைத்தவாறு அப்படியே நின்றாள். அப்போது. மல்லிகேஸ்வரர் கோயிலிலிருந்து மணியோசை கிளம்பி வந்தது. நல்ல நிமித்தம்...!

"ஆண்டவனே !"—அவள் கண்கள் நீர் சேர்த்தன.

"நான் மாடிக்குப் போறேன், அம்மா."

"நல்லது, தம்பி."

பிறை நிலவு தன் புகழைப் பறை சாற்றிக் கொண்டிருந்தது. கள்ளும் காரிகையும் மட்டும் போதைப் பொருள்களல்ல. புகழும் முன் சொன்ன இரண்டுடன் மூன்றாவதாக இடம் பெறும். புகழ் !—இந்த மூன்றே மூன்று முத்துக்களுக்குள் சரித்திரமே அடங்கியுள்ளது; காலத்தின் கதைக்குக்கூட இதுவேதான் கல்லறை சமைத்துக் கொடுத்திருக்கிறது. இந்நிலையிலே, பிறை மாத்திரம் எங்ஙனம் ஒதுங்கி நிற்க முடியும் ?

மாடியில் நின்று பார்த்தபோது, லிங்கச் செட்டித் தெருகூட எழில்பூத்துத் தோன்றியது. திக்கெட்டும் பார்வையை வலை வீசினான். வானை அளைந்த ஆழி தென்பட்டது. கடற்கரையில் மின்சார வண்டியொன்று அப்போதுதான் வந்து நின்றது. என்னவோ எண்ணினான்; என்னவோ தோன்றியது. கண்ணில் தெரிந்த தோற்றத்தில் வருங்காலம் என்ற குறிப்பு காணப்பட்டது. அது அழகுடன் விளங்கியது. நிகழ்கால நினைவுகளுக்கும் எதிர்கால நடப்புக்கும் பாலம் சமைத்துக் கொடுக்கும் சக்தி இந்த மனத்துக்கு இல்லையென்றால், அப்பால் வாழ்க்கை வாழ்க்கையாகவா இருக்கும் !...வேண்டாம், வேண்டவே வேண்டாம் பொல்லாத அந்தச் சிந்தனை !

சிலப்பதிகாரத் தம்பதிகளின் நினைவு முகங்கள் மனத்திரையைக் கிழித்துக் கொண்டு தெரிந்தன. அந்த இரு உருவங்களுக்கு மத்தியில் வேறு புதிய இரண்டு

முகங்கள் தோன்றின. அவனுக்கு உச்சி குளிர்ந்தது; உள்ளம் குளிர்ந்தது. 'மேகலையையும் என்னையும் திருமணக் கோலத்தில் கண்டு, எங்களை ஆசீர்வதித்து ஆரத்தி சுற்றப் போகும் அம்மாவின் சந்தோஷத்துக்கு எப்படி அளவு சொல்ல முடியும்!...' என்று எண்ணமிட்ட அவன் குறிச்சியில் வந்தமர்ந்தான்; பூப்படுக்கையில் குந்தியது போலவே உணரலானான். மணம் கொண்டது மாளிகை.

'மாமன் மகளே! மரகதச் சிலையே! மருக்கொழுந்தே!' என்று சன்னக் குரலில் பாட்டின் இழைகளைப் பின்னினான் மாமல்லன். சிரிப்பு வந்தது. காட்டுக் கொன்று மேட்டுக் கொன்றாகச் சிதறிக் கிடந்த சிந்தனைச் சித்திரங்கள் அவனை வருந்தி வருந்தி அழைத்தன. கலை பெரிது; வயிறு சிறிது. கலையையும் வயிற்றையும் ஒன்று சேர்த்துப் பிணைத்த சிந்தனையாளர்களுடன்தான் அவன் ஓய்வுப் பகுதியின் பெரும் பொழுதைக் கழிப்பது வழக்கம். இயந்திரங்கள் உறவாடும் ஆங்கிலக் கம்பெனி அவனுடைய வயிறு நிறைய வாழ்வு தந்தது; அது அவனது இயந்திர வாழ்க்கையின் ஒரு பகுதிதான். ஆனால் அவன் மனம் ஒன்றியது இலக்கியத்தில்தான். கிழக்கும் மேற்கும் சந்திக்கும்—அல்லது பிரியும் இடத்தில் அவன் அண்டினான்; ஒண்டினான். சங்கீதக் கச்சேரியில், சலனப் படத்தில் காணாத தனித்த இன்ப உணர்வை அவன் இலக்கிய உலக யாத்திரையில் அடைந்தான்.

விரிந்து கிடந்த புத்தகங்களிலிருந்து விலகிப்பிரிந்து கிடந்தது ஒரு செய்தித்தாள். 'கல்கித் தமிழ்' என்னும் அடைமொழியைத் தமிழுக்கு அளித்து, தன் பெயருக்கு இலக்கிய உலகத்திலே சிரஞ்சீவித் தன்மை கொடுத்து விட்டு, அமரராகக் காட்சி யளித்துக்கொண்டிருந்தார் பேராசிரியர். அவனது நேத்திரங்கள் நித்திலங்கள் சொரிந்தன. அவ்வுருவுக்கு அஞ்சலி செய்தது அவனுடைய இலக்கிய நெஞ்சம்.

ஊதுவத்தியைக் கொளுத்தினான் மாமல்லன். சற்று முன் மருக்கொழுந்து என்ற சொல்லடுக்கை எண்ணிய

தும் அவனுக்கு மேகலையின் ஆசைமுகம் ஓடி வந்தாற் போலவே, இப்போது ஊதுவத்தியின் நறுமணமும் அதே மேகலையை நினைவுறுத்தியது. நினைவுகள் இயற்கை வர்ணச் சலனப் படம் போன்றவை. அவை உருவாக்கும் கனவுகள் எழில் மிக்கவை; ஏற்றம் புரிபவை. அந்தம் மிகுந்த அந்த நினைவுகள் வாழ வேண்டும்; அப்போதுதான் மனிதன் மனிதனுக வாழ முடியும்!

ஐந்து வயதிலே, அறியாப் பருவத்திலே முளைவிடும் பாசத்தைப் பகைப்புலனுக்கி, சிறுவர் சிறுமியரின் கதை வருணிக்கப்படுவது உண்டல்லவா? அம்மாதிரியல்ல, மேகலை—மாமல்லன் கதை! அதைவிடப் பான்மையுடையது இது; பண்பு சார்ந்தது. மாமல்லன் பிறந்தான்; ஈன்றவள் ஈசனுக்கு வந்தனை செலுத்தினுள்; அத்துடன் வேருெரு புதிய கவலையும் அவளை ஆட்கொண்டது. ‘எங்க அண்ணிக்குப் பிறக்கிறது பொண்ணுகயிருக்க வேணும்; அப்பத்தான் எனக்கு மருமகள் கிடைக்கும். ரத்தபாசமும் விடாமல் இருக்கும்,’ என்று நினைத்தாள். அவள் எண்ணியதையே ‘அவனும்’ எண்ணினுன். மாணிக்கத் தொட்டில்கள் இல்லை; மரத்தொட்டில் களிலே மாணிக்கக் கட்டிகள் இரண்டு புருவம் பிரித்து, புன்னகை சிந்தி, புத்துயிர் அளித்தன.

“எனக்கு மருமகள் கிடைச்சிட்டுது,” என்று ஆனந்தக் கூத்தாடினர் கோசலையும் அவளைக் கொண்டவரும். கோசலையின் தமையனுர் சோமசுந்தரமும் அவர் மனையாட்டி மரகதவல்லி அம்மையும் சம்மதம் தெரிவித்தார்கள்.

மாமல்லன் நல்ல மூச்சு விட்டான். தாய் சொல் மிக்க தொரு மந்திரமில்லை. அன்னை வடிவம் அன்பு வடிவம்; அருள் வடிவம்.

“மேகலை!”

உரிமை அழைத்தது.

‘அத்தான்!’

உரிமை' பதில் சொன்னது.

கல்லூரியில் பாடம் கேட்ட கம்பர் சித்திரம் ஒன்று இதயத்தில் அழகுகாட்டிற்று. மிதிலைச் செல்வி 'புனையா ஓவியம்' எனப் பேசப்படுகின்றாள். அந்தச் சொற்றொடரை மேகலைக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான் அவன். ஆசைக்கு வெற்றி கிடைத்தது. மாமன் மகளை அழைத்தான்; மேகலை உண்டாக்கிய பண்ணை முன்னோடவிட்டு, பின் தொடர்ந்து மறுகி மறுகி வந்தாள் மேகலை.

சாதாரணமாக அழகான ஓர் உருவத்திற்கு வரம்பு காட்டி, வடிவு சொல்லி விளக்கம் தரும்போது, 'சித்திரத்தில் எழுதித்தான் அந்த அழகைப் பார்க்க வேண்டும்' என்பார்கள். மேகலையின் அழகை எழுதிப்பார்க்க மாமல்லன் சித்திரக்காரன் அல்ல; அவ்வாறு புதிய பதவி ஏற்கவும் தயாராகவில்லை; ஏற்கவும் மாட்டான். ஏனென்றால், அவன் என்றால் அவள்தான்; அவள் என்றால் அவன்தான். மேகலை—மாமல்லன் கதை நூதனமானது. விட்ட குறை—தொட்ட குறையின் கணக்குப் பார்த்து, மும்மை வினைப்பயன் தெரிவித்த ஐந்தொகையை ஆராய்ந்து, பூஜா பலன்களின் புள்ளி விவரங்களை நிர்ணயம் செய்து, முடிவுக்கு முத்தாய்ப்பிட்டு, மாயனார் குயவன் செய்யும் உயிர்நிறை மண்பாண்டங்கள் எத்தனை எத்தனையோ ஓட்டை உடைசல்களாக உருமாறி, உரு வழிந்து போய்விடுவது உண்டு. ஆனால், இந்த இணையைப் பொறுத்தமட்டிலே நான்முகன் நல்லவனாகவே அமைந்திருந்தான். அழகுக்குப்பிணையென அழகையே உண்டாக்கி யிருந்தான். மேகலைக்கு ஏற்றவன் மாமல்லன்!

கோசலை அம்மாள் பால் கொணர்ந்து கொடுத்தாள். மாமல்லன் அருந்தினான். மகனுக்குப் படுக்கை விரித்துக் கொடுத்தாள். அன்னை கீழே சென்றாள். அவன் மற்ற விளக்குகளை அணைத்தான். மேஜை விளக்கின் மங்கலான ஒளியில், அம்மாதத்தின் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றைப் புரட்டினான். கடிதம் ஒன்று இருந்தது. பதட்டம்

உச்சிக்கு ஏறியது; பார்வை துண்டுக் காகிதத்துக்குத் துள்ளியோடியது.

“ அன்புசேர் மேகலே,

உன்னை இப்படித்தான் எனக்கு அழைக்கத் தெரிகிறது. ஆணிப் பொன் என்று விளிக்கட்டுமா? மாற்றறியப் பயன்படும் உயர்ந்த ரகத் தங்கம்தான் ஆணிப் பொன். என்னை நான் உணர உபயோகப்படும் பசும் பொன் ஆயிற்றே நீ!

சென்னையும் அரியலூரும் இத்தனை நாட்கள் கனவுகள் மூலம் பேசிக் கொண்டன. இனி, என் மேகலேயும் உன் மாமல்லனும் நேருக்கு நேர் பேசப் போகிருர்கள்...!...அழகின் ஆதரிசப் பொருளல்லவா நீ!...அன்பிற்குப் பொழிப்புரை யல்லவா உன் நெஞ்சம்!... எல்லேயற்ற பேரழகு நீ..! எங்கும் நிறைந்த பொற்சுடர் நீ..!

அத்தான் என்ற முத்துச் சொல்லேச் சத்தான தொனியில் சொடுக்கிவிட வேளே பார்த்துக் கொண்டிரு.

மாமல்லன்.”

கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்னர் எழுதிய கடிதம் இது. இன்னமும் அது வைத்த இடத்திலேயே தான் இருக்கிறது. ‘இதை மாமா பார்த்து விட்டால்...’ என்ற அச்சம் அவனுக்குக் கைகட்டிச் சேவகம் செய்தது. என்ருலும், இதைப் பார்த்துக் கொண்டிருப்பது, மேகலேயைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஓர் இன்ப உணர்வைத் தட்டிக் கொடுத்தது—இத்தனை நாட்களாக, மாதங்களாக!

பத்திரிகையை அப்படியே மூடி மேஜையில் வீசினன். வீசின அவசரத்தில் மேற்படி பத்திரிகை மட்டும் கீழே சரணடையவில்லே! கூட ஒரு புகைப் படமும் விழுந்தது.

'சிந்தாமணியின் போட்டோ இங்கே எப்படி வந் தது? ஏன் வந்தது? என்று தனக்குத் தானே வினு விடுத்தான் மாமல்லன். அவனுக்குப் பதில் சொல்ல விண்ணிடை வெண்மதிக்குப் பேசத் தெரியாதே, பாவம்...!

## 2

'நெரித்த திரைக்கடலில்
என்ன கண்டிட்டாய்?'

'கன்னிமரா நூல் நிலை'யத்துக்குப் புறப்பட்டான் மாமல்லன். அந்த மாதத்தில் அவன் எடுத்துக்கொள்ள உரிமை கொண்ட விடுமுறை நாள் ஒன்று எஞ்சி நின்றது. கடற்கரை ரெயில் நிலையம் அவன் குறிப்புக்கு எல்லைக் கல்லானது. வீட்டைவிட்டு நடந்து இருபது. இருபத்தைந்து அடி தூரம் நடந்திருப்பான். தீனக் குரலொன்று காற்றில் அலைந்து வந்தது அது அவனிடம் ஒரு சேதி சொன்னது. தெருவின் கோடியில் அவன் நின்ருன்.

'சிந்தாமணி ஏன் அழுகிருள்?"

ஒரு கேள்வியிலிருந்து பத்துக் கேள்விகள் உதிர்ந் தன.

'என் அன்புக்குகந்த மேகலை மாதிரி சிந்தாமணியும் தங்கமான பெண்; தங்கமான மாப்பிள்ளை கிடைக்க வேண்டும். ஏழைத் தொழிலாளியின் மகள்!'—வட துருவத்தில் நின்ருன் அவன்.

அதே சமயத்தில், தென் துருவம் கூவிக்கூவி அழைத்தது; திரும்பியபோது, இரவில் கண்ட சிந்தாமணி யின் புகைப்படம் நினைவுக்கு வந்தது. விளக்கம் கேட்க

வேண்டுமென்றிருந்தான் அன்னையிடம்; மறந்து போனான். 'படிக்க எடுத்துச் சென்றிருப்பார்கள். சரி ஒரு வேளை, அவர்கள் தன் போட்டோவை மறந்துபோய் புத்தகத்தில் வைத்திருப்பார்களோ?...அப்படியானால், மேகலைக்கு எழுதிய 'தபாலில் சேர்க்கப்படாத அக் கடிதத்'தையும் பார்த்திருப்பார்களே; படித்திருப்பார் களே!''

குழப்பம் ஒரு பேய்: அது தலை விரித்தாடியது. பேயை விரட்டும் பூசாரியாக வேடம் புனையும் சாகஸம் இந்த மனத்திற்கு எப்போதுமே கைகூடி வருமென்று உத்தாரம் சொல்ல இயலாது.

நிகழ்ச்சி ஒன்றின் இருதயப் பகுதி அது. அவனது இருதயம் அடித்துக்கொண்டது

மாமல்லனின் தாயாருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டிருந்தது. ஓடியாடித் திரிந்து பணிவிடை செய் தான் அவன். டாக்டரின் ஆலோசனைப்படி 'பத்தியம்' வைத்துக் கொடுக்கவேண்டும்; காண்டீபனுக்கு வழி காட்ட ஒரு கண்ணன் கிடைத்தான். அது புராணகாலம். ஆனால் இப்போது மாமல்லனுக்கு உபாயம் கூறக்கூட ஓர் உள்ளம் தட்டுப்படவில்லை. இப்படிப்பட்ட ஏக் கத்தில் அவன் தன்னையே இழந்து விட்டிருந்த தருணத் தில்தான், கண்ணன் அனுப்பிய ஆதரவுபோலே சிந்தா மணி வந்தாள்; ஆவன செய்தாள். படுத்த படுக்கை யான கோசலை அம்மாளை, படுக்கையில் அமர்த்தினாள் அந்தப் பெண்; நன்றி தெரிவித்த உள்ளத்திற்கு 'இது என் கடமை' என்ற பண்பாடு பதிலிறுத்தது.

மனித மனம் மெல்ல விழித்தது.

"சிந்தாமணி...!'

"துறைமுகத்திலே அப்பாவுக்கு அடிபட்டிடுச்சாம்; மூட்டை தூக்கி வருகிறபோது, கால் தடுக்கி விழுந்திட் டாங்க; துடிக்கிறாங்க; வயசுக் காலம் வேறே...நீங்க தயவு செய்து டாக்டர் யாரையாச்சும் அழைக்கிறீங் களா?...''

ஒலி அலை தேய்வதற்குள், படித்த எம். பி. பி. எஸ். பட்டங்களுடன் நாடிக் குழல், ஊசி வகை, மருந்து முதலியன சுமந்து டாக்டர் ஒருவர் வந்தார்.

‘நல்லது செய்து நடு வழியே போனால், பொல்லாதது போகிற வழியே போய்விடும்’ என்பது மாமல்லனின் சித்தாந்தம். ஆனால், அன்றைக்கு என்னவோ அவன் நினைப்பு நல்ல பலன் காட்டவில்லை; நடு வழியே சென்றவன் நல்லது செய்தான்; ஆனால் பலன்தான் நல்லதாக உருப்பெறவில்லை. டாக்டர் தன் மண்டையை உருட்டிக் கொண்டார். வெளிப்படையாக; இளைஞனின் தலையை உருட்டிவிட்டார், ரகசியமாக; ரத்த இழப்பைக் காட்டிப் பயமுறுத்தினார். சிந்தாமணி பயந்தாள்.

“ஐயோ, நான் அபலையாகி விடுவேனா? ஆண்டவனே, என்னை அனாதையாக்கிவிடாதே, தாய் இல்லாப் பெண்ணுக்குத் தகப்பனையாவது ஆதரவுக்கு விட்டுவைத்து விடு. மலை ஏறி வந்து உனக்கு அர்ச்சனை செய்கிறேன்...!”—மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாரை வேண்டினாள் சிந்தாமணி.

பூரணமாகத் தேய்ந்துவிட்ட இசைத்தட்டின் மெலிந்த ஓசையை விட மோசமாகயிருந்தது துறைமுகத் தொழிலாளி வேலாயுதத்தின் கூப்பாடு.

ஓடினவள் மகள். நெற்றிமேட்டில் கை வைத்துப் பார்த்தாள். தந்தையின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்து, அவற்றைத் தன் விழிகளில் நிறைத்தாள். மகளின் முகத்தைக் தடவிக்கொடுத்தவாறு ஏதோ பேச எண்ணியவராக கிழவர் வாயை அசைத்தார். அழுகை தான் புறப்பட்டது; வார்த்தைகளை யல்லவா அவள் எதிர் பார்த்தாள்?

பெண் தன் கண்களுக்குக் கறுப்பு மை யிட்டால் பார்க்கப் பரவசம் தருகிறது. ஆனால் வான மடந்தை இம் மாதிரி மை பூசிக் கொண்டால், ஏன் உலகம் அப்படிப் பயந்து சாகிறதாம்...?

“அம்மா...அம்மா!...”

" என்ன அப்பா...நீங்க எதுக்கு கண்ணீர் விடணும் ?...உங்க மகள் நான் இருக்கேனே ! இதயம் இருக்கிறவங்க மத்தியிலே, பண்பு காட்டுறவங்க இடையிலே கன்னிப்பெண் ஆனாலும், நான் கண்ணியமாக வாழ முடியும் ; உங்களையும் காப்பாத்த முடியும்...நாலு எழுத்து சொல்லிவைச்சீங்களே, அது இனியாச்சும் உபயோகப்படட்டும்... நீங்க அழாதீங்க... அப்பா... அழாதீங்க !..."

" அம்மா, உன்னை அனாதை..."

வேலாயுதத்தின் உதடுகளை மூடினாள் பெண். " நான் அனாதையாக மாட்டேன், அப்பா ! " என்றாள் அவள். அவளுடைய பார்வை அறைச் சுவர்களுக்கு நடுவில் சுற்றி விளையாடியது.

மாமல்லனின் சிந்தை திக்குத் தெரியாத காட்டிலே அலைந்து கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவன் வேலாயுதத்திற்கு வேண்டியதைச் செய்து கொண்டுதான் இருந்தான்.

" சிந்தாமணி, உன்..."

தொடர்ந்த பேச்சுக்குத் தொடர் பிணைக்க வாய்க்கவில்லை.

" பேசாதீங்க... அப்பா ! "

உதடுகளுடன் கண்களையும் மூடிக்கொண்டார் கிழவர்.

" பயப்படாதீர்கள். பெரியவர் சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும். இப்போது நீங்களும் ஒன்றும் பேசாதீர்கள். அவரையும் பேச விடாதீர்கள். மிகவும் களைப்புடன் இருக்கிறார். நாளைக் காலையில் மறுபடியும் நானே வந்து பார்க்கிறேன் " என்று விடை பெற்றார் டாக்டர்.

வேலாயுதத்தின் தலைப்பக்கம் மாமல்லனும், கால் பக்கம் சிந்தாமணியும் உட்கார்ந்திருந்தார்கள். குனிந்த தலை நிமிராமல் இருந்தான் அவன். வழிந்த நீரை வழித்துவிடாமல் இருந்தாள் அவள்.

“ அம்மா... சிந்தாமணி !”

முதலில் தலை நிமிர்ந்தவன் மாமல்லன் ; ஆனால், சிந்தாமணியோ சூன்ய வெளியில் கண் பதித்துச் சிலையெனச் சமைந்து விட்டிருந்தாள்.

“ சிந்தாமணி,” என்று கூக்குரலிட்டான் மாமல்லன்.

அவள் அசையவில்லை.

“ சிந்தாமணி,” என்று திரும்பவும் அலட்டினான் அவன்.

மீண்டும் பதில் ஏதுமில்லை.

பிறகு, அவளுடைய தோள்பட்டையைத் தொட்டுக் கூப்பிட்டான். கைகள் நடுங்கின ; உடல் நடுங்கியது ; உள்ளம் நடுங்கியது.

“ அத்தான் ! ”

பெண் குரல் எதிரொலி பரப்பியது.

“ அப்பா ! ”

புறப்பட்ட குரல் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்தது. தொல் வினைப்பயனின் உலாக் கதை மாதிரி.

அவனுக்குத் திக்குத் திகந்தம் புலனாகவில்லை.

“ சிந்தாமணி !”

அவள் திகைப்புடன் விழி மலர்ந்தாள்.

“ ...நீங்கள் வீட்டுக்குப்போங்கள். ரொம்ப நாழிகை ஆயிடுச்சு, என்னால் உங்களுக்கு வீண் சிரமம். தயவு செஞ்சு மன்னிச்சிடுங்க..”

“ சிந்தாமணி, ஒரு நாள் நீங்கள் எனக்காக உங்கள் கடமையைச் செய்யவில்லையா ? அதைவிட நான் இப் போது என்ன சாதித்துவிட்டேன் ?—நான் போய் அம்மாவை அனுப்புகிறேன். ஏதாவது அவசரமானால், எனக்குச் சொல்லியனுப்புங்கள், மறுபடியும் காலையில் வந்து பார்க்கிறேன். கவலைப்படாதீர்கள்.”

மாமல்லனின் நிழல் மறைந்து வினடிகள் பத்து இருக்காதா? அவள் இன்னமும் திருஷ்டியைத் திசை திருப்பக் காணோம்.

வாசலில் பறந்த லாரியின் காட்டுச்சத்தம் காதைச் செவிடாக்கியது.

"அம்மா!"

"அப்பா!"

"அம்மா, ஆம்பளை குரல் மாதிரி யிருந்திச்சுதே?... உன் அத்தான் வந்திட்டானு?...'!

"இல்லீங்க, அப்பா!"

"பின்னே, யாரம்மா இங்கே வந்தது? ஏம்மா இங்கே வந்தாங்க?

"ஆத்திரப்படாதீங்க, அப்பா, நம்ப தெருமுனையிலே கோசலை அம்மா யிருக்காங்களே, அவங்க மகன் வந்தாங்க...நீங்க மயக்கமா யிருந்ததைக் கண்டதும் பயந்து போனேன். உங்களுக்கு உதவிக்குத்தான் வந்தாங்க...!"

"மாமல்லனு?... நல்ல பிள்ளைதான். அப்படியானு, குலோத்துங்கன் வரலையா?..."

புனிதக் கோயிலின் கலசத்தின் உச்சியில் வீசப்பட்ட பூமாலையினின்றும் உதிர்ந்து விழுமல்லவா உதிரிப் பூக்கள், அந்தப் பாங்கிலே அவளது விழிகள் இரண்டும் நீர் சிந்தின.

"அம்மா, நீ அழக்கூடாதம்மா, அரசாங்கம் நம்ப வயத்துக்குக் கட்டுப்பாடு வச்சிருக்காங்க; ஆண்டவன் நம்ப கண்ணீருக்கே கட்டுதிட்டம் வச்சிட்டான். நீ அழப்பிடாது. கண்ணே!" என்று சொல்லிவிட்டு, வேலாயுதம் அழுதார்; அழுதார்; அப்படி அழுதார். அழுகை பிறப்பித்த கண்ணீர்த் திவலைகளில் ஒன்று ஆண்டவனை அண்டியது; இன்னொன்று கர்ம வினையை நாடியது; பிறிதொன்று அவர் புதல்வி சிந்தாமணியைத் தேடியது; நான்காவது சிந்தாமணியின் அத்தான் குலோத்துங்கன் பேரில் குறி வைத்தது.

வியன் வெளியில் விரித்த சடா மகுடம் தாங்கிய பயங்கர அருவம், கேட்போர் பதைக்கும் சிரிப்பு ஒன்றை அஞ்சல் செய்தது. அதற்குத்தான் 'விதி' என்ற பட்டப் பெயரோ...?

சிந்தாமணி அழுகையை நிறுத்தியதுதான் தாமதம், கிழவரின் மூச்சே நின்றுவிட்டது !

சிந்தாமணிக்கு அடைக்கலம் அளித்த பெருமை கோசலை அம்மாளுக்கே உரியது. பஞ்செனப் பஞ்சை யுள்ளம் பரதவித்துக் கொண்டிருந்தது. நெருப்பில் இருப்பது போன்ற ஓர் உணர்வு மாமல்லனுக்கு எழுந்தது. பஞ்சு, நெருப்பு—இவ்விரண்டின் கதையை ஊர்—உலகம் நன்ருக அறியும். கோசலை அம்மாள் அறிவாள்; மாமல்லன் அறிவான். ஏன், சிந்தாமணியும் அறிவாளே !

அலுவலகம் சம்பந்தப்பட்ட ஐந்தாறு நாளைய வெளியூர்ப் பயணம் முடிந்து அன்றைக்குத்தான் மாமல்லன் வீட்டிற்கு வந்தான். சிந்தாமணியின் மனநிலை பற்றித் தாயிடமிருந்து கேட்டறிந்தான். அவன் அமைதியாகப் பெருமூச்சைப் பிரித்தான்; காரணம், 'எதிர் முகாம்' ஓரளவு அமைதி பெறப் பழகிக் கொண்டிருந்தது !

"அம்மா !"

"என்ன, தம்பி ?"

"ஒரு மாதிரி யிருக்கீங்களே, ஏனம்மா ?"

"ஒண்ணுமில்லை !"

"நல்லவேளை...! அமாம், சிந்தாமணியை நினைக்கிற போது, மனசுக்கு ரொம்ப வேதனையாக யிருக்குது, அம்மா !"

"வாஸ்தவம் தான்; ஆண்டவன் சோதனைக்கு நம்மாலே என்ன தேறுதல் சொல்ல முடியுது !...பாவம்!"

"நீங்க சொல்றதுதான் சரி...ஆனாலும், சிந்தாமணியின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டாமா ?"

"கட்டாயம் செய்யத்தான் வேணும்; நானும் அதைப் பத்தித்தான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன் மாமல்லா!"

பயணத்தின் அலுப்பைத் தண்ணீரில் கரைத்து, பயணத்தின் அயர்வுக்குப் பதில் கூற காலை உணவு அருந்தினான் மாமல்லன்.

ஊதைக் காற்று சிலிர்ப்பை அள்ளி வீசியது. அதன் வல்லமை இளம்பரிதியிடம் அஞ்சியது.

பிறர் அமைதிக்கு வழி வகுக்கப் பிரயத்தனம் செய்த அவனுடைய நிம்மதியைப் பறித்துக்கொள்ள வீட்டிலே ஒரு கடிதம் காத்துக்கொண்டிருந்த உண்மை ரகசியத்தை அவன் அப்போது அறியமாட்டான்!

அந்தத் துயரச் செய்தி, அந்த எள்ளத்தனைப் பொழுதில், அவன் காதுகளில் ஒலித்தபோது, மண்டை வெடித்துச் சிதறியது. நெரித்த திரைகடலில் என்ன கண்டானோ? இல்லை, நீலவிசும்பினிடை என்ன கற்பனை தோன்றியதோ?

"மேகலை! அப்படியென்றால் நம் பால்யக் கனவு பாழாகி விட வேண்டியது தானா...?" என்று தன்னை மறந்து ஓலமிட்டுக் கொண்டிருந்தான் மாமல்லன்.

## 3

> 'பாட்டைத் திறப்பது பண்ணாலே; இன்ப
> வீட்டைத் திறப்பது பெண்ணாலே!'

ஆண்டவனுக்குக் கண்ணாம்பூச்சி ஆட்டம் என்றால், ஒரே பித்தம். அவன் படைத்த பகுத்தறிவு உயிர்களே அவனுக்கு விளையாட்டுத் தோழர்கள்—தோழிகள். இந்த உயிர்ப் பிண்டங்களின் கண்கள் திறந்திருக்கும் நேரத்

தில், கனவுகள் விழி வழி புகுந்து, அவரவர்களுடைய இதயங்களிலே இடம் சேகரித்துக்கொள்கின்றன. மேற் சொன்ன ஆணோ, அல்லது பெண்ணோ கனவுகளில் வாழ்ந்து, புவியை மறக்கும் பொழுதிலே, படைத்தவன் இந்தப் படைப்புப் பொருள்களைப் பெயரிட்டுஅழைத்துத் தன்னுடைய இந்தக் கண்பொத்தி விளையாட்டிற்குச் சேர்த்துக் கொள்கிறான்.

தெய்வத்தின் புதிர்ச்சிரிப்பு அக் கணத்தில்தான் தொடங்குகிறது; அதே தருணத்தில்தான், மனிதர் களுடைய தேம்பலும் ஆரம்பமாகிறது. இவர்களது கண்களை மூடி விளையாடும் பரம்பொருளின் கைகளே எழுதி எழுதி மேற் செல்லும் விதியின் எழுத்தாகவும் அமைகின்றது. ஈசனின் வேடிக்கைப் புன்னகை உலகில் படர்ந்து அதன் அலைகள் எங்கும் எதிரொலி செய் கின்றன. மனிதர்கள் அந்தக் குரலைக் காது கொடுத்துக் கேட்க முனைகிறார்கள்; முடிவு, தோல்வி. அப்பாவி மனிதர்களின் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் எழுப் பும் அழுகையை 'அவன்' பார்க்கிறான்; விளைவு, வெற்றி. ஆகவே, மனிதனின் தெய்வம் சிரிப்பை நிறுத்தாமல் தெய்வத் திருப்பணியினைத் தொடர்கின்றது; தொடர்ந்து கொண்டே யிருக்கின்றது!

இது வாழ்க்கை!

மாமல்லன் விம்மினான்; பொருமினான்; அழுதான்; அலறினான்; துடித்தான்.

"தம்பி, அழாதேப்பா!"

அழவேண்டாமென்று வேண்டியவள் அழுதாள்; பெற்ற மகன் சிரிப்பதைக் கண்பூத்துப் போகுமட்டும் பார்க்கவேண்டுமென்று காத்திருந்தவள் அழுதாள்; பெயர் சொல்லப் பிறந்தவனை ஒரு வினாடிகூட கண் கலங்க வைக்கக் கூடாதென்று எண்ணமிட்டு, தன் கண்ணீரைக் காணிக்கை வைத்து ஈசனிடம் பிரார்த் தித்துக் கொண்டவள் அழுதாள்; அழுதாள்.

கோசலை அம்மாள் கண்களைத் துடைத்தவாறு

மாமல்லனை நெருங்கி, "தம்பி, நடந்ததை மறந்திடு, மாமல்லா !" என்று கெஞ்சினுள்.

"அம்மா !... அம்மா !...எதை அம்மா மறந்துவிடச் சொல்றீங்க ? மாமன் மகள் மேகலையையா ? அல்லது, மாமன் மகளோடு பாசமும் நேசமுமாகப் பழகினதையா ? எதை அம்மா மறந்திடச் சொல்றீங்க ?...சொல்லுங்கம்மா, மறந்திடுறேன் !"

"மாமல்லா, என்னென்னமோ பேசிறியே ? என்ன பதில் சொல்றதின்னே ஒண்ணும் மட்டுப் படலையே, தம்பி !"

மாமல்லனும் கோசலையும் விம்மலை நிறுத்தவில்லை. மேகத் துண்டங்கள் நெட்டித் தள்ளிய நிலாக்கீற்று அள்ளிச் சொரிந்த வண்ணப் பொடியைக் காலால் எட்டி மிதித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

முல்லை நகை புரியும் நிலவுக் கன்னிகையைப் பற்றற்ற இதயத்துடன் அனுபவிக்கும் தவமுனியின் நிலையில் இருந்தான் மாமல்லன். இதே நிலா மாளிகையில் மேகலையை அழைத்து, அமர்த்தி, எத்தனையோ தடவை அழகு பார்த்திருக்கிருன் இதே மாமல்லன். ஆனுல், இன்றோ அந்த மேகலை எட்டாத தூரத்திற்குப் பிரிக்கப்பட்டுவிட்டாள் ; ஒட்டாத உறவுக்கு ஒதுங்கிச் சென்றுவிட்டாள் ; உரிமையையும் உறவையும் துண்டித்து விட்டது. எது ? அவனுடைய ஊழ்வினையா ? விதியா ? இல்லை...!

"அம்மா, நம்ப மேகலையை...உங்க மேகலையை நான் ஒருதரம்—ஒரே ஒரு தரம் மாத்திரம் பார்த்திட்டு திரும்பிடறேன்...இன்னிக்கு ராத்திரிக்கே அரியலூருக்குப் போய் வரட்டுமா, அம்மா ?"

"உங்க இரண்டு பேர் ஜாதகமும் எப்போ பொருந்தலையோ, அப்பவே நீ மேகலையை மறந்திடத்தான் பிரயத்தனப் படணும். இனிமேல் மேகலை யாரோ, நாம யாரோ ?...என்ன செய்யறது ?...கோட்டையிலே பிறந்தாலும் போட்ட புள்ளி தப்பியா போயிடும் ?...எங்க அண்ணு எழுதியிருந்த கடுதாசியை நீதான் படிச்சுப்

பார்த்தியே ?...அவங்களும் நம்பளேப்போல வருத்தப் படத்தான் செய்வாங்க...பாவம், அந்தப் பொண்ணுந் தான் புழுவாத் துடிச்சுக்கிட்டிருக்கும்...எப்பவோ ஆண் டவன் எழுதின தலே எழுத்து இது. இப்பத்தான் நம்பளுக்குத் தெரியுது, தம்பி, வா...ஒரு வாய் சாப்பிட் டிட்டுப் படுத்துத் தூங்கு...ராச் சாப்பாட்டை ஒதுக்கப் படாது வா...தம்பி !''

"எனக்குப் பசியே இல்லே, அம்மா. நீங்க போய்ச் சாப்பிடுங்க !''

"வேடிக்கையான பிள்ளே நீ! ''

"வாஸ்தவந்தான், அம்மா. நான் வேடிக்கையான பிள்ளேதான். இல்லேயானுல், என் மேகலே என்னே விட்டுப் பிரிக்கப்பட்டிருக்க முடியுமா ?''

"தம்பி மாமல்லா, இனி நீ மேகலேயைப் பத்தி மனசிலே நினேக்கிறதுகூட தப்பு...!''

"அம்மா !"

"ஆமாப்பா !"

"என்னம்மா, இப்படிப்பட்ட குண்டைத் தூக்கிப் போடுறீங்களே ?...மேகலே என் உயிர், உடல், உள்ளம் மூன்றிலேயும் நிரந்தரமாக குடியிருக்கிறபோது, எப்படி யம்மா அவளே என்னுலே மறக்க முடியும் ?...அதை மட்டும் மறுபடியும் நினேப்பூட்டாதீங்க. என்னே மறந்து ஒரு நாள் இல்லே, ஒரு வருஷம் வேணுமானுலும் உயிர் தரிச்சிருப்பேன். ஆனு, என் மேகலேயை மறந்து அரைக் கணங்கூட நான் உயிருடன் இருக்கமாட்டேன் ; இருக்க முடியாது, அம்மா !''

மெல்லிய இருமல் சத்தம் கீழிருந்து புறப்பட்டுப் படிதாண்டி மாடிக்கு வந்தது.

மாமல்லன் கண்களேத் துடைத்தான், மாடி வழியில் அவன் பார்வை போய் நின்றது. யாரும் வரக்காணும். மீண்டும் இருமல் ஒலிதான் வந்தது.

"சிந்தாமணி அது!" என்று குறிப்புத் தந்தாள் கோசலை.

தொடர்பிழந்த பேச்சுக்குத் தொடர்பு தேடினான் அவன். பிறகு அவனையும் உணராமல் பெருமூச்சு வெளிக்கிளம்பியது.

சுங்க வரி இலாகாவிலிருந்து ஊளையிட்டது சங்கு.

மாமல்லன் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டுமென்று கோசலை அம்மாள் அடம் பிடித்தாள். அவன் உணவு கொள்ள முடியாதென அழும்பு செய்தான். கடைசியில் வெற்றியை அடைந்தவள் தாய்.

"ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்" என்று 'இடும்பை கூர் வயிற்றை' முன் வைத்துப் பாடினார் கவிஞர். ஆனால், அன்றைய அவனுடைய நிலையை உத்தேசித்து அவன் வயிறு அவனைத் தொந்தரவு ஏதும் செய்யவில்லை. அவனைப் பெற்ற புண்ணியவதிதான் அவனுக்கு அல்லல் தந்தாள். பெற்ற வயிற்றுக்கல்லவா அவள் அனுபவித்த அல்லலின் தன்மை புரியும்!

பெற்ற மனம் மாத்திரம் பித்து அல்ல; பிள்ளை மனமும்தான் பித்து!

நேரம் கெட்ட நேரம்; வேளை தவறிய வேளை.

கீழே கூடத்துக்கு வந்தான்; சாப்பிட உட்கார்ந்தான் மாமல்லன். கோசலை அம்மாள் காய்கறி, குழம்புப் பாத்திரங்களை எடுத்து வைத்துக் கொண்டாள்; சோறு படைத்தாள்.

நெற் கதிர்களைக் கைகளால் அளைந்து விடும்போது ஒரு வகையான சலசலப்புச் சத்தம் உண்டாகும் பாருங்கள், அந்த ஒலி வடிவத்தில் அங்கு சலனம் பிறந்தது.

மாமல்லன் ஏறெடுத்துப் பார்த்தான். வத்தல் குழம்பைப் பிசைந்தெடுத்து கவளமாக்கி வாயருகில் கொண்டு போன வலது கை மந்திரத்தால் கட்டப் பட்டாற்போல அப்படியே நின்றது. சோற்றுப் பருக்கைகள் உதிரிப் பூக்கள் ஆயின. எண்ணப் பூக்களும் பறந்து விரிந்தன. என்னவோ, நினைவுப் பூக்களின் சுகந்தம் அலாதி.

" சிந்தாமணி, அம்மா !"

கோசலை உட்கார்ந்தபடியே பின்னால் திரும்பினாள். "வாம்மா ; இன்னமா தூங்கலை, சிந்தாமணி ?" என்று கேட்டாள் ; 'எவர் சில்வர்' கரண்டியைத் தரையில் வைத்தாள்.

"இல்லிங்க சமையல் கட்டிலே நெய்க் கிண்ணத்தை வச்சிட்டு வந்திட்டீங்களே, அதைக் கொண்டுவந்து கொடுக்கத்தான் வந்தேன்."

நெய்க் கிண்ணத்தை நீட்டினாள் சிந்தாமணி. கோசலை அம்மாள் அதைக் கையேந்தி வாங்கும்போது, ஏனோ கை நடுங்கியது ; எப்படியோ கிண்ணமும் நெய்யும் தரைக்கு ஓடிவிட்டன.

கோசலை அம்மாளின் கண்கள் கண்ணீரால் நிரம்பின.

"என்னை மன்னிச்சிடுங்க..."

"பைத்தியக்காரப் பெண்ணம்மா நீ. என் தப்புக்கு உன்னை மன்னிக்கணுமா ?...நீ படிச்ச பொண்ணு... ரொம்ப அளந்து அளந்து பேசுவாய். நான் என்ன கண்டேன் ..."

அழுகை சிரித்தது !

கோசலை, " சரி, போம்மா...என்னமோ புதுசா ஒரு நினைப்பு வந்துச்சு...அதாகிலும் ஈடேறுமான்னு கடவுள் கிட்டே கேட்டேன்...அவ்வளவுதான் !" என்றாள்.

சிந்தாமணிக்கு அந்தப் பேச்சின் சாறு எதுவும் பிடிபடவில்லை. அவள் அவ்விடத்தில் தங்க ஆசைப்பட்டவள் போலவும் காணப்பட்டாள் ; அதே சமயத்தில் அங்கிருந்து நகர்ந்துவிடுவதே உசிதமென்றும் நினைத்தாள். அவள் மனம் அவளுக்கு தன் அறையின் வழியைக் காண்பித்தது அவள் நடந்து சென்றதை இமை நோகப் பார்த்துக்கொண்டிருந்த கோசலை அம்மாளின் மனத் திரையில் ஓர் உருவம் தெரிந்தது. அது அவளுடைய தமையனாரின் மகள் மேகலையுடையது. சிந்தாமணி

நெய்க் கிண்ணத்தை நீட்டியபோதும், அவள் மேகலை யைத் தான் எண்ணிக் கொண்டாள்.

வழவழப்பு மிகுந்திருந்த தரைக்கு அங்கங்கே பொட் டிட்டாற் போன்று நெய்த் துளிகள் சிந்தியிருந்தன. மாமல்லன் அவற்றையே பார்த்துக்கொண்டான். தன் னுணர்வு வந்த தாய், தன் நினைவைப் பறிகொடுத் திருந்த தனயனைத் தட்டி, உணவு உட்கொள்ளுமாறு பணித்தாள்.

காலச் சிமிழிலிருந்து விநாடிகள் சிலவற்றை எடுத் துத் தெருவில் வீசினாள் கோசலை அம்மாள்.

மாமல்லன் கூடம் நீங்கி மாடிக்குச் சென்றான். தலைக்கு மேலே சிவப்புப் புள்ளி தெரிந்தது. தபால் வினியோகப் பிரிவு விமானம் அது. மணி பதினொன்று; நிமிஷம், பதினைந்து. "மேகலை! மேகலை!" என்ற பெயரை விடிந்த பிறகும் அவன் உதடுகள் உச்சரித்துக் கொண்டேயிருந்தன.

ஏழு பொழுது: காலை இளம் பரிதிச் செல்வன் புவிச் செல்வியுடன் மணல் வீடு கட்டி விளையாடத் தொடங்கி விட்டான்.

மாமல்லன் துயில் நீங்கிக் கண்களைத் திறந்தான். அவனது முதற் பார்வையில் சிந்தாமணிதான் விழுந் தாள். மாடியில் அப்பியிருந்த பனி மூட்டம் மெள்ள மெள்ள விடை பெற்றுக் கொண்டிருந்தது.

மாமல்லன் துண்டை எடுத்துக் கண்களைத் துடைத் தான். விழிகளை மூடி மூடித் திறந்தான். சிந்தாமணியின் உருவம் மாறி மாறித் தோன்றியது.

"ராத்திரி முச்சூடும் நீங்க தூங்கலையா? கண்ணெல் லாம் ஒரே சிவப்பாயிருக்கே?"

கட்டிலை விட்டு இறங்கிய அவன், அருகிருந்த மேஜைமீது காணப்பட்ட அந்தப் புகைப் படத்தை எடுத்து வேறொரு பத்திரிகையில் மறைத்துவிட்டு, மாடிக் கைப்பிடிச் சுவர் ஓரத்தில் நின்றான்.

சிந்தாமணி அனுப்பிய கேள்வியை அவன் மறந்து

விடவில்லை. ஆனால், என்ன பதில் சொல்லுவதென்ற சிந்தனையைத்தான் அவன் மறந்து போனான். அவ்வாறு மறந்தது அவன் குற்றமா ?

"வெந்நீர் போட்டிருக்கேன்; போய்க் குளிச்சிட்டு வாங்க; முகம் தெளிவா யிருக்கும்," என்றாள் அவள்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. குளித்து முழுகி மஞ்சள் பூசி திலகம் இட்டிருந்தாள் சிந்தாமணி. நெளி நெளியாகப் படிந்திருந்த கேசத்தில் இரண்டொரு மயி ரிழைகள் நெற்றி மேட்டில் ஒதுங்கின; வேறு சில இழைகள் கன்னங்களிலும் காதோரங்களிலும் படர்ந் திருந்தன. அவள் அவனையே பார்த்தாள்.

"ஆகட்டும், சிந்தாமணி...நீ...நீங்க போங்க...... போய்க் காலாகாலத்திலே சாப்பிடுங்க!"

நேற்று இரவு தானும் தன் அம்மாவும் சஞ்சலத்தில் பங்கு பிரித்துக் கொண்டிருக்கையில், மெல்லிய இருமல் சத்தம் சிந்தாமணியின் அடித் தொண்டையிலிருந்து புறப்பட்டதையும், அவள் நெய்க் கிண்ணத்துடன் கூடத் துக்கு வந்ததையும், இப்பொழுது காலைப் பணிவிடைக் குத் தயாராக யிருப்பதையும் எண்ணிப் பார்த்தான் மாமல் லன். பனிப் படலத்தில் முகங்காட்டும் புகைப்படம்போல அன்று ஒருநாள் புத்தகத்தில் சந்தித்த சிந்தாமணியின் உருவப் படத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தான் அவன். அவனுக்குத் தலைவலி மிஞ்சியதுதான் மிச்சம்; அவள் தலைமறைவாகச் சென்றதுதான் பலன்.

காலைப் பலகாரம் முடிந்தது. வீட்டில் இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது; ஆகவே, அலுவலகத்தில் இயந்திரங்களுக்கு மத்தியில் தன்னை அமைத்துக் கொண்டு, பொழுதை நெட்டிப் பிடித்துத் தள்ள வேண்டுமென்று முடிவு கட்டினான் மாமல்லன். உடனேயே அம்முடிவை மாற்றினான். 'இங்கேயே இருந்து என் மேகலையைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தால் என்ன? ஆமாம், அதுவே சரி!' என்ற ஒரு திருப்பமும் ஏற்பட்டது. 'என் மேகலை' என்ற உரிமை பிறந்தபோது, அவன் உள்ளத்தே உண்டான இன்ப

வேதனையை அவன் உணரத் தவறவில்லை. நீர் நிரம் பின விழிவிரிப்பில் மேகலை தோற்றம் தந்தாள்; அவள் மட்டும் தோன்றியிருந்தால் அவன் புளகிதம் அடைந் திருக்கமாட்டானா? அவளுடன் வேறு யாரோ ஓர் இளை ஞனுமல்லவா தோன்றினான்! யார் அவன்? தெய்வமே, அவன் யார்?

உயிரும் உயிர்ப்புமாக இணைந்திருந்த இரண்டு ஜாதகங்களையும் வெட்டிப் பிரித்துத் திசை மாற்றிய பூரிப்புடன் அமைதி பெறாமல், தன்னுடைய ஜாதகக் குறிப்பையும் அல்லவா அவளுடைய குறிப்புக்களுடன் பிணைக்கப் பாடுபடுகிறான் அவன்! யார் அவன்...?

கைகளைப் பிசைந்தான்; கால் விரல்கள் தரையைக் கீறின; நெற்றிச் சுருக்கங்கள் எண்ணிக்கையில் மிகுந் தன; தலைக்கனம் அதிகரித்தது.

விடுமுறைக் கடிதத்தை எழுதி முடித்து, அதை அனுப்பி வைக்க யாராவது தென்படுகிறார்களா என்று பார்க்க வாசற் புறத்துக்கு வந்து படிக்கட்டில் மாமல்லன் நின்றான். கடிதத்தை வாங்கிப் போக நண்பர்களில் யாரும் வரவில்லை. ஆனால், அவனிடம் கடிதத்தைக் கொடுத்துச் செல்ல தபாற்காரர் வந்தார்.

மேல் விலாசத்தில் கண்ட எழுத்துக்கள் அவன் பெயரைச் சொல்லின. ஆனால், யார் எழுதியதென்று மட்டும் சொல்லவில்லை. திரையிட்ட உறையைக் கிழித் துக் கொண்டிருந்தபோது, "மாமல்லன்!" என்று அழைக்கும் குரல் கேட்டது. அவன் தன் போக்கில் கடிதத்தைப் பிரித்து, முன்னும் பின்னும் புரட்டினான். "மேகலை!" என்ற பெயரை உச்சரித்தது வாய்.

மறுபடி அவனது பெயர் கூப்பிடப்பட்டது. திரும்பி னான்; கண்களை உயர்த்திப் பார்த்தான். ஆடம்பரமே உருவாக ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

"நீங்கள்...?"

"அடையாளம் தெரியவில்லையா, மாமல்லா? நான் தான் திருமாறன்; படத் தயாரிப்பாளர் ராமசேகர னுடைய மகன்; மாமல்லனுடைய உயிர்த் தோழன்;

மூன்று வருஷம் நான் பர்மாவுக்குப் போயிருந்தேன். சென்ற மாசம்தான் திரும்பினேன்,'' என்று விளக்கம் கொடுத்தான் திருமாறன்.

"ஓ...நினைவு வந்து விட்டது!''

அசட்டுச் சிரிப்புச் சிரிக்க முயன்றான். பெரிய இடத்துப் பிள்ளை! 'ஓடிகொலான்' வாசனை 'கம்' மென்று வந்தது. வாசனைக்கும் இதைப் பயன்படுத்து கிறார்கள்; உடல் நலக் குறைவின் போதும் இது உப யோகப்படுகின்றதே! 'அதே போல...இந்தப் பணக்கா ரப் பிள்ளையின் சிநேகமும் எனக்கு ஆபத்துக்கு உத வுமோ? இல்லை, தன்வரை மணம் பரப்பும் விளம்பரமாக இருந்து விட்டுத்தான் போய்விடுவானோ இவன்...?' என்று சிதறிய சந்தேகம் ஒன்று தலையை நீட்டியது.

கையிலிருந்த கடிதம் அவன் நெஞ்சத்தில் ஆர்வத் தைப் பாய்ச்சியது. பைக்குள் இருந்த லீவுக் கடிதம் அவனுடைய கடமை உணர்ச்சிக்குத் தூபமிட்டது. இப்படிப்பட்ட இரண்டுங் கெட்ட நிலையில் அவன் முன் அவனது நண்பன் நின்றான். திருமாறனின் பட்டுச் சட்டையில் வேர்வைத் துளிகள் சில வழிந்து காய்ந்து கொண்டிருந்தன.

"திருமாறன், வாருங்கள்...உள்ளே போகலாமே.''

"ரொம்பவும் நன்றி, மாமல்லா! நான் இன்று இரவு அரியலூருக்குப் புறப்படுகிறேன். அடுத்த வாரம் உங்களைச் சந்திக்கும்போது, நீண்ட நேரம் நிம்மதியாகப் பேசலாம்; வரட்டுமா?'' என்று சொல்லி விடைபெற் றான் திருமாறன்.

மாமல்லன் தெருவில் கவனம் பதித்தபோது, திரு மாறன் 'பிளிமத்' காரை ஓட்டிச் செல்வதைக் கண்டான். 'நல்ல பிள்ளை; காலேஜில் பார்த்த திருமாறனிடம் என் னென்ன புதுப்புது மாறுதல்களெல்லாம் ஏற்பட்டிருக் கின்றன! அவன் அதிருஷ்டக்காரன்தான்!...காரை நிழலில் பத்திரமாக நிறுத்திவிட்டு வந்தவனை உள்ளே கூட்டிப் போய் உட்காரவைத்துப் பேசியிருக்க வேண்

டும்,'' என்று நினைத்து, தான் இழைத்த தவறுதலுக்காகக் குறைப்பட்டான்.

பாரதியாரின் பாடல் ஒன்றைக் காட்டியது இலக்கிய மனம், 'பாட்டைத் திறப்பதற்குப் பண் ஒன்று இருக்கிறது; அதேபோல இன்ப வீட்டைத் திறப்பதற்குப் பெண் ஒருத்தி வேண்டும்!' என்ற சிந்தனை வழி கோலியது.

மேகலையின் முதற் கடிதத்தை மாமல்லன் படித்து முடித்தான்! அதே வினடி, தன்னை விட்டு மேகலை விலகிச் சென்றுவிட்டதாக மாத்திரம் அவனால் எண்ணி முடிவுகட்ட இயலவில்லை. மேகலை தன்னைச் சுற்றி மட்டுமல்லாமல், தன் இதயத்துள்ளேயும் வட்டமிட்டுக் கொண்டிருப்பதாகவே அவனுடைய உள்ளத்தின் உண்மை இயம்பியது; அவன் நம்பிக்கையில், கனவில், நினைவில் வாழ்பவன். அதுவே அவனுக்குச் சஞ்சீவி மருந்து. 'ஆமாம், அப்படித்தான் செய்யப்போகிறேன்; அவள் என் மேகலை!' என்ற வார்த்தைகள் அவனுடைய மனத்தாளில் எழுதப்பட்டன.

## 4

" திக்குத் தெரியாத காட்டில்-உனைத்
தேடித் தேடி இளைத்தேனே.. !''

தாய்க்குத் தான் பெற்ற குழந்தையைக் காணும்போது மார்பகத்தில் பால் சுரக்கின்றது; உடன் பிறந்தவர்கள் ஒருவரை மற்றொருவர் சந்திக்கையில், நெஞ்சத்தில் பாசம் கொப்புளிக்கிறது; வேண்டியவர்களிடம் மனம் விட்டுப் பேச வாய்ப்பு உண்டானால், மனத்தில் அன்பு வெள்ளம் பெருக்கெடுக்கிறது; அம்மையப்பனை - அகி

லாண்டேஸ்வரியை வணங்கும் சமயத்தில், அருள் பொங்குகின்றது ; பக்தி பண்படுகின்றது.

மனித மனங்களின் அடியில் உறங்கும் தெய்வ உணர்ச்சிகள் இவை. மனிதர்கள் இவற்றை வாழவைக்கிறார்கள் ; இப்படிப்பட்ட தெய்வ உணர்ச்சிகள் மனிதர்களை வாழவைக்கின்றன.

வாழ்க்கையின் பொது விதி இது.

கோசலை அம்மாள் சிந்தாமணியிடம் அன்பு காட்டினாள். அன்பின் சுமை தாளாமல், அந்தப் பெண் திக்குமுக்காடினாள். கோசலை அம்மாளிடம் சிந்தாமணிக்குப் பக்தி சுரந்தது. ஆதரவு இழந்த அனாதைப் பெண்ணுக்குத் தெய்வம்போலப் புகல் அளித்து வருபவள் அல்லவா அவள்?

'என்னமோ இந்த மட்டுக்குமாவது எனக்குத் தங்குகிறதுக்கு ஒரு நிழலைக் காட்டியதே தெய்வம், அதுவே என் பூஜாபலன்தான்!' என்ற நன்றி உணர்ச்சி அடிக்கடி சிந்தாமணியின் இதயத்தில் தோன்றிக் கொண்டிருந்தது.

சிந்தாமணி கூடந்திலிருந்தவாறு வாசற்புறம் கண் பார்வையைத் திருப்பிவிட்டாள். மாமல்லன் அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். கையில் புது 'பைல்' ஒன்று இருந்தது. 'அவசரம்' என்று சிவப்பு மையில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அவனும் அவசர அவசரமாகத்தான் புறப்பட்டுச் சென்றான்.

மாமல்லன் பலகாரம் சாப்பிட்ட வெள்ளித் தட்டைக் கழுவ முற்றத்துக் குழாயடிக்கு வந்தாள் சிந்தாமணி. "எச்சில் தட்டையெல்லாம் நீ கையாலேகூடத் தொடக்கூடாது; சிந்தாமணி," என்று எச்சரித்தாள் ; எச்சில் தட்டை அவளே வாங்கிக்கொண்டாள் ; கழுவிச் சுத்தம் செய்தாள். எச்சிலின் வாத்ஸல்யத்தைத் தாய்தான் பரிபூரணமாக உணர முடியும்.

சிந்தாமணி ஆடாமல் அசையாமல் நின்றாள்.

"நீ போய்ச் சாப்பிடம்மா...!"

" நீங்க..."

"நான் அப்புறம் சாப்பிடறேன். முதலிலே நான் மல்லிகேஸ்வரர் கோயில் வரைக்கும் போயிட்டு வரணும்...நீ சாப்பிடு, சிந்தாமணி. சாப்பிட்டானதும், பருப்பை அவியவை; உலை வைக்கறத்துக்கு ஏற்பாடு செய்..." என்று சொன்னாள்; பூஜைக் கூடையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் கோசலை.

அப்பொழுது சிந்தாமணி நிம்மதியடைந்தாள். அங்கு வந்த இத்தனை நாட்களாகக் கிடைக்காத தனிமை இப்போது அவளுக்குக் கிடைத்தது. வெளித் தாழ்வாரக் கதவை உட்பக்கமாகத் தாளிட்டாள்; இரண்டாங் கட்டை அடுத்திருந்த சிறிய அறையில் காணப்பட்ட கள்ளிப் பெட்டி ஒன்றைக் கூடத்துக்கு எடுத்து வந்தாள். துணிமணிகள் சில கசங்கிக் கிடந்தன. பழைய 'வில்லை' ஒன்றும் கண்ணில் பட்டது. "அப்பா!" என்று விம்மினாள். உடல் பூராவும் நடுங்கியது. அவளது கைகள் பெட்டியைத் துழாவின. ஒரு கடிதக் கட்டு கைக்கு வந்தது. பிணைத்திருந்த வாழை நாரை அறுத்தாள். காலத்தின் கறை படிந்த உதிரிக் கடிதங்கள் உதிர்ந்தன. கண்கள் சேகரித்து வைத்திருந்த தாபத்திற்குச் சாட்சி கூற கண்ணீர் முத்துக்கள் ஒவ்வொன்றாக அணி வகுத்துப் புறப்படலாயின. 'அத்தான்...அத்தான்!' என்ற உறவுச் சொல் ஒலிக்கத் தொடங்கியது. ஒன்றிரண்டு தபால்களைப் புரட்டினாள் சிந்தாமணி.

"சிந்தாமணி!

அத்தான் நான் அழைக்கிறேன். அத்தை மகள் நீ பதில் சொல்லமாட்டாயா?

நீ எங்கோ இருக்கிறாய்; நான் எங்கோ இருக்கிறேன். ஆனாலும், நம் ஆசை முகங்கள் இரண்டும் அருகிருந்து, அன்பு சேர்த்து, ஆறுதல் மொழி சொல்லிக் கொள்கின்றனவே...! இந்தக் காட்சியை நான் உணர்கிறேன். உனக்கும் தெரிந்திருக்க வேண்டுமே! இந்த இன்ப நிலை ஒன்று போதுமே, ஏழேழு பிறப்புக்கும் நம் பிணைப்புக் கயிறு அறுபடாமல் இருக்க...!

சின்னக் கரித்துண்டு என் விரலிடுக்கில் அகப்பட்டுக் கொள்ளும்போது, உன்னை நான் படைக்கிறேன்; பார்க்கிறேன்; பரவசமடைகிறேன். விளங்குகின்ற உறவு முறையும், விளங்காத பாசபந்தமும் என்னை உன்பால் பைத்தியமாக்குகின்றன. பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிருனும் அய்யன். நான் கண்டது கிடையாது; காண வேண்டுமென்று எண்ணியதும் கிடையாது. ஆனால், நான் காணும் திசையிலெல்லாம் கடவுளைக் காணவிட்டாலும்—அல்லது, காண முடியாவிட்டாலும், அரம்பையரை மிஞ்சும் பூவையரைக் காணத் தவறுவது இல்லை; ஓர் அதிசயம் என்ன தெரியுமா?... ம், சொல் சிந்தாமணி, சொல்! சரி, நானேதான் சொல்லி விடுகிறேனே! தோன்றும் பெண்களிலே—தோற்றம் தரும் விழிக் கணைகளிலே உன்னையே காணுகிறேன்; காந்தம் மிகுந்து பேசும் உன் கயல் விழிகளையே தான் தரிசிக்கிறேன். இந்த ஒரு பாக்கியம் என்னுள் வரப்பிரசாதமாக அமைந்திருக்கையில் எனக்குப் புதிய கனவு எதற்கு? புதிய உலகம் ஏன்? புதுத் திருப்பந்தான் எதற்கு?

....................."

கையெழுத்து இல்லை. பேனாவை எடுத்து அந்த இடத்தில் ஏதோ எழுதினாள் அவள். 'குலோத்துங்கன்' என்ற பெயர் உருவானது.

விழிக் கதவுகள் அடைபட்ட தருணத்தில், வாசற் கதவுகள் தட்டப்பட்ட சத்தம் கேட்டது.

எல்லாவற்றையும் அப்படியே திணித்து, கள்ளிப் பெட்டியை இருந்த இடத்தில் வைத்துத் திரும்பினாள் சிந்தாமணி. வழிந்த நீரை வழிவிலக்கிவிட வேண்டுமென்று சித்தம் ஞாபகப்படுத்தவில்லை. அவள் வாசற் கதவுகளை நெருங்கித் திறந்தாள். கோசலை அம்மாள் திருநீறு விளங்கிய நெற்றியோடு காட்சியளித்தாள்.

"அழுதியாம்மா, சிந்தாமணி." என்று கேட்டதற்குப் பிற்பாடுதான் சிந்தாமணிக்கு உணர்வு வந்தது. கண்ணீ

ரைத் துடைத்துவிட்ட பிறகு, "இல்லிங்க, நான் அழலையே!" என்ருள்.

கோசலை அம்மாளுக்குச் சிரிப்பைத் தவிர வேறெதுவும் புலப்படவில்லை. 'நல்ல பொண்ணு...இது இங்கே வந்ததிலேருந்து வீடே புதுக்களையாத்தான் இருக்குது...! ஆனு, மேகலை விஷயம் மாத்திரம் அப்படி நடந்திருக்காமல் இருந்திருந்தால், எவ்வளவோ சிலாக்கியமாயிருக்கும்!...இந்நேரம் மாமல்லனுக்கு முகூர்த்தத்துக்குத் தேதிகூடக் குறிச்சிருப்பேன்!...சிந்தாமணிக்கும் ஒரு கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யவும் முனைஞ்சிருப்பான் தம்பி!...ம்...! எல்லாம் தான் மாறிப் போச்சே? கடவுளே! கொஞ்சம் முந்தி நான் உன் கிட்டே வேண்டிக்கிட்ட அந்த வரத்தையாச்சும் கொடு...! ஒரு அல்லிக் கொடிக்கு ஒரு நிலாவைக் காட்டு! அப்பனே!' என்று நினைவு மலர்களைச் சரமாகத் தொடுத்து மனப்பீடத்திற்குக் காணிக்கையாக்கினுள் அம்மணி.

வார்த்தெடுத்த தோசைகள் காய்ந்து கிடந்ததைக் கண்ட கோசலை அம்மாள், மறுபடியும் தோசைக்குக் கல் வைத்தாள். சூடான தோசைக்கு ஒன்று இரண்டு என்று வரிசை எண் கொடுத்து சிந்தாமணியைச் சாப்பிடச் செய்தாள்; அப்புறம்தான் அவள் நல்ல மூச்சு விட்டாள்.

"உங்களுக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கேன்." என்று கண்ணீர் மல்க, உணர்ச்சிப்பெருக்குடன் கூறினுள் சிந்தாமணி.

கோசலை அம்மாள் சிரித்தாள். அவள் சிரிப்பின் உட்பொருளை ஊகித்தறிய சிந்தாமணிக்கு வயசு போதவில்லை; அல்லது, அவளுடைய தலையில் நரை எதுவும் ஓடவில்லை.

மாமல்லனுக்கு மத்தியான்னச் சாப்பாடு தயாரானது. வேலைக்காரி எடுத்துச் சென்ருள். கோசலை அம்மாளும் சிந்தாமணியும் பகல் சாப்பாட்டை முடித்துக்கொண்டனர். மாமல்லனின் அன்னை சிறு பொழுது ஒய்வு கண்டாள். இதுதான் சமயமென்று, சிந்தாமணி தன்

தோழி மாதவிக்கு தியாகராய நகருக்கு எழுதிய கடிதத்தைத் தபாலில் சேர்க்க எண்ணி வழி நடத்தாள். 'மாதவியின் பதில் நல்லவிதமாக அமைந்தால் நல்லது; அவள் மாதிரி எனக்கும் அன்னை கஸ்தூரி பாய் அனுதை இல்லத்தில் இடம் கிடைத்து விட்டால்தான் எனக்கு நிம்மதியாகயிருக்கும்...கொஞ்ச காலம் பயிற்சி முடிந்தால்; எப்படியும் ஆசிரியை வேலை கட்டாயம் கிடைக்கத்தான் கிடைக்கும்!...ஆமாம் எவ்வளவு நாளைக்குத்தான் கோசலை அம்மாளுடைய சோற்றுக்குக் கேடாக நான் இருக்கமுடியும்?.. 'இடம் பொருள் ஏவல் தப்பிப்போனுல், எந்த அன்புக்கும் அடைக்கும் தாழ் தன்னுலே உண்டாகிவிடு' மென 'அப்பா சொல்வார்களே!...பாசம் நிறைந்த அன்பைச் சொரிய ஒரு கோசலை அம்மாளும், பண்பு நிரம்பின அன்பைக்காட்ட ஒரு மாமல்லனும் எனக்குக் கிடைத்திருக்கிருர்களே!— இந்த ஒரு பாக்கியம் என்றென்றும் நீடித்து நிற்குமென்று என்ன நிச்சயம்? இந்தப் பாக்கியத்தை நீடிக்க விட இந்தப் பழிகார உலகந்தான் ஒப்புமா?...'

தபால் பெட்டியைக் கூப்பிட்டாள்; அது வந்தது; 'என்ன சேதி' என்று கேட்டது. அவள் செய்தியைச் சொன்னுள். "ஓ!" என்று இன் முகங்காட்டி, ஏந்திழை நீட்டிய கடிதத்தை ஏந்தியவாறு பறந்தது பெட்டி.

சிந்தாமணி திரும்பினுள். சந்துத் திருப்பத்தில் இருந்த சாயாக் கடையிலிருந்து கிராமபோன் பெட்டி பாடிக்கொண்டிருந்தது. திக்குத்தெரியாத காடாம், பாவம்; தேடித்தேடி இளைத்தாளாம்! யார், ராதையா? யாரைத் தேடி இளைத்தாளாம்?... கண்ணனைத்தானே!

அவள் கவனம் எங்கோ சென்றது; ஆனுல் அவள் கவலை அங்கேயே தங்கியது. உடல் உள்ளவரையில் கடல் கொள்ளாக் கவலை என்பார்கள்.

அந்தி சந்திப்பொழுது. மாமல்லன் அலுவலகத்திலிருந்து திரும்பியபோது, சிந்தாமணி மாத்திரமே இருக்கக் கண்டான். அம்மா தெரிந்தவர்கள் வீட்டுக்குப் போயிருப்பதாகவும் அறிந்தான். உடம்பில் ஒட்டியிருந்த அலுவலகத் தூசியைக் கழுவிச் சுத்தம் செய்தான்.

வகிடு எடுத்துத் தலை வாரினான்; வீபூதி இட்டான். பிரயாணப் பையில் துணி மணி சாமான்களை நிரப்பினான்.

"சிந்தாமணி, எனக்கு ஒரு உபகாரம் செய்யறீங்களா? ராத்திரிச் சாப்பாடு தயாராகிக்கிட்டிருக்குமே! ஆனவரையிலே கொஞ்சம் போடுங்க... சாப்பிட்டிட்டு போறேன்... ஒரு அவசரக் காரியம்... அம்மா வருகிறதுக்குள்ளே நான் போனால்தான் நல்லது" என்று பதட்டத்துடன் கூறினான் மாமல்லன்.

சிந்தாமணி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். இதழ்க் கரையில் மென் சிரிப்பு மெல்ல ஒதுங்கியது.

"நீங்க அரியலூருக்குத் தானே போகப் போறீங்க?"

ஒரு கணம் அவன் அப்படியே அசந்து விட்டான். அவள் விடுத்த கேள்வி அவன் வாயைக் கட்டி விட்டதை அவன் அறியாமல் இல்லை.

"என் கேள்வி சரிதானே?"

"எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"உங்க முகம்தான் அந்த ரகசியத்தைச் சொல்லுச்சு!"

'பெண்களின் மன ஆழத்தை ஆண்கள் கண்டறிய முடியாது என்பார்கள்; ஆனால் ஆண்களின் மன ரகசியங்களையும் சேர்த்து அறிந்துகொள்ளும் சாகஸம் இந்தப் பெண்களுக்குத் தலைகீழ்ப் பாடம் போலிருக்கிறது!' என்று அவன் நினைத்தான்.

"சிந்தாமணி, உங்களிடம் நான் எதையும் மறைக்க முடியாது. என் கதையையும் என் மேகலையின் கதையையும் நீங்கள் அறிவீர்களென்றே நம்புகிறேன் அம்மா சொல்லி யிருப்பார்கள்!... நானும் மேகலையும புருஷன் மனைவியாக ஆகப்போகிறோம் என்று நாங்கள் மட்டுமல்ல -எங்கள் இருதரப்புப் பெற்றோர்களும் தீர்மானித்திருந்தார்கள். அன்று எழுதப்பட்ட எழுத்தை அழித்து எழுத

ஆண்டவன் எப்படித் துணிவான்? பார்க்கிறேன்!... எங்கள் காதலுக்கு உரைகல்லாக அமைய ஒரு குறுந்தொகை முன்வர வேண்டாம்; ஒரு சிலப்பதிகாரங்கூட மன இரக்கம் காட்ட வேண்டாம்!..எங்களுக்கு நாங்களே உதாரணமாக அமைந்து விடுகிறோம்...! எனக்காக என்னுடைய மேகலை காத்துக் கொண்டிருப்பாள்...! சிந்தாமணி, என் அன்பு மேகலையை நான் காணவிட்டால், எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்!...மத்தியானம் எங்கள் ஆபீஸ் பக்கம் யாரோ ஒரு பைத்தியம், யாரோ ஒருத்தியின் உருவத்தைச் சுவரில் கரித்துண்டால் கிறுக்கிக்கொண்டிருந்தது! என் கனவு சிதைந்தால், அவன் மாதிரியேதான் என் நிலையும் ஆகி விடும்!...ஆகவே, நிலைமை சீர்கெடுவதற்குள், என் மேகலையின் சொத்தை என் மேகலையிடமே சேர்ப்பித்துவிட வேண்டியது என் கடமை. அப்போதுதான் ஆடும் மயிலுக்கு, பாடும் அருவிக்கு, இசை பரப்பும் வீணைக்குப் பொருள் இருக்க முடியும்!"

சிந்தாமணி ஏதோ சொல்ல நினைத்து, விழி வெள்ளத்தை விலக்கி, கண் பார்வையைப் பிரித்துப் பார்த்தபோது, அங்கே மாமல்லனைக் காணவில்லை.

## 5

> 'பந்தத்தை நீக்கிவிடு—அல்லால் உயிர்ப்
> பாரத்தைப் போக்கிவிடு...!'

அரியலூருக்கும் 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்'க்கும் பல ஆண்டுகளாகச் சொந்தம் உண்டு; பந்தமும் இருந்து வந்தது.

மாமல்லன் எழும்பூர் சந்திப்பில் நின்றதும்தான், அவனுக்குச் சுய சிந்தனை புறப்பட்டு வந்தது. புறப்பட

ஆயத்தமாகி நின்றது ரெயில்; திருச்சிப் பெட்டியில் ஏறினுன்; தோல் பையைப் பெஞ்சியில் வைத்தான். மூன்று பேர்களுடன் நான்காவது நபராக அமர்ந்த அவனுக்கும் இடம் ஒதுக்கித் தரப்பட்டது. ஓடும் ரெயிலில் அறிமுகமாகும் நட்பும் அன்பும் ஓடும் ரெயிலுடனேயே ஓடிவிடுவது கிடையாது; ஒட்டி விடுவதுதான் வழக்கம்; அதுவே தமிழ் மரபு.

" ஏன் ஸார், வண்டி அரியலூருக்கு எத்தனை மணிக்குப் போய்ச் சேரும், தெரியுமா?"

" பலார்னு விடியப் போய்ச் சேர்ந்திடும். தம்பி அரியலூர்தானு?"

" இல்லீங்க; சொந்த ஊர் திருச்சி; இப்போ சொந்தக் காரங்க வீட்டுக்குப் போறேன்."

பொடி மூடு தழலின் மீது மூச்சுக் காற்றுப்பட்டாலும் போதும், நீறு பிரிந்து நெருப்பு சிரிக்கத் தொடங்கி விடும். அதே போல, முன்பின் பார்த்திராத மனித உள்ளங்களிடையே அன்பின் பரிவர்த்தனை நிகழ்ந்தவுடன், பாசி மறைந்து பற்றும், பாசமும் சிரிக்கத் தலைப்பட்டு விடும்.

பெரியவரைப் பார்த்தான் மாமல்லன்; அவரையே இன்னும் கொஞ்சப் பொழுதுக்குப் பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டும் போலிருந்தது. பெரியவரின் பெயர் அறியான்; ஆனல், முகம் அறிவான், இதயத்தையும் புரிந்து கொண்டான். நெஞ்சுக்கும் நேத்திரங்களுக்கும் ஊடாக உருத்தெரியாத் தொடர்பு இருக்கவேண்டும்; உள்ளம் நெகிழ்ந்தால், கண்ணீர் கரைபுரளும். மூதியவரின் உருவில் திருவைக் கண்டான். அந்தத் திரு அவனுடைய தந்தை. பாசம் கண்ணீர் உரு எடுத்தது.

" தம்பி, உங்க கண்ணு இப்பிடி ஏன் கலங்குது?"

" ஒண்ணும் இல்லீங்க, ஐயா. கரித்தூள் விழுந்திட்டுது... அவ்வளவுதான்!"

கண்ணீரைத் துடைத்த வண்ணம் அன்றைய மாலைப் பதிப்புச் செய்தித் தாளை மாமல்லன்

புரட்டிக் கொண்டிருந்தான். ஆவடி காங்கிரஸ் விழாப் படங்கள் அச்சாகி யிருந்தன.

சந்திப்பு நிலையத்தில் பிரிய வேண்டிய வண்டிக்குப் பிரியா விடை கொடுத்தது மணியோசை.

தூத்துக்குடியைக் குறி வைத்து ஓடியது எக்ஸ்பிரஸ். மாமல்லன் அரியலூரை எல்லை கட்டி அமர்ந்திருந்தான்.

தொட்டால் ஒட்டிக்கொள்ளும் பசையும் மனமும் ஒன்று. அரியலூர் நினைவு அவனது உள்ளத்தில் ஒட்டியது. பசையின் பணியை ஏற்றது நினைவு; பின்னர் அது வழி மறைக்கும் நந்தியாக விரும்பவில்லை; ஒதுங்கியது. ஆனால் எஞ்சி நின்ற சிந்தனைக் கதிர் அரியலூர்ப் பாவையின் நினைவுக்குச் சிவப்புக் கோடிட்டுக் காட்டியது. அவன் அவளானான்; இதழ்க் கரையில் "மேகலை!" என்ற அன்பின் கூப்பாடு கரை சேர்ந்தது.

முழு நிலவு பொழிப்புரை கூறும் எழில் நிறைவு அவளது வதனத்தில் குடி புகுந்தது. பிறை நிலவு கதை சொல்லும் புத்தம் புதிய கட்டுக்கோப்பு அவளுடைய கண்கள் இரண்டிலும் சரிபாதியாக நிறைந்து காணப்பட்டது. பனி நிலவின் போதையும் போதமும் அவளின் உதடுகளுடன் ஒட்டுறவு கொண்டன. துண்ட மதியின் நுனிபோலமைந்த மூக்கின் இடது பகுதியில் மூன்றும் பிறை வடிவமைந்த மூக்குத்தி அழகு காட்டியது. நிலவின் உருவமாக—நிலவின் ஒளியாக—நிலவின் நிலவாக அவள் ஊர்ந்தாள்; மிதந்தாள்; நின்றாள்.

"என்ன தம்பி அழுகிறீங்க?" என்ற குரல் மாமல்லனது நினைவின் பிடரியைப் பிடித்துக் குலுக்கியது. அவன் குலுங்கினான். நுனி போலமைந்த மூக்கின் இடது குனிந்த பார்வை, பிரிந்த பத்திரிகையில் சிதறிக்கிடந்த கண்ணீர் மணிகளைக் காட்டியது; நிமிர்ந்த பார்வை எதிர் வரிசையில் அமர்ந்திருந்த பெரியவரின் அனுதாபம் கனிந்த முகத்தைச் சுட்டியது.

"அப்பா ஞாபகம் வந்தது!"

"அப்பாவைப் பிரிந்த துக்கமா, தம்பி?"

" ஆமாங்க...இல்லீங்க, ஐயா!... அப்பா என்னைப் பிரிந்த வருத்தம்!"

" அவருக்கு உன் பேரிலே வருத்தமா?"

" ஆமா!"

" என்ன காரணம்?"

" அது எனக்கும் தெரியாது; அப்பாவுக்கும் தெரியாது!"

" பின்னே?"

" அந்தத் தர்மப் பிரபுவுக்குத் தான் அந்த ரகசியம் தெரியும்!"

" அப்படியா?"

"ம்!"

" பாவம்!"

" உங்க மாதிரி இப்படி அனுதாபப்பட்டுத் தேறுதல் சொல்றதுக்குக் கூட இந்தக் கலிகாலத்திலே ஆள் பஞ்சம் வந்திட்டுதுங்க, ஐயா. உங்களைப் பார்த்ததும், என் அப்பா ஞாபகந்தான் எனக்கு வந்திச்சு."

மேகலை தொடமுடியாத தொலைவினின்றும் தொட முடியாத சிரிப்பிழைகளைப் பின்னிக் கொண்டிருப்பதை மாமல்லனின் உள் மனம் உணரத் தலைப்பட்டது,

" தம்பி பேரு என்ன?"

" மாமல்லன்!"

மடியில் வைத்திருந்த புத்தகத்தைக் கையில் எடுத்து அவனிடம் காட்டினார் பெரியவர். மாமல்லன் குறிப்பைப் புரிந்து கொண்டான். மாமல்ல புரத்துச் சிற்பங்களைக் காட்சிப் பொருளாக்கி விளம்பரம் செய்திருந்த அரசாங்கத்தாரின் ரெயில் கால அட்டவணைப் புத்தகம் அது. சரித்திரம் திரும்பியது. பல்லவ சாம்ராஜ்யத்தின் மறக்காத கதையும், மங்காத கலையும், மறையாத புகழும் திரும்பி வந்தன.

ரங்கரத்தினம் என்பது அப்பெரியவருக்கு இடப் பட்ட பெயர் எனவும், அவருடைய தலைச்சன் பிள்ளை தமிழகத்தின் தலைநகரில் அரசாங்க அலுவலகம் ஒன் றில் ஊதியம் பெறுவதாயும், மகனைப் பார்த்துவிட்டுத் தான் அவர் திரும்புவதாகவும் குறிப்புக்கள் கிடைத்தன. அவருக்கும் சொந்த ஊர் அரியலூராம்...!

காத்துத் தவம் கிடந்த சிறிய ரெயில் நிலையங்களை லட்சியம் செய்யாமல், தன் இலட்சியத்தில் கருத்துப் பதித்தது ரெயில்.

தண்ணீர் பட்டுக் கலைந்த ஓவியம் மாதிரி காட்சி யளித்தது தண்மதி.

விழுப்புரத்தில் வண்டி ஓய்வு கொள்ளப் பதினைந்து நிமிஷங்கள் தேவைதானே?

இருந்த அடைசல் போதாதென்று இன்னும் இரு வர் பெட்டிக்குள் முடங்கிக் கொண்டார்கள். புதுமணத் தம்பதிகளின் முத்திரை இருந்தது; புதுமணப் பூரிப்பு இருந்தது. தாழம்பூவின் அழகும் வாசனைத் தைலத்தின் வாடையும் அவர்களுக்குத் துணை நின்றன.

புதுக் கணவனும் புது மனைவியும் இடம் தேடிக் கொண்டிருப்பதைக் கூடச் 'சட்டை செய்யாமல்' உருவி ஓடும் சாட்டையைப் போல வண்டித் தொடர் நீண்டு விரைந்தது. வாழ்க்கைப் பங்காளிகளுக்கு உட்கார வழி செய்ய எண்ணினான் மாமல்லன்; ஆகவே, உட் கார்ந்தவன் எழுந்தான். பெரியவர் ரங்கரத்தினமும் உடன் எழுந்தார். அவரை 'புது இணை' நிற்கவிடவில்லை; அவர்கள் இருவரும் ஒட்டி உட்காரலானார்கள். ஒட்டும் இரண்டு உள்ளங்கள் அல்லவா?...

மேகலையின் நினைவும் நிழலும் அவனுக்குக் குழப்ப நிலையைப் பரிசளித்தன. கண்ணில் தெரிந்த புதுச் செவ்வந்திப்பூவின் அழகு கண்ணில் தெரிய மறுத்த கை படாத ரோஜாவின் எழிலை எண்ணத் தூண்டியது; எண்ணினான்; சிந்தை பறிபோனது. இதயத்தில் சூன் யம் ஆடரங்கு அமைத்தது. மேகலையின் பொற்பாதங் கள் 'கலீர், கலீர்' என்று நாதம் சேர்த்தன. சிலப்பதி

காரத் தம்பதிகள் போன்று அதிசயத் தம்பதியாக வாழ வேண்டுமென்று கனவு கண்ட நெடுங்கதை சிதைந்த சிற்பம் போல, சீரிழந்த குடும்பத்தை ஒப்ப, புகழ் மறைந்த நட்சத்திரம் மாதிரி தெரிந்தது. கண்ணுடிக் கதவைக் கீழே தள்ளிவிட்டு, ஜன்னலின் மடியில் உட்கார்ந்தான் மாமல்லன். ஒடிந்த உள்ளம் உடலைத் தளர்த்திவிட்டது. ரத்த இழப்புக்கு உள்ளான நோயாளி போன்ற ஓர் உணர்வு அவனையும் மீறி எழத் தொடங்கிற்று. வெளியுலகை நோக்கித் தலையை நீட்டினுன். விண்ணில் அங்கங்கே ஒன்றிரண்டு உடுக்கள் சிதறிக் கிடந்தன. பல்லாங்குழிப் பலகையில் வீசியெறியப்பட்ட சோழிகள் போலே. எட்டிப் பிடிக்கத் துடித்தான். மனிதத் தன்மையின் பலஹீனம் அடைந்த தோல்வியைக் கண்டு கை கொட்டிச் சிரித்தது விண்மீன் ஒன்று. "அத்தான்!" என்ற பெண் குரல் கணீரென்று கேட்டது. விண்ணை நோக்கினுன்; யாரையும் காணவில்லை; மண் தன்னை யாரென்று சொன்னது. குனிந்தான்; வெள்ளக்காடாகத் தோன்றியது; "மேகலை!" என்று கூப்பிட்டவன் பயந்து நடுங்கிக் கொண்டு அங்கிருந்து இறங்கி நின்ருன். துளிர்த்திருந்த வேர்வைக்கு வாழ்த்துக் கூறிவிட்டு, நிமிர்ந்த சடுதியில், அபாய அறிவிப்புப் பலகை தெரிந்தது.

புயலிடை அமைந்த 'ஹரிக்கேன் விளக்கு நடுங்கியது.

'என் வாழ்க்கைப் பயணத்துக்கு ஏற்பட்டிருப்பது இதே மாதிரி அபாய அறிவிப்புத்தானு?...காரணமின்றிக் கைப்பிடியை இழுத்து, ஓடும் வண்டியை நிறுத்கி ஐம்பது ரூபாய் தெண்டம் அழுதுவிட்டால், தலை தப்பிவிடும். ஆனல், மேகலையின் ஜாதகக் குறிப்பு காட்டிய அபாய அறிவிப்பு என்னை எப்படிப் பாதிக்கும்? நானும் மேகலையும் எங்கள் ஜாதகங்களைத் தள்ளிவைத்துவிட்டு நாங்கள் ஒன்று சேர்ந்து விட்டால்—அப்புறம் அந்த அபாய அறிவிப்பு எங்களை என்ன செய்ய முடியும்?" என்று பலவாருக நினைத்து நினைத்து மனத்தை விழி வெள்ளத்தால் கழுவினுன்.

மூளை நரம்புகள் அறுபட்டு குருதி புரண்டெழத் தொடங்கிவிட்டதோ ?—மாமல்லனின் இதயம் அழுதது; மேகலைக்கென ஒதுக்கப்பட்ட ' அந்த இதயம் ' அழுதது.

அப்பொழுது வாய்விட்டுச் சிரித்த நகைப்பொலி அவனது செவிகளில் உராய்ந்தது.

' என் கனவு பலித்துவிடுமென்பதற்கு அடையாளமாக இந்தச் சிரிப்பு?...இல்லை, என் திட்டத்தை நினைத்து நையாண்டி செய்கிறதா அந்த விதி...?'

காலமும் தூரமும் மெய்யென்று வீசிப் பறந்த கொடியில் தெரிந்த கேள்வி இதுதான் ; " அப்படியென்ருல், காதலும் கனவும் பொய்தாஞ?"

தனித்த ஓர் உலகத்தின் பாதத்தில் ஒண்டியிருந்தான் மாமல்லன். அவனது உலகம் அவனை ஓய்வெடுக்குமாறு அனுமதித்தபோது, அவனுக்கு வெளியுலகம் சிந்தையில் சூடேற்றியது. பெரியவர் ஏதோ ஜாதகக் குறிப்புக்களை வைத்து உன்னிப்பாகப் புரட்டிக் கொண்டிருந்தார்.

" தம்பி, ஒரு பெரிய அதிசயம் ஒன்று என் வாழ்க்கையில் நடந்தது. அது ஞாபகம் வந்தது. உடனே நான் எங்கேயோ பறந்து போனேன். நான் என் மாமன் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினேன். என் மாமா பெண்ணுக்கும் என் பேரில் ரொம்பவும் இஷ்டம். மாமாவின் கண்ணில் வேருெரு பணக்காரப் புள்ளி தட்டுப்பட்டுவிட்டது. எங்கள் இருவர் ஜாதகமும் பேஷாகப் பொருந்தியிருந்தன. ஆனால் அவை பொருந்தவில்லையென்று மாமா பொய் சொல்லிவிட்டார்.

நான் வேறு இடத்தில் எங்கள் குறிப்புகளைக் காட்டினேன். வாஸ்தவமாகவே அவை பொருந்தியிருக்கும் விஷயத்தையேதான் அந்த ஜோஸ்யரும் சொன்ஞர். கடைசியில் நான் ஒற்றைக் காலால் நின்று என் மாமன் மகளைத்தான் கட்டிக்கொண்டேன். என்னவோ, காலம் நிற்காமல் ஓடி விடுகிறது. ஆனால்

காலம் பழக்கப்படுத்தி விட்டிருக்கும் சில அனுபவங்கள் மட்டும் ஓடாமல் நின்று விடுகின்றனவே, தம்பி?...''

நிதானமாகப் பேசினுர் அவர். மாமல்லனின் மனம் அங்கு இருந்தால்தானே ?

அரியலூர் வந்தது ; மாமல்லனுடன் பெரியவர் ரங்கரத்தினமும் இறங்கினுர். ரெயில் நிலையத்திலிருந்து ஊர்ப்பக்கம் செல்வதற்கு மூன்றணு வண்டிச் சத்தம் பேசினுர்கள் ; ஜட்கா வண்டி சத்தம் போடாமல் நகர்ந்தது.

ஒரு நாள் கூத்து.

மாமல்லன் அப்பொழுது பன்னிரண்டு வயசைப் பூர்த்தி செய்திருந்தான் ; பெற்ருேர்களுடன் திருச்சியிலிருந்து அரியலூருக்கு விருந்துக்கு வந்திருந்தான். விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பார்கள். அவனுக்கு மருந்து தேவைப்படவில்லை. தேவைப்பட்ட விருந்தோ மூன்று நாட்களுடன் வரம்பு கட்டி அமையவில்லை ; பதினைந்து நாட்கள் மேகலையின் இன்பச் சுற்றுச் சார்பில் நழுவின. தாய் மாமன் வீட்டில் சொல்லிக் கொண்டு புறப்பட்டான் சிறுவன். ரெயிலடி வரை சிறுமியும் கூட்டு வண்டியில் தொடர்ந்தாள். ரெயில் புறப்படக் கூக்குரல் எழுப்பிய தருணம், மேகலையின் தகப்பனுர் மகளைத் தேடினுர். சேரவேண்டிய இடத்தில் தன் சொத்து சேர்ந்து விட்டதை அறிந்தார். வண்டி நகர்ந்தது.

“ வாம்மா!”

ஓடினுர் சோமசுந்தரம்.

“ ஹூக்கும் !...”

அமர்ந்தவள் அசையவில்லை.

“ கண்ணில்லே !”

“ நான் அத்தாஞேட கண்ணுக்கும்...!”

வண்டி புறப்பட்டது. வேகம் இணைக்கப்பட்டது. மேகலை அவள் இஷ்டப்படியே அவளது மாமல்லனுடன்

அமர்ந்துவிட்டாள். அடுத்த வண்டியில் புறப்பட்டுச் சென்றார் அவளது தந்தை. மேகலையை ஊருக்கு அழைத்தார். "நான் அத்தான் கிட்டேயேதான் எப்பவும் இருப்பேன்," என்று தீர்ப்புக் கூறிவிட்டாள் மேகலை. அவர் மலைக் கோட்டை உச்சிப்பிள்ளையாரைத் தரிசனம் செய்த நாட்கள் பத்து

இதயத் தளத்திலிருந்து சிலிர்த்தெழுந்த பெரு மூச்சு 'மேகலை' யை அழைத்தது.

தேரடி முனங்கில் பெரியவர் இறங்கினார். காலையில் பத்து மணி சுமாருக்கு அவரைச் சந்திப்பதாகச் சொன்னான் மாமல்லன்; ஜட்கா வண்டியில் அவரிடம் சொன்ன கதையை நினைவூட்டினான்; சட்டைப் பையி லிருந்து ஒரு காகிதத் துண்டையும் நீட்டினான். கொஞ்ச தூரம் கடைத்தெரு வழியே மாட்டுச் சதங்கைகள் பண் பரப்பின. 'அம்பாள் காப்பி கம்பெனியில் இறங்கிக் குளித்து விட்டு மேகலையைப் போய்ப் பார்க்கலாம்,' என்று தீர்மானம் செய்தான் அவன்.

தேடிச் சென்ற இடத்தை நாடிய போது, அவனுக்கு வரவேற்பளிக்க அம்பாள் கம்பெனி உரிமையாளர்கள் காத்திருந்தார்கள். அவர்களோடு திருமண அழைப்பிதழ் ஒன்றும் தவம் கிடந்தது. கல்யாணப் பத்திரிகையில் அவன் கண்கள் பதிந்தன. 'முன்னமேயே இந்தப் பந்தம் நீக்கப்பட்டிருக்கக் கூடாதா?...அல்லது, இப்போது என் உயிர்ப் பாரத்தைப் போக்கிவிட மாட்டாயா?...தெய்வமே!'

அவனுடைய உயிர்ப்பு நின்று விட்டது போல உணர்ந்தான் மாமல்லன்.

## 6

' காதலெனுந் தீவினிலே ராதே, ராதே !—அன்று
கண்டெடுத்த பெண்மணியே ! ராதே, ராதே !'

கைலாயபதியைக் கொண்டவனாக ஏற்கக் கனவு கண்டாள் உமையவள். பரமசிவன் தவம் புரிய இமாலயத்திற்கு வந்தான். குற்றேவல் புரியத் தன் குலச் சுடரை அனுப்பினான் மலையரசன். தாரகனின் கொடுமைகளைத் தாளமாட்டாமல் தவித்த தேவர்களுக்குப் பிரமனின் ஆலோசனை யொன்று கிடைத்தது. அதன்படி முக்கண்ணனுக்கும் இமயவல்லிக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டால், அவர்கள் இருவருக்கும் பிறக்கும் மைந்தன் மூலம் தேவர்களுக்கு விடிவும் வாழ்வும் கிடைக்கும் என்ற உறுதி உருவானது. பணிவிடை செய்து வந்த தேவியின்பால் நாட்டம் உண்டாக்க எண்ணிய வசந்தன், தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு கணை தொடுத்தான், ஐயன்பால். அரவணிந்தோன் முக்கண் திறந்தான் ; பார்வதி தட்டுப்பட்டாள். தன் நிலையை உணர்ந்த பித்தன் காமன் மீது கடுங் கோபம் கொண்டு அவனை எரித்தான். மலை மடந்தை மனம் நொந்தாள் ; அழகினால் ஆண்டவனை அடைய முடியாதென்றும் தவமொன்றே தக்க வழியெனவும் உறுதி பூண்டாள். இடைப் பட்ட சோதனைகள் துடைக்கப்பட்டன. உமையவளின் கனவும் தவமும் பலித்தன. உலகத்தின் அன்னை அவள் !

கண்ணின் கருமணிகள் நோவு எடுக்கும் பரியந்தம் மேகலை அந்தச் சித்திரத்தில் கண் நோக்கு செலுத்தியிருந்தாள். ' தாயே, உன் தவமும் கனவும் பலித்தது போலவே என் கனவும் தவமும் நிறைவேறுமென்று மனக் கோட்டை கட்டியிருந்தேனே ?... கடைசியில், என்னையே நான் அழித்துக்கொள்ள வேளை பார்த்திருக்கும் அளவுக்கு என்னை ஆளாக்கி விட்டாயே ?...என்

கனவு அழிந்த போதே நானும் அழிந்த மாதிரிதானே ? நான் அழிந்துவிட்டால், என் அத்தானும் அழிந்து விடுவாரே ! இனி நான் என்ன செய்வேன் ?...என் அத்தான் என்ன செய்வார் ? எங்கள் மனம் ஒன்று பட்டது போலவே ஜாதகக் குறிப்புக்களும் சரிவரப் பொருந்தியிருக்கலாகாதா ?...'

முத்துச் சுடரொளியில் உலக மாதாவின் அருட் புன்னகை பளிச்சிட்டது.

பித்தம் பிடித்துச் சித்தம் தடுமாறியவள் கணக்கிலே மேகலை சிலையென மலைத்து நின்றாள். கூப்பிய கரங்கள் பிரிந்தன. கண்ணீரின் கூக்குரலுக்கு அவள் காது கொடுக்க மறுத்தாள். ' அழுங்கள் ; நன்றாக அழுங்கள். படைத்தவனின் மனத்தைக் கழுவி அவன் உள்ளத்தில் பச்சாத்தாபம் உண்டாக்கவாவது அழுங்கள்; உங்களிடம் கடைசிச் சொட்டுக் கண்ணீர் வற்றுமட்டும் கதறிக் கதறி அழுங்கள். கண்ணீரை வைத்துச் சொக்கட்டான் ஆடும் ஐயனுக்குக் கண்ணீரை வரவழைக்கும் வரை ஓலமிட்டுப் புலம்புங்கள்...!"

பச்சைக் குழந்தையின் மேனியின் பாவனையில் மிருதுவாக யிருந்தது அந்தத் திருமண மடல். தங்க ரேக்கு வண்ணம் கொண்ட எழுத்துக்கள் மேகலையைச் சுட்டெரித்தன. அவள் சுடுநோக்கினை வீசினாள். ' திருநிறைச் செல்வி மேகலை'க்கு அருகாமையில் இடம் பெற்றிருந்த ' திருநிறைச் செல்வனின் ' பெயரைப் படிக்க மனம் மறுகினாள். வெடித்த நெஞ்சம் வடித்த ரத்தத்துளிகளை உலரவிடப் படுக்கையில் சரண் புகுந் தாள் மேகலை.

உதயப்பூ மடல் அவிழ்ந்து கொண்டிருந்தது.

வெள்ளாளத் தெருக்கோடியில் நடைப்பிணம் ஒன்று பையப்பைய நடை பயின்று வந்தது. ஒய்யாரக் கொண் டையின் பொலிவு அவன் உடைகளில் மின்னியது. துகள் துகளாகிப்போன மனக் கண்ணாடிச்சில் ஒவ் வொன்றும் அவனது உருவத்தை மாத்திரமல்ல. உள் ளத்தையும் பிரதிபலித்துக் காட்டியது. கண்ணாடித் துண்

டங்கள் அனைத்தும் 'கோரஸ்' பாடின. கூட்டாக ஒலித்த குரலைப் பிரிவினை செய்து பார்த்தால், அல்லது கேட்டால், 'மேகலை' என்ற அழைப்பு தெரியும்; அல்லது கேட்கும்!

ஆம்; அவன் மாமல்லன்தான்!

எட்டிப் பிடிக்கும் தூரத்தில் சோமசுந்தரத்தின் மனை இருந்தது. ஓடிப் பிடிக்க வேண்டியவன் அவன்; அதற்கு உரிமையும் அவனுக்கு இருந்தது. அந்த உரிமை இப்போது 'காலாவதி'யான பத்திரம். 'அனுமதியின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்ற எச்சரிக்கை அட்டை தொங்கவிடப்பட் டிருக்குமென்றுகூட அவன் யோசித்தான். சென்னையிலிருந்து புறப்பட்டவன் அரியலூர் மண்ணை மிதிக்குமட்டும் எவ்வளவோ மனத் தெம்புடன் இருந்தான்; விதியின் எழுத்துடன் தன் தலையெழுத்தையும் மாற்றிக்கொள்ளும் அளவுக்குப் பக்குவப்பட்டிருந்தது அவன் நெஞ்சம். காதற் பெண்ணின் கடைக்கண் பணியிலே காற்றிலேறி விண்ணையும் சாடும் திறன் அவனிடம் உருப்பெற்றது. 'நானும் என் மேகலையும் மனம் ஒத்துப்போன பிறகு, ஒப்புதல் சொல்லாத ஜாதகங்களைப்பற்றி யாருக்கு அக்கறையாம்?...என்னுடைய முறைமைப் பெண் என்னைச் சாரவேண்டியவள் தானே?...பின், ஏன் ஜாதகம் பார்க்க வேண்டும்?... காதும் காதும் வைத்தாற்போல திருமண ஏற்பாடுகளைக் கூடச் செய்து விட்டாரே மாமா?...பணம் அவருடைய வாயை கட்டிவிட்டது போலவே அவர் உள்ளத்தையும் கட்டிவிட்டதோ? காதலெனும் தீவினிலே கண்டெடுத்த பெண்மணி ராதை யல்லவா என் மேகலை! அவள் இல்லை யென்றால், நான் எப்படி உயிர் தரிப்பேன்?...' என்று மனம் குழப்பம் அடைந்தது. மேகலையின் இல்லம் நெருங்க நெருங்க அவனுக்குப் பயமும் நெருங்கிக் கொண்டிருந்தது. கை நழுவிப்போன மரகதக் கல் மீண்டும் கிடைக்காதா என்ற ஆதங்கத்துடனும் திரும்பவும் அது கிடைக்க வேண்டுமே யென்ற வேண்டுதலையுடனும் தேடிப் பார்த்து அலையும் உடைமைக்காரனின் நிலையில் இருந்தான் மாமல்லன்.

தேடிப்போன சீதேவி புள்ளிக்கோலம் இட்டுக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு புள்ளியிலும் ஒவ்வொரு முத்து முத்தமிட்டது. குனிந்திருந்தவள் சரிந்து விழுந்த மார்புச் சேலையை எடுத்துப் போட்டவாறு நிமிர்ந்து எழுந்தாள். அது சமயம், :"அத்தான்!" என்ற உறவு முறை புதுப்பிக்கப்பட்டது.

"மே...க...லே!"

பெரு மூச்சும் கண்ணீரும் பெயரிட்டுக் கூப்பிட்டன.

"நான் எழுதின லெட்டர் உங்களுக்குக் கிடைச்சுதுங்களா?" என்று விம்மினாள் மேகலே.

"உன் கடிதம் பட்டணத்திலேயே கிடைத்துவிட்டது; உன் கல்யாணப் பத்திரிகையை இங்கே வந்ததும் பார்த்தேன்!"

மாமல்லன் சின்னப் பையன் ஆனான்; தேம்பினான்.

"அழாதீங்க அத்தான், அழாதீங்க!"

வாய்ச் சொற்கள் துயர்துடைக்குமென்ற நம்பிக்கை யில்லே அவளுக்கு. ஆதலால் பூ விரல் கொய்து, மாமல்லனின் விழி வெள்ளத்தைத் துடைத்தெடுத்தாள் மேகலே.

உணர்வு தடம் புரண்டது; மேகலேயின் மலர்க்கரம் பற்றினான் மாமல்லன். "மேகலே, அப்படியென்றால், நம் இன்பக் கனவுகள் பாழாகிவிட வேண்டியதுதானா?" என்று கேள்வி கேட்டான். நல்லுணர்வு சிலிர்த்தது. அவன் விலகினான்.

மேகலே பதில் ஏதும் சொல்லவில்லே. முன் தினம் அவனுக்கு அவள் எழுதிய கடிதம் பதில் அனுப்பியது.

கடிதம்: "அத்தான், என்னே யாரோ ஒருவரிடம் பிடித்துக் கொடுக்க முடிவு செய்துவிட்டார்கள். மேகலே உங்கள் நிதி என்பீர்களே? நிதி உங்களுக்கு வேணுமல்லவா?— அப்படி யென்றால், ஓடி வாருங்கள். 'வெண்ணிலவு நீ எனக்கு!' என்று விநாடிக்கு விநாடி என்னேப் பார்த்துப் பாட்டுப் பாடுவீர்களே!—நிலவைக் கவ்விச் செல்ல கார்முகிலொன்று காத்திருக்கிறதே, பறந்துவர

மாட்டீர்களா? என் வாழ்வின் நிலையே நீங்கள் தானே, அத்தான்!

—மேகலை."

சிதைந்த மனத்திலிருந்து சித்த உறுதிகூட ஏற்பட முடியுமா? ஏன் முடியாது?—நஞ்சம் ஊறும் நெஞ்சத்தில் தானே அமுதிற்கும் வழி கிடைக்கிறது!

"அக்கா, அக்கா! நீயும் இவங்களும் ஏன் அழ றீங்க?" என்ற வினாக்குறியுடன் 'வினைத் தெரியாச் சிறுமி' ஒருத்தி வந்தாள்.

மாமல்லனும் மேகலையும் கண்களை இணையாக்கிப் பார்த்துக் கொண்டார்கள்.

"தெருவிலேயே நின்னுக்கிட்டிருக்கோமே! வாங்க, உள்ளே!"

"மாமா இல்லியா, மேகலை?"

"பட்டணத்திலே யிருந்து மாப்பிள்ளை காரிலே வர்றாங்களாம். அப்பா குளிச்சிட்டு வரப் போயிருக்காங்க. அப்படியே மங்காயி பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டுத்தான் திரும்புவாங்க.

'மாப்பிள்ளை' என்ற சொற்கள் திருமாறனின் உருவ அமைப்பை எழுதிக் காட்டின. அன்றொரு நாள் தன்னை அவன் சந்தித்ததை நினைவில் உணர்ந்தான். அவன் அரியலூருக்குப் போகப்போவதாக கூறிய செய்தி அவனுக்கு இத்தகைய அர்த்தத்தைக் கற்பிக்குமென்று மாமல்லன் தூங்கும்போதுகூட எண்ணியது கிடையாது.

மரகதவல்லி அம்மை மாமல்லனைக் கண்டதும் நிலைப் படியிலிருந்து விலகித் தலையை உள்ளே மறைத்துக் கொண்டாள்; 'வாங்க!..." என்ற மெலிந்த தொனி உள்ளிருந்து வெளியேறியது.

மேகலை காப்பி கொண்டு வந்நாள். கூடத்தில் பிறம்பு நாற்காலியில் அமர்ந்திருந்த மாமல்லனிடம் கொடுத்தாள். வேண்டுமென்றே தொட்டுக் கொடுக்க விரும்பியவள்போல கை விரல்கள் அவன் விரல்களுடன் இணையும் வண்ணம் காப்பி டபராவைத் தொட்டு நீட்டி

னாள். கால் மாத்திரைப் பொழுது இருவரும் மௌனத்தைச் சாட்சி வைத்தார்கள்.

"இன்றைக்கு மட்டும் காப்பி கொடுத்து விட்டுத் தப்பித்துவிடப் பார்க்கிறாயா, மேகலை?" என்றான் அவன்.

"இல்லை, இல்லை. அப்படி யெல்லாம் நீங்கள் உங்கள் வாயால் சொல்லாதீர்கள். என் கையாலேயே நித்த நித்தம் உங்களுக்குக் காப்பி கொடுப்பேன்! ஆமாம், அத்தான்!" என்று விடை பகர்ந்தாள். இள நகையையும் பகிர்ந்து கொடுத்தது இதழ் ஏடு.

"உண்மையாகவா, மேகலை?"

ஆலயமணி பதில் சொன்னதோ?

உணர்ச்சி சிறைப்படும் சமயத்தில் மனிதன் மனிதனாக நிலைத்து நிற்க வேண்டும். மேகலையின் மது சொட்டும் புது இதழ்களைக் கிள்ளிவிட ஓடிய வலது கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான் இளைஞன். குளிர் காய்ச்சலுக்கு ஆளானவன் போலானான் உடல் குன்றியது. தவறு செய்யவில்லை யென்ற நியாய உணர்ச்சி அவன் கண்களைத் திறந்தபோது, குன்றிய உடல் நிமிர்ந்தது. உள்ளம் குதூகலம் அடைந்தது. மேகலையைக் கூறு போட்டுச் சாப்பிட்டுவிட்டுத் தான் மறு வேலை பார்ப்பவனைப் போன்று அப்படி அவளை இமைக்காமல் பார்த்துக்கொண்டே யிருந்தான் மாமல்லன். இருவர் மூச்சின் இழைகளும் பின்னல் கோலாட்டம் விளையாடின.

அப்போது, வாசலில் வந்து நின்ற கார் தன் வருகையைத் தெரிவிக்கத் தொடங்கியது.

முதன் முதலில் மாமல்லன்தான் திரும்பினான். மரகதக் கல்லைத் திருடியவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்ட பொருளுக்கு உடையவன் திருடன் மீது ஆத்திரம் கொள்ளும் ரீதியில், மாமல்லன் அந்த உருவத்தைக் கனல் உதிர்க்கும் கண்களோடு பார்த்தான்.

வந்தவன் திருமாறன்.

மாமல்லனை அப்போது அவ்விடத்தில் கண்டதில் அவனுக்கு மெத்த மகிழ்ச்சி. மனம் விட்டுச் சிரித்தான். சிரிப்பில்கூட பணத்தின் இதயம் பேச முடியுமோ? மாமல்லனுக்கு சென்னைக்குக் காலையில்தான் அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தான் அவன்.

மாமல்லன் என்ன பதில் சொல்லுவான்? இல்லை. அவனால் எப்படித்தான் பதிலளிக்க முடியும்? 'ம்' கொட்டித் தலையாட்டினான்.

"வாங்க, மாப்பிள்ளை!" என வரவேற்றபடி சோம சுந்தரம் உள்ளே நுழைந்தார்.

ஒரே விநாடியில் மாமல்லனும் திருமாறனும் திரும்பிப் பார்த்தார்கள். ஆனால் திருமாறனின் முகப்பொலிவில் 'ஆமாம்!' என்ற இணக்க பாவம் அழுந்தியிருந்தது. மாமல்லனுக்குக் கிடைத்த பலன் வழக்கம்போல கண்ணீர்.

திருமாறன் ஆசனத்தில் அமர்ந்தான்.

மாமல்லன் நின்ற இடத்திலேயே நின்றான். கனவுத் தளம் கால் பட்டுச் சிதைந்ததுபோல ஏமாற்றம் அடைந்தான்.

"உட்கார், மாமல்லா!" என்று இரண்டாம் பட்சமாகத்தான் சோமசுந்தரத்தால் உபசரிக்க முடிந்தது. சோமசுந்தரம் வாசலில் நின்ற காரை நோக்கி நடந்தார். உள்ளே திருமாறனின் தந்தை பள்ளிகொண்டிருந்தார். சரி, இப்போது உறக்கத்தின் தலையில் கை வைக்கக் கூடாதென்று திரும்பிவிட்டார். சில நாட்களுக்கு முன்னதாக மாப்பிள்ளை வீட்டினர் பெண் பார்க்க வந்தபோது ஏற்பட்ட அலுவல்கள் அவருக்கு நினைவில் எழுந்தன. 'இன்னும் நாலு நாள்தானே இருக்கு மேகலை கல்யாணத்துக்கு?' என்று எண்ணமிட்டார்; பரபரப்பும் பதட்டமும் ஏற்பட்டன.

நாழிகை வட்டம் அப்பொழுது தெரிவித்த நேரத்: மணி ஒன்பது. நிமிஷம் நாற்பத்தி மூன்று.

ஜெயங்கொண்ட சோழபுரம் பஸ் அடுத்த தெருத் திருப்பத்தில் ஊளையிட்டு மறைந்தது.

மாமல்லன் கண்களை மூடி மூடித் திறந்தான். சிறிது பொழுதுக்கு முன் அவன் கண்ட கனவின் நினைவு உந்திக்கமலத்தில் தீக்கொழுந்தை வைத்தது. கொட்டு மேளம் முழங்க மேகலையின் கழுத்தில் திருமாறன் மூன்று முடிச்சுக்கள் இட்டதாகக் கனவு கண்டான் அவன். உச்சி தொட்டு உள்ளங்கால் முடிய நடுக்கம். 'ஆமாம், இன்றைக்கு இரவு மேகலையைத் திரும்பவும் தனியே சந்தித்துத் தான் முடிவு செய்யவேண்டும்!' என்று தீர்மானித்தான். எண்ணிய விசையுடன், யாரையும் கவனிக்காமல் அங்கிருந்து நகர்ந்தபோது, வாசலில் தன் அன்னையும் சிந்தாமணியும் நிற்பதைக் கண்டான். ஒருவேளை அதுவும் கனவாக இருந்து தொலைக்கப் போகிறதென்ற ஆத்திரத்தில், கண்களைப் பரீட்சை செய்தான். அது உண்மைக் காட்சிதான் என்பதற்கு அத்தாட்சி கிடைத்தது.

"தம்பி, உன்னைக் கண்டதுந்தான் என் மனசு நிம்மதிப்பட்டது. சொல்லாமல் கொள்ளாமல் இப்பிடிப் புறப்பட்டு வந்திடலாமா? சிந்தாமணி ஆறுதல் சொல்லிச்சி, நீ இங்கேதான் வந்திருக்க வேணும்னு." என்றாள் கோசலை அம்மாள். கண்ணீரின் கறை விழி விளிம்புகளில் இல்லை; தொனியில் இருந்தது.

"அம்மா, மேகலை எனக்கு இல்லையாமே அம்மா? கல்யாணத்துக்குத் தேதி வச்சு, பத்திரிகைகூட அடிச்சிட்டாங்களே அம்மா?"

"உன் மனசு உடைஞ்சிடுமேன்னுதான் நமக்கு வந்த கல்யாணப் பத்திரிகையை முன்னடியே உன் கிட்டே காட்டல்லே!..."

சுற்று மதிற் சுவர் ஓரமாக மேகலை நடந்து வாசலுக்கு வருவதை அறிந்தான் மாமல்லன்.

"அத்தை!" என்று விம்மினாள் மேகலை.

உள்ளே திருமாறனும் வெளியே அவனுடைய தந்தையும் எல்லைக் கற்களாக நிற்பதுபோலப் பட்டது மாமல்லனுக்கு.

மேகலை கண்ணீரைத் துடைத்துக் கொள்ளக்கூட கருத்தின்றி, சிந்தாமணியைப் பார்த்தாள். பார்த்து விட்டு, அதே சடுதியுடன் மாமல்லனையும் நோக்கலானாள்

மாமல்லன் விழித்தான்.

அடுத்த இரண்டாவது கணத்தில், "தம்பி!" என்று குரல் கொடுத்த வண்ணம் ரெயில் நண்பர் ரங்கரத்தினம் வந்தார். மாமல்லனைத் தனியிடத்துக்குக் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்று தெரிவித்த செய்தி இது; "தம்பி, உங்க ஜாதகமும் உங்க முறைப் பெண் மேகலை ஜாதகமும் அற்புதமாய்ப் பொருந்தியிருக்காம்!...கல்யாண விருந்துக்கு இந்தக் கிழவனை மறந்துவிடக் கூடாது, தம்பி!"

மேகலையின் கழுத்தில் அப்போதே மங்கல நாண் பூட்டி விட்டாற் போன்று ஓர் இன்ப உணர்வு மாமல்லனின் ரத்த நாளங்களில் பாய்ந்து பரவத் தொடங்கியது.

# 7

> 'உள்ளதெலாம் உயிரென்று தேர்ந்தபின்
> உள்ளங் குலைவதுண்டோ?—மனமே!'

மனிதன் ஒன்று நினைக்கிறான்; ஆனால் தெய்வம் வேறொன்று நினைக்கிறது. அதாவது, மனிதன் நினைப்பதற்கு நேர் எதிரிடையாக தெய்வம் எண்ணுகிறது. நினைத்தது ஒன்றாகவும், நடப்பது வேறொன்றாகவும் முடிவு நிர்மாணிக்கப்படுகிறது. இந்தத் தீர்ப்பின் விளைவாக, மனிதன் மனிதனாகவும் கடவுள் கடவுளாகவும்

அமைந்து விடுகிருர்கள். மனிதனுக்கும் ஆண்டவனுக்கும் இடைவெளியிலே தொலைதூரம் பரப்பளவைச் சொல்லுகிறது; கற்பனைக்கும் எட்டாத மாயப் பெருவெளி திரையாக அமைகிறது. விதி, மாயை, இயற்கை, தெய்வம், ஜாதகம், தலையெழுத்து போன்ற அழகான சொற்கள் கோணத்துக்குக் கோணம் மறைந்து நின்று குரல் கொடுக்கின்றன. அவரவர்களுக்குப் பிடித்தமான வார்த்தைகளின் உடும்புப்பிடியில் அவரவர்கள் நம்பிக்கை வைக்கிருர்கள். பூகோள சாஸ்திரத்தையும் விஞ்ஞான நூலையும் இடை விட்டுத் தன்போக்கில் சுற்றுகிறது உலகம்; வாழ்க்கை வளையத்தில் மனிதன் ஊசலாடுகிருன். அவன் காலப்போக்கில் அறிந்து வியக்கும் உண்மை இது: "நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைத்து விட்டதே!"

மாமல்லன் சாதாரணமான ஒரு மனிதன்; அசாதாரணமான தெய்வத் திருவிளையாட்டிலே 'புதிர்' என்னும் சொற் சிலம்பக் கூத்துக்குச் சாட்சி சொல்ல உருவாக்கப்பட்ட சாதாரணமான—மிக மிகச் சமானியமான ஒரு மனிதன். அவன் எண்ணினுன்; அவனுல் எண்ண முடிந்தது. அவன் கனவு கண்டான்; அவனுக்குக் கனவை உண்டாக்க முடிந்தது. கண்ட கனவு சிதைந்து போனதையும் முன் ஒருமுறை அவன் உணர்ந்தான். உயிர்த் துடிப்பு இற்றுப் போனுற்போல உடல் முழுவதும் சூன்யம் பரவியது. சூன்யத்துள்ளே படர்ந்து பரவியிருக்கின்ற நிறைவைக் கணித்துக்கொள்ளத் தெரிந்த ஈசனையே வம்புக்கு இழுத்தான் மாமல்லன். தன்னுடைய ஜாதகமும் தன் மாமன் மகள் மேகலையின் ஜாதகமும் ஒன்று சேரவில்லை என்பதை அறிந்ததும், அவன் 'அடைந்த அதிர்ச்சி இவ்வளவு அவ்வளவல்ல. அன்று எழுதப்பட்ட எழுத்தை அழித்து எழுத ஆண்டவன் எப்படித் துணிவான்? பார்க்கிறேன்!" என்று சிந்தாமணியிடம் விடுத்த சவாலை மாமல்லன் இப்போது நினைவு கூர்ந்தான்; 'பார்க்கிறேன்!' என்று கடைசியில் முத்தாய்ப்புப் பதித்த அந்த அழுத்தத்தை எண்ணிப் பார்த்தான். எண்ணியது நடக்கவில்லையே என்ற சஞ்சலத்தை விட, எண்ணியது நடக்கத்தான் வேண்டும்

என்கின்ற வைராக்கியமே மேலோங்கியது. பெற்ற வளுக்குக்கூட செய்தி தெரிவிக்காமல் அரியலூரில் வந்து குதித்த காரணத்தை மறக்கமாட்டான்; மேகலேயைத் தனியே சந்தித்து தன் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமென்று கொண்டிருந்த ஆவலேயும் அவன் பசுமை யாக்கினன்.

எல்லாம் இப்பொழுது பழைய சம்பவங்கள்.

பெரியவர் ரங்கரத்தினம் அவர்கள் மாமல்லனிடம் நல்ல செய்தியைத் தெரிவித்தார் அல்லவா?—அந்தச் செய்தி மாமல்லனுக்கு இன்னமும் கனவில் கேட்டது போலவேதான் இருந்தது. கேட்ட தகவல் உண்மை யென்பதை உறுதிப்படுத்திக்கொண்டு நிதானமாகத் தன்னுடைய பழங் கனவைப் பற்றியும் நொடிப் பொழுது அவன் சிந்திக்கலானன். கனவு சில அங்கங்களாகப் பிரிந்து, பின்னர் பல நனவுகளே நினேவுபடுத்தியது. கனவு, உள்ளத்தை மட்டுமல்லாமல், உயிரையும் வாழ வைக்கிறதென்ற உண்மையையும் அவனுல் புரிந்து கொள்ள முடிந்தது. விஞத் தெரியாத காலந்தொட்டு மாமல்லனும் மேகலேயும் ஒட்டியிருந்து தொட்டு மகிழ்ந்து ஆனந்தத்தை இட்டு நிரப்பிக் கொண்ட அடிநாட்களேச் சிந்திக்கத் தெம்பு கிடைத்தது. அறியாப்பருவம் தாண்டி அறியும் பருவம் அண்டியதும், 'மாமல்லா, அதோபார் உன் பெண்டாட்டி!' என்று கேலி பேசிய உற்ருர் உறவினர்களின் வேடிக்கைப் பேச்சுக்களேயும் அவன் நினேத்துப் பார்க்க நேரம் இருந்தது. அன்பை வளர்க்க வும் வாழ்த்தவும் உரமிட்ட இருவேறு அங்கங்கள் இவை. காலச் சக்கரத்தின் சுழற்சியில் அன்பு காதலாக மாறியது; அவர்களது இதயங்களேப் பிணேத்தது; காதலின் அமுத கீதத்துக்கு அடி நாதமாக இணேந்தது. காதல் வாழத் தொடங்கியது; அவர்களும் வாழத் தொடங்கிஞர்கள். ஏமாற்றத்தை முன்னுரையாக்கிப் பயமுறுத்திய அதே காதற்கனவு இன்ப வெள்ளத்தை அவனுடைய விழிகள் இரண்டிலும் பாய்ச்சியது. அவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். "ஈஸ்வரா, இப்பொழுதாவது என் லட்சியத்தை ஈடேறச் செய்தாயே!" என்று நெஞ்சம்

நெகிழ்ந்தான். 'நல்லவேளை, நான் தப்பிப் பிழைத்தேன். நான் நினைத்ததைத்தான் தெய்வமும் நினைத்திருக்க வேண்டும். உண்மையிலேயே இது ஓர் அதிசயம்!'— எண்ணமென்ற இச் சுடர் இதயமெனும் அகல் விளக்கினின்றும் தெறித்துச் சிதறியபோது, மாமல்லனது உடல் பூராவிலும் பெருமிதமும் எக்காளமும் பிறந்தன. அவன் வாய்விட்டுச் சிரித்தான்; சிரிப்பின் அலைகள் கூடிக் குலவிக் கலைந்தன. பூரண நிலவு தனக்குமட்டுமே சொந்தம் என்று எண்ணி, முடிவிட்டு, இறுமாந்து, பந்தம் சேர்த்துப் பொங்கிப் பூரித்துக் கடல் ரசிக்கும் போது, பெருமிதச் சிரிப்பு இழைந்தோடுவது உண்டல்லவா?—அப்படிப்பட்ட பாவனையில்தான் மாமல்லன் சிரித்தான். அவன் மட்டுமா சிரித்தான்? அல்ல; அவனுடைய 'கொண்ட காதல்' சிரித்தது; 'கண்ட கனவு' சிரித்தது; உருவாக்கி வைத்திருந்த 'எதிர்காலம்' சிரித்தது.

அற்ப மனிதனுக்கு இவ்வளவு கம்பீரமாக—இத்துணை அழுத்தமாக—இத்தகைய கர்வத்துடன் சிரிக்கத் தெரியுமா? சிரிக்க முடியுமா?

ஆம்!

"மாமல்லன், உங்களை மறந்து ஏன் இப்படி கட கட வென்று சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

தொடுக்கப்பட்ட வினாக் குறி மாமல்லனது நெற்றித் தளத்தில் ஆச்சரியக் குறியாகத் தழும்பு பதித்தது. உதடுகள் கரை சேர்த்த சிரிப்பின் அமுதத் துளிகள் இன்னமும் இனித்துக்கொண்டிருந்தன. இரு கண்களும் சிந்தனை வசப்பட்டன.

ஏன் சிரித்தான்? என்ன சிந்தித்தான்? மனிதன் சிரிக்க யத்தனம் செய்கிறுனென்றுல், ஆண்டவன் அழத் தொடங்கிவிடுவானென்ற சிருஷ்டி ரகசியம் அவனுக்கு மட்டுப்பட்டுவிட்டதோ?...கன்னக் கதுப்புக்களிலே மெல்லிய கறுமை வண்ணம் பூசியது. ஏன் இந்தக் கறுப்பு நிறம்? மனிதனை அழவைத்து வேடிக்கை பார்த்துச்

சிரிக்கும் வரை படைத்தவனுக்கு அமைதி பூக்காதென்ற நடப்பு உண்மையை அறிந்தவனா அவன்?

பரிதாபம், மாமல்லன்!

"மாமல்லன்!..."

"கூப்பிட்டீர்களா, சண்முகம்?"

"ம்!"

"சண்முகம், என்ன அப்படிச் சிரிக்கிறீர்கள்?"

"நான் சிரிக்கிறேனா, மாமல்லன்?"

"பிறகு...?"

"நீங்கள் சிரிக்கிறீர்கள்?"

"ஓஹோ!...ஆமாம்...! உண்மைதான்!"

"ம்...நீங்கள் இப்பொழுது எங்கேயோ இருக்கிறீர்கள்!"

"இல்லை, இல்லை. உங்கள் காப்பிக் கம்பெனியில் தானே இருக்கிறேன்?"

"உங்கள் மனம்...!"

"அது எனக்குச் சொந்தமல்லவே, சண்முகம்!"

"அப்படியா?"

"ஆம்!"

"புரிகிறது!"

"சந்தோஷம்!"

ஒருவர் சிரிப்புடன் இன்னொருவர் சிரிப்பு விளையாடியது. காப்பித் தூளின் இனிய நெடி இதமாக இருந்தது. காப்பிக் கொட்டைகளை அரைத்துப் பொடி செய்துகொண்டிருந்த இயந்திரம் பணி முடிந்து ஓய்வெடுத்தது. இளங் காலைப் பொழுது அமைத்துத் தந்திருந்த அமைதியை மெல்ல மெல்லப் பறிக்கத் தொடங்கிற்று வெயிலின் சூடு.

சின்னப்பையன் சண்முகத்திடம் ஏதோ செய்தி

சொன்னான். உடனே, அவர் மாமல்லனை காலைப் பலகாரத்துக்கு அழைத்தார். தன் தாய் தன் வரவுக்காகக் காத்திருப்பதாகவும் மாமல்லன் அறிந்தான். பரபர வென்று எழுந்தான்; சண்முகத்தைத் தொடர்ந்தான்.

ஈரம் காயவில்லை; சாப்பிட்ட கையின் ஈரம். "என்ன அம்மா !" என்று கேட்டுக்கொண்டே உள்ளே விரைந் தான் மாமல்லன். அவனைக் கண்டதும், சற்றே விலகி நகர்ந்தாள் சிந்தாமணி.

பையன் இரண்டு தட்டுக்களில் இட்டிலிகளை நிரப்பிக் கொண்டு வந்தான்.

இரு தட்டுக்களையும் மாமல்லன் வழி மறித்து வாங்கி னான்; வழி பிரித்துக் கொடுத்தான்.

"சாப்பிடுங்க, அம்மா !" என்று சொல்லி அன்னை யிடம் நீட்டினான் அவன்.

"அம்மாவோடு நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க, சிந்தாமணி!" என்று அமைதியுடன் தெரிவித்தான் அவன்.

சில நிமிஷ நேர இடை நேரத்துக்குப் பிறகு, கோசலை அம்மாள் தாழ்வாரத்தில் அமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தாள். பச்சை நரம்புகள் நாலு தரையில் சிதறிக் கிடந்தன.

பத்திரிகையைப் பிரித்துப் படித்தவாறு வந்து சேர்ந்த மாமல்லன், "அம்மா ?" என்று கூப்பிட்டான். ஏக்கமும் துக்கமும் மண்டிய தாயின் விழிகள் மைந்தனைப் பரிவுடன் நோக்கின.

"தம்பி, நான் இன்னைக்கு ராத்திரி வண்டிக்கே சிந்தாமணியை அழைச்சுக்கிட்டு பட்டணத்துக்குப் போறேன்," என்று நிறுத்தினாள் கோசலை அம்மாள்.

எதிர்பாரத நிகழ்ச்சிகள் நடக்கக் காணும்போது, உள்ளத்தில் அதிர்ச்சி விளைவது இயல்பு; நம்மை நாமே மறந்துவிடுவோம். ஆனால் எதிர்பார்த்த சம்பவங்

கள் ஒன்றிரண்டு எதிர்பார்த்தபடியே நிகழுகையில், அப்போது இதயத்தில் ஏற்படும் அதிர்ச்சியோ, ஏமாற்றமோ, வேதனையோ அளவில்—பலத்தில் குறைந்தே இருக்கும்.

மாமல்லன் தன் அன்னையின் மனத்தை நன்கு உணர்ந்தவன். அவள் பெற்ற பிள்ளை இவன். சென்னையிலிருந்து அரியலூர் மண்ணை மிதித்து அங்கு தங்கிய முதல் நாள் முடிந்தது; இரண்டாவது நாள் பிறந்திருக்கிறது. இதற்கிடையில் அவள் தன் தமையனார் வீட்டுப் பச்சைத் தண்ணீரைக்கூட பல்லில் வைக்கவில்லை.

"அண்ணே, நீங்க இப்படி பாதகம் செய்வீங்கன்னு துளிகூட எதிர்பார்க்கலை. சொந்தமும் ரத்தமும் விட்டுப் போகாமல் இருக்கும்னு நினைச்சிருந்தேன். நீங்க இவ்வளவு காலம் சொல்லிக்கிட்டிருந்த பேச்சையும் நிஜம்னு நம்பிக்கிட்டிருந்தேன். ஊரிலே உலகத்திலே இருக்கிறவங்க மாதிரி என் மகனும் அவனுக்குப் பிடிச்ச உங்க மகளைக் கல்யாணம் காட்சி செய்துகிட்டு சுகமா இருக்க வேணும்னு நிதம் கடவுளை வேண்டிக்கிட்டிருந்தேன். ஆனா இப்பிடி நீங்க சிரிச்சுச் சிரிச்சு கடைசியிலே என் கழுத்தையே அறுத்துப் பிடுவீங்கன்னு கனாகூடக் காணலை. நல்லாப் பொருந்தியிருக்கிற ஜாதகங்களை பொருத்தம் சரியில்லைன்னு எதுக்குப் பொய் சொன்னீங்க? பணம் உங்க கண்ணை மறைச்சிட்டுது; ஆனால் ரத்த பாசத்தைக்கூட முறிச்சுடுச்சே?... என்னவோ எல்லாம் என் போதாத காலம்...எல்லாம் என் தலைவிதி...!"

நேற்று சாயங்காலம் வீட்டில் அந்நியர்கள் இல்லாத தருணம் பார்த்து கோசலை தன் மூத்த சகோதரரிடம் இவ்வாறு மனம் கொதித்துப் பேசினாள்.

சோமசுந்தரம் ஆடவில்லை; அசையவில்லை. உடன் பிறந்த தங்கையையே இமை வலிக்கப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு விநாடி வாய் திறக்காமல் இருந்தார். பிறகு, "கோசலை, நீ இப்படித் தப்புந்தவறுமாப் புரிஞ்சிக்கிட்டா, அதுக்கு நான் என்ன செய்யட்டும்? என் பேச்சை நம்பு, தங்கச்சி. மேகலை—மாமல்லன் ரெண்டு

பேருங்க ஜாதகத்தையும் பார்த்துச் சொன்ன ஜோஸ்யர் பிரபலமானவர். அவர் பேச்சை நம்பாமல் வேறே என்னுலே என்ன செய்ய முடியும்? அவங்க அவங்க தலையெழுத்துப்படிதானே லோகத்திலே எதுவும் நடக்கும்?... நாம் என்ன செய்யமுடியும்? எல்லாம் தெய்வசித்தம்! கொள்வினை கொடுப்பினை இல்லேன்னு, அதுக்காக நம்ப ரத்தபாசம் கூடவா அத்துப்போகும்? உன் வீட்டுக்காரருக்கு — என் மச்சினருக்கு நான் கையடிச்சுக்கொடுத்ததை என் ஆவி தீருற மட்டும் மறக்கமாட்டேன். என்னையே எதிர்க் கேள்வி கேட்டுப்பிடாதே. வச்ச முகூர்த்தத்தை நிறுத்தப்படாது. மாமல்லனுக்கு நானே இருந்து இந்த மாசத்துக்குள்ளேயே கல்யாணம் செஞ்சு வைக்கிறேன். நீ கவலைப்படாதே, தங்கச்சி. என் பொண்ணு ஜாதகமும் உன் மகன் ஜாதகமும் கனகச்சிதமாப் பொருந்தி யிருக்கிறதாய்ப் பொய் பேசுவாங்க. அதையெல்லாம் காதிலே வாங்கிக்கிடாதே, கோசலை. நான் உன் அண்ணன் இல்லியா? உன் கஷ்ட நஷ்டம் உன்னோடு கூடப்பிறந்த எனக்கும் இருக்காதா?...என்னை நம்பு, தங்கச்சி!'' என்று திருவாய் மலர்ந்தார்.

தேன் சொட்ட உரைத்த தன் சகோதரரின் வாய் வார்த்தைகள் அவரது இதயத்திற்கு உரைகல்லாக அமைந்துவிட்டதாக அவள் எண்ண மறுத்தாள். தேனடையில் வேப்பஞ்சாறு அப்பப் பட்டிருப்பதாகவே ஓர் உணர்ச்சி பரவியது; அந்தக் கசப்பு அடித்தொண்டையிலிருந்து, இதயத்தின் அடிவரைக்கும் படர்ந்தது. வலுக்கட்டாயப்படுத்திச் சாப்பாட்டுக்குக் கூப்பிட்டார். கோசலை அம்மாள் கடைசிவரை வைராக்கியமாகவே மறுத்துவிட்டாள்.

நடந்த நிகழ்ச்சியின் நிழலில் ஒண்டியிருந்த மாமல்லனுக்குத் தன்னறிவு ஏற்பட்டது.

மூன்று நாட்கள் கழித்து நடக்கவிருக்கும் மேகலையின் திருமண விழா மாமல்லனின் நெஞ்சில் நெருப்பை இட்டது. இதயம் எரிமலையானது. காலப்பாதையில் நடைபயின்ற சம்பவங்கள் நடந்து சென்ற வழியிலேயே மீளவும் அடி யெடுந்து வைக்கத் தொடங்கின. அற்புத

மான எண்ணங்களின் பிடியில்—அழகான நிகழ்ச்சி களின் ஆட்சியில் அவன் கட்டுண்டிருக்கையில், அவ னுக்கு அலாதியான காட்சியொன்று மனத்திரையில் நிழலாடிற்று. அது இறந்த காலத்தைச் சுட்டிக்காட்டி யது. வண்ணம் கலையாத புத்தம் புதிய பேசும் ஓவிய மாகத் தோன்றியது கடந்த காலம்: வருங்காலத்திலும் அவனது கற்பனை கால் பதித்தது; பிரசவ அறையில் கிடத்தப்பட்டிருக்கும் பிள்ளைக் கனியமுதின் கொள்ளை அழகைப் போலவே எழில் பூத்து விளங்கியது. மாமல்ல னின் உயிரில் மேகலையின் உயிர் உறைந்திருப்பதை அவன் அறிந்திருப்பானா? பின் ஏன் உள்ளங் குலைந் தான்...?

ஆனால், இவ்விதமான கால எல்லைக் கோடுகளுக்கு இடையில் அவனுடைய சிந்தனை ஊடாடிய தருணத் திலே அவன் இதயம் ஊசலாடத் தொடங்கிவிட்டது. உற்றவர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள், நண்பர் கள் வீடுகளில் நினைவூட்டிக்கொண்டிருந்த மேகலை— திருமாறன் கல்யாண விழா மடல் திரைப்படங்களில் காட்டப்படும் பேய்போல உருவெடுத்தது. தசாவதாரம் புராணப் புத்தகங்களில் சாமான்யமான ஒரு செயலே யாகும். ஏன் தெரியுமா? 'நடைமுறை வாழ்க்கையில் ஒரே மனிதன் ஒரே காலத்தில் சூழ் கதைக்குத் தகுந்த படி, சூழ்வினைக்கு ஒப்பனையாக பத்துக்கு மேற்பட்ட அவதாரங்கள்கூட எடுத்துவிட இயலும்!'—மேகலையின் தந்தையைப்பற்றி நினைத்த மாமல்லனுக்கு இப்படித் தான் வரம்பு கட்டத் தோன்றியது.

"தம்பி!"

மாமல்லன் 'திரு திரு'வென்று விழித்தான். பேச்சின் தொடர் கிடைத்தது. "அம்மா, நீங்க மேகலை கல்யாணத் துக்கு இருக்கிறது தான் நல்லது. நான்கூட இங்கேயே இந்த மூன்று நாளையும் கழிச்சிடலாம்னு தான் நினைச்சி ருக்கேன்!" என்றான்.

ஈரைந்து திங்கள் கருவில் கண்வளர்ந்த மதலைச் செல்வத்தின் உள்ளக்கிடக்கையை அக்கணத்தில்

அந்தத் தாய் உள்ளம் யூகித்துணர முடியாமல் தவியாய்த் தவித்தது.

"நீ இங்கே தங்கப்போறீயா? அடுத்துக் கெடுத்த வங்க வீட்டுக் கல்யாணத்தை நீ பார்க்கத்தான் வேணுமா?...பெற்ற பெண்ணோட ஆசைக்கு மதிப்பு தராமல், புதுப் பணத்துக்கு மதிப்புக் கொடுத்து வீட்டிலே முழக்கப்போற கொட்டு மேளச் சத்தத்தை நீ காது கொடுத்துக் கேட்கத்தான் வேணுமா? மாமல்லா, உன்னை என்னாலே புரிஞ்சுக்கவே முடியலே. உன் மனசுப்படி செய் தோளுக்கு மேலே தோழன்னு சும்மாவா சொல்றாங்க?...உன் இஷ்டப்பிரகாரம் கல்யாணத்துக்கு இரு; நானும் சிந்தாமணியும் ராத்திரிக்குப் புறப்படுகிறோம்." என்றாள் கோசலை அம்மாள்.

படிப்படியாகக் குரல் கம்மி வந்ததைக் கேட்டதும், சிந்தாமணி நின்றவள் கோசலை அம்மாளை நெருங்கி வந்தாள். "அவங்க பேச்சையும் நீங்க அசட்டை செய்யாதீங்க." காரண காரியம் இல்லாமல் அவங்க எதையும் சீக்கிரம் வெளிக்காட்ட மாட்டாங்க என்று மாமல்லனின் சார்பாகப் பரிந்து பேசலானாள்.

மாமல்லன் பார்வை சிந்தாமணியின்பால் திரும்பியது.

கோசலை அம்மாளின் கண்ணோக்கு சிந்தாமணியின் மீது லயித்தது. அவள் தன் மகனையும் அந்தப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தாள். உடன் பிறந்தவரின் ரகசியப் பொய்யைக் கேட்ட 'விநாடியில் தெரிந்து மறைந்த ஒரு காட்சி ஏடு அவிழ்ந்ததை 'மறுபடி நினைத்துக் கொண்டாள். 'சிந்தாமணி, நீயாவது என் பிள்ளையின் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைப்பாயா?' என்னும் சபலம் தலைகாட்டியது. அந்த ஒரு கடைசி ஆசையில்தான் அவள் சென்னைப் பயணத்துக்கு ஆயத்தப் பட்டாள்.

ஆனால், மைந்தனின் எண்ணமும் அதை அனுசரித்துக் கூறிய சிந்தாமணியின் வேண்டுகோளும் அவளைக் குழப்பிவிட்டன. 'சரி, தெய்வம் விட்ட வழி' என்று முடிவு செய்தாள். தான் சுமந்தாக வேண்டுமென்று

கட்டு திட்டம் வகுத்த சுமையை ஆண்டவனின் தலையில் பக்குவமாகச் சுமத்தினுள். "ம், சரி தம்பி! கல்யாணத்துக்கு இருக்கேன். ஆனு, சாப்பாடு ஒண்ணும் இந்தப் பிறப்பிலே நடக்காது?" என்று தீர்ந்த குரலில் உறுதி தொனிக்கச் சொன்னுள்.

## 8

'நிலவினில் நீனே மருவி - வள்ளி, வள்ளி!
நீயாகிடவே வந்தேன்...!'

'ராஜா சிதம்பரம் பூங்கா' என்பதாக ஒன்று அரியலூரில் இருப்பதாகக்கூட அவ்வூர் வாசிகளில் பெரும்பாலோர் அறிந்திருக்கமாட்டார்கள். சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், ஜெயங்கொண்டம், கும்பகோணம், திருச்சி, கடலூர்—இவைபோன்ற ஊர்களுக்குப் பயணப்படுகின்றவர்களுக்கும், நேர் எதிரே தண்ணீர் எடுக்க வரும் பெண் குலத்தினருக்கும் இதயத்தை வாசற்படியில் நிறுத்திவிட்டு நீதி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் செல்வர்களுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கும் அந்தச் சிருங்காரப் பூந்தோட்டம் பெரும்பகுதி அறிமுகமாகி யிருக்கத்தான் வேண்டும்.

இத்தகைய தன்மையில் இருந்த மேற்படி பூங்காவில் அன்றைக்குத் தனிக் களை சொட்டியது. கடலலைகளுக்கு அடியிலும், மலை முகடுகளுக்குப் பின்னுலும் முகத்தை மறைத்துக்கொள்ள வேண்டிய வெய்யவன் அப்போது செயல் மறந்திருந்தான். இயற்கையின் நியதிக் குறிப்புக்கு ஒத்துப்போகும் மலர் வகைகள் சிறை வைத்திருந்த மணத்தை வெளியேற்றிக் கொண்டிருந்தன. அருகிருந்த ஹோட்டலில் வாய்வலிக்கக் கதறிய ரேடியோ தமிழகத்திலிருந்து கடன் வாங்கிய திரைப்பாடல்களை சிங்களத் தீவிலிருந்து ஒலி பரப்பிக் கொண்டிருந்தது.

இன்பம் நிறைந்த இத்தகைய சுற்றுணர்ச்சியின் மத்தியில், துன்பம் சேர்ந்த இதயங்கள் இரண்டு சோர்ந்து அமர்ந்திருந்தன. இதயங்களைச் சுமந்திருந்த வர்கள் மாமல்லன்.—மேகலை.

நூலிழைகூட இடையீடு அமைக்கவில்லை அவர்கள். இருவர் வதனங்களும் ஒன்றை யொன்று மாற்றி மாற்றிப் பார்த்தன. இனம் விளங்காத தாபமும், இனம் புரிந்த அச்சமும் மௌனத்தைத் துண்டாடத் துணிந்து விட்டன.

"நாளைக் கழித்து கல்யாணம். கடைசியில் உன் முடிவு என்ன, மேகலை?" என வினவினான் மாமல்லன்.

"அத்தான், என்னைக் கேள்வி கேட்காதீங்க. விடையை மட்டும் நீங்கள் சொல்லிப்பிடுங்க. அதன்படி நடக்கிறேன். உங்க முடிவு எப்படியானாலும் சரி, அதை உடனே நிறைவேத்துகிறேன். இது சத்தியம்!"

உறுதி சொன்னது போதாதென்று, அத்தானின் கைகளைப் பிடித்துக் 'கையடித்தும்' கொடுத்தாள் அன்புச் செல்வி மேகலை.

உடல் ரத்தம் முழுதும் உச்சியில் அணை கட்டப் பட்டு விட்டாற்போலிருந்தது; இது மாமல்லன் நிலை; நினைவு; நடப்பு. அன்றைக்கோ அவளைக் கண்டதும் அவன் விம்மினான்; அவள் அவனுடைய கண்களைத் துடைத்துவிட்டாள். இன்றைக்கோ, தெய்வ வாக்காக வாய் மொழியை உதிர்த்து அவனது பெரு மூச்சைப் பெருஞ் சிரிப்பாக மாற்ற உத்தாரம் சொல்லியிருக்கிறாள். நாணத்தின் துணைகொண்டு மட்டும் பெண் பெருமை அடைந்துவிடமாட்டாள்; துணிச்சலும் உறுதியும் பெண்மைக்கு அணிகலன்களாக அமைய வேண்டும்!

யாராவது வேற்று மனிதர்கள் வருகிறார்களா வென்று அடிக்கொருமுறை மாமல்லன் நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தான்; பூந்தோட்டந்தில் பிறந்த மெல்லிய காற்று இதமாக வெண்சாமரம் வீசியது. கிழக்கு மூலையில் வந்தமர்ந்த இளம் ஜோடி ஒன்று அடுத்த ஐந்தாவது வினாடியில் புறப்பட்டது.

"அத்தான் !" என்று அழைத்து அவனைப் பூவுலகுக்குக் கொணர்ந்தாள் மேகலை.

இராம தூதன் கொண்டு வந்த சஞ்சீவி மூலிகை லட்சுமணனை உயிர்மீட்டெழச் செய்தது. மேகலை கொடுத்த துணிவு மொழி மாமல்லனைப் புது வாழ்வு அடையப் பண்ணியது. அவன் அவளை உன்னிப்பாகப் பார்வையிட்டான். தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் பயணத்தின்போது உருவான வைர நெஞ்சத்தையும் திறந்து நோக்கினன். போட்டு வந்த திட்டத்தின் நகலையும் திருப்பிப் படித்துப் பார்த்தான். பொருந்தாத ஜாதகங்களின் தீர்ப்பைக்கூட மாற்றி யெழுதிவிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் வந்தவனுக்கு விதியின் நல்ல வாக்கு எதிர்பாராமல் கிடைக்கவே, பழைய தைரியத்துக்கு இப்பொழுது வல்லமை அதிகமானது. 'மேகலையுடன் இங்கிருந்து வெளியேறி, தேதி குறிக்கப்பட்டுள்ள அதே சுப தினத்திலேயே மேகலையின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டுவிட வேண்டும்,' என்பது அவனது அந்தரங்கம். 'என் வாழ்வின் நிலையே நீங்கள்தானே, அத்தான்!' என்று கடிதத்துடன் கேள்வியையும் தூது அனுப்பிய சித்திரப் பாவை அவனுக்கு நம்பிக்கையூட்டிய தெய்வமாகத் தோன்றினாள். மேகலைக்கு எழுதப்பட்டு, ஆனால் அனுப்பாதிருந்த கடிதத்தைச் சட்டைப் பையிலிருந்து எடுத்துப் படித்தபின் அதை மேகலையிடம் கொடுத்தான். அன்று கடிதத்துக்குக் கட்டிக்கொண்ட எல்லை இன்று காதலின் வெற்றித்தளத்தை எட்டக்கூட வலுவிழந்தது. அவனால் அழைக்கப்பட்ட 'ஆணிப் பொன்' இப்பொழுது அவனுடைய பலத்தை அறிய உதவியது.

"மேகலை !"

"அத்தான், ஏன் இவ்வளவு தயங்குகிறீர்கள் ?"

"ஒன்றுமில்லை, மேகலை."

"அரியலூர் உங்களுக்குப் பயங்காட்டுகிறதா ?"

"இல்லை ?"

"பிறகு ?..."

"உன் அன்பு, மேகலை, அன்பு!"

"என்னுடைய அன்பு உங்களைப் பயமுறுத்துகிறதா, அத்தான்?"

"அல்ல; சிரிக்க வைக்கிறது; சிந்திக்க வைக்கிறது. கட்டுத் திட்டங்களைத் தகர்த்தெறிந்து, பணத்தின் பேரில் பாசம் கொண்ட பெற்றவர்களின் கண்ணீரைச் சட்டை செய்யாமல், குபேரபுரி மாப்பிள்ளையையும் மதிக்காமல், உன்னுடைய ஏழை அத்தானுடன் வாழ்க்கை நடத்தத் துணிந்துவிட்ட உன் பெருந்தன்மை எனக்கு அளவில்லாத சந்தோஷத்தைத் தருகிறது. அன்று எழுதிய எழுத்தை அழித்தெழுதக்கூட கடவுள் துணியவில்லையல்லவா? ஆனதால், நீயும் நானும் முதலில் இங்கிருந்து சென்னைக்குப் புறப்படவேண்டும்; ஏற்கெனவே குறித்தெழுதப்பட்ட முகூர்த்த வேளையிலேயே நீயும் நானும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். இதுதான் என்னுடைய முடிவு ஆகும்...!"

"நான் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்ததை நீங்களே கூறிவிட்டீர்கள்!"

"அப்படியா?"

"ஆமாம், அத்தான்!"

"அப்படியானால், இன்றிரவே நீயும் நானும் சென்னைக்குப் புறப்பட்டு விடுவோம்!"

"நல்லது, அத்தான்!"

"உன்னை நான் எங்கே சந்திப்பது?"

"எப்படியும் நான் ஸ்டேஷனுக்கு வந்துவிடுவேன். கவலைப்படாதீர்கள். அத்தான்!"

"சரி, மேகலை!"

காப்பித் தூள் கம்பெனியை மாமல்லன் அடைந்த சமயத்தில், அங்கிருந்த மேஜைக் கடிகாரம் மணி ஏழு என்று சொன்னது. மேகலையை அவள் வீட்டுக்கு அனுப்பிவைத்து விட்டு அவன் திரும்பியபொழுது, அவனுடைய நெஞ்சில் பாய்ந்திருந்த தைரியத்தையும்

திட்டத்தையும் ஏதோ ஓர் உணர்வு அப்புறப்படுத்த முற்படுவது போன்றதொரு நினைவு எழத் தொடங்கி விட்டது. அவனையும் அறியாமல் தாழ்வு மனப்பான்மை யின் சாயல் படர்ந்து பரவியது.

'மேகலை எங்கே? நான் எங்கே? மாமாவின் பணம் எங்கே? நான் எங்கே?—சைகோனில் விளைந்து வந்து கொண்டிருக்கின்ற வெள்ளைப் பணம் அவரது வெள்ளை மனதையே கறுப்பாக்கிவிட்டதே! அவருடைய சொத் தைப்பற்றி அறிந்துதானே படக்கம்பெனி முதலாளி அவருடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முனைந்திருக் கிருர்?...ஆனல் என்னுடைய இந்தப் புதியவழி...! அது நல்லதா, கெட்டதா? என் சுயநலம் எனக்குச் சொல்லிக் கொடுக்கும் பதில் 'நல்லது' என்பதுதான். மேகலைக் கும் என் செயல் சரி என்றுதான் பட்டிருக்கிறது. என் எண்ணப்படியே அவளும்தான் சிந்தித்திருக்கிருளே!... மனிதர்களின் வாழ்க்கைத் தடாகத்திலே அமைந்திருக் கும் நீராழி அல்லவா? இந்த முதற் காதல்?...எங்க ளுடைய முதற் காதல், எங்கள் வாழ்வுக்கு வசந்த மண்ட பம் அமைக்குமா?...ஆம்; கட்டாயம் என் கனவு நிறை வேறிவிடும். பின்னர், ஏதோ ஒரு நிறைவின்மை நெஞ் சகத்தை ஏன் முற்று கையிட்டிருக்கிறது?...

'அம்மாவின் ஆசி பெற்று எனக்குரிய இல்லத் தரசியை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டிய நான், பெற்ற தாயிடம் கூடச் செய்தியைத் தெரிவிக்காமல், மேகலையுடன் பட்டணத்துக்கு இன்றிரவு ரயிலேறிப் போகிறேன்!... ம்!...வரும் விதி இராத்தங்காது என் பார்களே அம்மா!...என்னை, எங்களைத் தொடரயிருக்கும் விதி ஒரு வேளை எங்களுடனேயே பயணப்பட்டுவிடுமோ? மேகலையைக் காணுத விவரம் கேட்டு பெரிய பட்டாளமே படையெடுத்து வந்துவிட்டால் என்ன செய்வது?... இந்தத் தமிழ்ச் சமுதாயம் ஆண் இனத்துக்கு வகுத்துக் கொடுத்திருக்கும் சட்ட திட்டங்களைத் தளர்த்திக்கொள்ள ஏது உண்டு. ஆனல் பெண் இனம் அப்படியல்லவே?... பெண்களுக்கென்று எழுதப்பட்ட கட்டுப்பாடுகள் அவர் களது வாழ்க்கையாகவே அமைந்து விடுகின்றனவே?... மேகலை என்னுடன் புறப்பட்டுச் சென்றதைக் கேள்விப் பட்டதும் ஊரார் அவளை நிந்திக்கமாட்டார்களா? தமிழ்ப்

பண்பைச் சாட்சிக்கு அழைத்துக்கொண்டு ஏசிப் பேசுவார்களோ? ஐயோ, கடவுளே...!'

குப்பைக் கூடையில் வேண்டாத கூளங்கள் மட்டும் தான் தஞ்சம் புகுகின்றனவா? முக்கியமான காகிதங்கள் கூட சமய சந்தர்ப்பங்களில் இடம்மாறிப் புகல் அடைவது இல்லையா? இப்படிப்பட்ட வரம்பில் பேருவை அழுத்திருல், மனம் ஒரு குப்பைக் கூடை' என்றுதான் விளம்பி நிற்கும். கூடையில் குவிந்திருக்கும் குப்பைகளை மனிதனே தேடிப் பார்க்கையில், மனச்சாட்சி பழைய சம்பவங்களைத் தூண்டித் துருவி அலசி ஆராய்வதில் அதிசயம் இல்லைதானே...?

மனத்துக்கு மனம் சாட்சி; மற்றதற்குத் தெய்வம் சாட்சி என்று பழமொழி ஒன்று வாழ்ந்து வருகிறது. மாமல்லனைப் பொறுத்த மட்டில் மனம் சாட்சி சொன்னது; ஆனுல், தெய்வம் சாட்சி சொல்லவில்லை. பேசும் மனிதன் கூப்பிட்ட குரலுக்கு பேசாத தெய்வம் எவ்வாறு செவி சாய்த்து ஓடிவர முடியும்...?

அம்பு துளைத்துப் பாய்ந்தாற்போல வேதனைப் பட்டான்; வலி தாளாமல் இன்னல் அனுபவித்தான். அம்பு!—வில் அம்பா?...சொல் அம்பா?

இரண்டாவது களத்தில் மாமல்லன் நுழைந்தான்.

மேகலை அளித்த அமைதியையும் ஆறுதலையும் பறித்துக்கொண்ட தன் மனத்தின் பான்மையைநிந்தித்தவாறு, குழப்பத்தில் கனிந்த விரக்தியோடு பூங்காவிலிருந்து நடந்து தேர்முட்டி முனையில் திரும்பியபோது திருமாறனைக் கண்டான். முதல் நாள் அவனைப் பார்த்ததோடு சரி; அப்புறம் அவனைச் சந்திக்கவில்லை; கண்டு பேச விரும்பவுமில்லை. உள்ளங்கை நெல்லிக் கனியைத் தட்டிப் பறித்துக்கொண்ட எதிரியென்று திருமாறனைக் கருதினுன் மாமல்லன். முகத்தில் கடுமையின் நிழல் படிந்தது. மாமல்லனிடம் அவன் பெயர் குறித்திருந்த அழைப்பிதழைக் கொடுத்தான் பணக்கார இளைஞன். அவன் ஏற்கெனவே படித்து முடித்த மடல்தானே? மூக்கின் நுனியில் சூழ்ந்திருந்த நறுமணத்தின் வாடை

அவனைத் திணற வைத்தது...! திருமாறன் ஆரம்பிக்க யிருக்கும் புது மண வாழ்வின் புதிய நறுமணமா அது? அதனால்தான் அவன் இத்தகைய பெருமிதத்துடன் காணப்படுகிறானோ?

தன் திருமணத்துக்கு அவசியம்வரவேண்டுமென்று மீண்டும் மாமல்லனிடம் நினைவூட்டினான் திருமாறன்.

'ம்' கொட்டிவிட்டுப் பிரிந்தான் மாமல்லன். ஒரு முறை மெரினா கடற்கரையில் கேட்ட சிலம்புச் செல் வரின் சொற்பொழிவு நெஞ்சில் ஓடியது. பூங்காவில் மேகலையிடம் பேசிக்கொண்டிருக்கையில் அந்தச் சொற் பொழிவின் சாரத்தை எடுத்துக் காட்டியதையும் அவன் எண்ணமிட்டான்.

'மாசு அறு பொன்னே!...வலம்புரி முத்தே!
காசு அறு விரையே! கரும்பே, தேனே!
அரும் பெறல் பாவாய்! ஆர் உயிர் மருந்தே!'

கண்ணகியை முன் வைத்துப் புகழ்ந்த கோவலனின் வாய்மொழிகள் மாமல்லனை கைகோர்த்து எங்கோ அழைத்துப் போயின. ஆனால் அவை இப்பொழுது அவனுடைய மனச் சூருவளிக்கு அருமருந்தாக அமை யச் சம்மதம் தரவில்லை ...!

மாமல்லன் இரவுச் சாப்பாட்டுக்கு அழைக்கப் பட்டான். விரிந்து கிடந்த செய்தித் தாளில் அவன் பார்வையைத் திருப்பினான். காதலித்த ஓர் இளைஞ னுடன் தொடர்ந்து சென்றாள் யுவதி ஒருத்தி. கோபம் கொண்ட பெண்ணின் தந்தை ஆண் பிள்ளை மீது வழக்கு தொடுத்தாராம். சட்டம் இளைஞனுக்கே சாதக மாக அமைந்ததாம். பத்திரிகைச் செய்தி அவனுக்குத் தெம்பையும் தெளிவையும் சிறுகக் கொடுத்தது. மறுபக்கம் புரட்டலானான். காதலித்த பெண்ணை அடைய முடியாததால், மனமொடிந்து போய்விட்ட குலோத்துங் கன் என்ற பெயருள்ள ஒரு யுவன் சித்த சுவாதீனம் தப்பி சென்னைத் தெருக்களிலுள்ள சுவர்களில் காதலி யின் உருவத்தைக் கிறுக்கிக் கொண்டு திரிகிறானும். இமைப் பொழுதுக்கள் தெம்பும் தெளிவும் யாத்திரை

போய்விட்டன. மறுபடி புயல், பூகம்பம், எரிமலை! பத்திரிகையைத் தூர விசிறி யெறிந்தான் அவன்.

சாப்பிட்டுத் திரும்பியபோது, சிந்தாமணி மயங்கிக் கிடந்ததை அறிந்து திடுக்கிட்டான் மாமல்லன். மறு பதினைந்தாவது நிமிஷத்தில் அவள் கண்களைத் திறந்தாள். கோசலை அம்மாள் கண்ணீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டாள். மனச் சான்றுக்குத் திரை யிடுகிறான் இதயமிழந்த மனிதன்; விந்தை மிகு உலகத்துக்குப் படுதா போடுகிறது இதயமுள்ள இயற்கை.

இரண்டாவது ஆட்டத்துக்குப் படம் பார்க்கப் போவதாக அன்னையிடம் பொய் சொல்லிவிட்டு மாமல்லன் ரெயிலடியை நோக்கி நடந்தான். அந்தத் தெருவைத் தாண்டியபோது, பெரியவர் ரங்கரத்தினம் வேகமாக வந்து நின்றார்.

"மாமல்லன், உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். படக் கம்பெனிக்காரர் உங்கள் மாமாவிடம் கோபித்துக் கொண்டு சற்று முன் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டாராம். உங்கள் மாமாவுக்கு ஏராளமாகக் கடன் இருக்கிறதாம்; இந்த ரகசியம் அவருக்குத் தெரிந்துவிட்டதாம். மேகலை மூலம் எனக்கு விஷயம் தெரிந்தது. உங்கள் அம்மாவிடம் இந்த நட்பைச் சொல்வதற்கு உங்கள் மாமா சோமசுந்தரம் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாராம்!... இனி உங்கள் இருவர் கனவும் காதலும் வெற்றி யடைந்துவிடும்!' என்று விளக்கினார்.

நிலவினில் வள்ளியை மருவி, அவளாகவே வந்திடக் கனவு கண்டு வெற்றி பெற்ற வேல் முருகனின் நினைவு எழுந்தது மாமல்லனுக்கு.

சோமசுந்தரம் அவர்களின் வீட்டில் அன்றைக்குக் கொட்டு மேளம் முழங்கியது. நிச்சயிக்கப்பட்ட அதே சுப முகூர்த்த வேளையில் மேகலையின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான் மாமல்லன்!

# 9

'உண்மை நின்றிட வேண்டும்!
ஓம்...ஓம்...ஓம்...ஓம்!'

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்...!"

நாகசுரம் மணமக்களுக்கு வாழ்த்துப் பாடியது; கொட்டுமேளம் ஆரத்தி எடுத்தது; திருமண கீதம் பாடிய இசைத் தட்டுகள் திருஷ்டி கழித்தன. மஞ்சளில் பிசைந்தெடுக்கப்பட்ட அட்சதைகள் "வாழ்க! வாழ்க!' என்று நல்லாசி கூறின. 'உண்மைத் தமிழனும், அவனுடைய ரத்தத்தோடு ரத்தமாக ஐக்கியப்பட்டிருக்கும் தமிழ்ப் பற்றும்போல மாமல்லனும் மேகலையும், வாழ்வீர்களாக!' என்று நண்பர்கள் சிலர் அச்சடித்த பத்திரங்களின் வழியாக தங்களின் நல்லெண்ணங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்; பரிசுகள் கொடுத்தார்கள் சிலர்; பாராட்டுரைகள் வழங்கினார்கள் பலர்.

கண்முன் கண்டு கொண்டிருந்த காட்சிகள் ஒவ்வொன்றுமே மாமல்லனுக்குக் கனவு மாதிரியேதான் தோன்றியது; மேகலையின் கழுத்தைத் தொட்டு, எண்ணி மூன்று முடிச்சுகள் இடவேண்டுமென்று அன்று மனக்கோட்டை கட்டினான்; எழுப்பிய தளத்தைப் பலப்படுத்த, எண்ணங்கள் தளம் அமைத்தன; கோட்டைக்குள் அமைக்கப்பட்டிருந்த வசந்த மண்டபத்தின் எழில் ராணியாக ஏற்றம் தந்தாள் மேகலை. அவள் அவனுடைய கனவுப் பதுமை; அவன் ஒருவனுக்கே 'முன்றானை போட' பாத்தியதை பூண்ட தங்க நிலா அவள். அவ்வாறுதான் அவன் அன்றைக்குக் கனவு கண்டான்—மமதையோடு, மணப் பூரிப்போடு. கண்ட கனவு தேய்ந்து மறைந்து விடுமோ என்று எண்ணும் அளவுக்குச் சந்தர்ப்பங்கள் சூழ்நிலையை உருவாக்கிய தருணத்திலே, அவனிடமிருந்து மேகலை எட்டாத தொலைவுக்கு எட்டி எட்டி விலகிக்கொண்டிருப்பதாக ஒரு பிரமை எழத் தொடங்கியது.

ஆண்டவனிடமிருந்து நன்மையை எதிர்பார்க்கையில் மனிதனின் மனம் ஐயன்பேரில் பக்தி கொள்வது இயல்பு. ஆனால் எண்ணியதற்கு நேர்மாருகக் காரியம் நிகழுவதைக் கண்டால், கடவுள்மீது வைக்கப்பட்ட பக்தி தன்னாலே குறைந்து, ஆத்திரம் தலையெடுக்கின்றது. இப்படிப்பட்ட பண்பு மாற்றத்தின் விளைவாகத்தான் இயற்கையின் நியதிகூட தலைகீழ்ப்பாடமாகி விடுகிறதோ? படைத்தவனையே வம்புக்கு இழுக்கவும் துணிகின்ருனே மனிதன்? இந்நிலைக்கு மாமல்லன் சாட்சியாக அமையவில்லையா...?

மாமல்லன் இப்பொழுது புத்தம் புதிய மாமல்லன். மேகலையின் பொன்னிறக் கழுத்தைக் கைவிரல்கள் தீண்ட, மேனி அழகு அவ்வளவையும் ஜோடி விழிகள் மோடி செய்து அனுபவிக்க, அவன் மங்கல நாண் பூட்டினான் அல்லவா?—அப்போது அவனது உடலில், உள்ளத்தில், உயிரில், உணர்வில் புதுமை மிகுந்த ஏதோ ஓர் அனுபவம் கிளர்ந்தெழுந்தது. 'மேகலை இனிமேல் என் நிதி!' என்ற எண்ணம் தோன்றிய சமயத்தில் அவன் ஆண்டவனிடம்தான் முதலில் ஓடினான். 'அப்பனே, என்னை மன்னித்துக்கொள்!' என மன்ருடிப் பிரார்த்தித்தது மனம். எண்ணியது பலித்து விடும்போது, இறைவன்பால் கனியும் பக்தியினை சுயநலமென்று உரைக்கலாகாதா? மணவறையில் சுடரொளி சிந்தி வாழ்த்திய ஹோமத்தீயை அவனால் மறக்க முடியாது; புதுப் புனலாடி, கணவனும் மனைவியும் தீ வலம் வந்தபின், வான வெளியின் கீழே நின்று அருந்ததியை அண்ணாந்து பார்த்த பரம்பரைப் பண்பாட்டைத்தான் அவன் மறப்பானா? காலவிளக்கின் நல்லாசியும், அட்சதை மணிகளின் வாழ்த்தொலியும் இன்னமும் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

'என் கனவு பலித்து விட்டது; ஆஹா, என் கனவு பலித்துவிட்டது; ஆமாம், என் கனவு பலித்து விட்டது...!'

இவ்வாறு அவன் எண்ணற்ற தடவைகள் எண்ணமிட்டான். இதயக் களிப்பின் நிறைவுடன் அருகிருந்த துணையை நோக்கினான். எழிற் கன்னியின் கள்ள விழிப்

பார்வையில் போதை தெரிந்தது; அவனது விழிகள் தட்டாமாலே சுற்றின. அந்த நோக்கில் போதமும் இருந்தது; அவனுடைய முகத்தில் 'பிரதிபலிக்கப்பட்ட அறிவு' பிரகாசித்தது.

மணமாலைகள் இரண்டும் தனித்தனியே உள்வீட்டுச் சுவர் ஆணிகளில் ஓய்வு பெற்றன.

கோசலை அம்மாளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் இருந்தது. அவளுடைய அண்ணி மரகதவல்லி அம்மை கையில் ஏந்திய வெற்றிலைத் தட்டுடன் எதிரில் நின்று கொண்டிருந்தாள். ஐந்தாறு நிமிஷ நேரமாக நின்றதால், கால் கடுத்தது; வலது கைத் தட்டும் சுமையாக அமைந்தது. ஆகவே, தாம்பூலத்தை கைமாற்றினாள். அப்போது தங்கக் கொலுசுகள் ஒன்றோடொன்று உரசிக் கொண்டன. அதன் விளைவால், மெல்லிய ஒலி மெள்ளப் புறப்பட்டு நின்றது.

கோசலை தலையை உயர்த்தினாள்; விழி நீருக்கு வழி விட்டாள்; பெருமூச்சு வெளி வந்தது; மலர்ச் சிரிப்பு முகங் காட்டிற்று. கண்ணீர் கைவிரல்களுள் பதுங்கியது. கூடத்தில் விரித்திருந்த ரங்கூன் பாயில் மூன்று சொட்டுத் துளிகள் சிதறிக் கிடந்தன.

"வாங்க, அண்ணி!"

சிரிப்பின் இழைகளைப் பிரித்தெடுத்த வண்ணம், இடது கையிலிருந்த வெற்றிலைத் தட்டை வலது கைக்கு மாற்றி நீட்டினாள் மரகதவல்லி.

"பந்தியெல்லாம் முடிஞ்சிட்டுதுங்களா, அண்ணி?"

"ஆமாங்க!"

"எங்க சிந்தாமணி என்ன செய்யுதுங்க, கண்டீங்களா?"

"உங்களோடேதான் சாப்பிட்டுச்சு; இப்போ நம்ப தங்கமணிப் பாப்பாவோடு விளையாடிக்கிட்டிருக்குது!"

"அப்படியா?"

"ம்!"

"சிரிச்சுக்கிட்டுத்தானே இருக்குதுங்க

"ஓ !"

"ஆமா, எங்க மேகலை எங்கே ?"

"உங்க மருமகப் பொண்ணுதானே ?"

"ஆமா, ஆமா !..."

"காணலையே, கோசலை !"

"என்ன அண்ணி, நிசமாகவா சொல்றீங்க? எங்கே போச்சுது எங்க மேகலை ? வாங்க, வாங்க...போய்த் தேடலாம் !"

"பதறுதீங்க, கோசலை. எங்க மாப்பிள்ளை எங்கே? அதை முதலிலே சொல்லுங்க, நாத்தனாரே !"

"உங்க மாப்பிள்ளை மாடியிலே இருப்பான் !"

"அப்ப உங்க மருமகளும்...!"

மரகதவல்லி அறிமுகப்படுத்திய சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டது கோசலை அம்மாளின் புன்னகை. உதடுகள் அனுமதித்த இடைவெளியில் வெற்றிலைக் காவி படிந்த பற்கள் தெரிந்தன.

அதே சமயத்தில் மாடிப் படிகளின் வழியே இளம் ஜோடிச் சிரிப்பின் அலைகள் மிதந்து வந்துகொண்டிருந்தன.

சொல்லி வைத்தாற் போல அண்ணியும் நாத்தியும் தலைகளை உயர்த்திப் பார்த்தார்கள்; பார்த்த சடுதியிலேயே தலைகள் தாழ்ந்து விடலாயின. இப்போது உதட்டுக் கரைகளிலே நமட்டுப் புன்முறுவல் பொன் ஒளி பரப்பியது.

"வெத்திலை போடுங்க, சம்பந்தி !"

"என்ன அண்ணி, புதுசா சொந்தம் கொண்டாடுறீங்க ?"

"உள்ள சொந்தம்தானே, கோசலை ?"

"ஆமா, உள்ளதைச் சொல்லித்தான் தெரியப்படுத்தணுமாக்கும்...?"

"உங்க அண்ணன் அடிப்பட்ட நிலைக்குத்தானே நம்பளைக் கொண்டார யிருந்தாங்க?"

"வாஸ்தவந்தான் அண்ணி. என்னமோ, மலைக் கோட்டைப் பிள்ளையார் கடாட்சத்திலேதான் எல்லாமே நல்லபடியா முடிஞ்சிருக்குது. ஆதி காலந் தொட்டு நாம பேசிக்கிடுவோமே, எங்க மாமல்லனுக்குத் தான் உங்க மேகலைன்னு; அதுப்படியே நடந்திட்டுது. கடவுள் துணையாலே அண்ணன் மனசு மாறுறதுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுது. உங்களை நான் மறக்க முடியா துங்க அண்ணி!"

"அப்படியெல்லாம் என்னைத் தூக்கிவச்சுப் பேசா தீங்க, கோசலை உண்மையை ஒளிவு மறைவு இல்லா மல் சொல்லவேணுமானால், நாங்கதான் உங்களை மறக்க முடியாது. பட்டணத்துப் படக் கம்பெனிக்காரன் பறிச் சுக்கிட்ட மானம் மரியாதையை நீங்கதானே திருப்பித் தந்தீங்க, கோசலை? உங்க குடும்பத்தை நானோ மேகலை யோ இந்த ஜன்மத்திலே மறக்கவே முடியாது!"

உணர்ச்சிச் சுழிப்பின் காரணமாக சொற்கள் தெளி விழந்து ஒலித்தன.

சோமசுந்தரம் ஏப்பம் பறித்தபடி கூடத்தில் வந்து நின்றார். ஜன்னல் கதவுகளைத் திறந்துகொண்டு அனற் காற்று உள்ளே எட்டிப் பார்த்தது. மார்பிலும் நெற்றி யிலும் வழிந்த வியர்வையை துப்பட்டாவினால் துடைத் தெடுத்தவாறு, திண்டுக்கல் வெற்றிலைகள் நாலைந்தைச் சேர்த்து எடுத்தார்; வாசனைச் சுண்ணும்பு சுட்டும் விரல் நுனியில் பந்தம் சேர்த்தது; பற்களின் இடுக்குகளில் சாயப்பாக்கு நைந்தது; எச்சில் ஊறியது; வெற்றிலைக் காம்புகள் தரையில் நழுவின.

புருஷனைக் கண்டதும் எழுந்து சற்றே ஒதுங்கிய மரகதவல்லி உடனே தன் நாத்தனார் கோசலையின் பக்கத் தில் போய் நின்றாள். பெண்டிர் இருவரையும் அடுத்தடுத் துப் பார்த்தார் சோமசுந்தரம். பிறகு அவர் தம் தங்கை கோசலையை அண்டி, "தங்கச்சி, நீங்க இரண்டு பேரும் பேசிக்கிட்டிருந்தது என் காதுக்குக் கேட்டுது," என்று சொல்லி அத்துடன் பேச்சைத் துண்டித்துவிட்டார்.

மாமல்லனின் அன்னைக்குத் திகைப்பு மேலிட்டது. மேகலையை ஈன்றவளோ எவ்விதமான சலனமும் இல்லாமல் காணப்பட்டாள். நாத்தனருக்குப் பாசத்தின் பிடிப்பில் கவனம் அதிகம்; அண்ணிக்கோ யதார்த்த உண்மைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்கின்ற எண்ணம். இருவரின் குறிப்புக்களையும் எடைபோட்டுப் பார்க்கவா அவர் வந்திருந்தார்? அல்ல!

கோசலை அம்மாளின் நினைவுகள் கடந்த சில நாட்களைத் தாண்டின.

மேகலை தன் மகனுக்குக் கிடைக்கும் 'லவிதம்' இல்லையென்னும் உண்மையை ஜாதகம் அறிவித்த தருணத்திலேயே கோசலை அம்மாள் சென்னைக்குப் புறப்பட்டுப் போக வேண்டுமென்று முடிவு செய்தாள்: மறுகணம், சென்னைக்குப் போவதற்குப் பதிலாக திருச்சிக்கே போய் விடலாமோ என்ற ஒரு நினைவும் நெஞ்சில் நெளிந்தது. 'சரி, பார்க்கலாம்; எதற்கும் சிந்தாமணிப் பெண்ணைக் கலந்து முடிவு செய்துகொண்டால் போகிறது!' என்பதாகவும் ஒரு திட்டம் உருவெடுத்தது. இப்படிப்பட்ட நிலையில்தான், மாமல்லன் தாயிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தான். மேகலையின் திருமணம் முடியும் வரை அவள் அரியலூரில் இருக்க வேண்டுமென்பது தான் அவனுடைய விண்ணப்பத்தின் பொருள். கடைசியாக 'ம்' கொட்டினாள் அன்னை: தன் தமையன் வீட்டுப் பச்சைத் தண்ணீர்கூட பல்லில் படாதென சூளுரைக்கவும் அவள் மறக்கவில்லை.

ஆனால், பாசமும் சபதமும் 'ராசி' ஆகிவிட்டன. மேகலை—மாமல்லன் இணையின் நல்லதிர்ஷ்டம், சோமசுந்தரத்துக்குரிய சைகோன் சொத்துக்குத் தீவினை விளைந்தது. கடன் ரகசியத்துக்கும் காற்றுக்கும் ஏக சம்பந்தம் இருக்கவேண்டும். காற்றை எப்படி யாரும் அணை கட்டித் தேக்கிவிட இயலாதோ, அம்மாதிரி கடன் ரகசியத்தையும் ஒருவராலும் ஒளித்து வைக்கமுடியாது. எப்படியோ செய்தி பட முதலாளிக்கு எட்டியது. அப்பாவுக்குப் பணத்தில்தான் நாட்டம்; இளவரசுப் பட்டம் திருமாறனுக்கோ மேகலையின் எழிற் கூட்டில் இஷ்டம். அப்பாவுக்குத்தான் இறுதி வெற்றி கிடைத்தது. தேதி

வைத்த முகூர்த்தத்துக்கு ஒப்ப மறுத்துவிட்டார் தனவந்தர்.

சோமசுந்தரத்துக்கு விஷயம் எட்டியது. தலையில் விழுந்த இடி அடிவயிற்றிலே வெடித்தது. 'ஐயோ, இப்ப நான என்ன செய்யப்போறேன்?.. ஊருக்காரங்க என்னைத் தூற்றப் போறுங்களே ?...பெரிய இடத்துச் சம்பந்தம் மேகலைக்குக் கிடைக்கவேணுமேன்னுதானே முதலிலே பொருந்திப்போன மேகலை—மாமல்லன் ஜாதகத்தைப் பொருந்தலேன்னு கூட நான் பொய் சொல்ல வேண்டி வந்துச்சு! கடைசியிலே என் வினை என்னையே சுட்டுப்பிடுச்சே?...என் தலைவிதியே என்னைக் குழி தோண்டிப் புதைச்சுப்பிடப் பார்க்குதே? ஈஸ்வரா, என் மானத்தைக் காப்பாற்று' என்று துதி பாடினர்!

அவருக்குப் புதிய யோசனை ஒன்றை அருளினன் 'எல்லாம் வல்லவன்'' தட்சணமே தங்கையிடம் ஓடி வந்தார்; அவருடைய மதிப்பும் கௌரவமும் கோசலையின் தீர்ப்பில் இருப்பதை உணர்ந்தறிந்தவர் இல்லையா அவர்? "மேகலையை நீதான் கோசலை உன் மருமகளாக ஏற்றுக்கவேணும்," என்று கண்ணீர் எச்சரிக்கையுடன் வேண்டினர்; நடந்ததை ஆதியோடந்தமாகக் கூறினர்; மன்னிப்பும் கேட்டார்.

கோசலை அம்மாளுக்குப் பெரும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. மைந்தனின் கனவுக்கு முழு வடிவம் கொடுக்க வேண்டுமென்னும் ஒரே நினைவு அவளுடைய வைராக்கியத்தைக் கூட இருந்த இடம் தெரியாமல் மறைத்துவிட்டது. மணக்கோலம் பூண்ட ஒரே மகனைக் கண்பூத்துப்போகும் பரியந்தம் பார்த்துக்கொண்டேயிருந்தாள் பெற்ற அன்னை.

சோமசுந்தரம், "தங்கச்சி!'' என்று நினைவுத் தந்தியைச் சுண்டிவிட்டார். கம்பிகளிலே உறங்கும் இசைக்கும் மனத்தளத்தில் கண்வளரும் நினைவுக்கும் வித்தியாசம் குறைவு.

நின்று நிலைத்துவிட்ட 'உண்மை' அவருக்குப் படித்துக் கொடுத்த பாடம் மனச்சாட்சியின் குரலாகும்! 'ஓம்'

என்னும் இரட்டை எழுத்துகளுக்குள் முடங்கினர் அவர்.

கோசலை அம்மாள் ஏறிட்டுப் பார்த்தாள் ; கனவு கண்டு விழிப்பது போலவே யிருந்தது அவளுக்கு. "போய்ப் படுத்துத் தூங்குங்க, அண்ணச்சி. உடம்பு அலுப்பு அப்பத்தான் தீரும்," என்ருள் அவள். பிற்பகல்.

தொடர்ந்த பேச்சுக்கு இணைப்புக் கொடுக்க விரும்பவில்லை அவள் என்பதையும் அவர் யூகித்தார். 'ம்,' என்று 'சூள்' கொட்டி உயிர்த்தவாறு நடையைக் கடந்த போது, தபால்காரர் வாசலில் காத்திருந்தார்.

பதிவு செய்யப் பெற்ற கடிதம் மாமல்லனுக்கு வந்திருந்தது.

சோமசுந்தரம் பையன் ஒருவனைப் பிடித்து மாப்பிள்ளையை அழைத்துவரச் செய்தார்.

மாமல்லன் கையெழுத்திட்டுக் கடிதத்தை வாங்கினன். 'அனுப்புதல்' என்னும் பகுதியில் திருமாறன் என்ற பெயரைக் கண்டதும், அவனுக்கு என்னவெல்லாமோ விநோதமான எண்ணங்கள் தோன்றிக் கூத்தாடத் தொடங்கின !

## 10

> 'மாரனம்பு என்மீது வாரி வாரி வீச—நீ
> கண்பாராயோ? வந்து சேராயோ?'

'இரவே நீ ஓடோடி வா!' என்று இதழோடு இதழ் அசைத்து மௌன மொழி மூலம் கேட்டுக் கொண்டது இயற்கை. இரவு வந்து சேர்ந்தது.

நிலவுக் கன்னியை ஆசையுடன் எதிர்பார்த்திருந்தாள் மேகலை. தோழி ஒருத்தி அவளுக்கு வேண்டாமா? ஆனல், அவளுக்கு ஏமாற்றம்தான் விளைந்தது. அத்துடன் இரவின் பயம் செறிந்த தன்மை வேறு அவளைப்

பாடாய்ப் படுத்திவிட்டது. தனிமை சில சமயங்களில் மட்டுமே இன்பம் தர வல்லது. அப்போது மேகலைக்குப் பாழ் வெளியில் நாட்டம் கிடையாது. தனிமைக்கு மாற்று மருந்தாக அமைய துணை தேவைப்பட்டது. அவளுக்கு உற்ற துணைக்கு அது சமயம் மாடி ஒய்வளித்துக் கொண்டிருந்தது.'மத்தியான்னம் நான் அத்தான் கூடச் சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்ததை அத்தை, அம்மா எல்லோரும் பார்த்திருப்பாங்களோ?' என்ற கேள்வி அவளுடைய பெண் மனத்தில் பயத்தை உண்டாக்கவில்லை; பயிர்ப்பை உற்பத்தி செய்தது. பெண்மை நாணத்தைத் தோழியாக்க முனைந்தது. ஆனால், அவளுக்குத் தோழியாக அமைய ஓடோடி வந்தவள் சிந்தாமணிதான்.

ஒளி சிந்தி எரிந்துகொண்டிருந்த மின்சார தீபங்கள் அசைந்தாடித் தவழ்ந்து வந்துகொண்டிருந்த பூந்தென்றல், எழில் கூட்டி இன்ப நினைவு மீட்டிக்கொண்டிருந்த திருமண மலர் மாலைகள், செந்நிறக் கழுத்தில் பொன் நிறம் கொண்டு விளையாடிய தாலி, சொர்க்கத்துக்கு இடம் மாற்றும் மாய சக்தி பூண்ட வாசனைத் திரவியங்களின் சுகந்த வாடை, மணப்பந்தல் அறிமுகப் படுத்திய புதிய வாழ்க்கைத் தோழரின் ஆசைமுகம் ஆரம்பித்து வைத்த வருங்காலக் கணவுக் கூடத்தின் இன்பக் காட்சிகள்...!—நானாவிதமான நினைவுகள் அவள் நெஞ்சில் நிலைத்தன. ஆனபடியால், சிந்தாமணி அருகில் வந்து நின்றதை அவளால் கவனிக்க முடியாமல் போய் விட்டது.

"மேகலை!" என்று விளித்தாள் சிந்தாமணி.

மேகலை ஏறிட்டுப் பார்த்தாள்; கண் கடையில் மென்னகை படர்ந்திருந்தது.

"பால் சாப்பிடு, மேகலை!"

வயிறு காலியாகவிருந்த உண்மை அவளுக்கு நினைவூட்டப்பட்டது. காலையிலிருந்து மேகலை 'நோன்பு' இருந்தாள். தாலி காக்க விரதம் காத்தாள். 'மாங்கல்ய தாரணம்' நிகழ்ச்சிக்குப் பிறகு பால் பழம் கொடுத்தார்கள். கணவன் மனைவி இருவரும் தனித்தனியே உட்கொண்டனர். உயிரும் உயிரும் இரண்டறக் கலக்க

வேண்டுமென்பதற்கு முதல் சாதனையாக அமையவிருக்கும் எதிர்காலச் சடங்கை எண்ணினாள். வெட்கம் வெட்கமாக வந்தது. கணவன் சாப்பிட்ட எச்சிலைதான் உண்ணவேண்டுமென்ற நினைவு அவளுக்குப் புத்துணர்வு தந்தது.

" அத்தானுக்குப் பால் கொடுத்தாங்களா ?"

" அண்ணுவுக்குக் கொடுக்காமல் இருப்போமா ?"

சிந்தாமணியின் இதயத்திலிருந்து வெளியான 'அண்ணு' என்ற சொல் மேகலையின் உடம்பில் புல்லரிப்பை ஏற்படுத்தியது. முதன்முதலாக அவள் சிந்தாமணியை தன் அத்தையுடன் கண்டதையும், அதே சூட்டுடன் தன் அத்தானையும் பார்த்ததையும் நினைத்துப் பார்த்தாள். அன்று சிந்தாமணியின் மீது அவளுக்கு இனம் தெரியாத பொருமை உணர்ச்சி பிறந்தது ; இன்று அந்த உணர்ச்சியில் சொல்லில் கட்டுப்படாத பாசம் கிளர்ந்தெழுந்தது.

மேகலை பால் அருந்தினாள். " ஆமா, இதோடே சரியா ? இல்லே, ராத்திரிச் சாப்பாடு கிடைக்குமா ?" என்று கேட்டாள்.

" சாப்பாடு உண்டு...உண்டு!...அண்ணனும் நீங்களும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டாகணுமாக்கும் !"

" அப்படியா ?...ஒண்ணுவா உட்கார்ந்து சாப்பிடணும்...?"

" ஆமா...ஆமா !"

மேகலை : "ம் !..."

" ஆனு, ஒண்ணு...!"

" என்ன, சிந்தாமணி ?"

" நீங்க நினைக்கிற மாதிரி இப்ப நடக்காது ! அண்ணு சாப்பிட்ட மிச்சம் இன்னிக்கு உங்களுக்கு அவ்வளவு லகுவிலே கிடைக்காதாக்கும் ! அந்த பாக்யம் கிடைக்க இன்னம் ஏழெட்டு நாள் பொறுமையா யிருக்கவேணும்...!"

பின் கட்டில் தனித்திருந்த அவர்களுக்கு எது வேண்டுமானாலும் பேசிவிட முடியாதல்லவா ? எனவே, அப்போதைய உரையாடலுக்கு முற்றிப்புள்ளியிட எண்ணிய மேகலை, ஸ்டூலில் கிடந்த புத்தகத்தைப் புரட்டினாள். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் படித்தது.

அது 'கலித்தொகை'. தமிழ்த் திருமண மரபு பற்றிப் பேசிய பாடலொன்று. நம்பியும் நங்கையும் பரஸ்பரம் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். ஆனாலும், தலை மகளுக்குப் பெற்றோரின் கருத்து யாதோ என்ற ஐயப் பாடு. இதை அறிந்த தோழி தமிழ் மரபைச் சுட்டிக் காட்ட எண்ணுகிறாள். 'அவர் மீது நீ காதல் கொண்டது மெய்யானால், உன்னை அவர் காதலிப்பதும் உண்மையாயின், நீ வீணே மண உளைச்சலுக்கு ஆளா வது ஏனோ ? மேலும், உன் அன்னையின் மனமும் உன் உள்ளத்தைப்போலத்தான் இருக்கும்; கவலை விடுக !' என்கிறாள். பாடலின் இதயம் இது.

'நின் வெய்யன் ஆயின்
அவன் வெய்யை நீயாயின்
நின்னை நோதக்கதோ
இல்லைமன்; நின் நெஞ்சம்
அன்னை நெஞ்சாகப் பெறின் !'

அத்தான் மாமல்லனை மேகலை அவள் விருப்பப் படியே மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று சோம சுந்தரத்திடம் படித்துப் படித்துச் சொன்னவளாயிற்றே மரகதவல்லி ?...காதலே கனவாக கனவே காதலாக- இப்படிப்பட்ட இரு வகையான உணர்ச்சிச் சுழிகளுக்கு இடையில் மேகலை சற்றிச் சுழல, காலத்தின் இதயம் 'டக் டக்' என்று ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

மௌனம் பொல்லாதது. ஆகவே, மேகலையை அண்டிய சிந்தாமணி அவளிடம் காதோடு காது சேர்த்து ரகசியம் ஒன்றை வெளியிட்டாள். மறுகணம் மேகலையின் அழகு முகப் பரப்பில் நாணம் கண் திறந்தது. முத்துப் பற்கள் முத்து நகை சிந்தின. "போ, சிந்தாமணி... நீ என்னை கேலி பண்ணுகிறாய் !"

முப்பழமும் சோறும் தலை வாழை இலையில் பரிமாறப் பட்டிருந்தன. மாப்பிள்ளைக் கோலம் மெருகிட, மாமல்லன் சம்மணம் கோலி அமர்ந்திருந்தான். மெட்டி மெட்டு இசைக்கக் கேட்டான்; கண்டான். வளர் பிறையை 'தன்னக்கட்டி'ப் போய்வரச் சொன்னான் அவன். பிற்பாடுதான் மேகலையை கண்கூட்டுக்குள் பிடித்துப்போட மனம் இசைந்தது. மேகலைதானா அவள்? —மைதவழ் விழிகளிலே மதர்ப்பு; மெய் விளையாடும் உள்ளத்திலே இன்ப வேதனை; பண் அமைத்த வாய் மடலில் பனி சேர்த்த சுவை; தாலிக்கூறை; முகூர்த்த ரவிக்கை; நெற்றியில் திலகம்; அணி செய் நகைகள் அந்தம் பதிந்த அலங்காரம்! ஆமாம், மேகலையேதான்

வெண்ணெய் உருகினால்தான் மணக்கும். ஆனால் மேகலையோ நினைவிலும் உருவிலும் மணம் பரப்பினாள்!

நெய்யும் கையுமாக வந்தாள் பூவை; சுடு சோற்றில் உருகின நெய் ஓடியபோது, மேகலையின் கை இனித்தது. கொம்புத்தேன்! அவள் அவனை விழி உயர்த்தி நோக்க நாணினாள். அவனுக்கும் வெட்கம் 'கட்டுச்சோறு' கட்டிக் கொண்டு வந்து சேர்ந்தது. தென்றல் சுமந்த இதயத்தில் புலம்பு முத்து தென்பட்டது; திருமாறனின் 'உருத்தெரியா உருவம்' தென்பட்டது. மேகலையின் மார்பகத்தில் தாலியுடன் கொஞ்சியது வைர அட்டிகை; அவனுடைய இடது கை விரலொன்றில் வைர மோதிரம் பிரகாசித்தது. சில நாட்களுக்கு முன் அவனுக்கு வந்த திருமாறனின் பதிவுக் கடிதம் தெரிந்தது.

"அன்பு மிகுந்த உயிர்த் தோழன் மாமல்லனுக்கு,

திருமாறனை உனக்குப் பிடிக்காத நாட்கள் சமீபத்தில் இருந்திருக்கலாம். ஆனால் என்றென்றும் நீ என் உயிர் போன்றவன். அன்புக்கும் நட்புக்கும் மதிப்பு கொடுப்பதுடன் நிற்பவனல்ல நான்; அவை இரண்டையும் இணைத்து சோதனை செய்து பார்க்கும் தனி மனிதன் நான். பைத்தியக்காரன் என்று சொல்லும் உலகம்.

மாமல்லன், என்னை நீ நம்பு! 'உன்னுடைய

பாவை மேகலை என்பதை சிந்தாமணி மூலம் கேள்விப்பட்ட மறுகணமே, என் நெஞ்சி லிருந்து மேகலையை இறக்கிவிட்டேன்; அழைப்பிதழில் என் பெயர் இருக்கும் இடத்தில் உன் பெயர் அழகு காட்டச் செய்தேன். தியா கத்தை கதைகளிலே, நாடகங்களிலே, சினிமாப் படங்களிலே மட்டுந்தான் நான் சந்தித்திருக் கின்றேன். இன்று அந்தத் தியாகத்தை நிதர் சனமாக உணரவும், உணர்த்தவும் முடிந்திருக் கிறது.

என் பெயருக்கு உள்ள நிதிக்குப் பயன் கிடைக்கவேண்டுமல்லவா? வைர அட்டிகை ஒன்று தொடர்கிறது. இது என் அண்ணியார் திருமதி மேகலை அவர்களுக்கு. மைத்துனனின் பரிசை மறுக்க யாருக்கும் அதிகாரம் கிடை யாது, ஜாக்கிரதை! அண்ணனுக்கும் ஒரு பரிசு கிடைக்கும். தோழனைவிட அண்ணனாக நீ அமைவதில்தான் எனக்கு ஆனந்தம்.

'பெண் அழைப்பு'க்கு எப்போது நாள் பார்க்கப்பட்டிருக்கிறது?

உன் திருமாறனுக்கு விருந்துச் சாப்பாடு வேண்டுமாம்!

அன்பின் அடிமை,
திருமாறன்.''

அவனுக்குச் சுய நினைவை ஈந்தவள் மேகலை. துணைவன் உண்டான்; உண்ட எச்சில் இலையில் துணைவி உண்டாள். தாம்பூலம் மடித்துக் கொடுத்தாள்; வெண்பற்கள் சாயம் பூசிக்கொண்டன. மாடி முகப்பில் காற்றாட வந்து நின்றான். கீழே, பைத்தியக்காரன் போன்றிருந்த ஒருவனுடன் சிந்தாமணி உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். திடுக்கிட்டது நெஞ்சம். மாடிப்படியை விட்டு இறங்கிக் கீழே போக எண்ணினான் மாமல்லன். ஆனால் கதவுகள் தாழிடப்பட்டிருந்தன.

பாரதி வாய் திறந்தார்:

'மாரனம்புகளென்மீது வாரி வாரி வீச—நீ
கண் பாராயோ? வந்து சேராயோ?'

அப்போது அவனுக்கு 'இன்று முதல் இரவு!' என்ற நினைவு பளிச்சிட்டது!

## 11

'நல்லது தீயது நாமறியோம்; அன்னை
நல்லது நாட்டுக; தீமையை ஓட்டுக!'

செவிசாய்ப்பதில் விரைவாகவும், வாய்திறப்பதில் மெதுவாகவும் பெண்கள் இருக்கவேண்டும். குண நலன் போதிக்கும் இலக்கணத்துக்குக் கட்டுப்படாதவளல்ல மேகலை; ஆனாலும், அப்பொழுது அவளுக்குப் பதட்டம் மிஞ்சியது; அதன் காரணமாகத்தான் அவள் எதிரில் நின்ற அந்த மனிதனின் வார்த்தைகளைக் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை. அது போகட்டும்; அவளாவது வார்த்தைகளுக்குக் கட்டுப்பாடு விதித்திருக்கக் கூடாதோ? என்னவோ, நடந்தது நடந்துவிட்டது!

இளமை மாறுத முகத்தோற்றம்; என்றாலும், இளமையை மறைக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. முகத்திரையில் அடர்ந்து கிடந்த மயிர்த்திரள். மேலுதடும் கீழுதடும் சந்திக்கும் இடத்தில் மட்டும் எழுதி விளக்க முடியாத நூதனமான ஒரு ரேகை ஓடியிருந்தது. முற்றும் துறந்து விட்டதாகச் சொல்லப் பெறும் தபோதனர்களிடம் தஞ்சமடைந்திருக்குமாமே 'பற்றிழந்த தன்மை' அத்தகையதா? வாய் மூடி மௌனியாக அந்தரத்தில் நின்று உலகைக் கண்காணித்துக் கணித்துக் கொண்டிருக்கும் 'அவனுடைய' உதடுகளை அமரப் புன்னகையொன்று அலங்காரம் செய்யுமென்பார்களே, அந்த வகைச் சார்புடையதா?

இளைஞன் கண்களை மூடி மூடித் திறந்தான். உதடுகள் பிரிந்த நேரம் கண்டு, மெல்லிய இளநகை இழையோடியது. அதை அமரப் புன்னகை என்பதற்கில்லை. ஆகவே, அவன் அவனேதான்! — சாதாரணமான அவன்! சிரிப்பு வலுத்தது. உலகத்தின் விழிகளும் காதுகளும் இயக்கம் பெருத நேரம் அது. அவன் சிரித்த சிரிப்பு இரட்டிப்புப் பலன் கண்டது.

மேகலைக்கு ஆத்திரம் இரண்டு மடங்காக ஆனது.

"நீங்க யாரு?"

"..............."

"எந்த ஊரு?"

"..............."

"ஐயா, நீங்க எந்த ஊராயிருந்தாலும், உங்களுக்கு என்ன பேராயிருந்தாலும் எனக்குக் கவலை கிடையாது. முதலிலே நீங்க எங்க வீட்டை விட்டுக் கிளம்புங்க. ஆமாம், சொல்லிவிட்டேன்!"

"............"

அவளது பற்களிடைப் பிறந்த ஆத்திரத்தை அவன் கருதவேயில்லையா? நீரிடைப் பிறக்கும் புற்புதம் இமைப் போதிற்குள்ளாக உடைந்து சிதறுவது உண்டு; ஆனல், மேகலையின் கோபம் நீர்க் குமிழியாக மாறினல்தானே?

இரவு மங்கை மூடியிருந்த கறுப்புச் சால்வை நழுவி ஓடியது. வதனம் ஒளி கண்டது.

ஹாலின் கிழக்குப் பகுதியில் வணங்காமல் நின்று கொண்டிருந்த நிலைக்கண்ணடி மேகலையின் அழகுக்கு வக்கணை சொன்னது. கோணல் மாணலாகி விட்டிருந்த தலை வகிடு வாகுடன் விளங்கிற்று; நெற்றிப் பொட்டு புத்துயிர் பெற்றது; மாற்றப்பட்ட உடைகளிலும் கூட நறுமணம் உறவாடிக் கொண்டிருந்தது. கண்ணடியை நோக்கினள். இனிய காட்சிகள் நெஞ்சில் சிலையோடின. அவளுக்கு வெட்கம் வந்து தொலைத்தது. வெட்கம்!

மேகலை நெடிதுயிர்த்தாள். எதிரில் கம்பமாக நின்று கொண்டிருந்த முன்பின் தெரியாத அந்த ஆடவனை ஏறிட்டுப் பார்க்க அஞ்சினாள்.

"யார் இந்த மனிதர்?...பார்த்தால் பைத்தியமாகத் தோன்றுகிறதே?...இதுவரை இவர் பைத்தியமாக இயங்கி இருக்கிறார்; இப்பொழுது யாரைக் கிறுக்காக்கத் தோன்றியிருக்கிறாரோ இந்த மகானுபாவர்?...மாடியிலிருந்து நான் வந்ததும் இவர் இங்கே படுத்திருந்தாரே?...யார் இவர்? நேற்றிரவு இங்கு தங்க இவருக்கு எங்கிருந்து உரிமை கிடைத்தது? யார் உரிமை கொடுத்தார்கள்?... அப்பாவுக்குத் தெரிந்தவரா?...இருக்க முடியாது!...அத்தானுக்கு வேண்டியவரோ?...அப்படியும் இராது. அத்தான் ... ராத்திரி ... சொல்லவில்லையே!... அப்பா எழுந்து விடுவார்களே? அத்தான்கூட மாடியிலிருந்து வரும் நேரமாகி விட்டதே?...ஆண்டவனே, யார் இவர்?...

வினா விடுவிக்கும் பள்ளி ஆசிரியர் விடையையும் அறிவார். ஆனால், இந்த உள்ளம் அவ்வாறல்ல; இதற்குக் கேள்வி கேட்பது மாத்திரம் லகு: பதில் மட்டும் தெரிந்திருக்காது!

மேகலை மேற்கொண்டு என்ன செய்வதென்று விளங்காமல் திணறினாள். மாடிப் படிகளில் பாதச் சுவடுகள் பதியும் அரவம் கேட்டது. அவளுக்குப் பதட்டம் ஏற்பட்டது. 'ஐயோ...அத்தான்!' என்று அல்லாடினாள்.

"ஐயா, உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கெடைக்கும். தயவு செஞ்சு இங்கிருந்து இப்பவே நகர்ந்திடுங்க!" என்று வேண்டினாள் அவள்.

அவன் ஆடவில்லை; அசையவில்லை. சுற்றும் முற்றும் திரும்பினாள் அவள். கவனிப்பாரற்றுக் கிடந்த மூங்கில் கழியை கவனித்து எடுத்து வந்து, அதைக் கொண்டு அந்த வாலிபனை அங்கிருந்து விரட்ட யத்தனம் செய்யத் தொடங்கின சமயத்தில்தான் "மேகலை!" என்ற கூப்பாடு விழுந்தது.

குரலுக் குடையவன் மாமல்லன் என்பதை உணர்ந் தாள் அவள். கைக்கம்பு நழுவியது. நாலு தப்படி தள்ளி நின்றாள் மேகலை.

அந்த அதிசய மனிதன் அவர்கள் இருவரையும் விழிபிதுங்கப் பார்த்தான்.

மாமல்லன் அவ்வாலிபனை ஆழ்ந்து நிலைத்த கண் களால் ஊடுருவினான். 'யார் இந்த ஆள்?' என்ற கேள்வி புறப்பட்டு எதிரொலித்தது. அதற்குள் அவனு டைய நினைவில் வேறொரு எண்ணம் பளிச்சென்று மின்னியது. 'சிந்தாமணி ராத்திரி பேசிக்கிட்டிருந்தது இவனோடேதான்போல!' என்று எண்ணிக்கொண்டான்- பிறகு அவனை நெருங்கினான். "நீங்கள்?..." என்றான்.

'நீங்கள்?' என்ற கேள்விக் குறியைத் தாங்கிக் கொண்டு சிரித்தான் அவன்—ஊர் பேர் தெரியாத அவன்.

மறுபடி அதே வினா நீண்டது: "நீங்கள்...!"

"என் அத்தான் அவர்...!"

மாமல்லன் விசுக்கெனத் தலையைத் திருப்பினான்.

சிந்தாமணி!

"சிந்தாமணி, உன் அத்தான் இவர்தானா?"

நேத்திரங்கள் உருண்டோடவிட்ட நீர்த்துளிகள் "ம்!" கொட்டின,

இரண்டு, மூன்று விநாடி நேரம் மாமல்லன் வாயடைத்துப் போனான். நல்ல மூச்சு வந்தவுடன், "சிந்தாமணி, உன் அத்தானைக் குளித்து முழுகச் சொல்; பலகாரம் சாப்பிட்டுவிட்டு அப்புறம் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசலாம்!" என்று தெரிவித்தான்.

காலைப் பலகாரம் முடிந்தது. மாமல்லன் காப்பித் தம்ளரைக் கீழே வைக்கப் போனான்; அதற்குள் மேகலை ஓடி வந்து அதை வாங்கிக் கொண்டாள். குறிச்சியில்

அமர்ந்திருந்த அந்த இளைஞன் சூன்யவெளியில் பாதிப் பார்வையையும், சூடு பறந்த காப்பியில் கால்வாசிக் கண்ணோட்டத்தையும் பதித்தவாறு இருந்தான். எஞ்சிய திருஷ்டி மிஞ்சிய காப்பியில் நிலைத்து விட்டது.

"காப்பியைக் குடியுங்க!" என்றாள் சிந்தாமணி.

அவன் 'மடக் மடக்'கென்று ஒரே மூச்சில் குடித்து முடித்தான்; தம்ளரை வாங்க இவள் கையேந்தினாள். அவனுடைய கண்கள் இரண்டும் சிந்தாமணியையும் மாமல்லனையும் கூறு போட்டுக் கொண்டிருந்தன.

கண் முன் காணப்பட்ட காட்சியில் கருத்து வைத்த வண்ணம் எட்டி நின்று பார்வையை எட்டவிட்டுக் கொண்டிருந்தாள் மேகலை. அவளுக்கு அருகில் கோசலை அம்மாள் நின்றாள்.

புதிய யுவன் இருப்பிடத்திலிருந்து பெயர்த்தெழுந் தான்; பிரயாணப்பை கக்கத்துக்குத் தாவிற்று.

மாமல்லன் எழுந்தான்; எழுந்து முன்னே நடந் தான் சில நிமிஷப் பொழுதுக்கு முன்னதாக சிந்தா மணி விரைந்து வந்து தன்னிடம் கூறிய வார்த்தைகள் சிலிர்த்தெழத் தொடங்கின. 'இந்த குலோத்துங்கன் சிந்தாமணிக்கு அத்தான் முறையாம்; ஆனால் பாவம், இவனுக்கு புத்தி சுவாதீனம் இல்லையாம்!'—முதன் முறை இவ்வார்த்தைகளை எண்ண முடிந்த அளவுக்கு இரண்டாம் தடவை அவற்றைச் சிந்தித்துப் பார்க்க மாமல்லனுக்குத் தெம்பு ஊறவில்லை. சிந்தாமணி சொல் லியபோது அவள் குரல் கம்மியதையும் கண்கள் கலங்கி வந்ததையும் அவனால் உணர முடிந்தது. என்றோ ஒரு நாள் பத்திரிகையில் வாசித்த செய்தியை அப்பொழுது அவன் நினைவு கூர்ந்தான். தான் காதலித்த பெண்ணை அடைய முடியாததனால் நற்புத்தி இழந்து தவித்துக் கொண்டிருக்கும் இளைஞன் ஒருவன் தன் ஆசைக்கிளி யின் அழகு முகத்தைக் கண்ட கண்ட சுவர்களிலே கண்ட கண்ட கோணங்களில் வரைந்து திரிந்துகொண் டிருப்பதாக அவன் படித்திருந்தான். அந்த வாலிப னின் பெயரை அவன் நினைவுபடுத்திக் கொள்ளப்

பிரயத்தனப்பட்டான்; இயலாமல் போய்விட்டது. அந்த நாளிலே மணிமேகலை வசமிருந்த அமுதசுரபிபோல இந்த நாளில் நம் மனித மனங்கள் அமைந்து விடுமானல், அள்ள அள்ளக் குறையாமல் துள்ளித் துள்ளி ஓடி வருமே பழைய நினைவுகள்...?

அதே தருணத்தில், மாமல்லனுக்கு இன்ஞெரு சிந்தனையும் பொறி தட்டியது. ஒருநாள் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருக்கையில், வழிச் சுவரில் கிறுக்கியவாறிருந்த பைத்தியக்காரன் ஒருவனைக் கண்டானல்லவா?—அதுதான் மேற்படி சிந்தனை! தொலை தூரம் இருந்து பார்த்த அவ்வுருவத்தைக் கொண்டு அடையாளம் கண்டுகொள்ள முடியாதுதான்; ஆனாலும் அவன் எண்ணுமல் இருக்க முடியுமா? அவன், 'அந்த ஆள்தான் குலோத்துங்கனே?' என்பதாக மீண்டும் குழப்பினான். சிந்தாமணி தன் நினைவு இன்றி வெட்டுண்ட மரம்போல மயங்கி விழுந்ததற்கு ஆணி வேராகயிருந்த காரணத்தைத் தெரிவித்த பழைய பத்திரிகைச் செய்தியும் அவனுக்குப் புதிதல்லவே!

மாமல்லன் ஆழ்ந்து நோக்கினன். குலோத்துங்கனின் வலது கால் கட்டை விரல் சிமெண்டுத் தரையில் உரசிக் கொண்டிருந்தது. மாமல்லனின் இதயத்தில் என்னவெல்லாமோ சந்தேகங்கள் முளைவிட்டுக் கிளை பரப்பின.

'குலோத்துங்கன் ஏன் இப்படி மாறினன்? சித்தம் தடுமாறியதால்தான் சிந்தனையும் தடுமாறி விட்டதா? ஏன் இத்தகைய மாறுதல் நிகழவேண்டும்? இவ்வளவு நாட்களாக குலோத்துங்கனைப்பற்றி, சிந்தாமணி மூச்சுக் கூட விடவில்லையே. ஏன்? எவ்வளவு நாளாக இவன் இப்படி நாடோடியாக, சுய சிந்தனை தப்பியவனுகச் சுற்றுகிறுன்? சிந்தாமணியின் அத்தான்தான் இவன் என்பது வாஸ்தவமாக இருக்குமல்லவா? அப்படியானல் இவனே அவளுடைய நிரந்தரமான அத்தானுகவும் வாய்த்து விடுவானு?...'

தாரணியின் பாகத்தில் பம்பரத்தைச் சுழலவிட்ட

பிறகு தனித்துக் கிடக்கும் பம்பரக் கயிறுபோன்று மாமல்லன் திக்குத்திசை புலப்படாமல் மயக்க நிலையில் நின்றான்; அவனைக் குழப்பிய குலோத்துங்கன் புறப்படத் துடித்தான்; பாதங்கள் நடை பயிலத் துடித்தன.

"மிஸ்டர் குலோத்துங்கன்!"

"ஐ...யா!"

நல்ல மனிதன்போல பதில் சொன்னவன் குலோத்துங்கன், 'ஐயா' என்னும் சொல் வெளிவந்த பின்னருங்கூட, இதழோரத்துக் கனிவுச் சிரிப்பு மாற்றுக் குறையாத தங்கமென ஒளி விட்டது.

"குலோத்துங்கன், கொஞ்ச நேரம் மேலே வருகிறீங்களா?"

"ஏன், நான் தேடி வந்த செல்வப் பசுங்கிளி மாடியில் தான் இருக்கிறதா?"

"அண்ணாவோடு போங்க, அத்தான்!" என்று கூறினாள் சிந்தாமணி.

குலோத்துங்கன் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை; ஆனால் அவளது காதுகளில் அவன் சிரிப்பைக் கொட்டினான்!

தன்னை ஈன்றவளும் தன் உயிரின் மறு பாதியைப் பெற்றவளும் சமையல் அறைக் கதவு வழியே கண் பதித்துக் கொண்டிருப்பதை மாமல்லன் கண்டு கொண்டான்.

விநாடிப் பொழுதிற்கு முன் இருந்த தெளிவு இப்பொழுது குலோத்துங்கனிடமிருந்து விடை பெற்றிருந்தது.

துன்பம், புயல், குழப்பம் இவை யெல்லாம் சொல்லிக்கொண்டு வருவது கிடையாது. அம்மாதிரியே தான் போகும்போதும் பயணம் சொல்லிப் பிரிவதில்லை.

மேகலைப் பெண்ணின் தளிர்க்கரம் பிடித்துத் தன்

கையால் வாசமுள்ள பூச்சூட்டுவதற்குள் பட்டபாட்டை எண்ணினான் மாமல்லன். 'காதல், கனவு, வாழ்க்கை இந்த மூன்றும் விசித்திரமாகத்தான் அமைந்து விடுகின்றன. எனக்குரிய முறைமைப் பெண்ணை எனக்குரியவளாக ஆக்கிக் கொள்வதற்குள் நான் எத்தனை போராட்டங்களைச் சமாளித்தேன்..? அதுபோலத்தான் இப்போது குலோத்துங்கனின் நிலையும் அமைந்திருக்கிறதோ? ஆம்; அவ்வாறு தான் இருக்கும்!' என்ற சிந்தனையும் ஏற்பட்டது.

மேகலை காத்துத் தவம் கிடந்தாள், மாமல்லனுக்காகவே! இதோ, இந்த குலோத்துங்கனுக்காக சிந்தாமணி காத்துத் தவம் செய்கின்றாள்!

ரண சிகிச்சையின் முடிவைத் தெரிந்து கொள்வதற்குள் உற்றாரின் உயிர் ஊசலாடும். மாமல்லனின் நிலையும் இதுதான்.

ஆம்; மாமல்லன் எண்ணியது இப்படித்தான். "தம்பி, அடுத்த வாரம் நாமெல்லாரும் பட்டணத்துக்குப் போனதும், முதல் வேலையாக நம்ப சிந்தாமணியோட அத்தானைத் தேடிப் பிடித்து அவர்கள் இரண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சிடணும்!" என வெளியிட்ட தன் அன்னையின் பேச்சும் சமயம் பார்த்துக் கடன் ஆற்றியது.

சிந்தாமணியின் நெடுந்தவம் பலிக்கும் நேரம் வந்துவிட்டதா? உமையவளின் கனவை நனவாக்க ஓடோடி வந்த சிவபெருமானைப்போல சிந்தாமணி இருக்கும் இடம் நாடி வந்திருக்கிறான் குலோத்துங்கன்...!

குலோத்துங்கனும் சிந்தாமணியும் திருமணக் கோலம் பூண்டு மகிழும் நிகழ்ச்சியினை மனத் திரையில் சித்திரமாக்கிப் பார்த்தான் அவன். கற்பனையின் எழிலும் இன்பமும் அற்புதம்தான்!

ஓசை அலைக்குத் தாலாட்டுப் பாடவென்று மாயமாகத் தோன்றிய திங்களின் ஆனந்தத்துக்கு அவனுடைய மகிழ்ச்சி குறைந்ததன்று.

'தன் காதலி மாடியில் இருக்கிருளாவென்று கேட்டாரே குலோத்துங்கன் ?...அப்படி யென்ருல்...சிந்தாமணியை இவர் உணரும் சக்தி பெறவில்லையா ?...சித்த பேதம் அவரது இன்ப நினைவையும் பேதலிக்கச் செய்து விட்டது போலும் ! நானும் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறேன். ஒரு கணம் காணப்படும் தெளிவு மறு கணம் இல்லையே ? சென்னைக்குப் போனதும், குலோத்துங்கனுக்குச் சிகிச்சை செய்யவேண்டும் சிந்தாமணியின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தியாக வேண்டும் '— மாமல்லன் தன்னை மறந்து புன்னகை புரிந்தான். சுய நலம் காட்டாத உள்ள நிறைவு தியாகப் பண்பில் விளைந்திட முடியும் ; தீமையை விலக்கி நன்மையைச் செய்து காட்டுவது பிறவிப் பயனுக அமைந்தால் மட்டுமே வாழ்க்கை அர்த்தமுள்ளதாக விளங்க முடியும்.

மாடிக்குச் சென்ருர்கள் மாமல்லனும் குலோத்துங்கனும். தருணம் குறி பார்க்கப்பட்டது. அதற்குள் இளைஞனின் கண்கள் ஒன்ருேடொன்று பொருதத் தொடங்கின.

மாடியில் திரைப்படக் காதலர்களின் படங்கள் சில காட்சியளித்தன. முதல் இரவின் இனிய கனவுக் காட்சிகள் ஏடு விரித்தன. இளவேனில் மாளிகையில் அமர்ந்திருப்பதாகப் பட்டது. தன்னுள் சிரித்துக் கொண்டான். அவன் குலோத்துங்கன் அல்ல !—மாமல்லன் !

'வருண குலாதித்தன் மட'லின் மூன்ருவது இதழ் புரட்டப்பட்டது.

'தேனே ! மதன திரவியமே ! செங்கமல
மானே ! அநுராக வல்லியே !'

மேகலையின் மோகன பிம்பம் அணு அணுவாக மறைந்தபோது, மாமல்லனிடம் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து நீட்டி அணு அணுவாக எழிற்கோலம் சேர்த்தாள் மேகலை.

அவள் கண் திறந்து இதழ் குவித்தாள். மூக்குத்தி சிரித்தது. அவளையே பார்த்துக் கொண்டிருக்க வேண்

டும் போலிருந்தது. நான்கு சுவர்களுக்கு உள்ளே விழிகளை மேயவிட்டான். அவனும் அவளும்தான். குலோத்துங்கன் இந்நேரம் எந்த உலகத்தில் சஞ்சரிக்கிருனே? திரும்பியும் அவளைப் பார்த்தான். மாமல்லனுக்கு ஏதோ ஞாபகம் கிளர்ந்தெழுந்தது. வெட்கம் வந்து சேர்ந்தது.

"மேகலை. அடுத்த வாரம் நாம் பட்டணத்துக்கு புறப்படுகிறோம்!"

"ம்!"

இது கடிதம் :

"...உன் அன்புக் கடிதம் என் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது. என் பாக்கியம் பலனுள்ளது. உங்கள் இருவருக்கும் என் விருந்து காத்திருக்கிறது. அதுபோல, நீயும் எனக்கு விருந்து வைக்க வேண்டாமா? இந்த வாய்ப்புகூட உன் கையில்தான் இருக்கிறது. சிந்தாமணி திருமதி திருமாறனுகை முடியுமல்லவா?

திருமாறன்."

அவனுக்கு இக்கடிதம் அதிர்ச்சி தந்தது. காரில் விஜயம் செய்த திருமாறனின் போக்கையும், சமீபத்தில் அவன் அனுப்பி வைத்த தங்கப் பரிசுகளையும், இப்போது அவன் முன் வைத்துள்ள கோரிக்கையையும் எண்ணலானுன். இரண்டுங் கெட்டான் நிலையில் தவித்தது அவன் மனம். அம்பிகையின் அருளை வேண்டிஞன்.

'நல்லது, தீயது நமக்கெப்படித் தெரியமுடியும்? எல்லாம் அன்னையின் கருத்துக்குளல்லவா புதைந்திருக்கிறது! கடவுளே, எனக்கு நல்ல வழி காட்டு;' என்று பெருமூச்செறிந்தவாறு, மாமல்லன் எழுந்தான். குலோத்துங்கனுக்கு அருகாமையில் கிடந்த பையில் அவன் விரல்கள் விளையாடின. கோடுகள் உருவாக்கிய சித்திரங்கள் சில பலவாகிக் காணப்பட்டன. வகைவகையான

பெண்கள் : கடைசியாக கிடைத்தது ஒரு நிழற் படம்! கூர்ந்து நோக்கினுன் மாமல்லன். பிரஞ்சுப் பிராயத்து ஜோடி ஒன்று இருந்தது. குலோத்துங்கனை இனம் காணமுடிந்தது. உடன் இருந்த சிறுமி அவன் முன் ஆலவட்டம் சுற்றினுள்.

'மேகலை யல்லவா...?'

உள் நெஞ்சம் எழுப்பிய கேள்வி உலகத்தின் வெளி யெங்கணும் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

"மேகலை! மேகலை! மேகலை!'

பதைபதைத்துப் பறந்து வந்த பைங்கிளி மேகலை ஆடாப் பதுமையாகச் சமைந்து நின்ருள்...!

## 12

> 'கூண்டுக் கிளியினைப் போல் - தனிமை
> கொண்டு மிகவும் நொந்தேன்!'

"மேகலை!...மேகலை!...மேகலை...!''

அழைத்தவன் ஆடும் பதுமை ஆனுன்; அழைக்கப் பட்டவள் மாமல்லனின் மூச்சுப் படும் வண்ணம் சார்ந்து நின்ருள். வந்த சடுதியில் சரிந்து விழத் துடித்துக் கொண்டிருந்த மார்புச்சேலையை அவள் கவனிக்கவில்லை. மேகலையின் நோக்கம், கொண்டவனின் குழப்பத்துக் குரிய காரணத்தைச் சல்லடை போட்டுச் சலித்தது; அவள் நோக்கு, வேர்வை வெள்ளத்தில் உழப்பி விட்டி ருந்த கணவரையே சுற்றிச் சுற்றி வலம் வந்தது.

"அத்தான்!" என்று மேகலை கூப்பிட்டாள்.

மாமல்லனின் உடலில் ஏற்பட்ட மின் அதிர்ச்சி மட்டுப்பட்டது; ஏறிட்டு விழித்தான். மேகலையின் மதர்

விழிகள் தன்னை எங்கோ தூக்கிச் செல்வதாக அவன் உணர்ந்தான்; அவளது தேன் சுவை இதழ்கள் அவனை எங்கோ அழைப்பது போன்று இருந்தது. மரணக் கிணறு விளையாட்டின்போது மோட்டார் சைக்கிளில் அனுயாசமாகச் சுற்றிச் சுழன்ற இளைஞனைக் காணக் காண மாமல்லனுக்கு மயக்கம் வந்துவிடும் போலிருந்த நிகழ்ச்சியை மறந்துவிட மாட்டான் அவன். சென்னையில் தேனும்பேட்டைப் பொருட்காட்சியில் ஏற்பட்ட அந் நிலை இப்பொழுது உண்டாயிற்று. வியர்வை கொட்டினால் காய்ச்சல் விட்டுவிடும் என்பார்கள். அவனுக்கு மேனி முழுவதும் நீர் மணிகள் முத்துக் கோத்தன. அப்படியானால், மனநோவு தாவிப் பறந்துவிட்டதா? கண்களைக் கசக்கினான். வலதுகை உள்ளங்கையில் இருந்த அந்தப் புகைப்படம் அவனுடைய பார்வைக்கு மறுபடியும் திரை போட்டது. தாழ்வாய்க் கட்டையில் துளிர்த்திருந்த திவலைகளைத் துடைத்தான்; நிழற்படம் நினைவைத் துறக்க மறுத்தது; நெஞ்சைத் தொட்ட விரல்கள் தீயாகப் பொசுக்கின. நெஞ்சம் தொட்டவள் தஞ்சமென நின்றுகொண்டேயிருந்தாள். உள்ளத்தில் உண்டான நடுக்கம் ரத்த நாளங்கள் ஒவ்வொன்றையும் நடுங்க வைத்தது. உள்ளங்கையிலிருந்த உருவப் படம் தரையில் விழுந்தது.

"என்ன அது, அத்தான்?" என்று மேகலை கேட்ட வண்ணம் கீழே குனிந்தாள்.

அதற்குள் மாமல்லனின் சிந்தையில் சிந்தனையொன்று தோன்றியது. உடனே, அதைக் கையில் எடுத்து விட்டான்.

"ஒன்றுமில்லை......ஒன்றுமில்லை!" என்று மழுப்பினான்.

'நல்ல வேளை, நான் பிழைத்தேன்!' என்று நிம்மதி பெற்றது நெடுமூச்சு.

"என்னைக் கண்டு கொண்டாயா? ஆஹா, என்னைத் தேடி வந்து விட்டாயா?" என்ற குரல் கேட்டதும், மாமல்லனும் மேகலையும் ஏக காலத்தில் ஒரே திசையில்

திரும்பினுர்கள். படுத்திருந்த குலோத்துங்கன் கனவு கண்டு விழிப்பவன்போல எழுந்தான்; சற்று முன் பேசியது மாதிரி இரண்டாந் தடவையும் பேசினுன் 'விருந்தினன்.'

ஒலித்த வார்த்தைகள் உள் மனத்தில் சிலையோடிக் கிடக்க, வடித்த சிலையென மேகலை மலைத்து நின்ருள்.

"நீ கீழே போயேன், மேகலை!" என்று இரைச்சல் போட்டான் மாமல்லன்.

கனிவு மொழியன்றிக் கடுஞ்சொல் எதையும் கேட்டிராத செவிகள் அவள் சார்பில் வருந்தின. சோற்றுக் கையிஞல் வலது கன்னத்தைத் தாங்கியபடி அவள் படியிறங்கி விட்டதை மாடிப்படிகளில் பதிந்து விலகிய மெட்டியொலி அறிவித்தது.

மனத்தின் நுண்ணறிவு தடம் புரண்டு விட்டதாக ஓர் உணர்வு மாமல்லனுள் சிலிர்த்தெழத் தொடங்கியது.

கண்களை மலர மலர விழித்தவாறு நின்ற குலோத்துங்கனின் பித்தம் தெளிந்து விட்டதுபோலத் தெரிந்தது.

மனிதர்களுக்குத் தம் நெஞ்சகங்களில் ஒளிந்திருக்கின்ற ஆத்திரத்தை வெளிக்காட்டிச் சொல்ல முடியாமல் இருக்கின்ற நிலைமை உருவாகும்போது, அந்த ஆத்திரத்தைப் பற்களுக்கு அடியில் போட்டுமென்று ஜீரணிக்க முற்படுவார்கள். சிலருக்கு இப்படி ஒரு பழக்கம் வழக்கில் இருக்கும். மாமல்லனையும் இத்துடன் சேர்க்க வேண்டும். அவன் கைகளைப் பிசைந்து கொண்டான். அப்போது அவனிடமிருந்த பழைய படம் கசங்கிக் கீழே விழுந்தது. சுருதி குறைந்திருந்த ராகத்திற்கு சுருதி ஏற்றப்பட்டதுபோல, அவனுடைய சினத்தீ மறுபடி பற்றிவிட யத்தனம் செய்தது. குனிந்து புகைப் படத்தை எடுக்கப் போனுன். நெஞ்சப் புகை அடங்கவில்லை.

"மிஸ்டர்...மிஸ்டர்!...அது என் போட்டோ!"

முன்னுடி வந்த குலோத்துங்கனின் கைக்கு முன்னேடியாகத் தூது வந்த சொற்கள் இவை.

எடுத்த படத்தைச் சட்டைப் பைக்குள்ளே திணித்தான் மாமல்லன். வலது கைவிரல்கள் ஷெர்வானி சட்டையின் கழுத்துப் பட்டையை நெருடிக் கொண்டிருந்தன.

"என் படத்தைக் கொடுங்க, ஐயா!" என்று மீண்டும் நினைவுக் குறிப்பை வெளியிட்டான் குலோத்துங்கன்.

மாமல்லன் எதையும் சட்டை செய்யவில்லை. சட்டையில் விளையாடிய விரல்கள் சுருள் அலைபடிந்த தலை மயிரை மேலும் சுருட்டியவாறு இருந்தன.

பறந்து சென்ற பைங்கிளியின் இதயத்துள் கூடு விட்டுக் கூடு பாய்ந்து அவளது தூய்மைக்குத் தீக்குளிச் சோதனை நடத்த முயற்சி செய்துகொண்டிருந்த மாமல்லன், எதிரே எழுந்து நின்ற குலோத்துங்கனின் வேண்டுகோளை காதுகளில் தேக்காமல், தன் போக்கில் மாடிக் கைப்பிடிச் சுவரருகில் வந்து நின்று மண்ணை நோக்கினான். மை இருட்டைப் பொட்டாக்கி நிலமடந்தை பேசா மடைந்தையாய்த் திகழ்வதாகப்பட்டது. விண்ணைச் சாடியது நுட்பப் பார்வை. அலைந்த கங்குலின் கங்கிலே மேகலை அமர்ந்து குறுஞ் சிரிப்பினை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தாள்.

"அள்ளாம கொறையாது; சொல்லாம பொறக்காது!"

தெருவில் நடமாடிச் சென்றவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். சந்தைக்கு வந்தவர்கள். விழித்துணைக்கும் ஆட்கள் கிடைத்தனர். வெறும் வாயில் பிடி அவலைப் போட்டார்கள். சொற்கள் அவனுடைய பிடரியை விளையாட்டுப் பலகையாக்கி சொக்கட்டான் ஆடின. ஏறுமுகத்திலிருந்த வெய்யில் நெற்றிப் பொட்டைத் தட்டி உடைத்தது. 'மேகலை, உனக்குக் குலோத்துங்கனை அறிமுகம் உண்டா?...பிஞ்சுப் பிராயத்திலேயே அவன் நெஞ்சத்தை நீ அறிந்தவளா?...பின், ஏன் என்னிடம் இவனைப்பற்றி இதுவரை எதுவும் சொல்லவில்லை?... உன் நெஞ்சத்தை நீ தாழிட்டுக்கொண்டு, நான் உன் வாய்ப்பூட்டை உடைத்தால், உண்மையின் நெஞ்சம்

எனக்கு எவ்வாறு தெரியும்? ஐயம் ஒரு பேய்; முன்பின் ஆராய்ச்சியின்றி அதை அண்டியவர்களை அது ஆட்டிப் படைத்த கதையை செய்தித் தாள்களிலே, சஞ்சிகை களிலே, திரைகளிலே நான் கண்டவன்தான். ஆற அமரச் சிந்தித்து ஒரு முடிவு செய்யத் தவறமாட் டேன்!...'

தன் தோளைப் பிடித்து உலுக்கிய கையை விடுவித்து விட்டு, மாமல்லன் தலையைத் திருப்பியபோது, எக்காள மிட்டுச் சிரித்த வண்ணம் குலோத்துங்கன் தெளிவான முகத்தோடு நிற்பதை அறிந்தான். 'கார்னிவல்' விழா வில் மல்யுத்தப் போட்டியின்போது கோதாவில் இறங் கிய வீரர்களின் 'பிடி'யின் நினைவு அவன் சிந்தனையை கொழு கொம்பாக்கிக் கொண்டது. குலோத்துங்கனை எட்டிப் பிடித்து, காலால் தட்டி யெறிந்து பந்தாடி, பாதங்களில் நசுக்கிப் பிழிந்திட வேண்டும் போலிருந் தது. தண்டனை கொடுக்க மாமல்லன் யார்? குலோத் துங்கன் செய்த குற்றந்தான் என்ன?

"ஐயா, அந்தப் படத்தை தயவு செய்து என்னிடம் கொடுத்துவிட மாட்டீர்களா? அது என்னிடம் இருந் தால்தான், என் உயிர் உடம்பில் தரிக்கும்!"

'ச்சீ!' என்று உறுமினான்; கைகளை ஓங்கினான் மாமல்லன். ஓங்கிய கைகள் இறங்குவதற்குள், "அண்ணா!" என்று கூச்சலிட்டு ஓடி வந்தாள் சிந்தா மணி.

செய்வகை அறியாமல் அப்படியே நின்றான் மாமல்லன். கண் சிமிட்டும் நேரம் மறைந்திருக்கும். உடனே அவன் தன் அறைக்குள் ஓடிச் சென்று கதவு களைத் தாழிட்டு பத்திரமாக மூடிக்கொண்டான்.

விம்மல் ஒலி மட்டும் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

சோளியின் நிறம் கறுப்பு; நல்ல கறுப்பு. தன்மை, பட்டு. அடையாளம்: சுற்றிலும் வெண் புள்ளிகளை இடைவிட்டு, மையத்தில் வட்ட நிலாச் சித்திரங்கள் பின்னப்பட்டிருந்தன. வான மடந்தையும் மேகலையை

ஒப்பத்தான் தோற்றமளித்தாள். மாடிப்படிகளின் வரிசை எண்களில் அவள் கருத்து ஊன்றியிருந்தது; குங்குமப்பூ, பனங்கற்கண்டு, ஏலக்காய் ஆகியவற்றின் கூட்டுறவில் காய்ச்சப்பட்ட பசும்பால் வெள்ளிக் குவளையில் தயாராக யிருந்தது. ஆவி பறந்த பாலின் சூடு ஆறி விடாமலிருக்க, சின்னத் தட்டொன்று அதன் வாயை மூடியது. தாம்பூலப் பெட்டியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மலைக்கோட்டை வெற்றிலைக் காம்பு ஒன்றைக் கிள்ளி எடுத்து இதழ்களுக்கு நடுவில் வைத்தாள். சாறு உறைத்தது. அவள் மாடியில் இருந்தாலும், அவளுக்குச் சொந்தமான உள்ளம் விநாடிக்கு விநாடி கீழ்த் தளத்திற்கு ஓடி ஓடித் திரும்பிற்று. 'என் அத்தான் மேலே வருவாங்க, இல்லியா?...ஏன்...வரமாட்டாங்க? வருவாங்க, கட்டாயம் வருவாங்க!' என இதயத்தின் முனையில் காத்திருந்த ரத்தத் துடிப்பு அவளுக்குத் தேறுதல் தெரிவித்தது. காலைப்பொழுதில் நிகழ்ந்த சலனத்தைப்பற்றி மறந்துவிட வேண்டுமென்றுதான் அவள் பிரயத்தனப்பட்டாள். நினைவும் மறதியும் பால்குடி மாருத கைக்குழந்தைகள். வருந்தி அழைத்தால் அழும்பு பண்ணி உற்றவர்களை வருந்தச் செய்வதில் அவற்றுக்கு ஓர் ஆனந்தம். நினைத்ததை மறந்தாள்; மறந்ததை நினைத்தாள். 'நீ கீழே போயேன், மேகலை!' என்று பணித்த குரல் மறைந்தது; அவள் அரை குறையாகக் கண்ட அந்தப் புகைப் படத்தைப் பற்றின எண்ணச் சுடர் நின்று நிதானித்து எரியத் தொடங்கியது.

'கீழே விழுந்த சின்னப் படத்தை என்னை முந்திக் கொண்டு அத்தான் அவசரமாக எடுத்தாங்களே, என்ன படம் அது?'—இந்தக் கேள்வி பல கிளைகளாகப் பிரிந்தது; அத்தான் மனத்தில் விஷவிருட்சம் ஏதாவது முளைத்து விட்டிருக்குமோ என்று அவள் அஞ்சினுள்; ஏதோ ஓர் இடைவெளி பள்ளம் பறித்துவிட்டதுபோல் உள்ளுணர்வு அறிவுறுத்தியது. எழுதிச் செல்லும் விதியின் கையெழுத்தைப் புரிந்துகொள்ள இயலாமல் அவள் தவியாய்த் தவித்துத் தண்ணீராக உருகினுள். மையிட்ட கண்களுக்கு மணிகள் வரம்பு கட்டின;

சூலுண்ட மேகமென, ஆற்ருமை ஒன்றே அப்பொழுது அவள் வசம் மிஞ்சியிருந்தது.

குலோத்துங்கனின் உருவம் மனக்கண்ணில் தெரிந்தது. 'யார் இந்த ஆள்?......தென்றலைச் சுமந்திருக்கும் அத்தானிடம் புயலைக் கிளப்பி விட்டாரே?...'

கண்ணீரை மறைத்து, ஆனல் கவலை தோய்ந்த வதனத்தை மறைக்க மாட்டாமல் நடமாடிக் கொண்டிருந்த சிந்தாமணி தோன்றினள். 'நேற்றைக்கு குலோத்துங்கனை விரட்டியடிக்க முனைந்தப்போ, சிந்தாமணி வந்திராமலிருந்தா, இந்நேரம் வீடு எவ்வளவோ கலகலப்பா யிருந்திருக்காதா?...தெய்வமே!...' என்று மேகலைக்கு ஓடியது.

அவளுடைய அத்தை கோசலை அம்மாள் அவளிடம், "மேகலை, தம்பி ஒரு மாதிரி இருக்கானே, ஏன்? உனக்குத் தெரிஞ்சிருக்குமே!...புதுசா வந்திருக்கிற விருந்தாளியை கை நீட்டி அடிக்கக்கூடப் போயிட்டானுமே, ஏம்மா?...' என்று ஐயம் கொண்டு கேட்டதையும் அவள் நினைத்தாள். அவளுடைய இதயமாகிய குளம் கலக்கப் பட்டுச் சகதியானதுதான் மிச்சம்; விடிவு கிடைக்காதா வென்று ஏங்கியலைந்த பேதை மனம் வடிகாலாக மாறியது தான் மிச்சம். வாழ்க்கை வளையத்திற்குள் தலையை நுழைப்பதற்கு முன் அது பொன்னுபரணமாக விளங்கும்; தலையைப் பணயம் வைத்த பிற்பாடு அது இரும்பு விலங்காக மாறும். அவள் அனுபவம் காட்டியது இம்முடிவை. முதல் இரவின் மணம் இன்னும் அவளுள்ளே தேங்கி யிருந்தது. அதற்குள் அவளுக்கு புது வாழ்க்கை அச்சம் நிறைந்து தென்படலாயிற்று. தலை வெடித்துச் செத்த அசுரன் ஒருவனின் கதையை பாட்டி கூறியது ஞாபகம் வந்தது. அம்மாதிரி தன் தலையும் சுக்கல் நூறுகச் சிதறி விட்டால்கூடத் தேவலை யென்று பட்டது.

ஒவ்வொரு இரவும் தனக்கும் தன் அன்பு அத்தானுக்கும் இடையில் உள்ள நடு வெளியைத் தூர்த்து, நெருக்கத்தை உண்டுபண்ணும் என்று அவள் கற்பனை செய்தது மெய்; மெய் களவாடப்பட்டதா? அல்லது,

கானல் நீராகிவிட்டதா? சிலம்புச் செல்வத்தையும் சிலம்புச் செல்வரையும் மானசீகமாகத் துணைக்கு வைத்துக் கொண்டு காதைகளை கதையாக்கி துணைவன் சொல்லி வந்தபோது, மாதவிக்கும் கோவலனுக்கும் மத்தியில் புயலை விளைவித்த 'கானல் வரி' நிகழ்ச்சி கண்ணகிக்கு நன்மையாக முடிந்து, அவளுக்கு உரியவனை அவளிடமே சேர்ப்பித்த வரலாற்றைச் சிந்தனைக்குள் அடைத்தாள். இந்த ஒப்புவமை தோன்றுதற்குரிய காரண காரியத்தை அவள் கணிக்கத் தெரியாமல் திண்டாடினாள். 'கானல் வரிச் சம்பவம்' போன்று இந்த குலோத்துங்கன் ஆரம்பமாக அமைந்து விடாமல், முடிவு மாத்திரம் கானல் வரி உண்டு பண்ணிய நற்பயனைத்தந்து, தன் அத்தான் நிழலில் தங்கும் பாக்கியம் பெற வேண்டுமென்று ஆசைப்பட்டாள் மேகலை.

அலாரம் கடியாரம் மேகலையை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

'அத்தான் இவ்வளவு நேரமாகியும் ஏன் வரவில்லை?...'-தனிமையில் வாடி, கூண்டுக் கிளியாக மனம் நொந்து, மெய் குலைந்தாள் பெண்டு.

வெண்ணிலவும் வீசுந் தென்றலும் அவளுக்குத் 'தாலேலோ' பாடத் தொடங்கின; அதே சமயத்தில், அயல் நாட்டு வாசனைத் திரவியமும் வைர மோதிரமும் பூபாளம் பாடலாயின.

"அத்தான், வந்திட்டீங்களா?"

தங்கத் தாலியும் வைர அட்டிகையும் முழுமையாகத் தெரிந்தன.

# 13

‘பீடத்திலேறிக் கொண்டாள்— மனப்
பீடத்திலேறிக் கொண்டாள்!’

இந்த இருபதாம் நூற்ருண்டில் ஓர் அதிசயம் நடந்தது. புத்தர் பிறந்தார்; ஏசுநாதர் தோன்றினுர்; நபிகள் நாயகம் அவதரித்தார். இம்மூவரும் ஒரே தருணத்தில் பிறந்தார்கள்; ஒரே உருவமாகத் தோன்றினுர்கள்; ஒரே குரலில் போதித்தார்கள். ஆம்; அந்த அதிசயப் பிறவி தான் காந்தி மகாத்மா. அவர் திருவாய் மலர்ந்தருளிய பொன்மொழி அப்பொழுது மாமல்லனின் மேஜை மீதமர்ந்து அவனுடைய கருத்தைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது.

‘சீதையின் மானத்தை இராமனே, அல்லது திரௌபதியின் மானத்தைப் பஞ்சபாண்டவர்களோ காப்பாற்றவில்லை. இவ்விரண்டு உத்தம மாதரசிகளும் தங்களது மானத்தைத் தங்களுடைய தூய்மையின் சக்தியினுலேயே காப்பாற்றிக் கொண்டார்கள்.’

கொட்டும் விழிகள் கொட்டாமல் பார்த்தன; மூடும் உதடுகள் மூடாமல் இருந்தன; ஓயாமல் ஒழியாமல் மேற்கண்ட வரிகளையே மூளை அசை போட்டுக் கொண்டிருந்தது. மேகலை முதன் முதலில் மனப்படுதாவில் நிழல் உருவமாகத் தெரிந்தாள்; புகைப்படத்தில் கண்ட அவளது சிறிய உருவம் காணப்பட்டது. குலோத்துங்கன் சின்னப் பையனுகவே இப்பொழுதும் இருந்தான்.

மாமல்லனின் உயிர்ப்பில் சலனம் ஏற்பட்டு அன்ருேடு நாட்கள் நான்கு கழிந்துவிட்டன. அத்தனை நாட்களின் இரவுப் பொழுதுகளிலும் அவனுடைய தனிமையில் இனிமை காட்டிய ‘புண்ணியம்’ மேகலைக்கே உரியது.

இரண்டாம் இரவிலே மேகலை பயந்த சுபாவத்துடன் பதியை நிமிர்ந்து பார்த்து, “அத்தான், நீங்க மட்டும்

எனக்குக் கிடைக்காதிருந்தா, நான் எப்பவோ செத்துச் சுண்ணும்பாகி யிருப்பேன்!'' என்று வெளியிட்டாள். முந்திய நாளில் துணைவியின் உள்ளத்தைச் சோதனை செய்ய முனைந்தானே ?—இந்த ஒரு பதில் அவனுக்கு நிறைவு தராதோ ?

பதருமல் இருந்து காரியத்தைச் சிதறடிக்காமல் நிறைவேற்றத் திட்டமிட்டிருந்தான் அவன். இதுவரை எதுவுமே நடக்காதது போலத்தான் அவன் நடத்தை காணப்பட்டது. பழைய மாமல்லனின் உடலில் புதிய மாமல்லனின் உள்ளம் புனைந்துதான் அவன் நடந்து கொண்டான் ; பேசினான் ; பழகினான். அந்தப் புகைப் படத்தைப்பற்றி மேகலை பேச்செடுத்தபோதுகூட, 'அது ஒண்ணும் உனக்குச் சம்பந்தமில்லை !' என்று தீர்மான மாகப் பதில் அளித்துவிட்டான் அவன் !

நம்ப வேண்டியவள் நம்பினாள் ; நம்பமாட்டாதவன் நம்பவில்லை. உண்மையும் பொய்யும் இடம் மாற்றப் பட்ட, அல்லது கைமாறிய துருப்புச் சீட்டுக்களாயின. வாழ்க்கைப் பாடலின் பொழிப்புரையும் இதுதானே...?

விட்ட குறையைத் தொட்டு முடித்துப் பூரணத்துவம் கொடுத்த பிறகு சித்திரத்தைப் பார்க்கும் ஓவியக்காரன் பூரித்துப் போவான், மாமல்லனும் அவ்வாறு தான் இருந்தான். எழுதி முடித்த கடிதத்தில் எக்காளச் சிரிப் புடன் மாமல்லன் விழி பதித்தான். பிள்ளையார் சுழி போட்டு, 'உயிருக்குயிரான தம்பி திருமாறனுக்கு' என்று தொடங்கியிருந்த கடிதத்தில் அவன் விரும்பிய சில வாக் கியங்கள் மாத்திரம் மறுமுறையும் அவன் பார்வைக்கு இலக்காயின.

"...என்னோடு உடன் பிறவாத தங்கை சிந்தாமணி. அவளுடைய எதிர்காலம் செம்மையுடன் இருக்க வழி வகை செய்ய வேண்டியது என் கடமையாகும். அந்தப் பிரச்னையில் நான் மூழ்கியிருக்கையில் உன்னிடமிருந்து தபால் வந்தது. சிந்தாமணி திருமதி மாறனாக ஆன தும்தான் எனக்கு இன்ப மூச்சுவரும் பங்களா வாசமும் பண்புள்ள உனது அன்பும் அவளுக்குப் பருவகால

மழையாக உதவும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. இன்று நீ எனக்குத் தம்பி என்னும் உறவு. இந்தச் சொந்த முறையில் மாற்றம் ஏற்பட்டுவிடும். என் சகோதரியை உன் மனப் பீடத்தில் ஏற்றி வைக்கின்ற காலை நீ எனக்கு மைத்துனன் ஆகிவிடுவாய் அல்லவா? இவ்வாரக் கடைசியில் உன்னைச் சந்திப்பேன்...!''

நாழிகை வட்டத்தில் மணி பன்னிரண்டு.

மாமல்லன் கடிதத்தை மடித்து நீல உறைக்குள் திணித்தான்; முகவரி எழுதினன். சோற்றுப் பருக்கைகள் இரண்டு உறைக்குத் திரையிட்டன. அவன் மனம் கொட்டிய சிரிப்பில் பாவம், குலோத்துங்கனின் மனம் மரணப் பிடிப்பில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

நாளை 'தூத்துக்குடி'யில் அவர்கள் பட்டணம் செல்வதாக ஏற்பாடு. மாமனுர் வீட்டை விட்டுப் புறப்படும் நேரம் கணிக்கப்பட்டது. சித்தயோகம். நாள் செய்வதைப்போல நல்லார்கூடச் :செய்யமாட்டார்கள். தமிழ் மரபின் வழக்கு மொழி இது. நம்புகிறவர்களுக்கு நாள், கிழமை, நட்சத்திரம் எல்லாம் இன்றியமையாதவை.

பக்கத்து வீட்டுச் சுட்டிப் பயலிடம் நேற்று கடிதத்தைக் கொடுத்துத் தபாலில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டான் மாமல்லன்; அது இந்நேரம் திருமாறனிடம் கிடைத்திருக்குமென்று கருதினன், எல்லா ஏற்பாடுகளும் முடிவு பெற்ற பிறகு சிந்தாமணியின் திருமண அழைப்பை அவளிடம் கொடுத்து அவளை திகைப்பில் ஆழ்த்த வேண்டுமென்பது அவன் திட்டம். குலோத்துங்கன்...பாவம்!'

மாமல்லன் உணவு கொண்டான்; நித்திரை சுகம் அறிந்தது; எழுந்தான். பொழுதோடு மனைவியுடன் அரியலூரை ஒருமுறை சுற்றி வரவேண்டும் போலிருந்தது அவனுக்கு. சென்னையில் அலுவல் பார்க்கும் இடத்திலிருந்து வேலைக்கு வருமாறு நினைவுக் குறிப்பை அனுப்பி விட்டிருந்த தகவல் காகிதம் அவன் கண்களை உறுத்தியது. டிராயரில் எடுத்துப் போட்டான்.

பொற் கொலுசுகள் காப்பி, பலகாரம் தந்தன. 'கொடுத்து வைத்த' இதழ்கள் சுவைத்தன.

''அத்தான், அத்தான்...!''

''என்ன மேகலே ?''

''போட்டோ ஒண்ணு காட்டப் போறேன் !''

குலோத்துங்கன்—மேகலே இருவரின் அந்த நாளேப் புகைப் படத்தைக் குலோத்துங்கனிடம்கூட நீட்ட ஒப்பாமல், மத்திரமாகத் தன் கைப்பெட்டிக்கடியில் ஒளித்து வைத்திருந்தான். இது என்ன படம்? இது என்ன புதுக்கூத்து?

நேத்திரங்கள் ஜோடியாக மோடி செய்தன. 'மோடி' எடுக்கத் தெரிந்த மந்திரவாதி மாமல்லன். அவள் பிணங்கினுள்; அவன் சிணுங்குவாளு, என்ன ?

பறிக்கப்பட்ட பூவானது படம். பார்வை விளிம்பில் அது கிளித்தட்டு சுற்றியது. அந்தப் புகைப் படத்தில் அவன் இருந்தான்; அத்துடன் குமரி ஒருத்தியும் இருந்தாள். பள்ளி நாட்களிலே நாடக விழாவின்போது எடுக்கப்பட்ட படம்.

கைவசமிருந்த இந்த நிழற் படமும், மனத்திலிருந்த அந்தப் படமும் மனச்சாட்சியின் முதுகில் அடித்த உதை நெஞ்சில் உறைத்தது. 'எப்போதோ எடுக்கப்பட்ட இது மேகலேயிடம் எப்படி வந்தது?...என்னிடம் காண்பிக்கக் காரணம் என்ன?......மறைத்து வைத்த இவளுடைய படத்தைப்பற்றி இவள் அறிந்துகொண்டு விட்டாளென்று அர்த்தமா?—என்ன அனர்த்தம் இது?'—எண்ணிக்கொண்டேயிருந்திருப்பான் அவன்.

அவள் அனுமதிக்கவில்லே. ''என் தோழி மாதவி கொடுத்தாள். வட நாட்டிலேருந்து போன வாரம் வந்தாள். வீட்டுக்குப் போயிருந்தேன். கல்யாண விவரத்தைக் கேட்டாள். பெயரைச் சொன்னதும், இந்தப் படத்தை எடுத்தாந்து காட்டி, 'இவர்தானே...?'ன்னு கேட்டாள். நான் 'ம்' கொட்டினேன்.''—மேகலே !

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையானள் குடும்பத் தலைவி.

"எப்போதோ நடந்தது இது. எனக்கு நினைப்பே இல்லை. ஆமாம், மாதவி வேறு ஏதாவது சொன்னதா ?"

"அது, எதுவும் சொல்லலை ; ஏன், அவளை இங்கே வரச் சொல்லட்டுமா, அத்தான்...?"

"ஏன் ?"

"சும்மாத்தான்...!"

"வேண்டாம், வேண்டாம் !"

அவன் அவளை நிமிர்ந்து பார்க்கத் துணிவு பெற்ருன். அவளது விழி விரிப்பில்தான் எவ்வளவு நம்பிக்கை? அவன் மட்டும் அவளை நம்ப மறுத்தானே ?

விசித்திரமான யுக்தியொன்று அவனது மனத்தைப் புழுவாகக் குடைந்து வந்தது. 'அந்தப் படத்தைப்பற்றி குலோத்துங்கனிடம் இப்போது கேட்டால், அவன் சரிவரச் சொல்லான் ; அவனை மதராசுக்கு அழைத்துப் போனதும் அவனுடைய புத்தியைத் தெளிய வைத்து, புகைப்படச் சம்பவத்தை துருவி ஆராய வேண்டும் !' என்பதுவே முன்பு சொல்லப்பட்ட யுக்தி. ஆனல் அதே பொழுதில், அவனுக்கு வேருெரு புதிய அச்சம் தலை காட்டியது. 'குலோத்துங்கன் பழையபடி சுயநிலை அடைந்து தேறி விட்டால், சிந்தாமணிக்காகப் போட்டியிட மாட்டானு ?...ஆமாம், இன்னும் கொஞ்ச தினங்களுக்கு அவனை இந்த ஸ்திதியிலேயே தான் நடமாடச் செய்ய வேண்டும் !' என்பது அவன் இறுதியாகச் செய்த முடிவு.

மனிதனை வேவு பார்க்கும் சிவப்புத் தலைகள் மூன்று ; காமம், வெகுளி, மயக்கம். அசந்தால் மனிதனை அவை அலங்க மலங்க அடித்து விட்டுத்தான் மறு வேலை பார்க்கும். இவை மூன்றும் பெருங் குற்றங்களாகும். ஒவ்வொன்றும் மாமல்லனை நையாண்டி செய்யத் தவறவில்லை. மேகலையின் மீதிருந்த அவனுடைய வெஞ்

சினம் அவளைக் கண்டதும் மறைந்தது ; அவளது பருவ எழில் போதை யூட்டியது ; அவன் மயக்கமடைந்தான் ; மயங்கினுன் !

தன் நிலை பெற்றதும், "சரி, உலவிவிட்டு வரலாம், மேகலை !" என்ருன் அவன். அவள் உடன் தொடர்ந்தாள்.

பிரயாண ஏற்பாடுகள் நடந்தன. அம்பாள் காப்பித் தூள் கம்பெனி, காமராசர் வாசகசாலை, செட்டியார் பாத்திரக்கடை முதலான இடங்களில் 'விடை' பெற்றுக் கொண்டான் மாமல்லன்.

மேகலையும் தனக்குத் தெரிந்தவர்கள் வீடுகளிலும், உரித்தான தோழிகளிடத்திலும் பயணம் சொல்லிக் கொண்டாள். பெற்றவர்களையும் உடன் பிறப்பையும் எப்படிப் பிரிவது என்ற ஆருத் துயரத்தில் இருந்தாள் அவள். மாடியிலிருந்த அவளிடம் ஏதோ சொல்ல வந்த மாமல்லனை அழைத்த குலோத்துங்கன் அவனிடம் ஒரு சங்கிலியைக் கொடுத்தான். "உங்கள் மனைவிக்கு என்னுடைய கல்யாணப் பரிசு !" என்று துலாம்பரமாகப் பேசினுன்.

"வாங்கிக்கங்க, அத்தான் !" என்ற வேண்டுகோளை மாடியிலிருந்த மேகலை உதிர்த்தாள்.

மாமல்லனின் கைகளில் தங்கச் சங்கிலி ஒளி வீசிக் கொண்டிருந்தது.

கணப்பொழுது ஒன்ருேடு நிற்குமா?

எக்ஸ்பிரஸ் வந்தது.

அரியலூர்.

மேகலை பெட்டியில் ஏறிக்கொண்டாள். அவளுக்குப் பக்கத்தில் கோசலை அம்மாள். மரகதவல்லி அம்மையும் சோமசுந்தரமும் தரையில் நின்றபடி மகளுக்குப் புத்திமதி சொன்னுர்கள் :

பெட்டிக்குக் கீழே நின்ருன் மாமல்லன். சிந்தாமணிக்காகவும் குலோத்துங்கனுக்காகவும் அவன் காத்

திருந்தான். வண்டி புறப்படவிருந்தபோது, மாமனுர் வீட்டு வேலைக்காரன் ஓடி வந்து அவனிடம் ஏதோ காகிதம் ஒன்றை நீட்டினுன். வண்டி புறப்பட்டது! வண்டியில் ஏருத சிந்தாமணி, குலோத்துங்கன் ஆகிய அவ்விருவருடைய டிக்கெட்டுகள் அவனுடைய சட்டைப் பையில் இருந்தன. வலது கையிலிருந்த கடிதம் உறையைக் கிழித்தபடி தலையை நீட்டியது.

"அன்புள்ள அண்ணு,

என்னுடைய சொந்த அத்தான் குலோத்துங்கன் என் சொத்து. அவருக்காகவேதான் இத்தனை காலமும் நான் உயிருடன் இருந்து வந்தேன்; உயிர்மீது ஆசை வைத்தும் வருகிறேன். அவரும் நானும் தஞ்சை செல்கின்ருேம். உங்கள் ஆசி எங்களுக்கு என்றும் உண்டல்லவா?

அன்புத் தங்கை,

சிந்தாமணி."

## 14

'காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்;
காதற்பெண்கள் கடைக்கண் பணியிலே!'

"மேகலை, வலது காலை முன்னுடி எடுத்து வச்சு மெதுவாக் குனிஞ்சி வாம்மா!..." என்ருள் கோசலை அம்மாள்.

அத்தையின் அன்பு நிரம்பிய எச்சரிக்கையைக் கவனத்தோடு பின்பற்றினுள் மேகலை. நிலா முற்றத்திலிருந்து ஓடி வந்த இளங்காற்று நைலான் பட்டுப் புடவையை குசலம் விசாரித்தது. அரியலூர் ராணியை தன்னுடைய ஆசைக்குகந்த பட்ட மகிஷியாக ஏற்ற மகிழ்ச்சியுடன் திருச்சிக்கு ஒருமுறை சென்று திரும்பினுன் மாமல்லன். மேகலைக்குப் பரிசுகள் சில கொணர்ந்தான் அவன். மலைக்கோட்டைத் தளிர் வெற்றிலையில் ஒரு

கவளியும், உச்சிப் பிள்ளையார் கோவில் அடிவாரத்தில் விற்கப்பட்ட ஜாதி முல்லையில் ஒரு சேரும், ஒரு 'நைலான்' பட்டுச் சேலையும், 'ஆர்கண்டி'யில் சோளிக்கு ஒரு கஜமும் வாங்கினுன்.

"நீங்கள் எனக்குப் பரிசளித்து விட்டீர்கள். பதிலுக்கு நான் தரவேண்டுமல்லவா, அத்தான்...!" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம், கொடுக்க வேண்டாமா, பின்னே?" என்று அவள் பேச்சுக்கு ஒத்துப் பாடினுன் மாமல்லன்.

"தருகிறேன், அத்தான், தருகிறேன்!" என்று பதில் சொன்னுளே தவிர, அன்பளிப்பு எதையும் அவள் கொடுக்கவில்லை.

"பரிசு எப்போது கிடைக்கும், தேவி?" என்ருன் மாமல்லன்.

"இன்றைக்குப் பதினேழாம் நாளில் கிடைக்கும் அத்தான்!..."

எண்ணிக் கணித்துச் சொன்ன 'கெடு' காற்றில் அசைந்தாடியது; ஆனுல் அவளோ, அசைந்தாடிய பூங்கொடியாக உள்ளே ஓடி மறைந்து போனுள், நாணத்தை மாத்திரம் உடன் அழைத்துக் கொண்டு,

ஒரு விஞடி கழிந்ததும், மாமல்லனுக்கு இருந்திருந்தாற்போல வெட்கம் வந்துவிட்டது. 'அது எங்கள் முதல் இரவு!'—நினைவு மீண்டதும் சிரித்தான் மாமல்லன்.

காலம் ஓடுகிறது. காலத்தின் கருவில் வளர்ந்து வெளி வந்த சம்பவங்களும் அவற்றுடன் ஓடி விடுகின்றன. ஆனுல், அந்த நிகழ்ச்சிகளின் நினைவுகள் மட்டும் அவற்ருேடு ஓடிப்போய் விடுவதில்லை. அதிசயமான இவ்விளைவுதான் காலத்தின் மகிமை!

சென்னைக்கு வந்த மேகலை மின்னல் துவளும் நேரத்திற்குள் அரியலூர் சென்று திரும்பினுள். பழைய

சிந்தனை அவளது சித்தம் முழுவதையும் இனிக்கச செய்தது. அவள் திரும்பினுள். ஹாலில் மேஜைமீது இருந்த அரை வட்டக் கண்ணுடி யொன்று அவள் எழிலை மாற்றுரைத்துக் காட்டியது. நெற்றி மையத்தில் பிறை வடிவில் குங்குமம் இருந்தது. சுருள் படிந்த கேசங்கள் சில பொட்டுக்கு திருஷ்டி கழித்துக் கொண் டிருந்தன. சோளியின் கழுத்துப் பக்க இடைவெளியில், தாலியின் தங்க நிறம் அவளது மேனியில் பட்டுப் பிரதி பலித்து அழகு சேர்த்துக் கொண்டிருந்தது.

“மேகலை” என்று கூப்பிட்ட அவள் மாமியார் அவ ளுக்கு விபூதி பூசினுள்; மல்லிகேஸ்வரர் ஆலயத்தின் திசை நோக்கித் தொழுதாள் அவள். கண்களில் திரு நீற்றுத்துகள் ஒன்றிரண்டு விழுந்திருக்க வேண்டும்; அதனுல்தான் மேகலை அப்படி கண்களை மூடி மூடித் திறந்தாள்போலும்! அத்தையுடன் மருமகளும் தொடர்ந் தாள். கூடத்தில் தொங்கவிடப்பட்டிருந்த மாமல்ல னின் நிழலுருவம் ‘காபினெட்’ அளவில் காட்சியளித் தது. ‘நான் அத்தானுடைய உடைமைப் பொருள்; வாஸ்தவம்தான்...! ஆனுல், அவனுடைய உத்தரவு இல்லாது உள்ளே என் போக்கில் நுழைந்து செல் கிறேனே? நாளைக்கு சொந்தக்காரர் சூடாக ஏதாவது ஒரு சொல் சொல்லமாட்டாரென்பது என்பது என்ன நிச்சயம்?’ என்ற விஞேதமான ஐயப்பாடு தலையை விரித்துக்கொண்டு எழுந்தது. இனம் விளங்கமாட்டாத ஏதோ திகில் அல்லது வேதனை, இனம் புரியாத ஏதோ ஒரு வடிவெடுத்து, இனம் கண்டுகொள்ள இயலாத ஏதோ ஒரு தொங்கலிலிருந்து தன்னைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதைப் போன்று அவள் உணர்ந்தாள்: அவளது மனம் அறிந்தது; மனத்தின் நுண்ணிய அறி வுணர்ச்சி தெரிந்து கொண்டது. இதய விளக்குபற்றி எரிந்தது.

நெற்றிப் பொட்டில் வலி உண்டாயிற்று. வலது கைக் கட்டை விரலையும் மோதிர விரலையும் வைத்து அழுத்திஞள் மேகலை. இதமாக இருந்தது. எரியும் தீபத்தைத் தூண்டிவிட உதவும் அதே துரும்பு, தீபத்

தின் திரியை அணைக்கவும் உதவுவது உண்டல்லவா? அம்மாதிரி, அவளைத் தொல்லைப்படுத்திய அதே விபரீத நினைவுகள் இப்போது அவளுக்கு ஆறுதல் தந்தன.

மாமல்லன் வாடகைக்காருக்கு 'துட்டு' கொடுத்து விட்டு விசையுடன் உள்ளே வந்தான். பூங்கரம் பிணைத்து அழைத்துச் சென்றான். முதன் முதலில் இங்கிருந்து குழப்பங்களுடன் அரியலூருக்குப் புறப் பட்ட ஞாபகம் வந்தது. கண்ட கனவு பலித்து. மனத் தில் எழுதிப் பார்த்துக் களித்த அதே சித்திரப் பாவை தன் இல்லத்தரசியாக வாய்த்து விட்டதை எண்ணிய போது, அவன் மெய்ம்மறந்தான்.

மாமல்லன் நீண்ட இடைவேளை கழித்து அலுவல கத்திற்குச் சென்றான். சென்றவுடன், அவனுக்கு ஏராளமான நல்வாழ்த்துக்கள் கிடைத்தன. திருமணம் முடிந்த கையோடு எல்லோருக்கும் தனித்தனியே நன்றி தெரிவித்து முன்பே கடிதங்கள் எழுதி விட்டான். வாழ்ந்து காட்டியவர்கள் ஆசி கூறினார்கள்; வாழவேண் டியவர்களில் மாமல்லனைவிட வயதில் மூத்தவர்கள் சிலர் வாழ்த்துரை நல்கினார்கள்; இளையவர்களிலே மூன்று நான்கு பேர்களும் முன்னவர்களின் அடித்தளத்தை மிதித்தார்கள். இப்பொழுது இரண்டாந் தடவையாக அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டிய வன் ஆனான் அவன்.

'ரெமிங்க்டன்' இயந்திரமும், சுழல் விசிறியும், அவ னுடைய உழைப்பை எதிர் நோக்கிக் காத்துக் கிடந்த 'பைல்'களும் முன்பெல்லாம் அவனுக்கு மலைப்பாகத் தோன்றும். ஆனால் அன்றைக்கு அவை அவனுடைய உற்சாகத்தைத் தூண்டிவிட்டன. மந்தமான பழைய நிலையும் குழப்பம் மண்டிய பயமும் தோல் உரிக்கப் பெற்றன. புதிய ஆர்வம் தழைத்தது; முகத்தில் கொழுமை நிறைந்தது.

கண்ணாடி அறைக்குள் முடங்கிய பெண்டுலமும் சிவப்புத் துணியில் தைக்கப்பட்ட செப்புத் தகடுகளும் கருமத்தில் கண் பதித்தன.

சட்டையின் கழுத்துப் பட்டையை நுனி விரலால் தூக்கினான் அவன்; செயற்கைக் காற்று மேனியைத் தழுவியது. இடைவேளை மணி ஒலித்தது. பசிக்குப் பதில் சொல்வதில் அவரவர்கள் முனைப்பாகக் காணப் பட்டார்கள். தூக்குக் கோர்வைகளும், காகிதப் பொட்ட ணங்களும் பிறவிப் பயன் அடைந்தன.

மாமல்லன் ஹோட்டலுக்குச் செல்லவேண்டும்; எழுந்தான். வீட்டிலிருந்து புறப்படுகையில், "அத்தான், இன்னிக்கி மாத்திரம் மவுண்ட்ரோட் ஹோட்டலிலே சாப்பிட்டுக் கொள்ளுங்க. நாளையிலிருந்து சாப்பாட்டுக் காரி மூலம் ஆபீசுக்கு சாப்பாடு அனுப்பிடுகிறேன். என்ன, சரிதானே?" என்று புன்னகையுடன் சொன் னாள் மேகலை. குடும்பப் பொறுப்பு அவளை எத்தகைய முறையில் இயக்கத் தொடங்கி யிருக்கிறதென்பதை நினைத்துப் பார்ப்பதற்கு ஒரு கணப்பொழுது மட்டுமே அவனுக்கு இடை வேளையாய்க் கிடைத்தால் போதுமா?

பிற்பகல் உணவுக்குப் பிறகு, மாமல்லன் தன் இருப் பிடத்தில் அமர்ந்தவுடன், அவனுக்குத் 'தொலை பேசி அழைப்பு' ஒன்று வந்தது. ஸ்டூடியோவிலிருந்து திரு மாறன் பேசினான். பெரிய இடத்துப் பிள்ளை நாம் வரும் தேதியை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டு மென்று அவனுக்கு என்ன அக்கறை இருக்கப் போகி றது? என்றுதான் மாமல்லன் முடிவுக் குறிப்புத் தயா ரித்து வைத்திருந்தான். நண்பனின் அன்புக் குரலைக் கேட்டதும் அவனுக்கு உடம்பு சிலிர்த்தது. 'எப்போது உன்னை வீட்டில் பார்க்கலாம்?' என்ற கேள்விக்கு மாமல்லன் கொடுத்த பதில், "இன்றைக்கே வா, திரு மாறன். உனக்காக ஏழு மணிக்குக் காத்துக் கொண் டிருப்பேன், தெரியுமா?" என்பது.

உடல் பாதி, ஆசை பாதி என்பார்கள். மனிதப் பிண்டங்களுக்கெனவே எழுப்பப்பட்ட வாசகம் இது. ஆசைகள் கூடாதென்ற 'பரிபக்குவ நிலை, அடைவதற்கு மாமல்லன் ஞான ஜோதி புத்தர்பிரான் அல்ல. ஆகவே, அவன் தாராளமாக ஆசைகளை வளர்த்தான், நியதி

தவறாத வழிகளிலே! ஆசைக் கொழு கொம்பு அன்பு; அன்புக்குத் தேர்வுகூடம் கனவு; கனவுக்குத் தீர்ப்புரை வழங்கவல்லது மனித வாழ்வு. இப்படிப்பட்ட சங்கிலித் தொடர்புகொண்ட நடைமுறை வாழ்க்கையில், மாமல்ல னின் நெஞ்சத் தளத்திடை தலை நிமிர்ந்த ஆசைகள் பல உண்டு. அந்த ஆசைகளுள் ஒன்று லட்சியம் ஆனது; அதுவே கனவாகவும் மாறியது. அந்தக் கனவு நனவாயிற்று. மேகலை கிட்டினாள். 'கிட்டிப்புள்' விளை யாட்டில் கெலித்த சிறுவனைப்போல வானத்துக்கும் பூமிக்கும் எகிறி எகிறித் தாவினான்; குதித்தான். அத னால்தானே அவனும் அவளும் வானத்திற்கும் பூமிக்கு மாகப் பிரயாணம் செய்து சுவர்க்கத்தைக் காண முடிந் தது! காதற் பெண்கள் கடைக்கண் பார்வை கிடைத்து விட்டால், காற்றிலேறி விண்ணை முற்றுகையிடுவதுகூட சுலபமாகி விட்டதா...?

துணி நிலாவில் மேகக் கறை லேசாகப் படிய எத்த னம் செய்தது. அவன் தப்பித்தான்; மனம் கட்டுப்பட் டது; உற்ற தோழனைப்பற்றி மட்டுமே மாமல்லன் எண்ணத் தலைப்பட்டான். தன் இரண்டாவது ஆசைப் பிரகாரம் திருமாறனிடமே சிந்தாமணியை ஒப்படைக்க வழி என்னவென்று ஆராய்வதில் மூளையைச் செலவழித் தான்.

இன்னும் இருபது நிமிஷங்களில் திருமாறன் வந்து விடுவான்!

சவுக்கார நுரை மாமல்லனின் முகத்திற்குக் கனி வைத் தந்தது. புட்டா மாவு'களை கொடுத்தது. துணைவி யிடம் திருமாறனின் வருகையைப்பற்றிச் சொல்லாமல் இருப்பானா? விருந்தோம்பலில் தமிழ் மக்கள் அடையும் பெருமையில் பெரும் பகுதி பெண்களுக்கே உடமை. மேகலை புத்துடைகளை மேனியில் போர்த்தினாள்; கண்ணாடியில் தாலிப் பொட்டுத் தெரிந்தது; கண்களில் ஒற்றிக் கொண்டாள்; மின்னும் நட்சத்திரங்கள் வைர அட்டிகையின் கண்களாகச் சேவை செய்தன. முன்னே பின்னே அறிந்திருக்காத, ஆனால் விட்டகுறை—

தொட்ட குறையின் பலாபலனுகை விளைந்த சம்பவம் அது. மாயா லோகத்தைச் சார்ந்த பெரிய கோடீஸ்வரரின் திருக்குமாரனுன திருமாறனை அவள் ஒரு முறையோ அல்லது இரண்டு தாமோதரன் கண்டிருக்கிருள்—அதுவும் அரியலூரில்—அவள் இல்லத்தில்! பாசபந்தம் எப்படி யெப்படி யெல்லாமோ சூதாடிப் பார்த்தது. அவளது மாங்கல்ய பாக்கியம் அவளுக்கும் திருமாறனுக்கும் பந்தத்தை உண்டு பண்ணவில்லை. ஆனுல், பாசம் மட்டும் நிலைத்தது. திருமாறனின் அன்பையும் பாசத்தையும் அவளால் மறக்க முடியாது. ஏனென்ருல், வைர அட்டிகை நெஞ்சோடு நெஞ்சாகத்தானே சதா விளையாடிக் கொண்டிருக்கும்!

திருமாறன் வந்து விட்டான்...!

ஆடுதுறை ஜவுளி வண்டி மாதிரி அவ்வளவு பெரிதாகவும் நீளமாகவும் இருந்தது 'பிளிமத்' கார். அவன் இறங்கினுன். நாலைந்து கனத்த காகித டப்பாக்களையும் பழக்கூடை ஒன்றையும் டிரைவர் ஒரே நடையில் சுமந்து போனுன்.

வாசலில் காத்து நின்ற மாமல்லன் நண்பனை இன் முகம் காட்டி வரவேற்ருன். கணவனின் நிழலைப் பிரிந்து நின்ற மேகலை "வணக்கம் அண்ணு: வாருங்கள்," என்று முகமன் உரைத்தாள். 'அண்ணு!' என்னும் அந்த மந்திரச் சொல் கேட்டு திருமாறனின் உடம்பு புல்லரித்தது. உதட்டுச் சிரிப்பு கண்களுக்குத் தாவியது; விழிகளின் வெள்ளம் இதழ்க் கரையில் அலைமோதியது.

மாமல்லனுக்குக் கட்டு மீறிய ஆனந்தம்.

சிநேகிதனை வழிகாட்டி அழைத்துச் சென்ருன் அவன். "வாங்க, தம்பி!" என்ருள் மாமல்லனைப் பெற்றவள். மேகலையிடம் தூய புன்முறுவலையே பதிலாகத் தெரிவித்த மாதிரி, கோசலை அம்மாளுக்கும் பதில் சொல்ல அவன் இதழ்களில் சிரிப்பை வரவழைத்தான்.

நடையில் பவானி சமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டு நெருடிக் கொண்டிருந்தான் திருமாறன்.

"மாறன், இது மாய மந்திர ஜமக்காளம் அல்ல. பயப்படாதே! எங்கேயும் பறந்து விடாது! ஆமாம்; டிபன் சாப்பிடத் தயார்தானே?"

மாமல்லன் கேட்ட கேள்வியின் எதிரொலி தேய்ந்த போது, மேகலையின் சிரிப்போசை புதிதாகக் கேட்டது. பதியின் நகைச் சுவையை அனுபவிக்க வேண்டியவள் அவள். அவனுக்குத் தலை கொடுத்தவள் ஆயிற்றே!"

"சாப்பிடுங்கள்!"

மேகலை உச்சரித்தாள். ரவைக் கேசரி ஒரு தட்டிலும் ஓமப் பொடிக்கலவை இன்னொன்றிலும் இருந்தன. தண்ணீரை ஒரு மிடறு அருந்தியபின், மீண்டும் தலையைத் தரைக்குத் தாழ்த்தினான்.

"மாமல்லன், நீ...சாப்பிடலையா?"

" முதலில் ருசி பார்த்ததே நான்தானே...?"

"ஏன், உனக்கு முன்னால் ஹோட்டலில் சுவைத்திருப்பார்களே?"

"ஓஹோ, அப்படியானால் மேகலைக்கு இம்மாதிரிப் பலகாரம் செய்து பழக்கமில்லேன்னு நினைச்சிட்டியா? அங்கேதான் நீ தப்பு செய்திட்டே! மேகலை செய்த பலகாரம்தான் எல்லாம்!" என்று விவரித்த சடுதியுடனே மனைவியை ஓரக் கண்கொண்டு பார்த்தான் மாமல்லன்.

"அதெல்லாம் பொய்; நீங்க சொல்றதுபோல ஹோட்டல் பலகாரம்தான், அண்ணா!" என்று விடை பகர்ந்தாள் மேகலை.

காப்பிக் கோப்பைகளும் காலியாயின.

இனிப்புத் தினுசுகள், பழவகைகள், துணிமணிகள் ஆகியவற்றைப் பிரித்து நீட்டினான் திருமாறன்.

"ஏற்கெனவே நீ கொடுத்த வைர நகைகளின் சுமையைத் தாள முடியாமல் நாங்கள் இரண்டு பேரும் திணறிக் கொண்டிருக்கிறோமே, போதாதா? இவை வேறு எதற்கு, மாறன்?"

மாமல்லன், நீ என்பேரில் சுமத்தியிருக்கிற அன்புச்

சுமையைத் தாளமுடியாதவனுக நான் இருக்கிறேன். அதற்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டாமா ?''

மாமல்லனின் இதயம் அன்பின் நெருக்கத்திஞல் புடைத்து விம்மியது.

"அண்ணியை அழைத்துக்கொண்டு ஒருமுறை எங்கள் ஸ்டுடியோவுக்கு வா, மாமல்லா :''

"அண்ணியா?...யாரது?''

''கேலி செய்கிருயா ?...உன் மிஸஸ்...''

"மேகலே உன்னே அண்ணு என்று அழைத்தாளே?''

"ஆமாம்...ஆமாம் !''

''மாறன், நீ எனக்கு மைத்துனன் ஆகப் போவதாக ஒரு கடிதத்தில் எழுதியிருந்தேனல்லவா ?''

"ஆம் !''

''ஆகவே, மேகலே சொன்னபடி நீ அவளுடைய அண்ணனுகவே இருந்துவிடு. அப்போதுதான் என் தங்கை சிந்தாமணியை உனக்குத் திருமணம் செய்து கொடுப்பேன் !''

"உத்தரவு, மைத்துனரே, உத்தரவு...!''

மேகலே 'களுக்'கென்று சிரித்தாள்.

திருமாறன் விடைபெற்றுத் திரும்பிக் காரில் ஏறிய போது, "அடுத்த மாதம் மஹாபலிபுரம் போவதாக இருக்கிருேம். நீயும் வருகிருயா?'' என்று விசாரித்தான் மாமல்லன்.

"உனக்குச் சொந்தமான பூமியாயிற்றே அது ? வருவதற்குச் சொல்ல வேறு வேண்டுமா ?''

"ஓஹோ !...இப்போது பேசியவர் நரசிம்மவர்ம பல்லவரென்னும் மாமல்லச் சக்கரவர்த்திகளா ? ஹூம் !''

''கலை வளர்த்த மன்னர்கள் இதுபோல நம் கனவுகளையாவது வளர்க்கக் கற்றுத் தந்து சென்றிருக்கிருர்களே, அதுவே தமிழ்க் கலையின் அதிர்ஷ்டம்தான் !'' என்று சிரித்தபடி தொடர்ந்து, ''நானே வண்டி எடுத்துக்கொண்டு இங்கே வந்து விடுகிறேன் !'' என்று முடித்தான் திருமாறன்.

அஞ்சலியின் முத்திரைகள் ஓய்ந்தன.

# 15

> 'காதலினுல் மானுடர்க்குக் கவிதையுண்டாம்;
> கானமுண்டாம், சிற்பமுதற் கலைகளுண்டாம்!'

"மல்லன் வாழ்க!...மாமல்லன் வாழ்க பல்லூழி!..." என்ற நல்லெண்ணக் குரல்கள் நாற்புறமும், எண்திசையும் முழங்கிக் கொண்டிருந்தன.

மாமல்லனுக்குப் பேரதிசயமாக இருந்தது; தன்னைத் தானே ஒருமுறை பார்த்துக்கொண்டான். சுற்றிச் சூழ ஒரு தவனை நோக்கினுன்; வாழ்த்துரைகளின் ஒலி இன்னமும் அவனுடைய செவிகளில் ரீங்காரம் செய்தது. 'என்னையா வாழ்த்துகிருர்கள்?...யார்?...ஏன்...?' என்ற சந்தேகங்கள் தெறித்து விழுந்தன. முள் எடுக்கும் நாழி அவன் சிந்தித்தான். இலக்கிய மனம் விழிப்புப் பெற்றது; கலையுள்ளம் கண் திறந்து விழிகள் சிரித்தன; உதடுகள் மலர்ந்தன; இதயம் மகிழ்ச்சிப் பெருக்கில் விம்மி விம்மி அடங்கியது. உள்ளம் பூரித்த உவகை மிகுதியுடன், மெய்ம் மறந்த பாங்கில், தான் பிறந்த தமிழ்நாடு இத்துணை சிறப்புப் பெற்று விட்டதே என்ற தற்பெருமைப் பாவனையில் அவனும் வாழ்த்தினுன்: "மாமல்லன் நீடூழி வாழ்க!"

வாழ்த்தொலிகள் அடங்கினபாடில்லை; அவை அடங்கவும் மாட்டா. பேசாத சிற்பங்களின் பேச்சை மாமல்லன் எவ்வளவு நேரமானுலும் கேட்டுக்கொண்டேயிருப்பானே!...காலத்தைப் பொய்யாக்கி, கலையின் பொற்பினை மெய்யாக்கிக் காட்டிக் கொண்டிருந்த மல்லைத் துறைமுகத்தின் எழிலை நாளெல்லாம் புகழ்ந்து கொண்டிருப்பானே!

கற்களிலே தெய்வங்கள் உறைந்திட இணங்கின. ஆதிக்கோயில் அல்லவா மஹாபலிபுரம்! சரித்திரம் திரும்பியது; ஏழாம் நூற்ருண்டு மீண்டது. பல்லவர் தம் இடபக்கொடிகள் விண்முட்டிப் பறந்து பரணி

பாடின. மரக்கலங்கள் வெற்றி முரசெறிந்த வீரப்பட லத்தின் ஏடுகள் வாய் திறந்தன. ஆஹா!...'கலங்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லைத் தலசயனம்' என்னும் திருமங்கை யாழ்வாரின் பாசுரம் எவ்வளவு மெய்யான வாக்கு! பல்லவப் பேரரசின் பார்புகழும் கியாதியை நன்றியுடன் எடுத்தியம்பும் கனவின் வடிவமாகக் காட்சி யளித்த அந்தக் கலைக் கழகத்திற்கு மாமல்லன் அஞ்சலி செய்தான். அவனது கண்களின்றும் கண்ணீர் முத்துக் கள் ஒவ்வொன்ருகச் சிதறி விழுந்தன.

"அத்தான்!" என்று அழைத்து அவனை பூவுலக்குக் கொண்டு வந்து நிறுத்திஞள் மேகலை.

மாமல்லனின் நேத்திரங்கள் அகல விரிந்தன. ஆழியும் கலங்கரை விளக்கமும் ஆதரிசப் பொருள் களாகத் தோன்றின.

மேகலை கீழே குனிந்தாள். கடற்கரை மணலில் கை விரல்களை அழுத்திஞள். "முத்துக்களைச் சிந்தி விட்டீர்களே, அத்தான்?' என்று கேட்டாள் அவள்.

"மேகலை, அதோ பார்! பேசும் உன் கயல் விழி களைக் கண்டு பொருமை மிகக் கொண்டு கடல் மீன்கள் தாவித் தாவி ஆழத்தைத் தேடி ஓடுகின்றன!...இங்கே பார், பேசும் பொற்சித்திரங்கள், பேசிக் கொண்டிருக்கும் உன் விழிக் கணைகளின் காந்த சக்தியின் முன் வாய் புதைத்துக் காணப்படுகின்றன!...கடல், கலை, கனவு ஆகிய இம்மூன்றும் என்னை தன்னிலைக்குக் கொண்டு வந்தபோது, இவ்வாறு நீர் முத்துக்களைச் சிந்துவதன் மூலமாகத்தான் அவற்றுக்கு நன்றி தெரிவிக்க எனக்குத் தெரிந்தது!"

மாமல்லனின் முகத்தில் புன்னகை கோலம் செய் தது.

மேகலையின் வதனத்தில் விழிநீர் கோடு கிழித்தது.

"மேகலை, இப்பொழுதுதான் எனக்கு நிறைவு உண் டானது. அழியாத தமிழ்க் கலைக்கு நீயும் உன் பங்குக்கு நன்றி செலுத்திவிட்டாய். ரொம்பவும் சந்தோஷம். சரி; வா, புறப்படுவோம்." என்று சொல்லி அவளுடைய

தோளைப்பற்றிய வண்ணம், பாறையிலிருந்து எழுந் தான் அவன்; அவளைப் பின்பற்றினான். அலைகடலில் அலைந்து வந்த காற்று வெறி பிடித்து வீசியது. 'ஷீபான் பட்டுடை' பறக்க முயற்சி செய்தது. அதை எடுத்துப் போட்டுக்கொண்டு நடந்தாள். மனையாட்டி பதித்துச் சென்ற தடத்திலேயே தன் சுவடுகளையும் முத்திரை வைத்த வண்ணம் நடந்தான் அவன். மேகலையை ரசித் தான். இருவர் எதிர்ப்பட்டனர். தம்பதிபோலும்! திருக் கழுக்குன்றத்தில் கழுகு உணவு கொள்ளும் காட்சியை அனுபவித்தபோது, அவர்களைச் சந்தித்தார்கள் சிரித் தாள் மேகலை, ஏனென்றால், வந்த இணையின் அன்னப் பேடை புன்னகை இழையை வீசிச் சென்றது.

அணி பெற்ற அந்தி மாலைக் கன்னி நீராழியில் முகம் பார்க்க நினைந்து விண் துறந்து மண் நாடி ஓடி வரலானாள்.

சமாதி நிலையில் அமைந்தான் மாமல்லன். அரைக் கணப்பொழுது, கனவைக் கலைத்தாள் கனவுப் பதுமை. சதங்கைகள் குலுங்கின. நடை வண்டியை பையப் பையத் தள்ளப் பழகும் நேரத்தில், அந்தப் பாப்பாவின் கணுக்கால்களை அலங்கரிக்கும் வெள்ளிச் சலங்கைகள் சிரிக்குமல்லவா, அந்த இன்பப் பண்ணை நினைத்துக் கொண்டான் அவன். கொஞ்சிய சலங்கைகளுக்குப் பின்னணிக் குரல் தந்தது சிற்றுளியின் நாதம். கலை யையே உயிர்ப்பாகக் கொண்டு வாழ்ந்த ஆயனச் சிற்பி யின் மகள் சிவகாமியின் நினைவை யார்தாம் மறப் பார்கள்? தமிழ்ச் சரித்திரப் பேராசிரியர் அமரர் கல்கி அவர்களுக்கு மானசீகமாக மரியாதை செலுத்தப்பட்டது.

மாமல்லனின் கண்களைத் துடைத்து விட்டாள் கடமையுள்ளவள். "வாங்க அத்தான், வீட்டுக்குப் போவோம்!" என்றாள் அவள்.

"ஏன், மல்லைத் துறை உனக்குத் தொல்லை தரு கிறதா?"

"எனக்கு அப்படி அடுக்கு மொழியோடப் பேசத்

தெரியாது. இங்கே வந்ததிலேயிருந்து இரண்டுதரம் நீங்க உணர்ச்சி வசப்பட்டிட்டீங்களே, அத்தான் ?''

''ஓஹோ! அப்படியா ?... நான் என்னவோ ஏதோ வென்று பயந்து போனேன். உன்னிடம்கூட கண்ணீரைக் கண்டேனே; மாமன் மகளே ?...''

''ம்...!''

''மெல்லிய இதயம் பெண்களுக்கு மட்டிலும் சொந்தமில்லை; ஆண்களுக்கும் உண்டு என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா ?''

''ம் !...''—நையாண்டிச் சொல் !

அவளுக்கு அழகு காட்டி, அவளது கன்னத்தைக் கிள்ளப் போனான் அவன். ஆனால் அவனுடைய ஆள் காட்டி விரல், அவளது மார்பை அலங்கரித்த வைர அட்டிகையில் பதிந்தது. தன் இடது கையை விரித்தான். வைர மோதிரம் ஒளியை உமிழ்ந்தது. திருமாறனை நினைத்தான். 'கட்டாயம் அவன் மாமல்லபுரத்துக்கு வருவதாக வாக்களித்துவிட்டு, கடைசியில் ஏன் வரவில்லை ?...காரை அனுப்பியதோடு நின்றிருக்கலாகாதா ?... நூறு ரூபாய் பணத்தையும் ஏன் அனுப்பினான் ...?'

அர்ஜுனன் தவம், குகைக் கோயில்கள், கல் யானை முதலியவற்றைக் கடந்து சென்றபோது, சிதிலமடைந்த சிற்பம் ஒன்று வழிமறித்தது. 'வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாப் போச்சு—அப்படின்னு ஒரு பழமொழி உண்டு. அது கணக்கிலேதான் இந்த நட்பும் இருக்குது !' என்று அங்கலாய்த்தவன், சிதைந்த கோயிலின் நப்பாசையையும் நிறைவேற்றினான். வெளிப் பக்கச் சுவரில் ஏதேதோ வாசகங்கள் கிறுக்கப்பட்டிருந்தன. அமரகவியின் பாட்டு கரித்துண்டினால் எழுதப்பட்டிருந்தது. காதலினால் மனிதர்களுக்குக் கவிதை உண்டாம் ; கானம் கிட்டுமாம் ; சிற்பம்போன்ற கலைகள்கூடக் கிடைக்குமாம் ! அவன் பார்வை கீழிறங்கியதும், அவன் நிலைகலங்கிப் போனான். காரணம் : சுவரில் வரைப்பட்டிருந்த பெண் சித்திரத்திற்கு அடியில் 'மேகலை' என்றும்,

அதற்குப் பக்கத்தில் 'குலோத்துங்கன்' என்றும் பெயர்கள் பளிச்சிட்டன. சற்று முன் தோன்றிய பழமொழி அவன் நெஞ்சுக்குள் தீ மூட்டியது. 'வேலிக்கு முள் போடப் போக, அது காலையே குத்தப் பார்க்குதா ?'—பார்க்கிறேன் !'—பற்களைக் கடித்தான். மேகலைக்கு அதைக் காண்பிக்க வேண்டும் போலத் தோன்றியது. கை தட்டி, பெயரிட்டு அழைத்தான். ஒட்டியிருந்த மணலைத் தட்டி எறிந்தபின் சிட்டெனப் பறந்து வந்தாள். பட்டுக் கன்னங்கள் 'அத்தான்' என்று விளித்தன. மாம்பழக் கதுப்புக்களின் தேனூறும் ருசி அவனுடைய இதழ்களில் நீரை வரவழைத்தது. போதை மண்டைக்கு ஏறியது. கிறக்கம் !

"என்ன, அத்தான்...புறப்படலாமா ?"

"ஓ ...!"

மாமல்லனின் உடம்பில் பெருகிய வியர்வைத் துடைக்கும் பொறுப்பு மேகலையை அண்டியது,

ஒழுக்கெண்ணேசுவரர் ஆலயத்தைத் தரிசித்து விட்டு, பிரயாண விடுதிக்கு மாமல்லனும் மேகலையும் வந்து சேர்ந்தார்கள். 'அம்பாஸடர்' அவர்களை எதிர் பார்த்திருந்தது.

"ஹலோ, மாமல்லன் !!' என்ற அழைப்புக் கேட்டது, அவன் ஏறிட்டுப் பார்த்தான். 'பிளிமத்' பட்டொளி வீசி நின்றது. காரின் கதவை காரோட்டி திறந்துவிட, திருமாறன் வெளியே வந்து நின்றதை மாமல்லன் கண்டான். அவனுக்கு வியப்பு மேலிட்டது ; திகைப்பு பின் தங்கியது.

"மாமல்லன், நான் ஏன் உங்களுடன் வரவில்லை. தெரியுமா ?... "

"சொல்; மாறன் !"

"பூஜை வேளையில் புகுவதற்குக் கரடிக்கு வேலை இருக்கக் கூடாதல்லவா ?"

"நாங்கள் பூசை செய்வதா யிருந்தால்தானே, நீ

கரடியாவதைப் பற்றியோ, அங்கே நுழைவதைப் பற்றியோ யோசனை பண்ணியிருக்க முடியும்...!''

"என்னவோ, உங்கள் தனிமையில் குறுக்கிட நான் விரும்பவில்லை. ஆங்கிலேயர்களுக்குத் தேநிலவுப் பயணத்துக்கு எத்தனையோ பாதைகள் வழி திறந்து கிடக்குமாம்! அதுபோல அமைய நம் தமிழ்ச் சாதி அனுமதிக்காது போனாலும், இம்மாதிரிப் பயணங்கள் வாழ்க்கைப் பயணத்துக்குரொம்பவும் உதவும். வாழ்வின் பங்குதாரர்கள் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளவும் பயன்படும்...'' என்று பேசினான் திருமாறன்.

மாமல்லனின் சித்தம் குலோத்துங்கன் வரைந்து சென்றிருந்த சித்திரத்துக்கு ஓடியது. தலை கனத்தது. நண்பனை அழைத்துக்கொண்டு விடுதி அறைக்குள் பிரவேசித்தான். பிரியாணிப் பொட்டலங்கள் பிரிந்தன. பிளாஸ்கிலிருந்து காப்பி வழிந்தது. காப்பியைச் சுவைத்துக் கொண்டிருந்த மேகலை, இருந்தாற்போல மயங்கித் தரையில் சாய்ந்தாள்.

ஆற்றங்கரைப் பிள்ளையாரைப் போல அப்படியே சமைந்து விட்டான் மாமல்லன்.

டிரைவர் கொண்டு வந்த தண்ணீரை வாங்கி மேகலையின் முகத்தில் திருமாறன் தெளித்தான். நூறு விநாடிகளுக்குப் பிற்பட்டு, டாக்டர் வந்தார். மேகலை கண் திறந்தாள். திறந்ததும், முதன் முதலில், "அத்தான்!'' என்று கூவினாள்.

மாமல்லனோ ஆடாமல், அசையாமல் கண்ணீர் வடித்துக் கொண்டேயிருந்தான்.

"அத்தான், எனக்கு ஒன்றும் இல்லை. அழாதீர்கள், அத்தான்!'' என்ற சொற்கள் செங்கற்பட்டு ராஜா பாட்டையில் எதிரொலித்துக் கொண்டிருந்தன!

# 16

**'மனத்திண்மை யுள்ளாரை நீ செய்வது மொன்றுண்டோ?—மாயையே!'**

தமிழ் நாட்டின் நலைநகரம் மாமல்ல புரத்துக்கு நன்றி தெரிவித்தது; திருமாறனின் தூய அன்புக்கும் பண்புக்கும் வணக்கம் செலுத்தினான் மாமல்லன். 'தெய்வமே, உன் கருணையே கருணை. இல்லையானால் என்னுடைய ஆசை அத்தானின் கண்ணீரை யாரால் துடைத்தெடுக்க முடியும்?...' என்று மனத்தினுள் எண்ணமிட்டாள் மேகலை.

லிங்கிச்செட்டித் தெருவில் அவர்களின் வீட்டுக்கு முன்பாக கார் நிறுத்தப்பட்டதும், மாமல்லன் தன் மனைவியைத் தோளைப் பற்றிய வண்ணம் காரிலிருந்து வெளியே அழைத்து வந்து, வீட்டின் உள்ளே கூட்டிச் சென்றான். மேகலையின் வலதுகை கணவனின் தோள்ப் பகுதியிலிருந்து விடுபட்டது. உணர்ச்சியற்ற மரக் கட்டை போன்றிருந்தான் மாமல்லன்.

கோசலை அம்மாளுக்குப் பதட்டம் கண்டது. மருமகள் முகத்தில் தேக்கி வைத்திருந்த கலவரம் அவளுக்கு அச்சத்தை உண்டாக்கியது; நெற்றி மீது கை வைத்துப் பார்த்தாள்; உடம்பைத் தொட்டுப் பார்த்தாள்.

இக் காட்சியைக் கண்ட திருமாறன் விரைந்துவந்து, "அம்மா, உங்க மடியிலே ஒரு பாப்பா தவழப் போகுது!..." என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினான். இதயக் கால்வாயை வெட்டிப் பாய்ந்து வந்த அன்பு வெள்ளம் அவனுடைய கண் வழியே வழிந்தது.

"நிஜமாகவா?..." என்று வினா எழுப்பிய அடுத்த அரைக் கணத்தில், புறப்படச் செய்த கேள்வியை சந்தேகப் புழுதியின் காலடியினின்று விடுவித்து, உதித்த ஐயத்துக்கு உரிய பதிலையும் உதிர்த்து விட்டு, மருமகளை

ஏறிட்டு நோக்கினுள் மாமியார். விண்ணை விளையாடும் பூமியாக்கி, மண்ணைக் கைகொட்டி அனுபவிக்கும் ஆதரவு நிலமாகக் கருதி, துள்ளியோடும் மின்னலைப் பார்த்து மேகலை பலமுறை மகிழ்ந்தது உண்டு. அந்த இனிய உணர்வு இப்போது அவள் நெஞ்சில் நெளிந்தது. நெஞ்சு புடைத்தது. வழிந்தோடிய பாலப் புனலிடை பேசும் பொற் சித்திரம் ஒன்று தன்னை அறிமுகப்படுத்தி நின்றது. அடிவயிற்றைத் தடவினுள். 'அம்மா' என்ற இன்பக்குரல் சொர்க்கம் நீங்கிய நிறைவுடன் பெரிதாகக் கேட்டது. 'நான் தாயாகப் போகிறேன்...!'

மேகலை பாக்கியவதி!

தான் அடைந்த பேற்றுக்குரியவனை-தன் பாக்கியத்துக்கு விதை தூவியவனை ஆவல் குலுங்கப் பார்வையிட்டாள் மேகலை.

வான் முகட்டுக்கு ஓடிய கண்ணேட்டம் மண் மேட்டுக்கு நாடியுங் கூட மனம் அடங்காமற் போகவே, சூன்யப் பெரு வெளியில் கண் இரண்டையும் காணிக்கை செலுத்தியிருந்தான் மாமல்லன். 'அத்தான்!' என்னும் உரிமைக் குரல் கேட்டுத் திரும்பினுன். முகம் கறுத்திருந்தது; கண்கள் நனைந்திருந்தன. மேகலை அழைப்பதைக் கேட்டவுடன், அவள் அறியா வண்ணம் ஈரத்தைப் போக்கினுன்; இதயத்தின் ஈரத்தைச் சேர்த்தல்லவே...?

"நான்...!"

"நீ...!"

'நான்'; 'நீ' என்கிற வார்த்தைகளுக்குத் துணை நின்று முடிவு பெருதபுள்ளிகள் சில உண்டாக்கிக் காட்டிக் கொண்டிருந்த பொருளை அவளும் அறிந்திருந்தாள்; அவனுக்கும் அது புரிந்திருந்தது. அந்த இதயப் பரிவர்த்தனைக்கு அடையாளமாக இருஜோடி உதடுகள் மென்னகையையும் இளமுறுவலையும் கோடிட்டுக் காட்டின.

திருமாறன் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்றுன். மாமல்லன் 'சரி' யென்று சொல்லி அவனை வழியனுப்பி

வைக்கக் காருக்கு அருகில் சென்றான். திருமாறன் கை கூப்பி விடை பெற்ற சமயத்தில், புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டை அவனிடம் கொடுத்தான் மாமல்லன். ''தேவைப்படும் போது, நானே கேட்டு வாங்கிக் கொள் வேன், மாறன்!'' என்றான்.

மாமல்லனை இமை மூடாமல் பார்த்துக் கொண் டிருந்தான் திருமாறன். காரின் உள்ளே பரவியிருந்த ஒளிக்கதிர்கள் மாமல்லனின் கண்களைத் தாக்கின. ''மாமல்லன், இந்தப் பணத்தை நீங்கள் வாங்கிக் கொண் டால்தான், நான் நிம்மதியாகத் தூங்குவேன்?''— திருமாறன்.

''மாறன், நான் அமைதியாக உறங்கவேண்டுமானால், இந்தப்பணம் உங்கள் வசம் இருப்பதுதான் நல்லது!''

மறுமொழி என்ன அறிவிப்பதென்று வகை தெரி யாதவனாக திருமாறன் திண்டாடினான், ''ம்...உங்கள் மனைவியை பத்திரமாகக் கவனித்துக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் எனக்கு செய்தி அனுப்புங்கள். போன் நம்பர் இதில் உள்ளது,'' என்று கூறி அச்சிட்ட துண்டுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தான்,

கார் புறப்படத் துடித்தது. ''மாமல்லன், வருகிற திங்கள்கிழமை ஷூட்டிங் பார்க்க வரவேண்டும். மேகலை யையும் கட்டாயம் அழைத்து வாருங்கள், மறந்து விடக் கூடாது,'' என்ற நினைவுக் கடிதத்தையும் எழுதிச் சமர்ப் பிக்க மறக்கவில்லை திருமாறன்.

கூப்பிய கரங்கள் நான்கும் இருட்டில் பிரிந்தன.

பூதலம் இருட்டறையில் ஊஞ்சலாடித் தவித்தது.

ஒளி ஏற்றும் தீபமாக நிகழ்ச்சிகள் சில மாமல்ல னின் நெஞ்சத் தளத்தில் சுடர் சிந்திக் கொண்டிருந்தன. ஆனால், பரந்த வெளிச்சத்தைப் பறந்தோடச் செய்து விட்டன பல சம்பவங்கள். மிஞ்சியது இங்கேயும் இருள் தானே?...

இருளும் ஒளியும் கலவை சேர்ந்தது உலகம்; மெய்ப்பாடும் மாயையும் இணைந்தது மனித வாழ்வு! இவ்

விரண்டுக்கும் மத்தியில் ஊடும் பாவும் போல இன்பமும் துன்பமும் உயிர் வாழ்கின்றன ; ஆசையும் பாசமும் ஆதரவு கோரி அலேகின்றன ; போட்டிம் பொருமையும் சோதனே கேட்டுப் பூசல் விளே விக்கின்றன ; ஐயமும் உண்மையும் மல்லுக்கு நின்று மனித மனங்களே காவு வேண்டிப் பழி கிடக்கின்றன. இப்படிப்பட்ட விந்தைமிகு சுற்றுச் சார்பை நுனி விரலிஞல் பிடித்துக் கொண்டும், பிடித்த பிடியை விட்டு நழுவி விழுந்து விடாமல் சமனம் செய்து முன்னேறியும்தான் "மனிதன், ஆண்—பெண் திசையில் பிரிந்தும் சேர்ந்தும் காலத்தை ஓட்டவேண்டிய வன் ஆகின்ருன். வேடிக்கையானவன் மனிதன் விசித் திரமான பிழைப்பு ! வேண்டாத சிந்தனேக்கு விடியாத தலேயெழுத்து போலிருக்கிறது ...!

மாமல்லன் கண்களேத்துடைத்து விட்டு நிமிர்ந்து உட்காரலாஞன். சாமம். மனப்பளு மண்டையில் குந்தி யது. ஆஞல் ஒரு விசேஷம் என்ன வென்ருல், தலேப் பளுவும் இறங்கவில்லே ; மனச் சுமையும் குறையவில்லே. தலேமயிரைப்பிய்த்துக் கொண்டான் அவன். அவ னுடைய இத்தகைய போராட்டத்துக்குப் பயந்து அமைதி யின் இதயம் திறந்து விடுமா, என்ன ?

மணமாலே இருந்தது, வெள்ளேச் சுவரில், மலர் மாலே கிடந்தது. பட்டு மெத்தையில் ! காதல் பூண்ட உள்ளங்களே கனவுலகில் சேர்த்து வைத்த பெருமை பூச்சரத்துக்கு. எண்ணம்போல தன் மணம் முழுதும் உரிய இடத்தில் அடைபட்டு அனுபவிக்கப்பட்டு வரு கின்றதே யென்பது பேசும் பூமாலேயின் கருத்து.

மாமல்லனே மையப் புள்ளியில் இருக்கச்செய்து விட்டு, இரு கோடியிலும் அமைந்திருந்த அந்தத் திரு மணமாலேயும் இந்த எழில் மலர் மாலேயும் சேகரமாகச் சேர்ந்து அவனேப் பார்த்து எள்ளி நகையாடின. அவற்றின் நகைப்பொலியில் பயம் மலிந்த பேரதிர்ச்சிக் குரல் ஒன்றின் எதிரோசையைத்தான் அவஞல் கேட்க முடிந்தது. அந்தச் சிரிப்பின் சித்திரத்தில் அவன் கண்ட உருவம் : குலோத்துங்கன் !

மூச்சு ஒடுங்கி விடாதா என்று ஏங்கிய நிலேயில்,

உயிரோட்டம் அடங்கி விட்டது போன்ற நிலை அவனுக்கு உண்டாயிற்று. கண் புதைத்துச் சிலையானான். காரிருளும் காரிகையின் வடிவும் எங்கோ கைதட்டிக் கூப்பிட்டன. விழி திறந்த வழியில் அழகு ரோஜாவாக மேகலை கண் வளர்ந்து கொண்டிருந்தாள். ரோஜாப் பூவின் செந்நிறம் அவள் உதடுகளில் தஞ்சமடைந்தது: மூடிய அவளது கண்களின் லாவண்யம் ரோஜாவின் மலர்ச்சியில் கலந்தது. மணத்தில் போதை ஏறியது; நெடி அளவு கடந்தது; உடம்பில் கதகதப்பு மிஞ்சியது; எழுந்தான்; சோம்பல் முறித்தான்; முகத்தைக் கழுவித் துடைத்தான்; முகத்திற்குப் பூசப்படும் வாசனைப் பொடி கொஞ்சம் செலவானது; நடந்தான். நிலைப் படிக்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்தது மேஜை; அதன் மீதிருந்த வெள்ளைக் காகிதமும் கறுப்புப் பேனாவும் அவன் கருத்தைக் கவர முயன்று தோல்வியைப் பரிசாகப் பெற்றன; நடையைத் தொடர்ந்தான். பூலோக சொர்க்கத்தின் நுழை வாயிலில் அடியெடுத்து வைத்தான்; உதடுகள் சிரிப்பைக் காட்டின; உள்ளம் புதிய துடிப்பை எடுத்துரைத்தது. குனிந்தான்; "மேகலை!" என்று சன்னமான தொனியில் விளித்தான், மாமல்லன்.

புரண்டு படுத்த அவள் மருண்டு விழித்தாள்; கொண்டவனைக் கண்டதும் மேலாடையைச் சீர்படுத்திக் கொண்டு விசை சேர்த்து எழுந்து உட்கார்ந்தாள்; பிறகு தான் கணவனின் கண்களைப் பார்த்தாள்; புரிந்தது செய்தி. வலது கையை "ஊஹூம், இன்று வேண்டாம்!" என்ற பாவனையில் அசைத்தாள். கொட்டாவி பிரித்தவள் கண்களை விழித்துப் பார்த்தபோது, அங்கே மாமல்லன் காணப்படவில்லை. பெருமூச்சும் படுக்கையும் சதமென எண்ணினாள் அவள்.

அணை கடந்த துயரமெனும் வெள்ளம் விரக்தியின் கண் வழியாகச் சிந்தியும்கூட, மனத்தின் சலனம் மாறவில்லை. நெஞ்சில் இறுத்திய வெறிப் பசி நினைவில் உறுத்திய வண்ணம் இருந்தது. மாமல்லன் திரும்பி வழி நெடுக நடந்தான். இரவு மங்கையின் காலங்கடந்த மௌன சங்கீதம் அவனுள் எழுந்த தாபத்தை அணைக்

காமல் அணைத்துக் கொண்டது. சென்றபோது அசட்டை செய்யப்பட காகிதமும் பேனாவும் இப்போது அவன் பார்வைக்கு இலக்காயின : கையிலெடுத்தான் இரண்டையும். மனம் தாள் ஆனது ; எழுதும் கோலாயிற்று மனச்சான்று.

கருவும் உருவும் ;

"அன்புள்ள மேகலை,

அன்பு மழுங்காத பிணைப்போடுதானே நான் இப்போது அழைக்கிறேன் ? இந்தத் துணுக்கைக் கிறுக்கும் நானே உன்னிடம் கேள்வியை முன் வைக்கிறேனே என்றுதானே நீ நினைக்கிருய் ? என்ன செய்வேன் ?... கிறுக்காகி விட்டது இதயம். தட்டிக் கேட்காதே !—நான் உன்னிலிருந்து விடுதலை பெறப் போகிறேன். பந்த பாசத்தின் முன் பிறப்புக் கதை நம் இணைப்புக்கு இன்றுடன் நெய்ப்பந்தம் பிடித்து விடட்டும். நம்முடைய கதை உண்மையிலேயே 'கதை'யாகி விடட்டும்...!

இப்படிக்கு
மாமல்லன்."

எழுதியதை நான்காக மடித்து மேஜை அறைக்குள் திணித்தான் அவன் ; மூடிவிட்டான். பிறகு, மனப்பளு இறங்குமட்டும் மாளாமல் கண்ணீர் பெருக்கினுன். வலித்த இமை வட்டங்களில் உறக்கம் ஓடிப்பிடிக்கும் விளையாட்டைப் பழகத் தொடங்கியது.

அது தருணம், மேகலை தோன்றினுள் ; நறுமணம் நாசியை அடைத்தது. கைதொட்டாள் தேட்டமுடன். திமிர்ந்தான். உலகம் அவனுக்குக் கண்ணும்பூச்சி காட்டியது.

மலர்க்கணை மைந்தன் மன்மதனுக்கே உரித்தான ரதியின் சிலாரூபம் ஒன்று உருவாக்கப்பட்டது !

'காதல் வாழ்கிறது !' என்னும் மகுடம் புனைந்த திரையோவியம் 'குபேரபுரி படப்பிடிப்பு நிலைய'த்தில்

வளர்ந்து கொண்டிருந்தது. ஒளிக் கருவிகள் ஓசை படாமல் செயலாற்றின; மேற்பார்வை செய்து பயிற்சி யளித்தவர் காது செவிடுபட இரைந்து தீர்த்தார்.

மாமல்லன் மாத்திரமல்ல, அவன் துணைவியும் படப் பிடிப்பைப் பார்த்தாள்.

காதலித்த ஜோடி ஒன்று ஆணும் பெண்ணும் இடம் மாறிப் புகுகிறார்கள். பெண்ணுக்கு யாரோ ஒருவன் மங்கல நாண் பூட்டுகிறான். பின்னையொரு நாளிலே முன்னம் உள்ளம் கவர்ந்த காதலனை பேதை நல்லாள் சந்திக்கும்படி நேரிடுகிறது. கணவன் இக் காட்சியைக் காணுகிறான். இருவரையும் மனம்விட்டுப் பேசுமாறு சொல்லிவிட்டு அவன் வெளியில் புறப்பட்டுச் செல்கிறான். முடிவுபெற வேண்டிய பூர்த்தியடையாக் காதலின் கதைக்கு வாழ்வு அளிக்கப்படுகின்றது. காதல் வாழ்கின்றது !

படப் பிடிப்பில் அன்றையப் பகுதி முடிந்தது.

திருமாறன் அந்தத் தம்பதியை வீட்டுக்குக் கூட்டி யனுப்பினான். வீடு வந்த மேகலை மிகவும் கலகலப்பாக இருந்தாள். ஆனால், மாமல்லனே முகத்தில் களையின்றிக் காணப்பட்டான். படப்பிடிப்பில், கணவன் பாத்திரம் ஏற்ற நடிகர் சொன்ன அந்த வார்த்தைகள் இன்னமும் நினைவில் நெரித்துக்கொண்டிருந்தன. 'காதலை உண ராதவர்கள் ஏற்படுத்தும் முடிவுக்குப் பலியாகும் உள்ளங் களை நான் அறிவேன். நீ என் உயிர்த் துணைவி. நான் உனக்கு உரிமை கொடுக்கிறேன். நீ காதலித்த இளைஞனை இன்று சந்தித்திருக்கின்றாய்; எனவே, மனம் விட்டு அவருடன் உரையாட நான் சம்மதம் அளிக் கிறேன். மனத்தில் உறுதிப் பண்பு இருக்கும் வரையில் எந்த மாயையும் என் கண்களைக் கட்ட முடியாது. நான் காதலித்த பெண்ணைக் காண நேர்ந்தால், அவளோடு அன்புடன் பேசி மகிழ்வேனல்லவா? அது மாதிரி தானே உனக்கும் மனம் துடிக்கும்? பார்த்துப் பேசு வதில் தவறு ஏதுமே கிடையாது, மாலினி. பிறந்த காதலை கோடு கிழித்து அதனுள்ளே உலவச் செய்து வாழ விடுவதுதான் மனித தர்மம் ஆனால், தமிழ்ப்

பண்பை மட்டும் நீங்கள் இருவரும் மறந்துபோய் விடாதீர்கள். உன் நண்பருக்குக் காப்பிப் பலகாரம் கொடு. நான் திரும்பி வந்ததும் எல்லோரும் ஒன்ருகவே உண வருந்துவோம்!' என்ற பேச்சுக் கதம்பம் மாமல்லனின் ரத்தத்தை ஒன்று சேர்த்துச் சுண்டச் செய்து. தீ அழலை இருதயத்தில் ஏந்தி வைத்தவாறு துடியாய்த் துடித்தான். பெண் சிற்பத்தின் பேசும் சக்தியைப் பறித்துக்கொண்டு தன்னுடைய தனி அறைக்கு ஓடிஞன்; மேஜைமீதிருந்த நெருப்புப்பட்ட கறுப்புப் பகுதி அவன் நெஞ்சத்துத் தீயை ஊதியணைக்க எத்தனம் செய்தது. அன்ெருரு நாள் நள்ளிரவு கழிந்து மேகலை முகம் சுளித்தபோழ்து எழுதப்பட்ட அக்கடிதம், அவளுடைய சிரிப்பை மாமல்லனின் கட்புலன் உணர்ந்த கணத்திலேயே தீக்கரையான சம்பவம் அது!

இரவின் துடிப்பில் இரு இதயங்களின் துடிப்பும் இரண்டறக் கலந்தது!

கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் புல்லுணவு தந்து போற்றும் தயாளன் இருக்கும்வரை நாட்கள் ஓடக் கேட்க வேண்டியதில்லை.

ஒன்றுமே இடைவேளையில் நடைபெருததாகவே எண்ணி, கடந்ததை மறந்து செல்லப் பழக்கிக்கொண்டான் மாமல்லன். மேகலையின் மேனித் திரையில் தாய்மையின் மெருகு ஏற்றிக்கொண்டிருந்த லாவண்யத்தை கணத்துக்குக் கணம் ரசித்துக் கொண்டிருந்தான் அவன். மாயையை வென்று மனத் திண்மையைப் பலப்புடுத்திக் கொள்ளவே முயன்ருன். சென்னையில் பார்க்கவேண்டிய இடங்களை யெல்லாம் மேகலைக்குக் காண்பித்தான். நாடகம் சினிமா, நடனம் சங்கீதம் போன்ற நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை அனைத்தையும் மேகலை பார்த்துவிட்டாள் என்பதுவே சரி.

அலுவலகத்தில் இயந்திரமாகி, வீட்டுக்கு மனிதனுக உருக்கொண்டு வந்து சேர்ந்த மாமல்லனிடம் கடிதமொன்றை நீட்டிஞள் மேகலை. யாருடைய கடிதத்தை அல்லும் பகலும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தானே,

அது அவன் எதிர்பாராத நேரம் நோக்கி வந்திருந்தது. சிந்தாமணி எழுதியிருந்தாள். முழு விலாசத்தையும் கொடுத்திருந்தாள். அடக்கத்தைப் படிப்பதற்குள், அவன் திருமாறனுக்கு அளித்திருந்த உறுதிமொழி நினைவைச் சொடுக்கியது. திருமுகம் தந்த விளக்கம்: குலோத்துங்கனுக்கு குணமாகி விட்டதாம்; ஆனால், திடுதிப்பென்று அவன் திரும்பவும் எங்கோ சென்று விட்டானும். அனேகமாக சென்னைக்குத்தான் வந்திருக்க வேண்டுமென்பது அவள் அபிப்பிராயம். கண்களில் தட்டுப்பட்டால் அழைத்து வந்து வீட்டில் வைத்துக் கொள்ளும்படி மாமல்லனை வேண்டியிருந்தாள். அவளும் இங்கே வந்து விடுவாளாம்!

விடி வெள்ளி உதித்த வேளை. மனத்தில் அமைதியின்றி பழைய சம்பவங்களை நினைத்துக் குழம்பிய மாமல்லன் கனவொன்று கண்டான். மேகலையுடன் குலோத்துங்கன் ஒரே படுக்கையில் இருப்பதாக அமைந்திருந்தது அக்கனவு. விழுந்தடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். உயிர்ச் சக்தியே அற்றுப்போய் விட்டது போன்ற உணர்வில் இருந்தவனை காலைப்பொழுது மட்டுந்தானா வரவேற்றது?—அல்ல; குலோத்துங்கனும் சேர்ந்தல்லவா வரவேற்புரை மொழிந்தான்!

## 17

> 'பல்வகை மாண்பினிடையே —கொஞ்சம்
> பயித்தியம் அடிக்கடி தோன்றுவதுண்டு!'

குலோத்துங்கன் புத்தம் புதிய உரு புனைந்து தோன்றினான்; அவ்வாறு மாமல்லன் கருத்துத் தயாரித்தான்.

"வணக்கம்!" என்றான் குலோத்துங்கன்.

"வணக்கம்!" என்று பதில் சொல்லி, படுக்கையி லிருந்து எழுந்தான் மாமல்லன்.

குலோத்துங்கனை அமருமாறு வேண்டினான்; இருக்கை ஒன்றையும் சுட்டினான் இல்லத்துத் தலைவன்.

வெட்ட வெளியைச் சுற்றிச் சுற்றித் திரியும் ஒற் றைத் தனிப் பறவையைப்போல, குலோத்துங்கனின் விழிப்பார்வை வழி நடந்து, வழி மறித்து, வழி தவறி அலைந்து அல்லாடியது.

"வணக்கம்!"

காற்றுக்கு அழுத்தச் சக்தி அதிகம் என்பார்கள். அந்தக் காற்றினால், 'வணக்கம்' என்ற சொல்லை அழுத்த முடியவில்லை.

மாமல்லன் ஏறிட்டுப் பார்த்தான்; குலோத்துங்கன் பார்வையில் தீட்சண்யத்தைப் பொருத்தினான்.

மேகலை நின்று கொண்டிருந்தாள். கையில் காப்பி; கைவிரல்களில் அஞ்சலின் முத்திரை; விரல் நகங்கள் அணைத்திருந்த செந்நிறத்தில் புதியதொரு பாவனை.

இட்ட மூன்று முடிச்சுக்களுக்குப் பாத்தியதை பூண்டவன் மாமல்லன் அல்லவா?—அவன் அவளை நோக்கினான். ஏந்திய மூன்று முடிச்சுக்களுக்கு உரியவள் ஆயிற்றே மேகலை?—அவள் தன் கணவன் உருவத்தை அலங்கமலங்கப் பார்த்தாள்.

நஞ்சைக் குடித்தமாதிரி மாமல்லனுக்கு நெஞ்சு வலித்தது. விடியாத இராப்பொழுதை எட்டி உதைத்து, விடிந்து கொண்டிருந்த உதயத்தின் மலர்ச்சியை வர வேற்றுக் கொண்டிருக்கும்போது, அவன் கண்ட அந்தக் கனவை—அந்தக் கனவு எழுதிச் சித்தரித்திருந்த மேகலை—குலோத்துங்கன் இணையை—அந்த இணை யைத் தாங்கியவாறு கிடந்த பஞ்சணைப் பட்டு மெத் தையை அவன் எண்ணினான்; யார்?—மாமல்லன் எண்ணினான். கண்ட இடத்தில் கிடைத்த புல்லை விழுங் கும் பசு, ஓய்வு கண்ட நிழலில், புசித்ததை. தொண்டைக்

குக் கொணர்ந்து அசை போடுமாமே, அப்படித்தான் மாமல்லனின் நிலையும் நினைவும் இருந்தனவோ?

ஏங்கிய உள்ளம் நீதிமன்றமாகி, உறங்காத மனச் சான்று நீதிபதியாகி, தவறு சுமந்த தையல் மேகலை கூண்டுக் கைதியாகி புதிய உலகம் சமைந்தது. விசித் திரம் நிறைந்த காட்சியொன்று மாமல்லனுள் ஏடு விரிந் தது. விந்தையை கருக்கொண்ட பேதைமைச் சிரிப்பின் அலைகள் நொந்த மாமல்லனின் சிந்தையைப் பலிபீட மாக்கிக் கொண்டன. பலிபீடமா? இல்லை, கொலு பீடமா?... குலோத்துங்கன் ஏன் சிரித்தான்? தொலை யட்டும்; அது அவனுடன் கூடப்பிறந்த வியாதி! ஏன் அவன் இங்கே வந்தான்?...

'குலோத்துங்கன், ஏன் இங்கே வந்தீர்கள்? வெறி பிடித்த வெஞ்சினத்துடன், திறந்த வாய்மூடாமல், இரை தேடி, இறைவனின் துணை நாடாது, சித்தத்தில் அழித் தெழுதாச் சித்திரமெனத் தோன்றிய சித்திரப் பாவை யினால் என் சித்தம் குலைந்து, என் உடல் சீரழிந்து, எனக்கு உடையவளால் என் ஆவி அடங்க வாய்ப்புத் தராமல், என்னை நானே அழித்துக் கொண்டிருக்கும் இத்தகைய அவல நிலையிலே—பயம் கக்கும் சூழலிலே நீர் ஏன் வந்தீர்?...பேசாத பதுமையான நீங்கள் என் றைக்கு இதழ் விலக்கப் போகிறீர்கள்? வெண்ணில விலே மையிருட்டு சங்கமம் ஆகிவிடும் தருணத்திலா? அல்லது, வீசுந்தென்றல் விசை மிகுந்த சூறுவளியைக் கட்டிப் பிடித்து ஐக்கியமான பின்னரா?...ஆண்டவன் அருளிய மனிதத் தன்மையை அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிடும் வள்ளலாக ஆக நான் விரும்பவில்லை; ஆகவே, என்னுள் நான் உழுது பயிரிட்டுப் பண்படுத் திக் கொண்டிருக்கும் அந்த மனிதப் பண்புக்குச் சோதனையாளராக நீர் மாறி விடுமுன், இங்கிருந்து போய்விடும்? உடன் பிறவாச் சோதரி சிந்தாமணியின் அணுகிய நோக்கிலே என்னைத் தவறிழைத்தவனாக ஆக்கி விட்டுத்தான் இங்கிருந்து விடைபெற்றுப் புறப் படப் போகின்றீரோ, என்னவோ?...எனையாளும் ஈசனே! உன் முடிவை நான் அறியலாகாதா?

மேகலை இருவருக்கும் காப்பி கொண்டு வந்து வைத்தாள்; அருந்துமாறு கோரினாள். கொண்டவனிடம் காட்டப்பட்ட குழைவு, ஒண்டவந்தவனிடமும் மாற்றுக் குறையாமல் விலை போனது.

அமைதியைப் பறித்து இடுப்பில் செருகிக்கொண்ட 'கனா' நினைவுப் புண்ணை கோலிட்டு வேதனைக்குள்ளாக்கியது.

தாய்மை மெருகு ஏறிய அவளுடைய மேனியில் அடங்கிக் கிடக்க ஒப்பாத பட்டுப் புடைவை சரிந்து விழுந்துகொண்டே யிருந்தது. மாமல்லனின் கண்கள் இரண்டும் அவளை விழுங்கி விடுவனபோலிருந்தன. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நினைத்துக் கொண்ட மேகலைக்குரிய கருவண்டு ஜோடி திசை திரும்பிச் சுழல எத்தனம் செய்தது.

"காப்பி குடிக்கவில்லையே, மிஸ்டர் மாமல்லன்!"— குலோத்துங்கனுக்குப் பேசத் தெரியும்!

தன் கடமையை நிறைவேற்றிவிட்டு, கணக்காக கால்மேல் கால் போட்டு அமர்ந்தபடி சிகரெட்டை எடுத்துப் பற்ற வைக்கத் தொடங்கினான் குலோத்துங்கன்.

வேடிக்கை பார்த்தாள் மேகலை.

எங்கோ இட்ட தீ எங்கோ பற்றி எறியத் தொடங்கிற்று; அவன் துடித்தான். அவன் எனில், குலோத்துங்கன் விலக்கு!

"நீங்கள் குளித்து விடலாமே? வெந்நீர் போட்டிருக்கிறேன். இன்றைக்கு அநேகமாக சிந்தாமணி வந்து விடுவார்கள்!" என்றாள் மேகலை.

மாமல்லன் தேள் கொட்டினாற்போன்று துடித்தான்.

புகை அடங்கியது. எங்கே?—மாமல்லன் வகையில் அல்லவே!

நெற்றிச் சுருக்கங்கள் விரிந்து விலக மேகலையை குலோத்துங்கன் உன்னிப்பாகக் கவனித்தான்.

"நல்லதுங்க!"

கட்டிலருகே வந்து, "அத்தான், உங்களுக்கு அலுப்பாக இருக்குமில்லையா ?...முதலில் காப்பியைக் குடியுங்க : பிறகு பல் விளக்கி பலகாரம் சாப்பிட்டுவிட்டு ஒரு மூச்சு தூங்குங்கள். அப்பால் குளித்துக் கொள்ளலாம். இன்னைக்குத்தான் உங்களுக்கு லீவாச்சே ?" என்று யோசனை கூறினாள் மேகலை.

எவ்விதமான சலனமும் இல்லாமல் எப்படி அவ்வளவு அமைதியாகப் பேச மேகலையால் முடிகிறது ? ஒருகால், எதுவும் இடை வெளியில் நடக்கவில்லையோ ?—"ஈஸ்வரா !"

அப்போது மாமல்லனின் மனத்தில் பயங்கரமான முடிவொன்று முளைத்தது : "ம்...!"

'நான் புது மாமல்லன் ; ஆமாம், நான் நூதனமான மாமல்லன் !...விந்தை நிகழ்ச்சிகள் கக்கிய நச்சுப் பொய்கையில் அழுந்தி எழுந்த என் உள்ளம் என்னுடைய உடலையும் உருமாற்றி விட்டிருக்கிறது. 'மனிதனின் மாற்றத்துக்குக் காரணம், அவன் அமையும் பகைப் புலன் அமைப்பு' என விளக்கவுரை தந்து மனிதனுக்குத் தற்காப்புக் கருவியாக அவதாரம் புரியும் அதே மணி மொழி என்னையும் என் சடலத்தையும், மனத்தையும் மனத்தின் மனச்சான்றையும் மாறுதல் கொள்ளப் பணித்துவிட்டன ; என்னுள் இயங்கி, என்னை இயக்கும் உணர்வுகள் மாற்றம் பெற்றன. நான் புது மாமல்லன் ஆனேன் ; ஆக்கப்பட்டேன் !'

இரவு வந்தது.

முகூர்த்தப் புடவை முத்துச் சிரிப்புச் சிந்த, மோகனப் புன்னகை மோடி கிறுக்க, உடன் வரமறுத்த நிலவுப் பாவைக்குத் தாக்கீது அனுப்பிய கோலத்தை சிமிழ் உதடுகள் ஏந்த, ஒன்று இரண்டாகி அந்த இரண்டையும் ஒன்றாக்கி, அந்த ஒன்றில் ஒன்றாக ஒன்றி உருப் பெற்றுக் கொண்டிருந்த கருப்பை உயிர் புத்துணர்ச்சி அருள, அவள் வந்தாள். அவள்—மேகலை !

குனிந்த தலையுடனும் நிலை குத்திய பார்வையுடனும் கைகளில் முகத்தைச் சுமந்தவாறு மோனத்தவம்

இயற்றி, கதைக் கருவுக்காக அகில உலகத்தையுமே தன் பேனுவுக்கு அடியில் போட்டு மிதித்துக்கொண்டு அலட்சியத்துடன் வீற்றிருக்கும் இரண்டாவது பிரம்மா பட்டம் பெற்றவனைப் போலவேதான் அப்பொழுது மாமல்லனும் காணப்பட்டான்.

மெட்டி ஒலி 'அத்தான்' என்றது; மேகலைச் சதங்கை 'அன்பரே' என நவின்றது; பட்டாடை 'பதியே !' என உறவு முறை கொண்டாடிற்று.

பல்வகையான பெருமைகளுக்கு மத்தியில் பைத்தியம் தோன்றுமாம் தந்தை வடிவெடுக்கும் பாரதியின் கண்ணனுக்கு !

மேகலையைக் கொண்டவன் தலை நிமிர்ந்தான்; குவலயத்தின் பிடியில் அகப்பட்டுச் சுற்றிய அவன், பூகோள உருண்டையைக் கைப்பிடிக்குள் அடக்கிக் கொண்ட அம்மடங்கு தொனிக்கச் சிரித்தான். கோதையைக் கண்டவுடன், நமட்டுச் சிரிப்பு வெடித்தது. போதை போதம் தரவில்லை; மயக்கம் அளித்தது. முதற் காதல், முதற் கனவு, முதல் இரவுபோன்ற வெவ்வேறு புள்ளிகளை இணைத்து முக்கோணம் வரைந்து, அதற்குள் தன் உடலை உலவவிட்டான்; ஆனல், அவன் உள்ளமோ கூடுவிட்டுக் கூடு பாய்ந்தது.

"அத்தான் !"

தம்ளர் பாலும், தட்டு வெற்றிலையும் பொல்லாத இரவுக்கு பொழிப்புரை சொல்லிக் கொண்டிருந்தன.

"மேகலை, இன்று நான் வெளிக்கூடத்தில் தான் படுத்துக்கொள்ளப் போகிறேன். அம்மாவைப் பின் கட்டில் உறங்கச் சொல். நீ வழக்கம்போல உன் படுக்கை யறையில் தூங்கு. குலோத்துங்கன் என் அறையிலேயே இரவுப் பொழுதைக் கழிக்கட்டும். நீ போ. எனக்குத் தனிப்பட்டு அவசரமான சில அலுவல்கள் இருக்கின்றன. இன்று இராப் பொழுதுக்குள் அதை முடித்துவிட வேண்டும் !"

'எதை ?'—அவள் ஏன் வினவவில்லை ?

மேகலை புறப்பட முயன்றாள். ஸ்டூலுக்கு அழகு செய்தவை; பால், தாம்பூலம்.

"மேகலை, நம் விருந்தினர் மிஸ்டர் குலோத்துங்கன் என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்டான் அவன்.

வினா விடுத்தவனிடமே விடையையும் ஆராய முனைபவள்போல, அவள் அவனுடைய கண்களின் வழியே சென்று திரும்பினாள். 'அத்தான்!' என்றாள், பயம் தட்டுப்பட்ட குரலுடன்.

"என்ன மேகலை?"

மாமல்லனுக்குப் பயம் பிடுங்கித் தின்றது. 'என் கண்களில் என்ன தேடினாள்? கண்கள் மூலம் இதயத்தைப் புரிந்துகொள்ள முடியுமென்று உளநூல் சொல்கிறதே! இன்று இராப் பொழுதுக்குள் அதை முடித்துவிட வேண்டுமென்று பூடகமாய்ச் சொன்னேனே, ஒரு கால் எதை என்பதை அறிந்து விட்டனளோ?...' என்னும் ஐயப்பாடு தோன்றியது. அவன் "ப்பூ!..." என்று அலட்சியமாக இருந்து விட்டான்.

மேகலை அவன் அருகில் அமர்ந்து நெற்றியில் பஞ்சு விரல் அமர்த்தித் தொட்டுப் பார்த்தாள். விம்மிப் புடைத்திருந்த தசை நார்கள் தீயாகச் சுட்டுப் பொசுக்கின. பஞ்சும் தீயும் அல்லவா?—அதனால்தான் அவள் விரல்கள் பஞ்சுக்கு ஒப்பானதோ?

பஞ்சும் தீயும் அல்லியும் மதியும் ஆயின.

"உடம்புக்கு என்னுங்க, அத்தான்?"

"உடம்புக்கு என்ன கேடு?"

"அத்தான்!"

'மே...க...லை!'

"உங்க மனசிலே..."

“அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. எல்லாம் தன்னாலே சரியாப் போயிடும்!”

“அத்தான், சில நாளாக உங்களைப் பார்க்கிறதுக்கே எனக்குப் பயமாயிருக்கு!”

“ஏன், உன் கண்களுக்கு மட்டிலும் நான் பேயாக மாறி விட்டிருக்கிறேனா?...பைத்தியக்காரி!”

“நன்றாய்ச் சொன்னீங்க நீங்க. இன்னும் கொஞ்ச நாளைக்கு இப்படியே நீங்க புதிராகவே இருந்து வந்தா, நிஜமாகவே நான் பைத்தியக்காரியாகத்தான் மாறிப் போவேன்!”

“மேகலை, நீ அழுதால் உன்னுடன் மற்றொரு உயிரும் சேர்ந்து அழுமல்லவா?”

“ஓ!”

“மேகலை கெட்டிக்காரி!...உன் வயிற்றுச் சிசுவென்றால் எவ்வளவு கரிசனம்?”

“என்னை நொடிக்குள்ளே மடக்கி விட்டீங்களே?... இன்னொரு உயிர் என்றது உங்களைன்னுதான் நான் நினைச்சேன், அத்தான்?”

விழிக்கடை வெள்ளத்தின் கடைசித் துளி மேஜை மீதிருந்த புத்தகக் குவியலில் சிதறியது. நீரைத் துடைத்துவிட்டு ஒரு புத்தகத்தைப் புரட்டினாள் அவள்.

“அதை வைத்து விடு, மேகலை. அயோத்தி ராமனுக்குச் சொந்தமான சீதாப் பிராட்டியார் தீக்குளி நடத்திய மாண்புமிக்க நிகழ்ச்சியைச் சொல்லும் கதை அது. நீ போ, மேகலை!”

அவன் வாய் மூடுமுன் அங்கே குலோத்துங்கன் வந்து நின்றான்.

“எனக்குத் தூக்கம் வருகிறது; நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன்!” என்றான் குலோத்துங்கன்.

"இந்நேரம் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் ?..." என்று கேட்டுக்கொண்டே குலோத்துங்கனை நெருங்கினாள் மேகலை. அவன் கையில் இருந்த வெள்ளை அட்டையில் வரையப்பட்டிருந்த ஒரு சித்திரத்தை அவள் கூர்மையாக நோக்கினாள். "ஆமாம், யார் படத்தை வரைஞ்சுக்கிட்டிருந்தீங்க ? எங்க சிந்தாமணி படத்தைத் தானே ?'' என்று பேச்சிலே விஷமப் புன்னகையைத் தெளித்துக் கேட்டாள்.

''ஊஹூம், சிந்தாமணி படத்தை எனக்குப் போடத் தெரியாது. நெஞ்சில் இருந்தால்தான் நினைவில் நிற்கும்; நினைவிலே நின்றுத்தான் பென்சிலில் இறங்கும்...!'' என்று அசிரத்தையுடன் பதில் வைத்தான் குலோத்துங்கன்.

ஏதோ ஒரு சினிமாவில் காட்டினார்கள். மாபெரும் குற்றம் செய்த கிராதகன் ஒருவனைக் கொதிக்கும் எண்ணையில் தூக்கிப் போடும்படி எமதர்மராஜன் தண்டனை விதிக்கிறான். அப்படிப்பட்ட தண்டனையை அடைந்திருப்பதைப்போலத் துடித்தான் மாமல்லன். குற்றம் புரிந்தவன்தானே அதற்குரிய தண்டனையையும் அனுபவிக்க வேண்டும் ?

''மேகலையின் சித்திரத்தை மட்டும்தான் உங்களுக்குப் போட்டுப் பழக்கம். ஏன், அப்படித்தானே, மிஸ்டர் குலோத்துங்கன் ?'' என்று நறுக்குத் தெறித்தாற்போல அவனிடம் கேட்டு, அவன் கன்னத்தில் முன்னறை பின்னறையாக நான்கு பரிசளிக்க வேண்டுமென்று அவன் தவித்தான். ஆனால்...!

"சரி, சரி. நீங்க போய்த் தூங்குங்க, பாவம் !'' என்று விருந்தினருக்கு அறிக்கை சமர்ப்பித்தான் விருந்தளித்தவன்.

இந்திர நீலம் மேஜையைச் சுற்றிலும் ஒளியைப் பிரித்துக் கொண்டிருந்தது.

உறக்கத்தில் மாமல்லனுக்கு விருப்பம் கனியவில்லை. அவன் விரும்பிய வகையில், கன்னிமரா நூல் நிலையத்

துப் புத்தகங்கள் சில விருந்தளித்துக் கொண்டிருந்தன. பாவம், அவனுடைய இலக்கிய மனம் கும்பகருணனின் சுவடுகளைப் பின்பற்றியதை, நூல்கள் உணரவில்லை. ஸிக்மெண்ட் பிராய்ட், வில்ஹெம் விண்டட், பிரான்ஸிஸ் கால்ட்டன் போன்ற உளநூல் வல்லுனர்கள் அவனுக்கு எவ்விதமான நிர்ணயத்தையும் கொடுக்கவில்லை. பின்னர், குலோத்துங்கனின் விசித்திர நிலைக்கு அவனால் எப்படி பரிகாரம் அமைக்க இயலும்?

குலோத்துங்கனின் முப்பதாண்டுத் தொடர் கதையில் எந்த ஒரு பக்கத்தின் சாரத்தையோ அல்லது, எந்த ஓர் அத்தியாயத்தின் உள்ளுறையையோ மாமல்லன் இதுவரை அறியவில்லை; ஆனால் இப்போது அவன் தெரிந்துகொள்ளத் தவங்கிடந்தான்!

நடுச்சாமத்திற்கு முக்கால் மணி முன்னதாக குலோத்துங்கன் படுக்கையில் சாயப்போவதைக் கண்டான் மாமல்லன். உடனே அவனிடம் எழுந்து சென்றான். அங்கிருந்த பாலைக் குறித்துக் காட்டி, 'தேவைப்படும்போது சாப்பிடுங்க!' என்று உரைத்தான். அவன் அப்போதே பாலைக் குடித்துவிடுவான் என்று எதிர்பார்த்தான். 'சித்தன் போக்கு சிவன் போக்கு!' என்கிற அவன் நிலையை மாமல்லன் உய்த்துணர்ந்தவன் அல்லவா! ஆகவேதான், தேவைப்படும் சமயத்தில் பால் அருந்தச் சொன்னான். இரவுக்குள் அவன் அதைக் குடித்துவிடமாட்டானா, என்ன?

திரிபுரம் எரித்த பின்னர் தான் விரிசடைக் கடவுள் சிரித்தானும். ஆனால் இதோ, அந்த ஈசனையும் தோற்கடிக்கச் செய்துவிட்டவனைப்போல மாமல்லன் அட்டகாசமாகச் சிரிக்கின்றானே, ஏன்? இவன் எதை எரித்தான்? யாரை எரித்தான்...?

கொட்டாவி பறிந்தது. உடலை நெளித்தான்; கைகளை உதறினான்; எழுந்தான். மேகலை கண் வளர்ந்துகொண்டிருந்த காட்சி அவன் கருத்தில் அகத்துறையை நினைவுகொள்ளத் தூண்டிற்று. ஆனால் அவன் அந்தக் காட்சியைத் தன் கருத்தைவிட்டு விலக்கிவிட முயற்சி செய்தான். குலோத்துங்கனை நோக்கினான். அவனிட

மிருந்து குறட்டை ஒலி மட்டும் வெளியேறிக் கொண் டிருந்தது. தன்னுடைய திட்டத்தையும் பரீட்சையையும் மறுபடி மனத்திற்குள் உரைத்துப் பார்த்தான். பிறகு படுக்கையில் வீழ்ந்து தூங்குவது போன்று பாசாங்கு செய்தான்.

விநாடிகள் நிமிஷங்களுக்குத் திரை செலுத்தின.

இமையுடன் இமை பொருதவில்லை. மாமல்லன் புரண்டு படுத்தான். அரவம் ஒன்று கேட்கவே, விழிகளை மெதுவாகப் பிரித்தான். குலோத்துங்கன் எழுந்து உட் கார்ந்தவன், மறுகணமே படுத்துவிட்டான். முன்போல குறட்டை சுருதி சேர்க்கத் தொடங்கியது. 'குலோத்துங்க னுக்காக காத்திருந்தது பால் குவளை. 'அவனை எழுப்பிக் குடிக்கச் சொன்னால்?...வேண்டாம்!'—மாமல்லன் எழுந்து கூடத்துக்கு நடந்தான்.

விழிப் பார்வை மூடியபோது, செவிப்புலன் விழித் தது. 'டங்க்!' என்ற சத்தம் துளைத்தது.

'குலோத்துங்கன் ஒரு பெரிய புதிராக இருக்கின் றானே? அவனை எழுப்பி அந்தப் பாலை இப்போதே கொடுத்து விடுகிறேன்!'

திரும்பினான்: அவன் ஆவலுடன் பால் குவளையை எடுக்கக் குனிந்தபோது, பால் முழுவதும் கவிழ்ந்து கிடப்பதைக் கண்டான். கறுப்புப் பூனை வெள் ளைப் பாலைக் குடித்துக் கொண்டிருந்தது. உடனே அது சுருண்டு தரையில் சாய்ந்து விழுந்துவிட்டது.

"அத்தான்!" என்று ஓலம் எழுப்பியவண்ணம் ஓடோடி வந்து சேர்ந்தாள் மேகலை.

# 18

> 'தின்ன வரும் புலி தன்னையும் அன்பொடு
> சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே !'

சிந்தாமணி சென்னைக்கு வந்து சேர்ந்தாள். வந்ததும் வராததுமாக அவள் மேகலையிடம் கேட்ட முதல் கேள்வி, "அண்ணி, என் அத்தான் வந்தாங்களா?" என்பதுதான்.

மேகலை, "ஆமாம்; நேற்றைக்கே வந்திட்டாங்க; இரவு இங்கேதான் படுத்துத் தூங்கினுங்க!" என்று இதமாகப் பதில் சொன்னுள்.

மாமல்லன் உறக்கம் கலைந்து இரண்டு மூன்று விநாடிகள்தாம் கழிந்திருக்கும். அதற்குள் பேச்சரவம் காதில் படவே, எழுந்து தலையணையில் முழங்கைகளைப் பதித்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். குலோத்துங்கனின் ஞாபகம் வரவே, அவன் படுத்திருந்த இடத்தை நோக்கிப் பார்வையை மாற்றினுன். அவனைக் காணேம்! எங்காவது போயிருக்கக் கூடுமென்று நினைத்த மாமல்லன், வந்திருந்த சிந்தாமணியை வரவேற்க எண்ணி படுக்கையைச் சுற்றியபோது, அவன் பேருக்குக் கடிதத் துண்டு ஒன்று இருந்தது.

"ஐயா!

என் உயிரைக் காட்டிலும் என்னுடைய லட்சியக் கனவு முக்கியம். ஆதலால், நான் வாழத்தான் வேண்டும். அதற்காகவே இங்கிருந்து வெளியேறுகிறேன்.

இப்படிக்கு,
குலோத்துங்கன்."

மாமல்லனுக்கு நெஞ்சை அடைத்தது. ரத்த அழுத்தம் ஏற்பட்டுவிட்ட பாங்கிலே அவன் அரைக் கணம் நிலை மயங்கி உட்கார்ந்தான். நேற்று இரவு "அத்தான்!'' என்று விளித்து ஓடி வந்த தன் இல்லக் கிழத்தியின் நினைவு வந்தது; "நீங்க திடீர்னு படுக்கையை விட்டு எழுந்ததுக்கும் கீழே கொட்டிப்போன பாலைக் குடிச்ச பூனை செத்துச் சிவலோகம் போனதுக்கும் எந்தத் தொடர்ச்சியும் இல்லேதான்; ஆனாலும், மனசு என்னமோ படபடத்துச்சு!'' என்று அவள் பதறியதை அவன் மறக்கமாட்டான். 'மங்கலமென்பது மனை மாட்சி' என்னும் தமிழ்ச் சாதி மறையை அவளும் படித்தவள்!

சிந்தாமணியும் மாமல்லனும் குசலம் விசாரித்துக் கொண்டனர். பிறகு, அவள் தன் அத்தானைப்பற்றிக் கேட்டாள். குலோத்துங்கன் தனக்குக் கிறுக்கி வைத்துச் சென்ற கடிதத்தை குப்பைக் கூடையில் கசக்கி வீசினுன் அவன்! இப்போது அந்தப் பேதை நெஞ்சத்தை பேயாக ஆட்டி வைப்பவன்போல, "எங்கே சென்ருரோ தெரியவில்லையே!" என்று தொட்டும் தொடாமலும் விடை பகர்ந்தான்.

"வாங்க சிந்தாமணி. உங்க அத்தானை எங்கிருந்தாலும் நான் தேடிக் கண்டு பிடித்துத் தருகிறேன்!" என்ருள் மேகலை. இருவரும் சமையற் கட்டில் இருக்கையில் உரையாடல் ஆரம்பமானது.

"எப்படி முடியும்? நீங்க பெண் ஆயிற்றே...?''

"அதனுல்தான் அவ்வளவு துணிச்சலோடு சொல்கிறேன்!''

"அண்ணி, வேண்டாம்! அதுவும் நீங்கள் என் அத்தானைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேலையை ஏற்கவே வேணும்...!'

"ஏனும்?''

"அதை தயவு செஞ்சு இப்போது என்னிடம் கேட்காதீங்க, மேகலை!...''

கள்ளமில்லா உள்ளம் கொண்ட மதலைச் செல்வம் அரும்புதிரச் சிரித்து, அச்சிரிப்பில் முத்துதிர்ந்து ஒலிப் பதை யொத்த பாணியில் மேகலை சிரித்தாள். ஆனால் அவள் குழந்தை அல்ல!

"சிந்தாமணி, உங்க அத்தான் எவ்வளவு வருஷ மாக இப்படியே இருக்கிறாங்க?"

"எனக்கு விவரம் புரிஞ்ச காலந்தொட்டு!..."

"தஞ்சாவூரிலே யாரோ டாக்டர்கிட்டே காட்டின தாகவும், குணம் ஏற்பட்டதாயும் எழுதினீங்களாமே?..."

"ம்!"

"என்ன வியாதியாம்?"

"எல்லாம் மூளை சம்பந்தப்பட்டது. மூளையைத் தாக்கிய அதிர்ச்சி ஏதோ ஒன்று அவர் மனசையும் தாக்கி யிருக்க வேணுமாம்!"

"அந்த அதிர்ச்சி என்னவாம்?"

"அது அத்தானுக்குத்தானே தெரியும்?"

"ஆமாம்......அவங்க சொல்லலையா?"

"ஊஹூம்; நான் கேட்கலே!"

"சரி, நான் கேட்கட்டுமா?"

"ஐயையோ, வேண்டாம், நீங்க கேட்க வேண்டாம், மேகலை!"

"நான் என்றதும் ஏன் அப்படிப் பதறுறீங்க, சிந்தாமணி?"

"அப்படியொன்றும் நான் பதறலையே...!"

"சிந்தாமணி, வேதாளம் மறுபடியும் முருங்கை மரத் தில் ஏறிக்கொண்ட மாதிரி உங்க அத்தானுக்குத் திரும்பவும் பழைய குழப்ப நிலை ஏற்பட்டிருக்குமோ, என்னவோ?"

"ஆண்டவனுக்குத்தான் தெரியும், அண்ணி!"

வில்லெடுத்து வேல் விழிக் கணை தொடுத்துக் கொண்டிருந்த மேகலையின் குறியை விட்டுச் சிந்தாமணி நூலிழை தப்பவில்லை. உற்றவள் வடித்த கண்ணீரின் பங்குக்கு, உரித்தான மேகலையும் விழிநீர் பெருக்கினாள். ஏதோ ஒரு திரைப் படத்தில் பார்த்த விசித்திரமான இயல்பு கொண்ட கதாநாயகனின் உருவமும் உள்ளமும் அவளின் நினைவுத் திரையில் ஓடின. உடல் நோய்க்குத் தின்று தீர்க்கவேண்டிய கசப்பு மருந்தை உள்ளங் கையில் வைத்துக்கொண்டே யோசிக்கும் பேதும் பையைப் போலிருந்தாள் அவள்.

"நானல்லவா நாள் முச்சூடும் யோசித்து யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொள்ளணும்? நீங்க ஏன் வீணா மனசை அலட்டிக்கிறீங்க?!" என்றாள் சிந்தாமணி.

"உங்க சந்தோஷத்திலே மட்டுந்தானா எனக்குப் பங்கு கொடுப்பீங்க?...உங்க சஞ்சலத்திலேயும்தான் எனக்குப் பாகம் வேணும்!" என்று எதிர்க் கேள்வி கேட்டு உரிமை கேட்டாள் மேகலை.

"அதுக்குத்தான் என் அத்தான் இருக்காங் களே?..."

"அவங்களைப் பத்தித்தான் இப்ப நினைச்சுக்கிட் டிருந்தேன்!"

"நல்ல அண்ணன்!...நல்ல அண்ணி...!"

"பின்னே...!"

மேகலை எதிர்பார்த்ததுபோல சிந்தாமணி சிரித்து விட்டாள். பெண் அழகான அமைப்புடன் சிரிக்கப் பழகிக்கொண்டால், அப்புறம் அவளுக்கு இந்தப் புவனத்தையே காணிக்கை வைத்துவிடலாம் போலும்! ஆனால் சிந்தாமணி சிரித்த சிரிப்பின் ஒய்யாரத்தை அனு பவித்து ரசிக்க அப்போது குலோத்துங்கன் அல்லவா பிரசன்னமாயிருக்க வேண்டும்? அவன் எங்கு சென் றிருப்பான்?...

திருமண அழைப்பு ஒன்று இருந்தது. அதை எடுத்துப் புரட்டினுன் மாமல்லன்; சித்திரப் பாலடை ஒன்றும் அவன் கண்களில் பட்டது. புதுமணத் தம்பதிகளுக்கு அவன் கொடுக்க எண்ணியிருக்கும் பரிசில் அதுதான்!

உடுத்து முடித்து, சீவிச் சிங்காரித்துக்கொண்டு மேகலையும் சிந்தாமணியும் வந்து நிற்பதற்கும் வாசலில் பழி கிடந்த 'டாக்ஸி டிரைவர்' ஒலி எழுப்பி நினைவுக் குறிப்பைத் தொட்டுக் காட்டுவதற்கும் சொல்லி வைத்த மாதிரி கணக்காக இருந்தது.

மாமல்லன் வெய்துயிர்ப்பை வெளியிட்டான்.

"வாங்க அத்தான்!...நேரமாகல்லே!" நாற்பது நிமிஷங்களை நறுவிசாக எடுத்துக் கொண்டவள் எவ்வளவு நாசூக்காகப் பேசித் தப்பிக்கப் பார்க்கிருள் என்பதை எடை போட்டுங்கூடவா அவன் அசட்டையாகச் சிரித்தான்?

"உன் முகத்திலே தெளிவைக் காண முடியலேயே, சிந்தாமணி?" வருந்தியது மனிதப் பண்பு. உறைந்திருந்த இடம், மாமல்லனின் இதயம்.

ஆறுதல் மொழி கேட்டதும், அடங்கிக் கிடந்த ஆருத்துயரம் பீறிட்டுக் கிளம்பியது. "அண்ணு, உங்களைத்தான் நம்பியிருக்கேன். நீங்கதான் என் அத்தானைக் கண்டு பிடித்துத் தரவேணும்!" என்று விம்மலானுள் சிந்தாமணி.

பொங்கி வரும் காவிரியின் புதுப்புனலை மாமல்லன் அனுபவிப்பதில் கைதேர்ந்தவன். ஆனல் பொங்கி வரும் கண்ணீரைக் கண்டால் அவன் கோழையாகி விடுவான். இடைவேளையில் எதுவுமே நிகழாதது போன்றதொரு நினைவின் உணர்வு அவனுடைய ரத்த நாளங்கள் ஒவ்வொன்றிலும் உரைந்தது; குலோத்துங்கனை அவள் வசம் ஒப்படைப்பதாக உறுதி மொழிந்தான் அவன்.

மூவரையும் மணவிழாப் பந்தல் வரவேற்றது.

மணமகன் அவனுடன் உயர்நிலைப் பள்ளியில் வாசித்தவன். அவன் மணவறையில் உட்காருவதற்குள் மாமல்லனையும் உடன்வந்தவர்களையும் உபசரித்தான்.

"இவர்கள்தான் உங்கள்...!"

பூர்த்தி செய்யாமல் மேகலையைச் சுட்டினான் அவன்.

"ஆமாம்; மேகலை; என் மனைவி...!"

உறவு தீர்மானிக்கப்பட்டதும், கணவனுடன் ஒட்டி நின்றவாறிருந்த மேகலை விலகிக் கொண்டாள்.

"மாப்பிள்ளை, மாப்பிள்ளை!" என்ற கூக்குரல் தொடரவே, மணமகன் மணவினையில் இணைய வேண்டியவனானான்.

'ஹலோ, மிஸ்டர் மாமல்லன்!" என்ற குரல் கேட்டதுதான் தாமதம்; அவன் குரல் வந்த பக்கம் தலையைத் திருப்பி விட்டான்.

'மாதவி!'

"ஓ...மாதவியா? சௌக்கியமா? கல்யாண வீட்டினர் உங்களுக்கும் தெரிந்தவர்கள் போலிருக்கிறது!"— என்ன பேசுவது, எதைப் பேசுவதென்று மட்டுப்படாமல் தவித்துத் திண்டாடிய அவன் வாய்க்கு வந்ததைக் கேட்டான்.

"கல்யாணப் பெண் என் கணவருக்குக் கிட்டத்துச் சொந்தம். அவருக்கு உடம்பு சரியில்லை. வரமுடியவில்லை!"

கைவரப்பெற்ற பெரிய சித்திரக்காரன் வரைந்த ரதியின் படத்தை இமைக்காமல் பார்க்கும் பாமரனைப் போல அவன் மாதவியைப் பார்வையிட்டான். 'ஐந்தாவது பாரத்தில் ஒன்றாகப் படித்தவள். அதற்குள் எப்படி குடியும் குடித்தனமும் பிள்ளையும் குட்டியுமாக ஆகிவிட்டாள்!' சரஸமாகப் பேசிய பாவனையை எண்ணினான்; அவளை மறுபடியும் பார்த்தபொழுது, அவனைப் பார்த்தது அவளது கைக்குழந்தை, அது அவனிடம் தாவியது;

அவன் பிள்ளைக் கனியைக் கை நீட்டி வாங்கியபோது, மாமல்லனின் வலது கை விரல்கள் மாதவியின் தாலிச் சரட்டில் பட்டு விலகின; மின் அதிர்ச்சி அடைந்தவனாகத் திணறினான். மேகலையின் கண்கள் தன்மீது பதிந்திருந்ததைக் கவனித்த அவனுக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன.

பேசும் பொற்சித்திரத்தை வாங்கி ஆயிரம் முத்தங்கள் பதித்தாள் மேகலை; தன்னைப்பற்றி எண்ணியதும், தன் வயிற்றுக் குழந்தை சிரிக்க ஆரம்பித்தது. 'இன்னும் கொஞ்ச நாட்கள் கழிந்துபோனால், என் கவலைகளையெல்லாம் மறக்கடித்துவிடும் என்னுடைய குழந்தை!'

ஊருக்குப் புறப்படுவதற்கு முன் தன் வீட்டில் ஒரு வேளை விருந்து உண்டு செல்லுமாறு கேட்டுக்கொண்டாள் மேகலை. மாதவியும் சம்மதம் கொடுத்தாள். சிந்தாமணியும் மாதவியுடன் சிறுபொழுது உரையாடினாள்.

இரவு படுக்கையில் சாய்ந்திருந்த மாமல்லன் பாரதியின் பாடல்களைப் புரட்டினான். 'தின்ன வரும் புலியானாலும் கூட அதைச் சிந்தையிலேற்றி அன்பு பாராட்ட வேண்டும்!' என்று 'உபதேசம்' செய்திருந்ததைப் படித்தபோது, குலோத்துங்கன்தான் நெஞ்சடியிலிருந்து எழும்பினான். குலோத்துங்கனும் மேகலையும் சிறு வயதில் ஒன்றாக இருந்து எடுக்கப்பட்ட புகைப்படம் நினைவுக்கு வந்தது; பதறினான். முதல் சலனம் அதுதான்!... மாதவியும் தானும் இருந்த நிழற்படத்தை ஒரு சமயம் மேகலை நீட்டிய சம்பவத்தையும் எண்ணத் தொடங்கினான். கனவில் கண்ட மாதவியின் எழில் அவனுள் சலனம் உண்டாக்கியது; புலனடக்கத்தை அவன் பழகவில்லை. ஆகவே, மேகலையைத் தேடிச் சென்றான். அவள் நிலை மறந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவளருகில் நடந்து சென்றபோது, அவளது அறையில் ஒரு பிரயாணப் பை இருந்ததைக் கண்டான். குலோத்துங்கனின் பெயர்ச் சீட்டு காணப்பட்டது. அவசரம் அவசரமாக அதைப் பிரித்தான் மாமல்லன்.

பாம்பின் வாய்க்குள் கையை நுழைத்து விட்டானோ?...இமைச் சிறகுகள் கண்மூடிக் கண் திறந்தன.

வெறும் கந்தலும் கிழிசலுமாக இடத்தை அடைத்துக் கிடந்த துணிமணிகளை எடுத்து ஆத்திரத்துடன் தூர வீசி எறிந்தான் மாமல்லன். பிறகு, அடிப்பகுதியில் அவன் விழிகள் ஊர்ந்தன. பத்து ரூபாய்த் தாள் கட்டுக் கள் பல இருந்தன! நாட் குறிப்பு ஒன்று கிடைத்தது! புகைப்படங்களை அடக்கிக் கொண்ட பெரிய உறை ஒன் றும் தென்பட்டது!

## 19

"நம்பினர் கெடுவதில்லை ; நான்கு மறைத் தீர்ப்பு ;
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்!"

கன்னி இருட்டைப் பகைப் புலமாக்கிக் கொண்ட திக்குத் தெரியாத ஆரணியத்திலே அகப்பட்டுக் கொண் டானா மாமல்லன்?

அல்ல!

நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பின் பிறந்த வீட்டுப் பெருமையைப் பறைசாற்றப் பாம்புப் புற்றைப் புகுந்த வீடாக்கிக்கொண்ட புண்ணியத் தலத்திலே மாமல்லன் நெஞ்சத்தைத் தஞ்சம் வைத்து விட்டானா!

இல்லை!

வழிபடு தெய்வத்துக்கு உரித்தான தீமிதித் திரு நாளில் நோன்புக் காவாமல், சிறு பிள்ளைத்தனமாகப் பாதங்களைப் பதித்து விட்டானோ மாமல்லன்?

கிடையாது!

'அல்ல'; 'இல்லை; 'கிடையாது' என்ற எதிர்மறைச் சொற்கள் மாமல்லனுக்கு நல்ல சுற்றுச் சார்பு அமைத் துக் கொடுக்க எத்தனம் செய்தாலும், அவன் மட்டும் என்னவோ மேற்சொன்ன முப்பெருந் துயரக் கட்டங்

களில் சிக்கியவன் போன்றே அவதிப்பட்டான்; அல்லல் அனுபவித்தான்; முத்துக் கண்ணீர் உயிர்ச்சத்தை வடித்தெடுத்து, விழி பிதுங்க வழிந்துகொண்டேயிருந்தது.

வெறுங் காகிதக் கற்றைகளில் நாணய மதிப்பை உள்ளடக்கிக் கொண்டிருந்த பத்து ரூபாய்த் தாள்கள் அவனுடைய கண்ணீர்த் துளிகளை ஏந்திக்கொண்டன; பிரிந்த நாட் குறிப்பின் ஏடுகள் பிறந்த நன்முத்துக்களைச் சேகரம் செய்தன; உறை உதறிய நிழற் படங்களில் அங்கங்கே சொட்டு நீர் முத்திரை பதித்தது.

மாமல்லன் விம்மினான்; விம்மல் வெடித்தது. 'விம்மல் வெடிப்பதைப்போல என் நெஞ்சும் வெடித்து விட்டால், நஞ்செனப் பரவி மண்டை கொண்டு விட்டிருக்கும் சஞ்சலம் என்னுடனேயே அழிந்துவிடுமே!' என்னும் நினைவு சுய உருக்கொண்டு எழுந்தது. அவன் இப்போது வாய்விட்டு அழுதான்; 'மேகலை, நீ ஏன் இப்படி என்னைச் சித்திரவதைப்படுத்துகிறாய்?' என்று கேட்டான்.

"அத்தான்!"

மேகலை படுக்கையைவிட்டு எழுந்தாள்; தோன்றினாள்; வினா அனுப்பிய வாய்க்கு விடை கொடுக்க வந்திருக்கின்றனளோ?

மாமல்லனின் ஈரல் கலங்கிற்று. காற்றடைத்த இதயப்பை சுருங்கியது. எல்லாவற்றையும் இருந்தது இருந்தபடியே வைத்துவிட்டான். குலோத்துங்கனின் உடைமையான பிரயாணப்பை களங்கம் காட்டாமல் 'சிவனே' யென்றிருந்தது...!

கெடியாரத்தின் பெண்டுலம் 'டக் டக்' என்று நாதம் இசைப்பதற்குக் காரணம் இருக்கிறது; அதன் கடமையுணர்வை சொந்தக்காரர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால், மனித மனமும் கடிகாரத்தைப்போலவே 'டக் டக்' என ஏன் பாவனை காட்டுகிறது?...ஏன் இந்தப் பொய் வேஷம்? மனச்சாட்சியின் கண்ணை மறைக்கவா? இல்லை, அதன் கண்ணிலே மண்ணை அள்ளி வீசவா?

வண்ணக் கலாப மயிலுக்கு கார்முகில் எழிலோ டாடக் கற்றுத் தரவேண்டியதில்லை; என்றாலும், மயிலின் ஆர்வத்துக்குத் தூபம்போட வல்லது முகில். மயிலுக்கும் முகிலுக்கும் இடையில் உள்ளத்தின் உயிராகவும், உணர்வின் அறிவாகவும் ஒன்றிய புதிய செய்கை பூக்கிறது; அது இயற்கைத் தன்மை பூண்டது.

மாமல்லனும் மேகலையும் எதிரும் புதிருமாக அமைந் தார்கள். கணவனின் இமை நுனியில் நீர் மின்னு வதைக் கண்டதும், மேகலைக்கு உயிர்த் துடிப்பு துறந்து செல்வதைப்போலப் பட்டது. இருதய பாகத்தில் உறைந்திருந்த உயிரை—ஈருடலும் ஒருயிரான அந்த உயிருக்கு வாரிசாக கண் வளர்ந்துகொண்டிருந்த முகம் அறியாச் சிசுவை—எண்ணினாள்; மணப்பந்தர் தொட் டுப் பூட்டிய வாழ்க்கை முத்திரைச் சீட்டான அந்த மங்கல நாணை எண்ணினாள். உருப்பொருளும் உருத் தெரியா உயிரும் அவளுக்குத் தன் நினைவை முடுக்கி விட்ட தருணத்திலே, கொண்டவனின் கோல முகத்துச் சோகம், கை கொடுத்தவளிடமும் கண்ணீரைக் காட் டியது.

"மேகலை, நீ ஏன் கலங்குகிறாய்?"

"உங்கள் கண்களில் கண்ணீரைக் கண்டால், என் னிடமும் கண்ணீர் சேருவது இயல்புதானே, அத் தான்?

"நீ அழக்கூடாது, மேகலை!"

"அப்படி யென்றால், நீங்கள் சிரியுங்கள்!"

"எனக்குச் சிரிப்பு வரமாட்டேன் என்கிறதே, மாமன் மகளே!"

"அதனால்தான் எனக்கு விழிக்கலக்கம் ஏற்படு கிறது. அத்தை மகனே!"

"என்னை இப்போது என்ன செய்யச் சொல் கிறாய் நீ?"

"சிரியுங்கள்!"

“சரி!”

“ஊஹூம்; ஒப்பமாட்டேன். உதட்டோரத்து நமட்டுச் சிரிப்பை நான் வேண்டவில்லை!”

“பின்...?”

“உள்ளத்துப் புன்னகையைக் கோடிட்டு காட்டுங்கள்!”

“மேகலை, என் மனம் நகை மறந்து பன்னெடு நாட்கள் கழிந்து விட்டனவே, மேகலை?...”

“ஆ!”

“அதிசயப்படாதே!”

“அதிசயத்துக்கு இப்போது வாய்ப்பு ஏது?

“அப்பால்...?”

“ஆத்திரப்பட வேண்டியவளாகிறேன்!”

“என்பேரிலா?”

“இல்லை, இல்லை; என்பேரில்!”

“ஆ!”

“அன்பு காட்டிய அத்தான்! என்னைச் சிரிப்புக் கடலில் நீந்தி விளையாடச் செய்த உங்களது இதய வேதனையைக் கேட்டறிந்து விடவேண்டுமென்று என்றோ நினைத்திருந்தேன். என் கால தாமதம் உங்களுள்ளே அகலப் பெரும் பிளவை விரித்து விட்டிருக்கின்றதே, அத்தான்!”

“துரும்பைத் தூணாகக் கற்பனை செய்துகொண்டு நீ ஏன் உன் மனத்தை வீணாகக் குழப்பிக் கொள்ளுகிறாய், மேகலை?”

உயிர்ச்சத்து மக்கி மடிந்துவிட்ட வறட்டுச் சிரிப்பைக் காட்டினாள் மாமல்லனின் இல்லக் கிழத்தி.

“மேகலை, உன் சிரிப்பில் ஜீவனைக் காணோமே?”

"உங்களிடம் அடைக்கலப் பொருளாகிவிட்ட என் ஜீவனைத்தான் நீங்கள் நித்தமும் உயிரோடு சாகடித்துக் கொண்டு வருகிறீர்களே, அத்தான் ?"

"மேகலை !"

"ஏன் அப்படிப் பதற்றம் காட்டுகிறீர்கள் அத்தான்?"

"உன்னுடைய பேச்சு என்னைச் சுட்டு விட்டது ;"

"ஆம் ; கசப்புத் தரும் உண்மைக்குச் சுடவும் தெரியும் !"

"நீ இப்பொழுது நீ என்ன பேசுகிறாய், மேகலை !"

"நீங்கள் என்னிடம் பேச வேண்டியதை, பேச மறந்ததை, பேசத் தவறியதைத்தான் நான் உங்களிடம் எடுத்துரைக்கிறேன்."

"உன் பேச்சு அழகுத் தமிழில் இருக்கிறது !"

"சங்கத் தமிழ்மொழி ஏட்டில் எழுதிக் கொடுத்திருக்கும் திருவிளையாடல்கள் கொஞ்சமா, நஞ்சமா? அத்தகைய தெய்வத் தமிழ் என்னை மட்டும் கைவிட்டு விடுமா, அன்பரே ? அழகுப் பெண் பள்ளியறைப் பதுமை மட்டுமல்ல ; அமைச்சராகப் பணியாற்றும் பொறுப்பும் அவளைச் சார்ந்ததல்லவா...?"

"படித்திருக்கிறேன், மேகலை !"

"நான் இப்போது செயல் வடிவில் இறங்கப் போகிறேன் ; அவ்வாறு மாறும்படி நீங்கள் என்னை இயக்கி விட்டிருக்கின்றீர்கள்."

"உன் குரல் கூத்து மேடைப் பேச்சாகத் தொனிக்கிறதே ?"

"என் வாழ்க்கைக் கூத்தின் தோல்வியில் விளைந்த இதய ஒலி, அத்தான், இது !"

"மேகலை, நான் அல்லவா தோல்வியின் பாதத்தில் தேய்ந்து உள்ளம் மறுகிக் கொண்டிருக்கிறேன் ! நீ புதிர் போடுகிறாயே ?"

"அத்தான், நானு புதிர் போடுகிறேன்? பெண்ணைப் புதிரென்று சொல்வதிலே இன்பம் காணும் கதைகள் உங்களுக்கும் பாடம் போதித்திருக்கின்றன!"

"இனி அவற்றை நான் மறந்து விடுகிறேன். ஏனென்றால் நீதான் எனக்கு அமைச்சராக வாய்க்கப் போகிறாயே? அத்துடன் ஆசிரியையாகவும் மாறிவிடு. நல்லது!"

"ஆம், நல்லதுதான்; அப்படித்தான் புதுப் பதவி ஏற்கவேண்டும்: ஏனென்றால், என் மாங்கல்யத்தைக் கட்டிக் காக்கவும் என் கனவுக் குழவியைப் பெற்றுப் போற்றவும் பயன்படும்!"

"உன் பேச்சு எனக்கு மட்டுப் படவில்லை, மேகலை!"

"உங்கள் நடத்தை கடந்த சில மாதங்களாக எனக்கு மட்டுப்படாமல் இறுக்கிறதே, அத்தான்!"

"வேடிக்கையான பெண் நீ!"

"வேடிக்கைப் பொருளானதால் தான், பேசாமல் கொள்ளாமல் என்னை ஆட்டிப் படைத்து வருகிறீர்கள்!"

"போதும், நிறுத்து. என்னைச் சித்திரவதைப் படுத்தாதே! இரவுப் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிப்போம். ம்......எழுந்திரு கண்ணே!"

"பகற் பொழுதைச் சவக்கிடங்காக்கிக் கழித்தேனே கழிந்த பல நாட்களாக, அதற்கு யார் பரிகாரம் செய்வது?"

"தவறு என் மீதிருந்தால், உன் மீது ஆணையாக நான் பரிகாரம் செய்வேன்!"

"குற்றம் என்னிடம் அண்டி யிருந்தால், அதற்கு நான் கட்டாயம் தண்டனை பெறக் காத்திருக்கிறேன், அத்தான். என் வயிற்றுக்கனியை முன் வைத்துச் செய்யும் சத்தியம் இது!"

"மேகலை...!"

"சரி, கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள். வழக்கு உரைகாதை இத்துடன் நிற்கட்டும். வாருங்கள். மனையறம் படுத்த காதை ஆரம்பமாகட்டும் !"

மாமல்லன் இமைகளை விலக்கி விலக்கி மூடினான். வீரக் கண்ணகியின் வடிவம் சாந்தியுடன் திகழ்வதைப் பார்த்தான். குழப்பத்தை இருந்தவிடந் தெரியாமல் மறைத்தது அவளது அந்த இன்ப ஸ்பரிசம். தொட்ட விரல்களில் மணம் நின்றது; பட்ட இடத்தில் தேன் துளி இருந்தது; ஜாதி மல்லியின் 'கற்பு மணம்' அவன் மண்டையில் கிறக்கத்தை வளர்த்தது.

ஆடும் பதுமையென மேகலை ஆட்டுவிக்கப்பட்டாள்! பாவம் !

துரியோதனனின் மனையாட்டி பானுமதியுடன் தேரோட்டி மகன் சொக்கட்டான் விளையாடிக் கொண் டிருந்தான். தன் கணவன் வருவதறிந்த பானுமதி மரியாதை தரும் பொருட்டு எழுந்தாள். இதை அறியாத குந்திமைந்தன், அவள் ஆட்டத்தின் நடுவே எழுந்து செல்வதாகத் தவருக உணர்ந்து, அஸ்திஞபுரத்துப் பட்ட மகிஷியின் பொற்றிரு மேகலையைத் தொட்டிழுத்து, விளையாட அமருமாறு கோரினன். மேகலை முத்துக்கள் தரையில் சிதறின.

தவழ்ந்த முத்துக்களில் கண் பதித்து விலக்கி, அவற்றின் புன்னகையைத் தன் இதழ்களில் சேர்த்து விட்ட பெருமையுடன் திடப்படுத் திட வேல் இராசரா சராம்' துரியோதனன் நின்ருன்.

'பாவம் புரிந்தேனே?' என்ற பயம் அங்கபூபதியின் முன்னே பாம்பெனப் படமெடுத்தது.

"கர்ண! ஏன் அப்படி நிற்கிருய்?...மேகலை மணிகளை நான் எடுத்துக்கொடுக்கட்டுமா? அன்றி கோத்துத் தரட்டுமா?" என்று பகன்ருன் வணங்காமுடி மன்னன்,

பரரதக் காட்சி கலைந்தது.

விட்டு விலகிய பள்ளிப் பாடத்தைக் கூட்டி வைத்து

எண்ணிப் பார்த்தான் மாமல்லன்; அவன் நெட்டுயிர்ப்புக் கொண்டான். வீறு கொண்டு வழக்காடிய மேகலையின் துடிப்புப் பேச்சு குரல் கொடுத்தது; அச்சம் அப்பிய முகத்திலே தென்பட்ட அவளது அபலைத் தன்மை புலனானது; ஐம்புலன்கள் தாம் இழந்த அறிவை மீட்டுக் கொண்டதெனச் சாற்றின. முகத்தைத் துடைத்துக் கொண்டு மெத்தையில் சாய்ந்தபடி, குலேத்துங்கனின் பையை நோக்கினான் அவன்; சடுதியுடன் எழுந்து விரைவுடன் அவ்விடத்தை நாடினான். பை இருந்தது; ஆனால் முன் நாள் இரவு அவன் மனத்தைக் கெடுத்த மூன்று பொருள்களும் காணப்படவில்லை. நேற்று விளைவிக்கப்பட்ட துயர நிலை மீளவும் அவனை ஆட்கொண்டது; அலைக்கழித்தது; ஆலைக் கரும்பானது இதயம்; சுடு புலனானது நயன வட்டம்.

வான் கண் விழித்தது.

மாமல்லன் படி அளக்கும் படி மிதிக்க ஆயத்தப் பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது மேகலை காப்பிப் பலகாரம் கொண்டு வந்தாள். அரிச்சுவடி படிக்கும் சிறுவன் ஆசானைப் பார்த்துப் பயப்படுவதை யொப்ப அவன் பயப்பட்டான்; தீமை புரிந்த பூபாலன் நல்லது புகட்டும் அமைச்சரின் நிழல் பட்டதும் அஞ்சியொடுங்கு வதைப் போன்று உடல் நடுங்கினான்; இருந்த இடத்தை விட்டு எழுந்தான்; அவனை அறியாமலேயே நடந்த நடப்பு இது. அவன் தாலி பாக்கியம் பெற்றவளை ஏறெடுத்துப் பார்த்தான். அவன் பார்வையில் மேகலை தென்படவில்லை. தெய்வத் தமிழ் மறையை உலகுக்கு அருளிய திருவாதவூரர் தோன்றினார்; அன்னாருக்கு அருளிய நமச்சிவாயம் தோன்றினான். தெய்வத்திருச் சந்நிதானத்திலே தன் தந்தை வாய்விட்டுப் பாடும் திருவாசகம் அவனுடைய உதடுகளில் ஏடு புரண்டது.

'தாய் ஆய் முலையைத் தருவானே,
தாராது ஒழிந்தால், சவலையாய்
நாயேன் கழிந்து போவேனே?
நம்பி, இனித்தான் நல்குதியே!

தாயே என்று உன் தாள் அடைந்தேன் ;
தயா, நீ, என்பால் இல்லையே ?
நாயேன் அடிமை உடன் ஆக
ஆண்டாய் ! நான்தான் வேண்டாவோ?'

பதினெட்டாம் பெருக்குக் காவேரி வெள்ளம் நுங்கும் நுரையுமாக வருமல்லவா ?— அப்படி இருந்த மாமல்லனின் உள்ளம் சற்றைக்கெல்லாம் தெளிந்தது. அரியலூர் வாசத்தின் போது வழிபட்டுக் கை தொழுத கலிய பெருமாள் கடவுளும், மங்காயிப் பிள்ளையாரும் அவன் கண்முன் காட்சிப் பொருள்களாக மாறி மறைந்தனர்.

மாற்ருன் மனைவியைத் தொட்டு விட்ட பெரும் பிழையைப் புன்னகையால் மன்னித்ததோடல்லாமல், அங்கபூபதிக்கு ஆதரவு மொழி உரைத்த கவுரவர் முதல்வனின் பெருந்தன்மையை—விரிந்த இதயத்தை மாமல்லனுல் இப்போதுதான் போற்ற முடிந்தது. அக் கணத்திலே, தன் உயிருக்கும் தன் மனைவியின் உயிர்ப் புக்கும் ஊடே உண்டான மாயப் பெரும் அகழியைச் சிந்தனைப் பள்ளத்தில் லயித்திருக்கச் செய்து அவன் அதில் அழுந்தி திக்குமுக்காடினுன். 'குலோத்துங்கனும் மேகலையும் அருகிருந்து எடுக்கப்பட்ட பிஞ்சுப் பிராயத் துப் படத்தை வைத்துக் கொண்டு இத்தனை நாட்களும் நான் குழம்பியது என் தப்புத்தானே ?' என்று உளம் உருகினுன்.

திருவாசகத்தின் நற்பலனு இம்மாற்றம்...?

அப்போது—

"அத்தான்," என்று அழைத்த வண்ணம் பலகாரத் தட்டையும் காப்பி டபராவையும் ஸ்டூலில் வைத்தாள் மாமல்லனின் உயிர்ப் பத்தினி. வந்து நின்ற சில கணப் பொழுதுக்குள் அவளது கண் பார்வையில் சுழலச் செய்த உயிர்த் துணையின் உணர்ச்சி வசப்பட்டிருந்த உரு வத்தை மறுமுறை நோக்கினுள். அமைதி கனிந் திருந்தது ; ஆறுதலுடன் கூப்பிட்டாள் அவள்.

தோன்றிய விழி நீரை தோன்ருமல் செய்து கொண்டு மாமல்லன் தலையை உயர்த்திஞன். மேகலையை அன்பு கனியப் பார்த்த தருணத்திலே, அவள் தரப்பிலும் அன்பின் களிநடனம் தெரிந்தது. களிப்புக் கொண்டான் அவன்.

"மேகலே !..."

அன்ெருரு நாள், தேடிப் போன சீதேவி அரியலூர் மனை வாசலில் புள்ளிக் கோலம் இட்டுக் கொண்டிருந்த நேரத்தில், "மேகலே !" என்று குரல் கொடுத்தபோது பிறந்த அன்பு இப்போதும் இழைந்திருந்த உண்மையை உள்மனம் எடுத்தியம்பியது. கருமணிகளைச் சுற்றி நீர்த் திரை விரிந்திட வேளை பார்த்தது. 'கண்களிலே இப்போது உவப்புக் கண்ணீர் விளையாடத் துடிக்கிறது. ஆனல், இதைச் சொன்னல், மேகலே நம்பவா போகிருள் ?... துன்பத்துக்கு இந்தக் கண்ணீரைச் சாட்சியாக வைத்து, இந்தக் கண்ணீருக்கு விளக்கம் கேட்பாளே ?' என்று முடிவு செய்தான். கண் மூடிக் கண் திறக்கும் அமைப்பில், துளிகளை மாயமாக மறையச் செய்து விட்டான் மாமல்லன்.

"மேகலே, ஏன் நின்னுகிட்டே யிருக்கே ?...உட்காரேன் !"

சொன்ன சொல் போதாதா ? அரும்பு விரல் பற்றிஞன் ; திமிறிஞள் ; காஞ்சிப் பட்டின் முகதலைவைப் பிடித்து இழுத்தான்; நாணிக்கண் புதைத்த சமயம், அவனும் வெட்கப்படும்படி மேகலையின் நிலை அமைந்தது. அவள் புடவையைச் சரிப்படுத்திஞள்.

"பலகாரம் காப்பி சாப்பிட்டுப் புறப்படுங்க. இல்லையென்ருல், அத்தையிடம் சொல்லி விடுவேன் ; அதற்கும் பணியவில்லையாஞல், உங்க தங்கை சிந்தாமணியைச் சிபாரிக்குக் கூப்பிட வேண்டி வரும்."

'வேண்டாம் ; அப்படியெல்லாம் செய்யாதே. இது வெறும் பிணக்கு !' என்கின்ற குறிப்பை இமைச் சிறகுகளின் பரப்பில் பரப்பி விட்டு, காலைப் பலகாரத்தில் கருத்துச் செலுத்திஞன் அவன். காப்பியை அருந்தியதும், குலேத்துங்கனின் நினைவையும் சேர்த்துத்

தொண்டைக்குள் திணித்தான். குலோத்துங்கனின் நினைவு அவனுடைய 'ரகசியப் பை'யை அழுத்தி விட்டது. ' அத்தனை பணமும் ஏது ? டைரியில் என்ன எழுதப்பட்டு இருக்கும் ? புகைப்படங்கள் என்னென்ன ?...ஆமாம் ; அந்தப் பை எங்கே? மேகலைக்கு சர்வ நிச்சயமாகத் தெரியாமல் இருக்கமாட்டாது; கேட்கலாமா? ' என்று மூளையைக் குழப்பினான்.

அதற்குள் நிகழ்ந்தது :

"அத்தான், என் தோழிக்கு விருந்து வைத்தோமில்லையா, அப்போது உங்களைப் பத்தி ரொம்பவும் உயர்வாகச் சொன்னாள். திருச்சியில் படிச்சிக்கிட்டிருக்கையிலே உங்களோட சேர்ந்து நடிச்சாளாமே ?... நான் இருந்த போத்தான் நீங்க அவளோடு சரியாகப் பேசலையாம் : மற்ற நேரத்திலே செளஜன்யமாப் பழகினீங்களாம். மாதவி சொன்னாள். உங்க நண்பர் கல்யாணத் தன்னிக்குக் கூட அவள் குழந்தை உங்ககிட்டே எவ்வளவு ஒட்டுதலாயிருந்துச்சு ! சின்ன வயசிலே பழகுகிறதினாலே உண்டாகிற சிநேகிதத்தின் மகிமையே அலாதிதான். இல்லீங்களா ?" என்று மென்னகை பயின்றாள் மேகலை.

சினம் காட்டினால், தம் பலத்தில் பேர்பாதி எதிரியைச் சார்ந்து விடுமென்ற நிலையில் சிரித்து எரித்த விரிசடைக் கடவுளின் செயலைச் சாகஸம் என்றுதான் தீர்மானிப்பவன் மாமல்லன். ஆனால், பிறிதொரு சமயமாயிருந்தால். மேகலை இவ்வாறு சிரித்ததற்கு அவன் புதுக் காரணம் கற்பித்துக் கொண்டிருப்பான்; சித்தம் பேதலித்திருப்பான் ; இப்போது அவள் காட்டிய வெண் பவளப் புன்முறுவல் அவனுடைய உந்திக் கமலத்தைத் துளைத்தெடுத்தது ; குலோத்துங்கன்—மேகலை ஒன்றாகக் காட்சி தந்த அந்தப் புகைப்படம். குலோத்துங்கன் மல்லைத் துறையிலும், மற்ற இடங்களிலும் கிருக்கியிருந்த கோட்டுருவச் சித்திரங்கள், குலோத்துங்கனின் பரிசுப் பொருளாகத் தலை காட்டிய தங்கச் சங்கிலி !......எல்லாவற்றைப் பற்றியும் ஒரே மூச்சில் பட்டவர்த்தனமாகக் கேட்டு விடை தெரிந்து

கொண்டால், மனத்தின் ஆணிவேரில் அணைந்த சந்தேகப் பூச்சியை சாகடிக்க முடியும் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்த போதிலே, மேகலையே தன்னை ஐயப்படும் போக்கில் விஞச்சரம் தொடுத்த அவளின் போக்கு அவனைத் திரும்பவும் சுட்டெரிக்கத் தொடங்கி விட்டதே...!

இனம் புரியாத புதிய சலனம் எழுந்தது.

பூசி மெழுகுவது மாதிரிதான் அவனால் சிரிக்க முடிந்தது. இந்தச் சிரிப்பை எவ்வகையில் ஒதுக்க வேண்டும்? திரிபுரத்தைச் சாம்பராக்கிய இனமா? ஊஹூம்!

'கண்டதும் பொய்; கேட்டதும் பொய்; தீர விசாரித்தறிவதே மெய்;'

மனித மனத்துள் உறைந்த தெய்வ மனம் விழித்தது, விளித்தது!

"என்ன அத்தான், பேசாமல் இருக்கீங்களே?"

"வந்து......நீ சொல்றது நிஜந்தான். மாதவி நல்ல பெண். தமிழ்ப் பண்போடு பேசிப் பழகிறதிலே தவறுதல் ஒண்ணும் இல்லையே, மேகலே!"

தெய்வமே! அவள் இப்படிப் பூரித்து யுகங்கள் பல நெளிந்தோடி விட்டனவே!

"அத்தான், இதைக் கொஞ்சம் பாருங்களேன்!"

குலோத்துங்கனும் மேகலையும் சிறு வயதுடன் தோன்றினார்கள்—அந்தப் புகைப் படத்திலே!

மாமல்லனின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது!—'நான் மறைத்து வைத்திருந்த இந்தப் போட்டோ எப்படி இவளிடம் வந்தது?'

"அத்தான்...!"

"மேகலே...! மேகலே...!"

"இந்தப் படத்தை முன்னாடியே பார்த்திருக்கீங்களா?"

"இல்லே!... இல்லையே...!"

"அத்தான்!"

"என்ன, மேகலை...?"

"ஒரே ஒரு கேள்வி: என்னை நீங்க நம்புறீங்களா, அத்தான்?"

"ஏன் அப்படிக் கேட்கிறே, மேகலை? உன்னை நம்பாமல் இந்த உலகத்திலே வேறே யாரை நான் நம்புவேன், மேகலை?..."

"இன்னொன்று!"

"கேள்!"

"ஏங்க! சீதாப்பிராட்டியார் தன் கற்பு நெறியை ருசிப்பிக்க நடத்திக் காட்டின தீக்குளியைப் பத்தி உங்களுக்கு என்ன அபிப்பிராயம்...?"

"அதைப் பத்தி இப்போ என்ன பேச்சு?"

"சும்மா சொல்லுங்களேன்!"

"ஊர் உலகத்துக்குத் தன் தூய்மையைக் காட்டத்தான் தீக்குளி நிகழ்ச்சியை தசரதராஜகுமாரன் உண்டாக்க வேண்டி வந்தது!..."

"ஓஹோ!"

"மேகலை, இப்போது உனக்கு ஏன் இந்த ஞாபகம்?..."

"என்னமோ ஞாபகம் வந்துச்சு; என்னமோ கேட்டேன்!"

"சரி, நான் உன்கிட்டே இரண்டொரு விஷயங்களைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாமா, மேகலை?"

"அத்தான், உங்களுடைய குழந்தையை உங்கள் கையில் ஒப்படைக்கும் மட்டும் என்னை நிம்மதியாக இருக்க அனுமதியுங்கள். என்னை நம்புவதாக நீங்கள் இதயம் உணர்ந்து சொன்னது ஒன்றே எனக்கு நிம்மதியளித்து விடும். நான் பாக்கியவதி. அத்தான், பாக்கிய

வதி! அம்பிகையை நம்பினேன்; சரணடைந்தேன். நான் கேட்ட வரம் தந்து விட்டாள்!'

"மேகலே!..."...என் அன்பே...ஆருயிரே ..."

மாமல்லனின் காற் பாதங்களில் இமைப்பனி திரை மறித்தது.

"அண்ணு!" என்று உரிமை பாராட்டி வந்தாள் சிந்தாமணி.

அவளைக் கண்டதும், நினைவொன்று கிளர்ந்தெழுந்தது, குலோத்துங்கனின் சித்த பேதத்துக்கு மாற்று மருந்தை உபதேசித்த உளநூல் வல்லுனரொருவர் தெரியப் படுத்தின வார்த்தைகள் முண்டி எழும்பின; 'குலோத்துங்கனுக்குத் திருமணம் ஒன்றுதான் உடனடியான விடிவைக் காட்ட இயலும்! இல்லையெனில், அவனது பருவத்து உணர்ச்சிகளே அவன் உயிரைக் குடித்து விடும்!'

மாய லோகத்துக்குரிய நிதி மிகுந்த—நீதி நிறைந்த திருமாறனின் ஞாபகம் சொடுக்கி நின்றது. சிந்தாமணியை அவன் வசம் ஒப்படைப்பதாகச் சொன்ன உறுதி சிலிர்த்தது. ஒரு விநாடி கடந்ததும். மாமல்லனின் முன் சிந்தாமணி வைத்த கடிதம் இது;

"குலோத்துங்கன்.

என்னிடம் சிந்தாமணியை ஒப்படையுங்கள். அவள் வாழ்வுதான் உங்கள் இன்பம் என்றீர்களே? ஆகையால், நீங்கள் எங்கட்கிடையிலே நந்தியாக மாறக் கூடாதல்லவா? இன்னமும் பணம் கொடுக்கிறேன். ஓடிவாருங்கள். உங்களை உயிருள்ள வரை மறவேன். என்னுடைய கனவுக் கிளியின் இன்ப நிழலிலே நான் அமர்ந்தால்தான் நான் உயிருடன் உலவ முடியும்!

இப்படிக்கு,
திருமாறன்."

## 20

'பண்ணிய பாவமெல்லாம் பரிதிமுன் பனியேபோல
நண்ணிய நின்முன் இங்கு நசித்திடல் வேண்டும் அன்னாய்!'

ஊமை கனவு கண்டால், அதைப் பிறருக்குச் சொல்லமுடியாது. ஆனால் மாமல்லனோ ஊமையல்ல; என்றாலும், அவன் வாய்மூடி மௌனியானான். இன்னோர் உண்மையும் உண்டு. அவன் கனவு காணவுமில்லை. ஆனாலும் கனவில் கண்டதுபோலத்தான் இருந்தது-திருமாறன் குலோத்துங்கனுக்கு வரைந்திருந்த அந்தக் கடிதமும், அதை சிந்தாமணி எவ்விதமான சலனமுமின்றி அவனிடம் நீட்டிய பாவனையும். உள்ளத்தை அனுமானித்து உணர்ந்து கொள்ளும் சக்தி உருவத்துக்கு எப்போதுமே கூடிவருமென்று கணித்திட முடிவதில்லை. சிந்தாமணியைப் பொறுத்தவரை மாமல்லன் கண்ட கோலம் இது. மற்றுமொரு விலக்குவிதியும் இருக்கிறது. உள்ளத்தை உள்ளபடி பிரதிபலித்துக் காட்டிக் கொடுக்கும் பண்பு யதார்த்தமாகவே உருவத்தில் தேங்கி விடுவதும் இயல்பு. இதற்கு அடையாளம் : மாமல்லன்.

சிந்தாமணி முன் வைத்த கடிதத்தைப் படித்த மாமல்லன் மனச்சாட்சியின் சந்நிதியில் கைகட்டி, வாய் புதைத்து நின்றான். கண்களுக்குக் கட்டுப்பாடு விதிக்க அவன் யார்?

"அண்ணா !"

உச்சிமுதல் உள்ளங்கால் முடிய நடுக்கம் ஏற்பட்டது. 'அண்ணா' என்னும் பாசக்குரலை அனுப்பிய தங்கைக்குப் பதில் அனுப்ப என்ன சொல்வதென்று சிந்திக்க அவனுக்கு உள்ளம் ஏது? உருவந்தான் ஏது? மனச்சான்றின் காலடியில் தவம் கிடந்தான்.

மாமல்லனின் விழிகள் இரண்டிலுமிருந்து ஆவி பறந்தது. அவனுடைய ஆவி பிரிந்து விட்டால்கூட தேவலாம் போலத் தோன்றியது. திருமாறன் தனக்குப்

போட்டியாக ஒரு காலத்தில் அமைந்த நிகழ்ச்சியைப் பெரிதாக்கி மனத்தில் தேக்கிக் குழப்பிக் கொள்ளும் அளவுக்கு சின்னபுத்தியை வளர்த்துவிட விரும்பாத அவன், அதே திருமாறன் சார்பில் தன்னை உடந்தைப் படுத்தி, குலோத்துங்கனிட மிருந்து சிந்தாமணியைப் பிரித்து, நீதியைத் துண்டித்து, நிதியிடம் அவளை அண்டச் செய்யத் திட்டம் புனைந்தவன் இதே மாமல்லன் தானே?...கைக்குக் கிடைத்த நிழற்பட மொன்றிலே சின்ன வயசில் தன் மேகலையும், தனக்கு முன்பின் அறிமுகமில்லாத குலோத்துங்கனும் இருக்கக் கண்டு, அதன் விளைவாக, ஒருநாள் இரவு மேகலையும் குலோத் துங்கனும் ஒரே படுக்கையில் இருந்ததாகக் கனவு கண்டு, உதிரம் கொதித்து வந்தவனும் இந்த மாமல்லனே யல்லவா? மனம் சலனமுற்றால், மனத்தின் பிரதிபலிப் பான கனவுகளும் பிழைபடத் தோன்றுவது இயல்பு தானே?

உடன் பிறவாப் பாசம் அவனைச் சுண்டியிழுத்தது.

"சிந்தாமணி, கண்கலங்காதே, அம்மா. உன் அத்தான் குலோத்துங்கன் உன்னுடையவர்; அவரை எங்கிருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து உன்னிடம் ஒப் படைக்கிறேன். திருமாறன் நல்லவர். ஆனாலும், சபல உள்ளம் கொண்டவர். என்ன செய்வது? மனிதர்களுள் அவரும் ஒருவர். ஆகவே, குறைகள் இருப்பது இயற்கை. திருமாறன் என் சொல்லுக்குக் கட்டுப் படுவார். நீ அஞ்சாதே. என்னுள் நீ தோன்றி விளையா டாத பொழுது கொஞ்சம்; கூடப் பிறந்த தங்கை யெனவே உன்னை நான் மதிக்கிறேன். பணமும் பண்பும் நிறைந்த திருமாறனின் கைகளில் உன் எழிலைப் பாது காப்புப் பொருளாக்க நானே பல முறை எண்ணியது உண்மை. அது தவறு என்பதை இப்பொழுது உணர்கி றேன். என்னைப் பொறுத்தருள் சகோதரி. முன்னொரு நாள் உன் புகைப் படம் என் புத்தகத்தில் இருக்கக் கண் டேன். அதை நேற்று மறுபடியும் பார்க்க நேர்ந்தது. உன் உரு என் உள்ளத்தை மாற்றியது. நடந்த சில மாதங்களாக நான் மனிதத்தன்மையை இழந்து விட்டி ருந்தேன். பித்தனானேன்; பேயாக உருமாறுது போயி

னும், உள்ளம் பிசாசாக உருவெடுத்தது. என் மேகலை வாயும் வயிறுமாக இருக்கிறாள், அவள் புதுவாழ்வு பெற்றவுடன், அவளிடமும் மன்னிப்புக் கேட்கப் போகிறேன் ; அவளிடமிருந்து எனக்கு மன்னிப்புக் கிடைத்தால்தான் நான் மனிதனாக உலவ முடியும் !"

மாமல்லனின் பேச்சு முடிந்தது ; கண்ணீருக்குப் பின்னணியாக மேகலைக்குரிய எழிற் சித்திரம் தோன்றியது.

மேகலை ஆற்றாமையினால் தவித்தாள். அன்புச் சுமையின் இன்பத் தவிப்பு அவளுக்கு ஒரு விநாடி அற்புதக் கனவாகத் தெரிந்தது ! மறுகணத்தில் அவளுடைய மேனி நடுங்கியது. தீர்ப்புக் கூறப்போகும் நீதி அரங்கமாகக் காட்சி கொடுத்தது, பிரசவ அறை. பிள்ளைக்கனியமுதின் பேசும் சித்திரம் தாய்மையை ஆசீர்வதித்தது. பெண் பூரணமடைவது கணவனின் பாத நிழலில்தான் ; ஆனால் அவள் நிறைவு காண்பது மதலைச் செல்வத்தின் குஞ்சுப் பாதங்களில்தானே ! 'தாய்மை' என்னும் பக்குவ நிலையை இயற்கை விதிக்காதிருந்தால், 'பெண்மை'க்கு அங்கே மகிமை குறைச்சல்.

'உன்னை நம்பாமல் இந்த உலகத்திலே வேறே யாரை நான் ந புவேன், மேகலை...?' என்று மொழிந்தவன், அவள் அருகே அயர்ந்த தூக்கத்தில் கட்டுப்பட்டுக் கிடந்தான். 'பாவம், அத்தானுக்கு எம் மேலே உள்ளூர துளியாச்சும் கோபம் இருக்கத்தான் இருக்கும். நான் என்ன செய்யட்டும் ? இரண்டுங்கெட்ட நிலையிலே என்னாலே அவர் இஷ்டத்துக்கு தினமும் எப்படி தலையசைக்க முடியும் ?.....மங்களாம்பிகைத் தாயே!... இந்த மூன்று மாசமாகத்தான் நான் பழைய மேகலையாகியிருக்கிறேன் !' என்று எண்ணச்சரம் தொடுத்தாள்.

"என் வாழ்வின் நிலையே நீங்கள்தானே, அத்தான்!"

திருமணத்துக்கு முன் தன் அத்தான் சொன்ன அதே சொற்களை அவள் உதடுகள் இப்பொழுதும் உச்சரித்தன. அவளது உயிர்நிலையில் அமைதி கனிந்தது. மனத்தில் கண்ணீர் கசிந்தது. தோன்றிய அமைதியைத்

தட்டிப் பறிக்க, நடந்த நிகழ்ச்சிகள் சில அவள் மனக் கண் முன் நாட்குறிப்புப் புத்தகமாயின. அவற்றை அவள் ஒரு பொருட்டெனக் கருதவில்லை. நட்ட நடு இரவில் தொட்ட தூக்கத்தையும் எட்டி விலகிடப் பணித்தாள்; மாடியறையிலிருந்த உக்கிராண அறையை நாடிச் சென்றாள். குலோத்துங்கனின் பிரயாணப் பையை எடுத்தாள். பன்னெடு நாட்களாகத் தனியறையில் அடைபட்டுக் கிடந்த காரணத்தினால், பையின் மேற் பரப்பு முழுவதிலும் தூசியும் தும்பட்டையும் அப்பி யிருந்தன. சிலந்தி வலை ஒன்று காணப்பட்டது. அவ் வலையினுள் தானே சிக்கிக்கொள்ளப் பக்குவப்பட்ட, அல்லது துணிவு மேற்கொண்ட மனம் அவளுக்குக் கை கொடுத்தது. பாம்பின் வாய்க்குள் கைவிட்டாற் போன்று ஒரு சமயம் மாமல்லன் தவிக்கவில்லையா? அவன் அன்றைக்குக் கண்ட ரூபாய்க் கற்றைகள், டைரி, புகைப் படங்களைக் கொண்ட உறை தாம் அவளுக்கு முன்னிலையிலும் காணப்பட்டன.

மேகலையின் உடல் பதறவில்லை; அவள் மனம் சிதறவில்லை. சலவைத் தாள்களான ரூபாய் நோட்டுக் கள் புறப்பட்ட இடத்தை அவள் அறிந்தாள். திரு மாறனின் கடிதம் அதற்கு உதவியது. முதன் முதலில்—அதாவது, தனக்கென தன் தந்தையால் திருமாறன் நிர்ணயம் செய்யப்பட்டிருந்த சமயத்தில் அவன்மீது அடங்காத ஆத்திரம் வைத்திருந்தாள். ஆனால் அந்த ஆத்திரம் பிறகு அனுதாபமாக மாறியது. ஒட்டிய உள்ளங்களின் பூர்வ கதையைக் கேள்விப்பட்ட வுடன், கண்ணியத்துடன் ஒதுங்கி பண்புடனும் பாசத் துடனும் நடந்த அவனுக்கு அவள் கருத்தில் உயர்ந்த இடம் அமைந்தது. 'இன்னமும் பணம் கொடுக்கிறேன்; ஓடி வாருங்கள்!' என்ற திருமாறனின் கடிதக் குறிப்பு அவளுடைய மனத்தில் மாற்றத்தை உண்டு பண்ணி யது. 'தமிழ்ப் பண்பை அழிக்க இவர் பணத்தை ஏவி விட்டிருக்கிறாரே...!' என்று வருந்தினாள். "ஒரு வேளை இக்கடிதத்தில் ஏதாகிலும் தப்புத் தவறு ஏற்பட்டிருக் குமோ, அத்தான்!" என்று மாமல்லனிடம் அவள் வினவியதற்கு, "இது திருமாறன் கையெழுத்துத்தான்;

நான் நேரில் சென்று அவனைச் சந்திக்கிறேன்'' என்று பதிலளித்தான்.

ஒருநாள் கங்குல் மனை மிதித்த நேரத்தில், கோசலை அம்மாள், சிந்தாமணி, மேகலை மூவரும் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். சிந்தாமணியின் முகம் சாம்பிப் போயிருந்தது. "மேகலை, ஒரு காலத்தில் உன்னைப் பெரிய இடத்து மருமகளாக ஆக்க உன் அப்பா ஏற்பாடு செஞ்சிருக்கையிலே, சிந்தாமணிதான் உன் இடத்தை இட்டு நிரப்பப் போகுதின்னு நான் மனசிலே நினைச்சு ஆறுதல்பட்டேன். எனக்கு எப்படி யெப்படி யெல்லாமோ தேறுதல் சொன்னிச்சு இது. ஆனா, இப்ப இதுக்கு என்ன சொல்லி எப்படி அமைதிப் படுத்திறது என்கிற வகைதான் விளங்கலே. குலோத் துங்கன் எங்கே போச்சோ, தெரியலே. சிந்தாமணி! நல்லவங்களை கடவுள் சோதிக்கிறதுதான் வழமை. ஆனால் கடைசியிலே அவங்களுக்கு நல்ல வழி காட் டுறதுதான் தெய்வத்தின் விளையாட்டு ரகசியமா இருந் திருக்குது. உன் அண்ணன் மாமல்லன் உன் பேரிலே உயிருக்குயிராய் இருக்கிறபோது, நீ கலங்கவேண்டிய தேவை இல்லே, அம்மா!'' என்றாள் கோசலை.

வார்த்தைகளுக்கு அமைதி காட்டும் தந்திரம் கைகொடுப்பதென்பது. மலையைக் கல்லி எலியைப் பிடிக்கும் கதைதான். வெந்த இரவுகளை விரல்விட்டுக் கழித்தாள் சிந்தாமணி. மேகலைக்கு புதிய ஆலோசனை தோன்றியது. 'சித்தன் போக்கு சிவன் போக்கு என் றிருக்கும் குலோத்துங்கனை மணந்து இவள் என்ன இன்பம் காணப்போகிறாள்? திருமாறனைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் என்ன?' என்று எண்ண மிட்டாள். சுற்றி வளைத்துப் பேச்சைத் தொடங்கி, நினைத்த கட்டத்திற்கு அவளைப் பரபரவென்று இழுத்து வந்து நிறுத்தினாள். "அண்ணி, எனக்கு என் அத்தான் தான் உயிர், உலகம் எல்லாம். அவர் இல்லையானால், நான் இல்லை!'' என்று தீர்ப்புக் கூறிவிட்டவளிடம், பேச என்னதான் காத்திருக்கப் போகிறது?

மேகலை வெள்ளோட்டம் விட்ட மனோரதப் பிரயா

ணம் வேறு திக்கில் மடங்கியது. நிழற்படங்கள் அடக்கி வைத்திருந்த கூட்டை உதறினாள். முதன் முதலில் அவள் விரல்கள் பற்றியெடுத்த அந்தப் படத்தில் குலோத்துங்கனும் தானும் இருப்பதைக் கண்டாள். கட்டிய கணவனின் மேஜையடியிலிருந்து கண்டெடுத்த அதே படத்தின் வேறு பிரதி இது; பிஞ்சுப் பிராயத்தில் எடுக்கப்பட்டது. அவள் நினைவு கூட்டிப் பார்த்து, முடிவு கூட்டிச் சிந்தித்த பழைய விஷயம்:

திருச்சியில் பிறந்து வளர்ந்த குலோத்துங்கனின் பிஞ்சுப் பிராயத்தை அரியலூர் வளர்த்தது; ஏனென்றால், அவன் தாய் தந்தையர் அங்கேதான் வயிற்றுப் பிழைப்புக்கு ஒதுங்கினார்கள். அப்போது குலோத்துங்கனும் மேகலையும் ஓடிப் பிடித்து விளையாடினார்கள். ஒரே வட்டியில் உணவுகொண்ட இடைப்பொழுதும் இருந்தது. 'என் ஆசை அத்தான் ஒருவரைப் பற்றியே சதா நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு மற்றவர்களைப்பற்றிய ஞாபகம் என் நெஞ்சில் எப்படி நிலைக்க முடியும்?'— அதனால்தான் அவளாகவே இந்தப் போட்டோவைப் பற்றி முன்பு மாமல்லனிடம் பிரஸ்தாபித்தாள்.

அடுத்த உருவப் படம் விரலிடுக்கில் ஆடியது. பஞ்சணை மெத்தையில் சாய்ந்து பால்வண்ண நிலவொளியில் மிதந்து கொண்டிருந்தாள் மேகலை. வேறொன்று: குளிக்கும் அறையைவிட்டு வெளியேறிய நிலை. விற்புருவங்களிடையே மானின் மயக்கம்: தாமரை முகத்தில் இளமைப் பருவ எழிற் சேர்க்கையின் செவ்வரிகள்; உதடுகளிலே போதை யூட்டும் பாவனை; மாங்கல்யம் சரண் புகுந்த இடத்தில் மாண்புகொண்ட தமிழ்ப் பண்பு இளநகை புரிந்தது. மேகலைக்குத் தன் படத்தைப் பார்த்தபோது என்னவோ செய்தது. வீசினாள். மற்ற படங்களை நடுங்கும் கைகளால் அள்ளினாள். எல்லாம் மேகலையின் பல்வேறு கோணப் படங்கள்தாம்!

உதிரத் துளிகளை மனக்கண் உதிர்த்துக்கொண்டேயிருந்தது.

**நாட் குறிப்பின் இதழ்கள் விலகின:**

'மேகலை! ஓடிப் பிடித்து நாம் இருவரும் விளையாடினேம். அப்பொழுது நீ தொட்ட இடம் இன்னும் என் மணிக்கட்டுகள் இரண்டிலும் புதுமணம் கூட்டித் திகழ்கிறது. என் கைதொட்ட உன் உள்ளம் இன்றளவிலும் என் இதயமெங்கிலும் இடைவெளி ஏதுமின்றி எதிரொலி செய்கிறது. என்னையும் அறியாமல் என்னுள் நீ வளர்ந்துவிட்டாய்; என்னையும் மீறி உன் நினைவு என் நெஞ்சத்தில் நிலைத்துவிட்டது. பட்டணத்தில் என் முறைப் பெண் சிந்தாமணியின் வீட்டில் நான் இருந்தபோதெல்லாம், உன் இன்ப நினைவு ஒன்றே தான் எனக்கு ஆறுதலாக அமைந்தது. அது ஒன்றே என்னை வாழ வைத்தது. ஆனல் நாளா வட்டத்தில் என்னில் நீயாகவும், உன்னில் நானுகவும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்த 'விசித்திரமான நிலை' வலுக்கத் தொடங்கி விட்டதே!...உன்னை எங்கெங்கோ தேடியலைந்தேன்; தேடி அலுத்துப் போய்விட்டேன். ஒரு முறையாவது நான் உன் முகதரிசனம் காணமுடியாதா?...'

'ஹஹ்ஹா! என் மேகலையை வேறொருவன் அபகரித்துக் கொண்டானே?...அரியலூர் என்ற பெயர், சித்தம் குலைந்த என் சித்தத்தில் முன்னமேயே தோன்றியிருக்கலாகாதா? மேகலை! நீ எங்கே போனுல் என்ன?... என்றென்றும் நீ என் மனக்கோயிலில் கொலு வீற்றிருக்கும் கண்கண்ட தெய்வம்.'

'ஐயோ! மேகலை மாற்ருன் மனையாட்டியாயிற்றே?... அவள் நினைவில் மனம் பேதலித்துத் திரிவது பெரிய தவறு; தெய்வமே, மனத்தால் பிற பெண்டிரை நினைத்தல்கூட பாவமென்கிருர்கள். மேகலை, நீ ஏன் என்னை பைத்தியமாக்குகிருய்? விட்டகுறை தொட்ட குறையா? ஆண்டவனே, என்னை மன்னித்து விடு.'

'என்னிடம் அத்யந்தமான பாசமும் அன்பும் பூண்டிருக்கிற மாமல்லனின் துணைவி மேகலையின் கையால் அவள் பிறந்த மனையில் காப்பி வாங்கிக் குடித்தேன். இன்றைக்கு என் வாழ்விலே ஒரு திருநாள்போல. உனக்குக் கல்யாணப் பரிசு தர ஆசைப்படுகிறேன். உன் சங்கிலியைக் கொடு!' என்று மேகலையிடம் கேட்டு

வாங்கி, அதை மாமல்லனிடம் பரிசளித்து விட்டேன்; ஹஹ்ஹா!'

''பாவம், சிந்தாமணி! தஞ்சாவூரில் உறவினரிடம் கடன் வாங்கி, என் சித்த பேதத்துக்குச் சிகிச்சை கொடுக்கச் செய்தாள். ஆனால், எனக்கு என்னவோ திரும்பத் திரும்ப மேகலையே கண்ணுக்குள்ளாக நின்று தவம் செய்து கிடப்பதைப் போன்று ஒரு உணர்ச்சி எழுகின்றது. கிடைக்கும் கரித்துண்டு கொண்டு, குறுக்கிடும் சுவர்ப் பகுதிகளிலே கோடுகளைக் கிறுக்கி விளையாடுகிறேன். மேகலைதான் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உருக்காட்டுகிறாள். ஊண் இன்றி, உறக்கம் அழிந்து, உற்ற இடம் துறந்து, பெற்ற மனை இழந்து இப்படிச் சுற்றியலைந்து ஊர்ப் பெயர்களைத் தெரிந்து கொள்ள நான் செய்த பாவம்தான் என்ன?

'இளம் பருவத்தின் ஏற்ற மிக்க நாட்களெல்லாம் வீணே கழிந்தன. எஞ்சிய தினங்களும் இவ்வாறே கழியவேண்டுமா? பின், ஏன் திருமாறன் குறுக்கிட்டிருக்கிறார்? என் கண்களில் பணத்தைக் காட்டி என் பைத்தியத்தை மிஞ்சச் செய்கிறாரே?'

'ஆஹா, நொந்த மனசுடன் மெரினா கடற்கரை வெளியில் கண் வளர்ந்தபோது, கனவில் மேகலை தோன்றி என்னருகில் அமர்ந்திருந்தாளே! ஆஹா!'

'ஆ! மாமல்லனா இப்படி என்னை சாகடிக்கத் துணிந்தார்? விஷம் கலக்கப்படவில்லையெனில், அந்தப் பூனை அன்றிரவு அந்த பாலைப் பருகின சடுதியில் ஏன் மாண்டது?...ஏன் மாமல்லன் என் உயிரைப் போக்க வேண்டும்?...செயல் முறையில் மேகலையிடம் தகாத விதமாக ஒருமுறைகூட நடந்ததில்லையே?...'

"ஐயோ, தெய்வமே!'' மேகலை அலறினாள். பயம் மண்டியிருந்த பேரமைதியைத் தூக்கியடிக்கும் வண்ணம், அச்சம் தந்தது அவளது கூப்பாட்டொலி. வயிற்றின் பாரத்தைப் பார்க்கிலும் தலைப்பாரம் அதிகமாய்க் கனத்ததை உணர்ந்தாள். தலை முடியைப் பைத்தியக்காரி மாதிரி பிய்த்தெடுத்தாள்; சேலைத் தலைப்பு சரிந்ததைக் காணவில்லை. அருகில் தட்டுப்பட்ட தீப்பெட்டியை

எடுத்தாள். தீக்குச்சியை உரசினுள்; தீ கண் திறந்தது. எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சாம்பலாக்கக் குனிந் தாள். ஏந்திய தீயை வாய் ஊதிவிட்டது.

விரக்தியும் வேதனையும் நீள் மூச்சும் சங்கமித்துப் பிறப்பித்த நகைப்பொலியில் இந்தக் குரல் கலந்தது. "...அயோத்தி ராமனுக்குச் சொந்தமான சீதாப்பிராட்டி யார் தீக்குளி நடத்திய மாண்பு மிக்க நிகழ்ச்சியைச் சொல்லும் கதை அது. அதை வைத்து விடு, மேகலை!"

பாதங்கள் கண்ணீரில் அழுந்தின. 'என் ஜாதகமும் அத்தான் ஜாதகமும் பொருந்தவில்லையென்று கேள்விப் பட்டு அரியலூருக்கு ஓடோடி வந்து கண்ணீர் மல்க நின்ற அத்தானின் கண்ணீரை நான் துடைத்தேன். இப்போது நான் தனிமையாக நின்று கண்ணீரை வடித் துக் கொண்டிருக்கிறேனே! தெய்வமே, நீயாகிலும் எனக்கு இரக்கம் காட்டமாட்டாயா? குலோத்துங்கனிட மிருந்து கிடைத்த அந்தப் படத்தை—நானும் குலோத் துங்கனும் சிறு வயதில் ஒன்ருக இருந்தபோது எடுக்கப் பட்ட புகைப் படத்தைக் கண்டுதான் என்னைச் சந்தேகப் பட்டிருக்க வேண்டும் என் அத்தான். மாதவியின் பந்தத்தை விட்டகல கோவலனுக்கு வாய்த்த கானல் வரியா இது? இந்தக் குப்பைகளை எல்லாம்கூட அவர் கட்டாயம் பார்த்துத்தான் இருப்பார். இல்லையென்றால், எங்களிடையே இத்தகைய பெரும் பிளவு முன்பு ஏற்பட் டிருக்காது! மிதிலைச் செல்வி பாக்யவதி. கணவனை அஞ்சனவண்ணன் ஐயமேதும் வைக்காதிருந்தும், ஊர் உலகுக்கு மெய்ப்பிக்க வேண்டி தீக்குளி நடத்தினுள். ஆனல், நான் எப்படி என் தூய்மையை வெளிக்காட்டு வேன்? விடிவு காட்டும் கருணை வடிவமே! எனக்கு ஒரு வழி சொல்; அல்லது பாதையைக் காட்டு! என் அறிவு க்கு அப்பாற்பட்டு, அன்னியன் மனத்தில் வெறியுடன் நிலைக்கப்பட்டு வந்த நான் தூய்மை பெறவும்—என் தூய்மையை என்னுடைய பதி அறியும்படியும் செய்.'

மறுமுறையும் தீப்பெட்டி அவள் முன் வந்தது. எடுத்துப் பற்ற வைத்தாள். சேலைத் தலைப்பை வரிந்து

கட்டிக் கொண்டாள். மண்ணெண்ணெய்ச் சீசா காலியானது. சேலை நனைந்தது. தீ எறியத் தலைப்பட்டது.

'முழு முதற் கடவுளே, என் அன்பு அத்தான் எனக்குக் கிட்டாமலிருந்திருந்தால், என்றைக்கோ நான் மண்ணோடு மண்ணாகி விட்டிருப்பேன். ஆனால், என் ஆசை அத்தான் கிடைத்தும், இன்று அவரைப் பிரியவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது. நானும் என் கணவரும் ஓருயிராக நிலவ எண்ணினோம்; ஆனால் விதி எப்படியோ விளையாடி விட்டது. இப்பொழுது ஈருடலை நான் ஒருத்தி சுமந்துகொண்டு பிரியப் போகிறேன். மஞ்சள் குங்குமத்துடன் பூவும் புன்னகையும் மிளிர எனக்கு விடுதலை கிடைக்கப்போகிறது. கடைசி வரை அயோத்தி ராமர் நெஞ்சில் சீதை இடம் பிடித்துக் கொண்டதுபோல, என் பிராணநாதரின் நினைவிலும் இதயத்திலும் எனக்கு ஓர் இடம் அளிக்க கருணைபுரி, தெய்வமே!'

"மேகலை!...மேகலை!"

மாமல்லன், கோசலை அம்மாள், சிந்தாமணி மூவரும் ஓடி வந்தார்கள்.

மேகலை பிழைத்தாள்; பிழைத்தது மறு பிழைப்பு. அவள் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தாள். கை விரல்கள் பத்திலும் நெருப்புப் பொக்களங்கள்; காற் பாதங்களின் முன் பகுதிகளில் ரத்தம் கன்றிய சிவப்பு; அவள் வாய்விட்டு விம்மிக் கொண்டிருந்தாள்.

கண்களில் அணை கடந்த வெள்ளமும் இதயத்தில் ஆறுத கண்ணீரும் சூழ அமர்ந்திருந்த மாமல்லன் அவளது நெற்றிப் பொட்டைத் தடவிக் கொடுத்த வண்ணம் இருந்தான்.

"மேகலை, ஏன் கண்ணே அப்படிச் செய்யத் துணிந்தாய்?...என்னுடைய புத்தி கெட்ட செயலுக்கு நீ எனக்குப் பாடம் படித்துக் கொடுக்க எண்ணியா உன்னையும் உன் செல்வத்தையும் நீ அழித்துக்கொள்ள பிரயத்தனப் பட்டாய்?...ஐயோ, இன்னும் ஒரு கணம் தாமதித்து நான் தீப்பிழம்பின் சுடரொளியைக் கண்டிருந்தால்கூட,

உன்னை நான் உயிருடன் கண்டிருக்கமாட்டேன்?... அரியலூரில் என் கண்ணீரைத் துடைத்த புனிதவதியா யிற்றே நீ! என் கனவுகளைக் காத்து, உன் ஏழை அத்தா னுடன் வாழத் துணிந்து உன் பெருந்தன்மையை நிரூ பித்துக் காட்டி என் மனத்தவத்தைப் பலிக்கச் செய்து ரட்சித்த மகேஸ்வரியும் நீ தானே!...என் எண்ணங் களின் குழப்பங்கள் காரணமாக சலனமடைந்த என் மனம் உன்னைத் தவருக எண்ணியதற்குத்தான் நீ தீக்குளி நடத்தினுயா?...உன்னில் நானாக இயங்கி— என்னில் நீயாக என்னை இயக்கி—காதலே கனவாகவும், கனவே காதலாகவும் உருமாறி, தெய்வத்தின் சம்மதம் பெற்று இன்ப வாழ்வு தொடங்கிய எனக்கு நீயே தெய்வமாகத் தோன்றினுய்; நான் நினைத்ததையே ஐயனும் நினைத்த விந்தை என் வாழ்வில்—நம் வாழ்க் கையில் ஓர் அதிசயம் என்பதை வரம்புக் கட்டிப் பார்க் கும் போதெல்லாம் விதியையே வென்றுவிட்ட மாதிரி ஓர் இறுமாப்பு என் ரத்த நாளங்களில் உறைந்தது. மனிதன் கண்ட கனவு நூற்றுக்கு நூறு வெற்றி பெறுவ தென்றால், உண்மையிலேயே மாபெரும் சாதனை தானே? அந்தச் சாதனைக்குத்தான் சோதனை விளைந்தது போலும்!...“குலோத்துங்கன் ஓர் அரைப் பைத்தியம் என்ற நிலையை எண்ணி அவனை மன்னிக்க ஒப்பவில்லை என் மனம். எனக்கு ஒருவனுக்கே ஏகபோக உரிமை பூண்ட உன்னைப்பற்றிய நினைவில் அலைந்த அந்நியனை கைலாசத்துக்கு வழியனுப்பி வைக்கவும் துணிந்தேன். என் உயிரை சோதிக்க இவனுக்கு ஏது உரிமை?... மஹாபலிபுரக் கடற்கரைக் கோயிலொன்றிலே வரையப் பட்டிருந்த பெண் சித்திரத்துக்குக் கீழே ‘மேகலை’ என் றும் ‘குலோத்துங்கன்’ எனவும் இருக்கக் கண்டதி லிருந்து நான் உன்னிலிருந்து விடுதலை பெறவும் துணிந்தேன். நீ இதை அறியமாட்டாய்! நீயும் குலோத் துங்கனும் சிறு வயதில் எடுத்த படம் அவன் கையில் இருக்கக் கண்டபோது நான் அடையாத வேதனை மகா புலிபுர விஜயத்தில் இரட்டிப்பானது. நான் உன்னை அடைய வேண்டுமென தயாரித்திருந்த திட்டத்தில் விதி பாவலா காட்டியபோது, எழுதிச் செல்லும் விதியின்

கையை முறித்து வீசி, ஆண்டவனிடமே சவால் விடுத்து அவனை வம்புக்கு இழுக்கும் அளவுக்கு வெறி பூண்ட நான் இந்தச் சாதாரணமான அரைப் பைத்தியத்தின் விசித்திரப் போக்கை—அவளால் தோற்றுவிக்கப் பெற்ற முதற்சலனத்தை என்னால் எவ்வாறு அனுமதிக்கவோ, பொறுக்கவோ இயலும்?

"மேகலை, நான் தொடக்கத்திலேயே ஐயமென்னும் பிசாசை விரட்டி விட்டிருக்க வேண்டும். தவறிவிட்டேன். உன்னிடம் சந்தேகக் கணை விடுக்க எனக்குத் துணிவில்லை. உயிர்ச் சக்தி இற்ற உடம்புடன் என்னை நானே அழித்துக் கொண்டிருந்தபோதெல்லாம், உன் எழில் போதை என் கண்களைக் கட்டி, விதி கண்ணாமூச்சி விளையாடியது. கடைசியில், 'என்னை நீங்கள் நம்புகிறீர்களா, அத்தான்?' என்று கேட்ட அக்கணமே என்னுள் புதிய ஜீவன் பிறந்தது; உன்னை நம்பினேன். கையெடுத்துக் கும்பிடத் தக்க புண்யவதியான உன்னுடைய கற்பின் பொற்பினை தவறுபடக் கருதிய என்னை என் மனச் சாட்சி சித்திரவதைப் படுத்தியது. ஐயோ! இந்த குலோத்துங்கன் ஏன் அவனியில் அவதரித்தான்..?

"குலோத்துங்கன் கிறுக்கின டைரியின் ஏடுகளை, அவன் எப்படி எப்படியோ தயாரித்த போட்டோக்களை வேறு யாராவது பார்த்திருந்தால், என்ன தீவினை விளையுமோ?...முதலில் இவற்றை தீயிடவேண்டும்; அப்பால், குலோத்துங்கனைப் பழிவாங்கியே தீருவேன்!"

நாசித்துவாரங்கள் புடைத்தன; நெற்றி மேட்டில் தசைக் கோளங்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடின. மாமல்லன்தானா இவன்?

மேகலை தன் உள்ளங் கைகளைப் பஞ்சு மெத்தையில் கவனமுடன் அழுத்தி எழுந்து, பிறகு இடுப்புப் பகுதியில் கைகளைக் கொடுத்து உடலை நகர்த்தி, தலையணைகளைப் பக்கவாட்டில் தள்ளிய வண்ணம் உட்கார்ந்தாள். கீழ் மூச்சு வாங்கிற்று. "அத்தான், சற்று முன் சொன்ன இரண்டு காரியங்களை மட்டும் தயவு செய்து நீங்கள் செய்து விடாதீர்கள். அந்தப் படங்கள், டைரி எல்லாவற்றையும் நான்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்

டும். என் மானத்தை என் தூய்மையால்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். என்னை நானே பாதுகாத்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு. குலோத்துங்கனைப் பழிவாங்கி விட்டால், அப்புறம் உங்கள் தங்கைக்கு நீங்கள் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்ற முடியும்?...குலோத்துங்கனைப் பழிவாங்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள், அத்தான்!...''

வாய்ப் பேச்சு முடிந்தது; கண்களின் பேச்சு ஆரம்பமானது.

குலோத்துங்கனைப் பழிவாங்கப் போவதைக் கேட்ட மாமல்லன் பதறினான். தான் அந்தப் பொறுப்பை ஏற்க நினைக்கையில் ஏற்படாத பயம், தன் மனைவி பழிவாங்குவதாகக் கூறக் கேட்டதும் உண்டாயிற்று. அவளுடைய கண்ணீரின் வழியே இதயம் புகவும் துணிவில்லை; விளக்கம் கேட்கவும் 'வினயம்' புரியவில்லை; தவித்தான்.

மேகலையின் உடம்பில் காணப்பட்ட தீச்சுட்ட பகுதிகள் அவனை மேலும் புண்படுத்தின. "மேகலை உன் மனசை நோகச் செய்த நானல்லவா தீக்குளி நடத்தி உன் மன்னிப்பைப்பெற வேண்டும்?...மாமன் மகளே, தசரதர் மைந்தனுக்குக் கிடைத்த ஜனக புத்திரி விண்ணில் உலவிய படைப்பு. ஆனால் நீ மண்ணில் பிறந்தவள்; மாண்பு கொண்டவள். வெண்ணிலவு நீ எனக்கு; மேவு கடல் நான் உனக்கு!...நீ இல்லையென்றால், நான் இல்லை; நீ என்னைவிட்டு மட்டும் எங்கும் பிரிந்து விடாதே!...என் அமைதிக்கென நீ கையடித்துக் கொடு, மேகலை, கையடித்துக் கொடு!''

அன்றைய இரவில் மேகலை—மாமல்லன் இருவருடைய ஜீவன்களும் சங்கமித்தன.

சிந்தாமணி மறுநாள் காணப்படவில்லை. அவள் எழுதிச் சென்ற கடிதத்தை மட்டும் காண முடிந்தது. எடுத்துக் கொடுத்தவள் கோசலை அம்மாள்.

"எல்லையில்லாத அன்பு சொரியும் மேகலைக்கு,

தாயே, என்னை மன்னிக்கமாட்டாயா? ஊழ்வினைப் பயனால் புத்தி தடுமாறியிருக்கும் என் அத்தானை நீ மனம் வைத்தால் மன்னிக்க முடியாதா?... என் அத்தானை தேடிப் பிடித்து பழிவாங்கும் பொறுப்பு என்னுடையது.

அபாக்கியவதி
சிந்தாமணி."

தன் கண்களைத் துடைத்துவிட்டு, கொண்டவனின் விழிநீரையும் ஒத்தியெடுத்தாள் மேகலை. "அத்தான், சிந்தாமணியையும் குலோத்துங்கனையும் முதலிலே கண்டு பிடியுங்க. நமக்காக சிந்தாமணி அவள் அத்தானை ஏதாச்சும் விபரீதமான முடிவுக்கு உள்ளாக்கிடப் போகுது!" என்றாள்.

படத் தயாரிப்பாளர் ராமசேகரன் அவர்களுடைய செல்வன் திருமாறன், சிந்தாமணி, குலோத்துங்கன் மூவரும் பின் தொடர, மாமல்லன் 'பிளிமத்' காரிலிருந்து இறங்கினான். அவர்கள் மூவரையும் கூடத்தில் அமரச் செய்துவிட்டு மாமல்லன் மாத்திரம் உள்ளே மேகலையிடம் சென்றான். "மேகலை, அடையாற்றுக் கடற்கரையிலே குலோத்துங்கன் அலைந்து கொண்டிருந்ததைக் கண்டு திருமாறன் தான் அழைத்து வந்தாராம். சிந்தாமணி நேராக திருமாறனிடம் போய் அவர் பணத்தை வீசி, தன் கனவைப்பற்றிச் சொல்லி, அவர் மனசையும் மாறச் செய்திருக்கிறது. திருமாறன் இல்லையென்றால், குலோத்துங்கனை அது கட்டாயம் பழிவாங்கியிருக்கும் போலிருக்குது...!" என்றான்.

"அத்தான், திருமாறன் அண்ணாவுக்கு அத்தையைக் காப்பி கொடுக்கச் சொல்லுங்க. நீங்க குலோத்துங்கனையும் சிந்தாமணியையும் மாடிக்கு அழைத்து வாங்க!" என்றாள் மேகலை.

குலோத்துங்கன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். மாமல்லன் படபடத்த மனத்தோடு நின்றான்; அருகில் சிந்தாமணி காணப்பட்டாள்.

மேகலை நிதானமாக நடந்து வந்து நின்றாள். காப்பித் தம்ளரை சிரமப்பட்டுக் கையில் எடுத்து அதைக் குலோத்துங்கனிடம் கொடுத்தாள்.

"காப்பி குடியுங்கள். குலோத்துங்கன் !"

புன்னகையின் நெளிவுடன் உபசரித்தாள் மேகலை

குலோத்துங்கன் காப்பியை அருந்தவில்லை ; தாடியும் மீசையுமாக காணப்பட்ட அவன் மேகலையையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

மேகலை மார்புச் சேலையைச் சீர்ப்படுத்தியவாறு குலோத்துங்கனை நெருங்கினாள். அவள் கையிலிருந்த காப்பித் தம்ளரை தன் கையினால் தொட்டுப் பிடித்துக் கொண்டு, "ம்...சீக்கிரம் குடியுங்கள் ; ஆறிவிடப் போகிறது...!"

குலோத்துங்கனின் கைகள் நடுங்கின. மேகலை அவனுடைய வலது கையைப் பற்றிய வண்ணம், "விஷமல்ல இது. தைரியமாகக் குடியுங்கள் !" என்றாள், அளவில்லாத வாஞ்சையுடன்.

"மேகலை...!"

குலோத்துங்கன் காப்பி குடித்து முடிந்ததும், தம்ளரை தரையில் போட்டாள். பிறகு குலோத்துங்கனின் டைரி, புகைப்படங்கள் எல்லாவற்றையும் அவன் முன்னே வீசினாள்.

குலோத்துங்கன் நின்ற இடத்தில் பூகம்பம் உண்டாயிற்றோ ?

மறுகணம் அவனிடம் மீண்டும் அண்டினாள் மேகலை. "இந்தப் போட்டோவைப் பாருங்கள் !" என்று வேண்டி, புதிய படமொன்றை நீட்டினாள்.

பிறந்த மேனியுடன் நின்றவாறு காட்சியளித்த பெண் குழந்தையை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்தான் குலோத்துங்கன். அவன் முகம் வியர்வையால் நிரம்பியது ; நேத்திரங்கள் விழிப்புனலால் நிரம்பி வழிந்தன.

"ஐயா, இந்தப் படத்தைப் பார்த்தீர்களா?"

"ம்?"

"யாருடைய படம் இது?"

"உன்...உங்களுடையதுதான் மேகலை!"

"சரி இப்போது என்னைப் பாருங்கள், குலோத்துங்கன்!"

குலோத்துங்கன் விழிகளை விலக்கிப் பார்வையைச் செலுத்தினான்.

தாய்மைக் கோலம் திகழ, தாய்மை கொடுத்த புத்தெழில் நெஞ்சகத்தை விம்மச் செய்ய, தூய்மைப் புன்னகை கொண்டு, மனச் செம்மை ஒளிவிட, சத்தியத்தின் ஒருருவாய், மேவுகடலின் வெண்ணிலவாய் நின்றாள் மேகலை. அவளுடைய கண்கள் வடித்த கண்ணீர் குலோத்துங்கனின் பாதங்களைத் தொட்டது.

குலோத்துங்கனின் விழித்த கண்கள் விழித்தவாறே விளங்கின. மறுகணம் அவன் நிலை குப்புற வீழ்ந்தான். தலையை தரையில் 'மடார் மடா'ரென்று அடித்துக் கொண்டான். அவன் வைத்த காணிக்கை மேகலையின் கால் விரல்களை ஈரமாக்கிக் கொண்டிருந்தது; செந்நிலம் மணம் திறந்து சிரித்தது; பண்பு மிளிரச் சிரித்தது.

"மேகலை!...மேகலை...!"

குலோத்துங்கனிடம் அடைக்கலப் பொருள்களாக இயங்கிய புகைப்படங்கள், டைரி முதலியன அடுத்த இரண்டாவது விநாடியில் தீயில் குளித்தன.

இரண்டாவது பிறவி எடுத்தான் குலோத்துங்கன். பண்ணிய பாவங்கள் அனைத்தும் பரிதி முன் பனியாக மறைந்தன. அன்னை அருள் இது.

திருமாறன் முன் நின்று, சிந்தாமணிக்கும் குலோத்துங்கனுக்கும் திருமணம் செய்து வைக்கத் திட்டமிட்டான். அழைப்புக்கள் தயாராயின.

பெற்றுப் பிழைத்தாள் மேகலை. குழந்தையையும் மேகலையையும் தாய் வீட்டிலிருந்து அழைத்துவர அரிய

லூருக்குப் புறப்பட்டான் மாமல்லன். திருமண ஏற்பாடுகள் சம்பந்தமாக திருச்சியிலிருந்த உறவினர்களை அழைக்கக் குலோத்துங்கனும் மாமல்லனுடன் தொடர்ந்தான். அவன் நேரே திருச்சிக்குப் போக வேண்டியவன்.

மாமல்லன் அரியலூரில் விடை பெற்று இறங்கி மாமனார் வீட்டுக்குச் சென்றான். கனவும் காதலும் சமைத்துக் கொடுத்திருக்கின்ற தன் குழந்தையை - மேகலையின் பரிசுப் பொருளை கருத்தில் தேக்கி மகிழ்ந்த நாட்களை எண்ணியவனாக வாழ்வு தந்த மனையை மிதித்தான். மனம் எக்காளமிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தது. மேகலையை அழைத்தான். அவள் வரவில்லை. அவளைப் பற்றிய அறிவிப்பு வந்தது.

மலைக்கோட்டைப் பிள்ளையாருக்கு வேண்டுதலை நிறைவேற்றிய பிறகே பட்டணத்துக்குப் புறப்பட விரும்பிய மேகலை திருச்சிக்கு விடிகாலை வண்டியில் - அதாவது, மாமல்லன் இறங்கி வழியனுப்பிய அதே ரெயிலில் குழந்தையுடன் சென்றிருப்பதாகச் செய்தி சொன்னார்கள்.

அடுத்த மூச்சுப் பிரியும் தருணம், மருதையாற்றில் ரெயில் கவிழ்ந்த விவரம் கிடைத்தது.

அரியலூர் ரெயில் விபத்துக்குப் பலியான உயிர்கள் பலவற்றுள் குலோத்துங்கன், மேகலை ஆகிய இருவரின் உயிர்களும் கணக்கில் அடங்கின.

## வணக்கம்

வெண்ணிலவின் வண்ணச் சுடரொளியில் அன்பு முகம் புதைத்து ஒளிகாட்டிக் கொண்டிருக்கிருள் மேகலை. நித்தம் நான் காணும் அரிய காட்சி இது. ஆனால், மேகலைக்கு மாங்கல்ய பாக்கியம் அளித்த மாமல்லன் அவளை ஒருமுறைகூடப் பார்க்க முடியவில்லையாம்...!

ஓர் இரகசியத்தை எண்ணிப் பார்க்கிறேன். இன்று வரை அது எனக்குப் புரியாத புதிராகத்தான் தோன்று கின்றது. விபத்துக்கு இலக்கான ' தூத்துக்குடி எக்ஸ் பிரஸ்' இணைப்பில் கடைசிப் பெட்டியிலிருந்த மேகலை கட்டாயம் தப்பித்திருக்க முடியும். அந்தப் பெட்டி பத் திரமாகக் காப்பாற்றப்பட்டது. ஆனால், மற்ற பெட்டி கள் தடம் புரண்டு மருதையாற்றில் விழுந்து கொண் டிருக்கையில், குலோத்துங்கன் சுழன்று விழுந்ததை எப்படியோ பார்த்து விட்டாள் அவள். குழந்தையைப் பெட்டியிலேயே வைத்துவிட்டு, அவனைக் காப்பாற்றும் நோக்கத்துடன் கீழே தாவினாளாம் மேகலை!... இச் சம்ப வத்தை ' விதி ' என்னும் பெயரால்தான் நான் விளிக்க வேண்டுமா? அப்படியானால் விதியின் பிழை என்று தானே இம்முடிவைக் குறிப்பிடவேண்டும்?

இமை நுனிகளைச் செம்மைப் படுத்திக் கொண்டு, படைத்தவனை அழைத்தேன். வந்தான். " கண்காணும் தெய்வமே! மேகலையையும் மாமல்லனையும் ஏன் பிரித் தாய்..." என்று ஆத்திரம் அடைக்க வினவினேன்.

" மேகலையும் குலோத்துங்கனும் மறுபிறப்புக் கொண்டு விட்டனர். முதற்பிறவியில், மேகலையை உள மார விரும்பினான் குலோத்துங்கன். ஆனால் கனவு ஈடேறவில்லை. அந்த விட்ட குறை தொட்ட குறையின் தீய விளைவாகத்தான் இப்பிறப்பில் மேகலையை மறக்க மாட்டாமல் குலோத்துங்கன் திண்டாடினான். அடுத்த